CANADA

முகவரி
MUHAVARY

எண்: 1 பாதை: 1 ஜூன் 2014



இலங்கைப்பிரச்சினை: மோழயால் முழயுமா ?

அடுத்தது யார்?



3ம் தவணை?



பகற்கனவு?



மீண்டும் ?

FIFA WORLD CUP Brasil

உள்ளே...

FIFA 2014 அட்டவணை, லிபரலின் வெற்றி



அடுத்த லெவலுக்கு பாய்ச்சலா !



நினைவில் நீங்காத நட்சத்திரம்



ஏன் இந்த சர்ச்சை?

இந்த நூற்றாண்ழன் மிகப்பெரிய எரிவாயு டீல்...

குருப் பெயர்ச்சி 2014

இலங்கை தீவில் இரு தேசங்களா?

ANCHOR KICTHEN CABINETS









Call for Appointment
&
Free Estimate
Ragu 416 - 520 - 8446 / 905 - 428 - 2848

SHOW ROOM
520, Westney Road South
Unit 21, Ajax, ON

முகவரி
MUHAVARY
CANADA

Address
5215 Finch Avenue E,
Unit 263
Toronto, Ontario,
M1S 0C2
Canada

E-Mail: info@muhavary.com
Web: www.Muhavary.com
Phone: +1(416) 628 6214
Fax: +1(416) 619 0335

"முகவரி" தேடும் தமிழினம்!

இனவாத மூச்சுக்களின் மத்தியில் இலங்கையின் தேசிய அரசியல் பலவீனமாகிப்போயுள்ளது. உலகலாவிய நிலையில் பரந்து வாழும் தமிழ் மக்கள் சகல கோணங்களிலும் கையாலாகாத நிலைமையில் உள்ளனர். மொத்தத்தில் தமிழினமே "முகவரி"யிழந்து போயுள்ளது.

சகல சுதந்திரங்களையும் இழந்துபோயுள்ள தமிழனத்தின் நடமாடும் சுதந்திரம் கூடத் தாயகத்தில் மறுக்கப்பட்டுள்ளது. சமாதானத்தையோ, அமைதியையோ உருவாக்குவதற்குரிய பக்குவத்துடன் எந்த ஒரு அரசியல் சக்தியும் செயற்படுவதாகத் தெரியவில்லை. யுத்த நோக்கத்துடனான நான்கு தசாப்தகால அரசியல் போராட்டம் முள்ளிவாய்க்காலின் பின்னர் மூச்சிழந்து போயுள்ளது.

இலங்கையின் தேசிய அரசியலிலே எந்தவொரு அரசியல் கட்சியும் நியாயமாக நடக்க மாட்டாது. இதனை நிரூபிக்கும் வகையில் அரசியல் தலைமைகள் "சிதம்பிப்"போயுள்ளன. தென்னிலங்கை அரசியல் சக்திகள், தமிழ் தேசியத்தை எந்த விதத்திலும் நிமிர விடாது மட்டம் தட்டும் போக்குடன் அரசியல் வியூகங்களை வகுக்கின்றன.

மக்களாணை என்ற பெயரோடு, சகல அரசியல் சக்திகளும் போலியான வாயடிப்புகளுன் காலங் கடத்துகின்றன. கடந்த காலத்து இனவாதப் பூச்சாண்டித் தனங்களையெல்லாம் இரைமீட்டு அசைபோட்டுப் பார்த்தால் அவையெல்லாம் சிங்கள இனவாதத் தலைமைகளின் துரோகத்தனமான செயல் என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

தென்னிலங்கையில் ஆழமாக வேரூன்றிப் போயுள்ள பேரினவாத சிந்தனைகளும், சிறுபான்மையின மக்களை ஓரங்கட்டும் அரசியல் நகர்வுகளும் ஆட்சியதிகாரத்தை தக்க வைக்கும் நாயோட்டங்களாகத்தான் நடந்தேறுகின்றன. அரசியல் தலைமைகள் நிகழ்ச்சி நிரல்களைச் சுயநல லாபங்களுடன் அடிக்கடி மாற்றியமைக்கின்றன.

இன சமத்துவத்துடனான சமாதானத்திற்கு இலங்கை அரசியலில் இடமேயில்லையென்பதை வெளிப்படையாக தலைமைகள் அரசியல் பிரலாபங்களாக தெரிவிக்கும் கட்டம் வந்து விட்டது. இன சமத்துவத்திற்கு இடமேயில்லை என்ற எண்ணக்கரு சகல கோணங்களிலும் வேரூன்றிவிட்டது.

ஆட்சியதிகாரத்துக்கான போட்டிகளின் மத்தியில், குடும்ப அரசியல் ஒருபுறமும் தலைமைத்துவத்தைத் தக்கவைக்கும் ஓட்டம் மறுபுறமும் என்ற நிலைமை வந்துள்ளது. பாராளுமன்றத்தில் எதிரணி அரசியல் பலவீனமடைந்து போயுள்ளது. அரசியல் தலைமைகள், நேர்மையான கருத்துக்கள் வரும்போதெல்லாம், நசிந்தபடி நழுவல் போக்குகளுடன் கூத்தாடுகின்றன.

இலங்கையின் தேசிய அரசியல் சீர்கேடுகள், சர்வதேச அவதானங்களிற்குட்பட்டுள்ள நிலமையில் இனவாத அரசியல் சக்திகள், தேசிய அரசியலை வெறும் கபட நாடகங்களாகத் தொடர்கின்றன. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையுடனான தன்னாட்சி என்று தமிழ் தலைமைகள் வெளிப்படுத்தி வந்த அரசியல் அபிலாஷைகள் எல்லாம் இனவாத அரசியலின் முன்னால் "முகவரி" இழந்துபோயுள்ளன.

நிரந்தர அரசியல் தீர்வுகளுக்கான முடிச்சை அவிழ்க்கும் பெறுப்பு இப்பொழுது அரசாங்கத்தின் கைகளில்தான் உள்ளது. அரசியல் தீர்வுக்கான அடிப்படைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய தருணத்தில் எல்லாம் தென்னிலங்கை சகல அடிப்படைகளையெல்லாம் திசைதிருப்பி மூழ்கடிப்பதுதான் இதுவரை நடந்தேறியது.

சமாதான அரசியலையும் தேசிய நல்லிணக்கத்தையும் தடுத்தபடி "கண்ணுக்குள் மண்ணைத்" தூவும் இனவாத அரசியல்தான் இலங்கையில் கொடிகட்டிப் பறக்கிறது. அரசியல் பிழைப்பைத் தேடும் இனவாதத் தலைமைகளின் மூச்சுகளின் மத்தியில், தமிழனத்தின் முகவரியை உறுதிப்படுத்துவது இப்போது சர்வதேசத்தின் கைகளில் சிக்கியுள்ளது.

அவதந்திரங்களின் மத்தியில் சீரழிந்து போயுள்ள தமிழினம் இலங்கையின் தேசிய அரசியல் "முகவரி தேடும் படலம்" ஒரு ஜீவமரணப் போராட்டம்தான்!

- ஆசிரியர்

முதலமைச்சர் வாசஸ்தலத்தில் இடமின்மை, ஊடகங்களுக்குத் தடை



GTA Square

INDOOR MALL



Welcome to GTA Square Indoor Mall. Over 50 Stores , Offices & Restaurant.

5215 Finch Ave East, Toronto. Middlefield & Finch. Open 7 Days A Week. 9:00 AM -10:00 PM

#101 **GTA Grocery**
South Asian &Canadian Groceries
416.332.1857

#103 **A1 Studio**
Photos & Videos
416.587.5583

#104 **Arajen**
Beauty & Skin Care
416.477.9211

#105 **Lovely**
Gold Houase
416.834.2266

#106 **Sai Ram**
Fashion
647.874.1501

#107 **Aircomplus**
Telephone & Internet
416.266.6328

#108 **Tides**
Dry Cleaner & Custom Tailor
416.291.9777

#109 **Back To The Beauty**
Spa & Salon
416.298.8091

#111 **Swarnamahal**
Jewellery Shop
416.293.0440

#112 **ASA Wireless**
Mobilicity Authorized Dealer
647.706.117

#113 **M.J.S Fashion**
Gold House & Money Transfer
416.299.1630

#115 **Western Jewellerys**
Jewellery & Money Transfer
416.335.9500

#117 **BenHo**
House Of Gold Fx
416.754.3100

#118 **Noble Reign Inc**
Security & Communications
416.826.5831

#119 **Gift Plus**
Unique Gifts For All Occasions
416.804.8999

#120 **Ahsiya Beauty Salon**
Unisex Hair Salon
416.412.3330

#122 **Ambiha Silk**
Sarees. Costumes. Cosmetics
416.297.5261

#123 **Jai Sai Flourist**
Fresh Jasmin & Garlands
416.505.1252

#124 **Millenium Sarees**
Unique Textile Store
416.332.2242

#125 **Murugan**
Book Store
416.321.0285

#126 **Shakthi Guru-Kirpa**
Churidars. Shalwar. Pattiyala
416.297.1670

#150 **Nimmi's Silks**
Sarees. Salwars. Sherwanis
416..619.7831

#152 **SNS Selections**
Sarees & Salwars
416.419.1257

#153 **Kids N Cotton**
100% Cotton & Organic
416.854.5436

#154 **A1 Ink Rainbow**
Computer.Toner.Copier
416.286.0333

#156 **Nathan Traders**
Fancy. Utensils. Textiles
416.299.8231

#158 **Q Copy**
Copy & Print Centre
416.900.9100

#159 **Ashmitha**
Lotto Centre
416.298.0505

#160 **Escape Travels**
For All Your Vacations
416.841.1833

#161 **Sabari Text**
All Kind Of Textiles
647.703.3253

#162 **Ragi Textiles**
Tailoring & Textiles
647.712.4652

#163 **SNS Selection**
Clothings
416.804.8999

#164 **Ranganas Jewellery**
Gold For Buy Or Sell
647.702.2159

#165 **TechLinx**
Cell Phones & Accessories
647.289.2628

#201 **Vlambaram**
Tamil News Paper
416.282.8059

#203 **HomeLife GTA**
Realty Inc, Brokerage
416.321.6969

#205 **Fashion & Fancy House**
Silk, Bridal & Ceremonial Sarees
416.492.9416

#206 **GTA ChiroPractic**
Centre
416.321.0482

#208 **Medical Office**
Family Practice
416.412.7350

#212 **Value Plus Pharmacy**
For Your Medical Drug Needs
416.754.4442

#213 **Tharani Tharmalingam**
Law Office
416.291.4900

#214 **Experts Educational**
Tutoring
647.709.1298

#215 **Crown Tailoring**
All Type Of Tailoring Needs
416.609.2532

#216 **Available**

#217 **Canam. V Financial Service**
Mortgage, Insurance, Accounting & Tax
416.410.7373

#219 **Raphael Maharaja**
Law Office
416.847.7077

#221 **Aum Wellness Clinic**
416.890.9217

#221 **Kannan Ramnath**
Law Office
416.609.1300

#223 **Intersol**
Business Consulting
416.648.7064

#226 **Event Centre**
Event Centre
416.640.3535

#228 **Aarusha Cake House**
Cakes For All Occasions
416.292.7347

#232 **Heroes Catering**
Takeout & Catering
416.286.9334

#250 **Eye-Quality Optical**
Eye Care
416.402.4121

#251 **Tony's**
Hair Saloon
647.883.0039

#256 **Leo Financial Services**
Mortgages, Loans & Line Of Credit
647.896.2634

#257 **Pandit Tulsidhar**
Astrology, Palmistry
647.856.0559

#258 **City Cardiac Mobile**
Cardiac Centre
647.834.7011

#259 **Krishna Tailoring**
Textile & Dry Cleaning
416.497.6427

#263 **Muhavary**
News Paper Publications
416.628.6214

#264 **Athishta Dollar'n Gift**
Gifts, Helium Balloons & More
416.754.4438



ஈழவிடுதலையும் இந்திய மக்களவைத் தேர்தலும்

-T.S.S.மணி



இந்தியாவை யார் ஆள வேண்டும் என்பதற்கான மக்களவைத் தேர்தல் நடந்து முடிந்தது. யார் ஆளப் போகிறார்கள் என்ற தேர்தல் முடிவுகளும் வந்துசேர்ந்து விட்டன. இந்தியப் பிரதமராக நரேந்திரமோடியும் பதவியேற்று விட்டார். தமிழ்நாட்டில் அந்த தேர்தல் நடந்து முடிந்து விட்டது . தமிழ்நாட்டில் அகில இந்திய கட்சிகளும் மாநில கட்சிகளும் தனியாகவும் கூட்டாகவும் இந்த தேர்தலைச் சந்தித்தார்கள். அகில இந்திய கட்சிகளிலும் கூட்டணிகளிலும் முன்வைக்கப்பட்ட "தேர்தல் அறிக்கைகளில்" தமிழ்நாட்டிற்கான எதையும் தனியாகக் குறிப்பிடவில்லை. ஆனால் மாநில கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கைகளில் தமிழ்மொழி உரிமை பற்றியும், தமிழகத் தேவைக்கான நீர் உரிமை பற்றியும், ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான வழி பற்றியும், எழுதப்படாமல் இல்லை. அதாவது "தமிழ் தேசிய உரிமைகள்" பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை மாநில உரிமைகளின் பெயரிலோ, மறுக்கப்பட்ட காவேரி நீர் என்ற பெயர்களிலோ பேசப்படுகிறது.

அதேபோல "தமிழ்மொழியை" ஆட்சிமொழி ஆக்குவோம் என்றும், நீதிமன்றங்களில் வழக்காடு மொழி ஆக்குவோம் என்றும் ஒவ்வொரு கட்சியும் கூறியுள்ளனர். இதை முழுமையாகப் "பித்தலாட்டம்" என்று கூறிவிட முடியாது, ஏன் என்றால் அந்த கட்சியின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் கூட அது "பயன்படுத்தக்கூடிய" ஒன்றுதான் இத்தனை ஆண்டுகள் கழித்தும் இதைக்கூட "சாதிக்க" முடியவில்லையா ? என்ற கேள்வி அவர்களுக்கே உண்டு. அதுவும் இன்னமும் தமிழ்நாட்டிற்குள், தமிழ் ஆட்சி மொழிக்கும், வழக்காடு மொழிக்குமான போராட்டங்கள் நடந்து வருகின்றன. அவற்றை எதிரொலிக்காமல் அந்த பெரிய கட்சிகளும், சிறிய கட்சிகளும், மக்களவைத் தேர்தலைச் சந்திக்க முடியாது. ஆகவே அவை இயல்பாகவே இடம்பெற்று விட்டன. தமிழக உரிமைகளான முல்லைப்பெரியார் அணை நீர் வரத்து, காவேரி நதி நீர் ஆணைய தீர்ப்பாணைய முடிவை அமுல்படுத்தல், ஆணைய மேலாண்மை ஏற்படுத்துதல் ஆகியவை அன்றாடம் தமிழக விவசாயிகள் வாழ்க்கையில் சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் என்பதால் யாரும் அவற்றைத் தவிர்க்க முடியாது . ஆகவே அவையும் கூட இடம்பெற்று விட்டன.

இவை போலவே இன்று தமிழக மக்களின் உரிமை உணர்வில் "இரண்டறக்கலந்து" நிற்பது "ஈழத்தமிழர்" உரிமைப்போர். அதில் எந்த இயக்கமும் "கண்டுகொள்ளாத" போக்கை எடுக்க முடியாது. பழமை வாதிகளாக புரியப்பட்டுள்ள இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கூட "ஈழத்தமிழர் உரிமை பற்றியும், அதிகாரப் பகிர்வு பற்றியும் எழுத வேண்டிய கட்டாயம் உள்ளது. மற்றக் கட்சிகள் கேட்கவே வேண்டாம் அ.இ,அ.தி.மு.க, தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க, ம.ம.க,வி.சி.க, பு.த.எஸ்.டி.பி.ஐ உட்பட அனைத்து கட்சிகளும் ஈழத்தமிழர்களின் விடுதலையை ஏற்றுக்கொண்டே செயல்படுகின்றன. ஆர்ச்சரியம் ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சியும், பா.ஜ.க வும் கூட ஈழத் தமிழர்கள் விடத்தில், ஏதோ பேசியும் எழுதியும் வரவேண்டிய நிலைமை.

இதில் "ஈழத்தை வென்றெடுக்க" ஐ.நா மன்றத்தில் "தீர்மானம்" கொண்டு வந்து , ஈழத்திலும்; புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் "பொது வாக்கெடுப்பு" நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை, அ.இ.அ.தி.மு.க., தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க.,வி.சி.க., ம.ம.க.,பு.த., எஸ்.டி.பி.ஐ ஆகிய கட்சிகளும் ஏற்றுக்கொண்டு தங்கள் தேர்தல் அறிக்கைகளிலும் வெளியிட்டுள் ளனர். ஆகவே ஈழத்தமிழர்களின் விருப்பங்கள் அந்த விசயத்திலும் "புறக்கணிக்கப்படவில்லை" ஆனாலும் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வருகின்ற புதிய "மக்களவையில்" என்ன செய்யப்போகிறார்கள்? எப்படி இவற்றைச் செயல்படுத்தப்போகிறார்கள்? என்பதே கேள்வி. அதற்கான சூழல் இந்திய நாடாளுமன்றத்தில் இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கும் விடை சொல்வதற்கு மேற்கண்ட தேர்தல் உதவியுள்ளது. அதாவது மாநிலங்களின் "அதிகாரம்" என்ற அடிப்படையில் இவை விவாதமாகி உள்ளன தமிழகத்தின் புதுவையில் மேற்கண்ட கோரிக்கைகள் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற வேண்டும் என்றால் அதற்கான "ஏற்பாடுகள்"அங்கே அமைய வேண்டும். இதுவரை தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கைகள் "ஏன் நிறைவேறவில்லை?". ஏன் "புறக்கணிக்கப்பட்டன?". அதற்கான அடிப்படை என்பது, உருவாக்கப்பட்ட "இந்தியப்பேரரசின்" தன்மையிலேயே இருக்கிறது. அது என்ன "தலைமை?" அதுதான் "ஒற்றையாட்சி" தன்மை எளிதாக உலகத் தமிழர்களால், இலங்கையை ஆளும்



“ராஜபக்சே அரசாங்கம்” சிறுபான்மை தேசிய இனத்தை ஒடுக்கும் “ஒற்றையாட்சித் தன்மை” கொண்டது என்று கூறிவிட முடிகிறது. ஆனால் அவர்களாலேயே இந்திய அரசை அப்படி கூற முடிகிறதா?

இந்திய அரசு “சனனாயகக் கூட்டாட்சித் தன்மை” கொண்ட குடியரசு என்றுதானே தமிழ் எழுத்தாளர்கள்” தொடங்கி, அரசியல்வாதிகள் வரை கூறி வருகிறார்? இது பச்சைப் பொய் இல்லையா? இந்தியாவில் பல்வேறு “தேசிய இனங்கள்” இருப்பது உண்மையானால், அவை அடக்கப்படுகின்றன என்பது உண்மையானால், இந்தியா பல்வேறு தேசிய இனங்களின் சிறைச்சாலை என்பது யதார்த்தமானால், வாயைத் திறந்து உண்மையைக் கூறுங்களேன். இந்தியா ஒரு “ஒற்றையாட்சி” தன்மை கொண்ட நாடு என்று. பிறகு ஏன் “காஷ்மீர் பற்றியும், வடகிழக்கு மாநில தேசிய இனங்கள் பற்றியும்” அடிக்கடி பேசுகிறீர்கள்? எதற்காக “வல்லபாய் படேல்” பற்றி பேசுகிறீர்கள்? அவர் என்ன செய்தார்? இந்தியாவின் ஒற்றுமையைக் கட்டாயப்படுத்தினார் என்று நீங்கள்தானே கூறுகிறீர்கள்? அதற்காகவே அவரை “இரும்பு மனிதர்” என்று அழைக்கிறோம் என்று நீங்கள்தானே கூறுகிறீர்கள்? அதற்கு என்ன பொருள்? நிஜாம் ஆண்ட “தெலுங்கானாவை” கட்டாயப்படுத்தி இந்தியாவுடன் சேர்த்தார் என்று நீங்கள்தானே “பாடம்” எடுக்கிறீர்கள்? காஷ்மீருக்கு பொதுவாக்கெடுப்பு நடத்தி யாரோடு அல்லது தனியாகச் செல்வதற்கு முடிவு செய்யலாம் என்று “வாக்குறுதி” கொடுத்து இணைத்தார் என்று நீங்கள்தானே, எடுத்து சொன்னீர்கள்? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? இந்தியா தன்மையில் “ஒற்றையாட்சி” என்று அர்த்தம் இல்லையா?



சரி. உங்களுக்குத்தான் அந்த உண்மையைக் கூற “தைரியமில்லை” அதை “சரி செய்ய” மாற்று வழியையாவது முன்வைக்க வேண்டாமா? அதை இந்தத் தேர்தலில் முன்வைத்து “அரசியல்” செய்பவர்களை அடையாளம் கண்டு பாராட்ட வேண்டாமா? அ.இ.அ.தி.மு.க. தலைமையில் உள்ள செல்வி. ஜெ.ஜெயலலிதா அதை செய்துள்ளார். ஆச்சரியமாக உள்ளதா? ஆம். ஆச்சரியம் இருக்கத்தான் செய்யும். ஏன் என்றால் செல்வி. ஜெயலலிதாவை நாம் ஏற்கனவே சாதியை சொல்லியும், “பெண் என்பதால் விவரம் குறைந்தவர் என்றும், “தமிழின விரோதி” என்றும் நிறைய வசவுகள் மூலமே அறியப்பட்டுள்ளோம். அந்த வசவுகள் யாவையும் நமக்கு, அறிவாலய சிற்பியால், “அள்ளிக்கொடுக்கப்பட்ட கொடைகள்”, அதையே தொடர்ந்து நம்பப்போகிறோமா? அல்லது நடப்புகளை உற்றுக் கவனித்து, “பகுத்தறிவு” மூலம் புரியப் போகிறோமா?

அ.இ.அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில், “கூட்டுறவுடன் கூடிய கூட்டமைப்பு” என்ற புதிய சொற்றொடரை எழுதியிருக்கிறார்களே? அது என்ன? அது நிலவும் “ஒற்றையாட்சி” தன்மைக்கு, மாற்று இல்லையா? அது “பெடரல்” என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் கூட்டமைப்பு இல்லையா? அதை மாநிலக் கட்சிகளின் கூட்டு மூலம் ஏற்படுத்துவோம் என்ற கூற்றில் உண்மை இருக்கிறது அல்லவா? அதற்காக தேசியக் கட்சிகள்” என்று அழைக்கப்படும், காங்கிரசும் வேண்டாம், பா.ஜ.கவும் வேண்டாம் என்ற முழக்கம் பொருத்தமாக இல்லையா? அப்படி ஒன்று உருவானால் இந்திய அரசின் “வெளிவிவகாரக் கொள்கையை” மாற்றி அமைக்க முடியும் அல்லவா? அது மாத்திரம்தானே ஈழத்தமிழரின் விடுதலைக்கான விசை அமைக்க முடியும்?

அப்படிப்பட்ட எதிர்பார்ப்பு நிறைவேறியதா? இந்தியாவின் தேர்தல் முடிவுகள் அதற்கு வழிவகுத்தனவா? இல்லையே. தமிழ்நாட்டில் காங்கிரஸ் மண்ணைக் கவ்வியது. தி.மு.க.வும் காணாமல் போனது. பா.ஜ.க.கூட்டணியும் முனகிக்கொண்டிருக்கிறது. ஆனால் அ.இ.அ.தி.மு.க. மட்டும் 37 தொகுதிகளை வென்று வந்தது. அதேபோல மம்தா கட்சியால் திருணாமல் காங்கிரஸ் 34 தொகுதிகளை மேற்கு வங்காளத்தில் வென்று விட்டது. நவீன் படநாயைக் தலைமையிலான பிஜு ஜனதா தளம் கட்சியும் 20 தொகுதிகளை ஒடிசாவில் கைப்பற்றியது. இந்த மூன்று கட்சிகளும் மாநில உரிமைகளைப் பேசி வந்தமை. மம்தா பெடரல் முன்னணி என்றும் பேசினார். ஆனால் அகில இந்திய அளவில், பா.ஜ.க. 228 தொகுதிகளையும், அவர்களது தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி” மொத்தம் 338 தொகுதிகளையும் பெற்று ஆட்சியை பிடித்துவிட்டது. அதற்கு உத்திரப்பிரதேசமும், பீகாரும் பெரும் அளவில் கை கொடுத்துவிட்டன. இல்லாவிடில், ஒரு “கூட்டணி’ ஆட்சி என்பதாகத்தான் அது திசை திரும்பி இருக்கும். அப்போது மாநிலக் கட்சிகளுக்கு நல்லதொரு பங்கு ஆட்சியில் கிடைத்திருக்கும். என்ன செய்வது? அது நடக்கவில்லை.

பா.ஜ.க. தனிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்து விட்டது. ஆனாலும் அவர்களின் பிரதமர் வேட்பாளரும், இன்றைய நாட்டின் பிரதமருமான நரேந்திரமோடி, இப்போது “மாநிலங்களின் உரிமைகளுக்கு “முன்னுரிமை கொடுக்க வேண்டும்” என்று பேசுகிறார். ஒற்றையாட்சி மனோபாவம் கொண்ட பா.ஜ.க.வோ, மோடியோ, இன்று மாநிலங்களின் முன்னுரிமை பற்றி பேசும் சூழலை ஏற்படுத்தி வைப்பது

எது? இந்திய நாடாளுமன்ற பாதையில் "ஒரு வரை நகல், சட்டமாக" ஆக வேண்டும் என்றால், மக்களவையில் அது நிறைவேற வேண்டும். பிறகு மாநிலங்களவையிலும் அது நிறைவேற வேண்டும். பிறகு தான் குடியரசுத் தலைவரது ஒப்புதலுடன் அது சட்டமாக முடியும் என்ற விதிதான் மாநிலங்களவையில் மொத்தம் உள்ள 240 உறுப்பினர்களில், 121 வாக்குகளாவது வாங்காமல் அந்த வரைவு நகல் சட்டமாக ஆக முடியாது. பா.ஜ.க. தலைமையிலான "தேசிய ஜனநாயக கூட்டணிக்கு "மாநிலங்களவையில் வெறும் 64 உறுப்பினர்களே உள்ளனர். அது பெரும்பான்மை பெற பல மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் வந்து, அதில் பா.ஜ.க. வென்று, பிறகு அதன் மூலம் தங்களது மாநிலங்களவை உறுப்பினர் எண்ணிக்கையை கூட்ட வேண்டும். அப்படி ஒரு நிகழ்வு நடக்க குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகிவிடும். ஆகவே இந்த நாடாளுமன்றமும், ஒவ்வொரு தீர்மானமும் நிறைவேறும்போதே, திணறத்தான் செய்யும்.



காங்கிரஸ் கட்சியின் உதவியைப் பெறாமல் தீர்மானங்களை நிறைவேற்றத் துடிக்கும் பா.ஜ.க. அதற்காக மாநிலங்களவையில் உள்ள, அ.இ.அ.தி.மு.க.வுடன் நல்லுறவு கொள்ள முயலும். ஏற்கனவே தனது பதவியேற்பு நிகழ்விற்கே ராஜபக்சேவை கொண்டு வந்து, வெளிவிவகார கொள்கையில் இலங்கை பிரச்சனையில் மாற்றம் இருக்காது என்பதுபோல அடையாளம் காட்டினார் மோடி, தமிழகத்தின் பலத்த எதிர்ப்பையும் கண்டு கவலைப்படவில்லை. அதுவும் வெளிவிவகாரத்துறைக்கு ஏற்கனவே ராஜபக்சே வசம் "சமரசம்" செய்துகொண்ட சுஷ்மா சுவராஜை கொண்டு வந்த மோடி அதிலும், தான் "தமிழர் சார்பு அல்ல" என்பதை தெளிவுபடுத்தினார் அவரது தமிழக கூட்டணி கட்சிகளின் கருத்துக்கு கூட மதிப்பளிக்காமல், ராஜபக்சேவிற்கு மரியாதை கொடுத்தார் என்பது தமிழர் நம்பிக்கைக்கு விழுந்த ஒரு அடிதான்.

ஆனால் மோடி அரசின் "ஒற்றையாட்சி மனப்பான்மை" இந்தியா போன்ற ஒரு நாட்டில், மாநில உரிமை முழக்கங்கள் மற்றும் சுதந்திரத்திற்கு பிறகு, முதன்முறையாக "பெடரல்" என்ற கூட்டமைப்பு விவாதமாக ஆகியுள்ள நிலையில், மாநிலங்களின் குரல்களை புறக்கணிக்க முடியாது என்ற நிர்ப்பந்தத்தில், "தமிழின உரிமைகளும், ஈழத்தமிழர் விடுதலையும்" ஒரு முறையான அங்கீகாரத்தை பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்குப் இந்தியத் துணைக் கண்டத்திலேயே, இந்தப் பிரச்சனைகளை கிளப்ப "வாய்ப்பும், தகுதியும், தைரியமும்" பெற்றவர் தமிழர்நாடு முதல்வரான ஜெயலலிதான் என்பதை இந்த தேர்தல் முடிவுகளும் கட்டியம் கூறுகின்றன.

மிருகங்களில் வல்லமை அற்றவை
உடனடியாக
வல்லமையானவற்றால் கொன்று
உண்ணப்படுகின்றன.
அது மிகக் கருணையான செயல்.
மனிதன் கருணையால்,
தங்களில் வல்லமையற்றவனை
குரூரமாக வதைத்து தங்கள்
அகந்தைக்கு உணவாக்கிக்
கொள்கிறான்.

இனவாதத்துக்கு இலங்கை முடிவு காணாவிடில் சர்வதேச அழுத்தங்களே வலுவடையும்

மாதொருபாகன்

உலக மக்களின் மனசாட்சி இலங்கைத் தமிழினத் தின் இழப்புகளுக்குக் குரல் கொடுக்கும் நிலைமையிலே, சிங்களப் பேரினவாத சக்திகளின் இனவாத அரசியல் வெறுமனே தாவாரத்தில் காலம் கடத்த முற்படுகின்றது.

‘இலங்கைத்தீவு சிங்களவருக்கு மட்டுமே உரியது - தமிழினம் வந்தேறு குடிகள்தான்-அவர்களுக்கு என்ன சுயநிர்ணய உரிமை? சுதந்திரம் பெற்ற இலங்கையில் தமிழரென்ற அன்னியர் வந்து புகல் என்ன நீதி?” - இது சிங்கள இனவாதக் குரல்!

மகாவம்ச அரசியலில் இருந்து இம்மியளவும் விலக மாட்டோம் எனச் சிங்களப் பாராளுமன்றத்தைக் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைக்கும் இனவாதச் சக்திகள், தேசிய சமாதானத்தைச் சிதைப்படுதற்குக் கங்கணங் கட்டியபடி ஓலமிடுகின்றன.

பௌத்த சிங்கள இனவாத சக்திகள் “கன்னா பின்னா”வென்று பேசியபடி சன்னதம் ஆடும் வரலாறு, சகல சர்வசே அழுத்தங்கள் மற்றும் ஐ.நா.வின் குரல்களை எல்லாம் செல்லாக் காசாக நினைத்தபடி பீறிக்கொண்டு வெளிப்படுகின்றது. முள்ளிவாய்க்காலில்நரபலியெடுத்துத் தமிழினத்தை மனிதாபிமானமில்லாது. வேரறுத்த சிங்கள இராணுவம், தமிழ் மண்ணை அலங்கரிக்கும் சிங்களப் பேரினவாத சக்திகள், பௌத்த மதத்துக்கு சொந்தம் கொண்டாடியபடி இன சமத்துவத்தை மட்டுமல்ல, மத சமத்துவத்தையும் சீரழிக்கும் மதவெறிகள் என எல்லாமே இலங்கையை நரபலி நிறைந்த நாடாக மாற்றிவிட்டது.

தேசிய இனப் பிரச்சனையை வெறும் பேச்சு வார்த்தையால் மட்டும் தீர்க்க முடியாது. தமிழினத்தின் அவலத்தை நினைத்து உலக மனச்சாட்சியும் உரத்த குரலில் வெளிப்படுத்துகின்றது.

தேசிய இனப் பிரச்சினையை வெறும் பேச்சுவார்த்தையால் மட்டும் தீர்க்க முடியாது. தமிழினத்தின் அவலத்தை நினைத்து உலக மனச்சாட்சியுமே உரத்த குரலில் வெளிப்படுகின்றது.

மனித உரிமைக்கான ஐ.நாவின் முனைப்புகள், தேசிய சமாதானத்தை உருப்படுத்தும் நோக்கோடு நகர்வதும், சமாதான சக்திகள் எல்லாம் பொங்கிப் பிரவாகித்து காட்டாறு போல் வெளிப்படுவதுமான நிலையில்பாராளு மன்றத் தெரிவுக்குழு, விசாரணைக்குழு, ஐ.நா. அதிகாரிகள் வருவதற்குக் கூட பாராளுமன்ற அனுமதி என்றெல்லாம் நிறைவேற்று அதிகாரத்தின் உச்சாணிக் கொம்பிலிருந்தபடி குரல் கொடுக்கும் ஜனாதிபதி இப்போது ஈடாடிப் போயுள்ளார்.

> **ஏறத்தாள இருபது நிமிட உரையாடலில் மூக்குடைப்பட்டுப்போய், தடுமாற்றத்துடன் முகம் கோணியபடி வந்த ஜனாதிபதி ராஜபக்ஷ விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற நிலையில் வாய்த் தம்பட்டம் அடிக்கின்றார்.**

ஜனாதிபதி உலகத்தில் உள்ள எந்த நாட்டிற்கும் நிம்மதியாகப் போய்வர முடியாத நிலமையைத் தானே உருவாக்கிக் கொண்டுள்ளார். இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்திற்குப் போய், ஏறத்தாள இருபது நிமிட உ்ரையாடலில் மூக்குடைப்பட்டுப்போய், தடு மாற்றத்துடன் முகம் கோணியபடி வந்த ஜனாதிபதி ராஜபக்ச, விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற நிலையில வாய்த்தம்பட்டம் அடிக்கின்றார்.

குருதி வெள்ளத்தில் நாடே சிதைந்துபோயுள்ளது. நாடெல்லாம் இராணுவத்தைக் குவித்து, பாராளுமன்றத்தில் உள்ள இனவாததுரோட வௌவால் கள் சர்வதேசத்தையும் பகைத்தபடி, இறைமை சுதந்திரம் என்றபடி பௌத்த தருமத்தையே விலை பேசுகின்றன. இலங்கை ஒரு கொலைக்கலாச்சாம் நிரம்பிய நாடாகிவிட்டது.வடகிழக்குப் பிரதேசத்தின வளத்தையெல் லாம் சீரழித்து, மக்களாணையுடன வெளிப்பட்ட மாகாண அரசியலையும் கவிழ்த்தபடி, இராணுவத்தை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் வேரூன்ற வைத்தபடி அராஜக அரசியலைத் தொடர்கிறது.

பூவரசம் பூ பூக்கின்ற பூமியிலே, பௌத்தம் என்ற பெயரோடு வெள்ளரசு மரம் நாட்டி விலங்கிடும் அவலங்களே மிஞ்சுகின்றன. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையிலிருந்து நாடு மட்டுமல்ல உலகமே இன்னும் விடுபடவில்லை.

மனித உரிமைப் பிரச்சினைகளை முன்வைத்து ஐ.நா.இலங்கையில் கால் பதிக்கவிருக்கும் கட்டத்தில் இலங்கையின் அரசியல் சக்திகள் திமிறுகின்றன இலங்கையில் நடந்தேறிய போர்க்குற்றங்களை ஆராய்வதற்கு முன்வந்து விசாரணைகளைத் தொடர முடியாத வகையில், இடறுமுடறான கருத்துக்களே வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

தேசிய இனப் பிரச்சினைக்களுக்கான தீர்வு முயற்சிகளும், நடைமுறைகள் பற்றிய முனைப்புகளும் வெளிப்படும் பட்சத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வழமையான நழுவல போக்குகளுடன் கதை பறைகின்றார். தேசிய இனப் பிரசசினைகான நிரந்தரத்தீர்வுக்கு, பாராளுமன்றத் தெரிவுக்குழு, என்ற வரிசையில் கருத்துக்கள் வெளியாகின்றன.

இப்பெழுது ஐ.நா. விசாரணைக் குழு சம்பந்த மானோர் இலங்கைக்கு; வருவதற்குப் பாராளுமன்றத்தின அனுமதி வேண்டும் என்ற புதிய கதை ஜனாதிபதி மட்டத்தில் நழுவல் கருத்தாக வெளிப்பட்டுள்ளது. மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றமே இதை முடிவு செய்ய வேண்டும் என்பதை, மக்களாணையோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கையறு நிலையில் பிரலாபம் செய்யும் நிலமை உருவாகியுள்ளது.

இலங்கையில் பாராளுமன்றமோ, பாராளுமன்றத் தெரிவுக் குழுவோ சகல இனமக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப் பரவலாக்கலையோ தேசிய இனப்பிரச் சினைத் தீர்வுக்கான முடிவுகளையோ முன்னெடுக்கப் போவதில்லை.

சர்வதேச அழுத்தங்கள் சகல மட்டங்களிலும் எழுந்துள்ள நிலமை யிலே, ஜனாதிபதி, பாராளுமன்றத்தை முன்வைத்து மேற்கொள்ள முனையும் நழுவல் அரசியல் புதிய தொன்றல்ல.

நீண்டகாலமகப் பேசியும் சந்தித்தும் சிந்தித்தும் பேசிவரும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவோ சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பரவலாக்கலையோ தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முடிவுகளையோ முன்னெடுக்கப் போவதில்லை.

சர்வதேச அழுத்தங்கள் சகல மட்டங்களிலும் எழுந்துள்ள நிலமையிலே, ஜனாதிபதி, பாராளுமன்றத்தை முன்வைத்து மேற்கொள்ள முனையும் நழுவல் அரசியல் புதியதொன்றல்ல.

நீண்டகாலமாகப் பேசியும் சந்தித்தும் சிந்தித்தும் பேசிவரும் பாராளுமன்றத் தெரிவுககுழு, பாராளுமன்றத்தில் உள்ள இனவாத அரசியல் கும்பல் களின் ஒட்டுமொத்தமான கூட்டமென்பதும் புதிய விடயமல்ல.

தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சென்று பேச வேண்டும், இணக்கம் காண முன்வர வேண்டும் என்பது இலங்கையின் இனவாத அரசியல் பிதற்றல் என்பதை அறிந்த நிலைமையில்தான் தமிழ்க் கட்சிகள் வெளியே நிற்கின்றன.

மொத்தத்தில் இலங்கையின் தேசிய அரசியல் குறறுபடிகளின் ஒரு வடிவமாகவே ஐ.நா.விசாரணையை நிராகரிப்பது என்ற இனவாதப் பூச்சாண்டித்தனமும் வெளிப்படுகின்றது. ஐ.நா. ஒருதலைப்பட்மாக நடக்க முற்படுகிறது என்ற உணர்வு அமைச்சர்கள் முதல் இனவாதப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அனைவரினதும் மனதில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

பாராளுமன்றப் பின்னணியில் கடந்த காலத்தல் இயங்கிவந்த தெரிவுக்குழு, ஒருதலைபட்சமான திணிப்பு அரசியல் தீர்வுகளையே முன்வைத்தபடி நாட்களை இழுத்து வந்தது. பாராளுமன்றமே தமிழின விரோதமாக சிந்திக்க முற்படும் பட்சத்தில் தமிழ்த் தலைமை கள் தெரிவுக்குழு என்ற பேச்சையே கணக்கெடுகக முன் வரவில்லை.

> **இனவாதத்திற்கு முடிவுகட்டாவிட்டால், சர்வதேச சக்திகளே முன்னின்று நாட்டைப் பிரித்து தீர்வு கொடுக்கும் நிலைமைதான் மிச்சசொச்சமாகும்**

திஸ்ஸ விதாரணையின் முனைப்புகளோடு வெளிப்பட்ட தெரிவுக்குழு அறிக்கைகள் கடந்த காலத்தில் அடிமட்டத்தில் போடப்பட்டமை புதிய விடயமல்ல. தொடர்ச்சியாக ஜனாதிபதி மட்டுமல்ல, இலங்கையின் சிங்கள பாராளுமன்றப் பிரதிநிதிகளும் எதிர்மறையாகவே சிந்தித்து வரும் பட்சத்தில், உள்நாட்டு அரசியல் தலைமைகள் எந்தவித நிரந்தர அரசியல் தீர்வையும் காண முன்வரப் போவதில்லை.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்திலும், பின்னரும் சரி, வெளிவந்த இணக்க அரசியல் முயற்சிகள் எல்லாமே பாராளுமன்ற அரசியலில் தூக்கி எறியப்பட்டன.

பாராளுமனறத் தெரிவுக்குழு என்ற குரல் இனவாதக் கும்பலின் கூச்சலே ஒழிய தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கான வழி அல்ல என்பது தமிழ்த் தலைமைகளின் இறுக்கமான நிலைப்பாடாகி விட்டது.

ஜனாதிபதி 13து திருத்தத்திற்கு அப்பால்.... அப்பால்.... என்று சொல்லியபடி, இந்தியாவுக்கும், உலகத்திற்கும் சமாதானம் கூறியபடி, 13ம் திருத்தத்திற்கு சாவுமணி அடிப்பதற்கே முனைவது நிகழ்ச்சிகள் வாயிலாகத் தெரிகிறது. பாராளுமன்ற அரசியல் கருத்துக்களும் இதையே புலப்படுத்துகின்றன.

இந்தியப் பிரதமர் மோடியுடனான உரையாடலின் பின்னர் ஜனாதிபதி மூக்குடைப்பட்டு வந்தமைதான் மிஞ்சியுள்ளதுமுள்ளிவாய்க்கால் அனுபவங்களின் பின்னர் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திலிருந்து விலகப்போவதில்லை.

ஐ.நா. அழுத்தங்களின் தொடர்ச்சியாக இந்தியாவின் புதிய பிரதமர் மோடியின் அழுத்தங்களும்

> **இப்பொழுது ஐ.நா. விசாரணைக் குழு சம்பந்தமானோர் இலங்கைக்குள் வருவதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டும் என்ற புதிய கதை ஜனாதிபதி மட்டத்தில் நழுவல் கருத்தாக வெளிப்பட்டுள்ளது. மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றமே இதை முடிவு செய்ய வேண்டும் என்பதை, மக்களாணையோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கையறு நிலையில் பிரலாபம் செய்யும் நிலமை உருவாகியுள்ளது**

மீள்குடியேற்றம் என்ற பெயரில், சிங்களக் குடியேற்ற முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பௌத்த ஆலயங்களுக்கான நிலப்பறிப்பு இயக்கம், இராணுவத் தேவை என்ற பெயரிலான நிலப்பறிப்பு இயக்கம், அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரிலான நிலப்பறிப்பு இயக்கம், அமைதியாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இலங்கையில் தொடரவிருக்கும் அடுத்தக்கட்ட சமாதான முயற்களைச் சிக்கல்களின மத்தியில் தள்ளியுள்ளது.

ஜெனிவா தீர்மானங்கள் மட்டுமல்ல. உலக அரசியலில் வெளிப்படும் சமாதான சக்திகள் யாவுமே, தமிழினத்தன் அரசியல் விடிவுக்குக் குரல்கொடுக்கும் கட்டம் வெளிப்படுகின்றது சிங்களப் பேரினவாத சக்திகள் தேசிய அரசியலில் ஆடும் கூத்துக்கள் அம்பலமாகியுள்ள நிலைமையில், வெறுமனே, இலங்கையின் அரசியலும், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இராணுவ தந்திரங்களும், இலங்கையில் சமாதான இணக்க அரசியலுக்கு வழிவிடப்போவதில்லை.

ஜனாதிபதியும் இனவாதம் பேசும் அரசியல் தலைமைகளும் இனவாதத்திற்கு ஒத்து ஊதும் அமைச்சர்களும் அரசாங்கத்தின் கைக்கூலிகளும், வாக்குறுதிகளைக் கொடுத்து தமிழினத்தை ஏமாற்ற முடியாது என்பதை உணரும் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் தேசிய அரசியலை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது பதில் காண முடியாத பெரிய கேள்வியாகிவிட்டது. சமாதானத்தையோ, அமைதியையோ உருவாக்குவதற்கான கடமையில் எந்த ஒரு அரசியல் தலைமையோ, கட்சியரசியலோ உணர்ந்து செயற்படும் நிலமை இருப்பதாகத் தெரியவில்லை.

இராணுவ அடாவடித்தனங்களும், சிங்கள திட்டமிட்ட குடியேற்றங்களும், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை சீரழிக்கும் முயற்சியில்முடுக்கி விடப்பட்டுள்ளன.

இனவாத அரசியல் மூச்சுக்களின் மத்தியில் பலவீனமாகியுள்ள இலங்கையின் தேசிய அரசியல், ஜனநாயக மோசடிகளின் மத்தியிலே குற்றவாளிக் கூண்டிற் குள் தள்ளப்பட்டுள்ளது மட்டுமின்றி ஜனநாயகத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

மீள்குடியேற்றம் என்ற பெயரில், சிங்களக் குடியேற்ற முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பௌத்த ஆலயங்களுக்கான நிலப்பறிப்பு இயக்கம், இராணுவத் தேவை என்ற பெயரிலான நிலப்பறிப்பு இயக்கம், அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரிலான நிலப்பறிப்பு இயக்கம், அமைதியாகத் தொடர்ந்துகொண்டிருக்கின்து.

மாகாண அரசிற்கு பொலிஸ் அதிகாரமே இல்லை என்றபடி, தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் இராணுவ இருப்புக்களையும் நடமாட்டங்களையும் பலப்படுத்துவது என எல்லாமே தொடர்கின்ற நிலைமையில், மோசமான இன நெருக்கடிகளே நாட்டின் அமைதியைச் சூறையாடி வருகின்றன.

அரசாங்கம் பச்சையாக சகல கோணங்களிலும் தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்களைச் சூறையாடி படி, அபிவிருத்தி என்ற பெயரோடு இனவாத அட்டாகசங் களையே தொடர்கின்றது.

மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் தொடர்ந்த அரசியல் முனைப்புகள், குடும்ப அரசியலை வளரவிட்டபடி பேரினவாத அரசியலாகிச் செல்வதை உலகமே உணர்ந் துள்ளது.


குருதி வெள்ளத்தில் நாடே சிதைந்துபோயுள்ளது. நாடெல்லாம் இராணுவத்தைக் குவித்து, பாராளுமன்றத்தில் உள்ள இனவாத வெளவல்கள் சர்வதேசத்தையும் பகைத்தபடி, இறைமை சுதந்திரம் என்றபடி பௌத்த கருமத்தையே விலைபேசுகின்றன. இலங்கை ஒரு கொலைக் கலாச்சாரம் நிரம்பிய நாடாகிவிட்டது.

இந்த நாட்டை, சுதந்திரம் பெற்றபின் ஆண்ட அரசாங்கங்கள் எல்லாம் பேரினவாத வெறித் தனங்களையே தொடர்ந்து தமிழினத்தை சிறுமைப் படுத்தும் காரியங்களை மேற்கொண்டபடி சமாதானத் தையோ அரசியல் தீர்வையோ காணமுடியாது.

யுத்த கெடுபியிலிருந்து, விடுபட்ட பின்னால் அதிகாரப்பதவி வலுவோடு ஜனாதிபதியரசியல், கஞ்சத் தனமான இனவாதப் போக்குகளுடன்தான் இணக்கம் காண முற்படுகின்றது.

இனவாதம் இதே பாணியில் தொடர்ந்தால் தமிழினத்தின் விமோசனம் பிரிவினைவாதப் பாதையில் தான் செல்ல முற்படும். **இலங்கை என்ற சிறு தீவினுள் இரு தேசங்கள் தோன்றுவதை எவரும் தடுக்க முடியாத கட்டமே ஏற்படுமென்பதை இனவாதிகள் மறந்து போகக்கூடாது.**

இனவாதத்திற்கு முடிவுகட்டாவிட்டால், சர்வதேச சக்திகள் முன்னின்று நாட்டைப் பிரித்து தீர்வு கொடுக்கும் நிலமைதான் மிச்சசொச்சமாகும். ■



முடியுமா மோடியால்? – ஈழவாணி

நடந்து முடிந்திருக்கும் தேர்தல்களின் முடிவுகளைக் கணித்து இந்தியத் தேர்தலால் இலங்கைக்கும் அரசியல் ரீதியான பெரும் நன்மை விளைந்துவிடும் என்றுதான் தமிழ்நாட்டு மக்களும் ஈழத்தமிழரும் எதிர்பார்க்கிறார்கள். இதனால் புதிதாக ஆட்சியமைத்திருக்கும் மத்தியரசுக்கான விவாதங்களும் இலங்கைப் பிரச்சனைக்கான விவாதங்களுக்குமென பலரும் சர்ச்சைகளைக் கிளப்பிய வண்ணமாகவே இருந்தாலும் ஈழப்பிரச்சனை விவகாரத்தில் எந்த வெளிநாட்டு தூதுகளும் எதுவும் செய்துவிடமுடியாது என்பதுதான் உண்மை.

ஈழத்தமிழர் விவகாரத்திலும் தமிழ்நாட்டின் புவிசார் நலன் சார்ந்த விவகாரத்திலும் தமிழருக்கு எதிராகச் செயற்படுவதில் மன்மோகன்சிங்கை விட பல மடங்கு மோசமாகத்தான் நரேந்திரமோடி நடந்துகொள்வார் என்பதில் எப்போதும் சந்தேகமில்லை, என்பதாகவே பல கருத்துக்களும் உலவுகிறது. இவை சுஷ்மா ஸ்வராஜ் வெளியுறவு அமைச்சரானதைத் தொடர்ந்து இக்கருத்து மேலும் உறுதிப்படுத்துகிறது.



மேலும் மோடி அரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்கவுள்ள அஜித்குமார் தோவால் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் இறுதி யுத்தத்தில் தமிழருக்கு எதிரான போரில் இந்திய பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட சிவசங்கர் மேனன், எம்.கே. நாராயணன் போன்றோரை உலகே அறியும். இவர்களை விட மோசமான ஒரு ராஜ தந்திரியையே மோடி அரசு தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கவுள்ளது. இவர் கிருஷ்ணமேனன் காலத்திலிருந்து தொடரும் மலையாள மாஃபியா கும்பலில் ஒருவர் என்பதும் கூடுதல் செய்தி.

இந்த மோடி – சுஷ்மா ஸ்வராஜ் – தோவால் மும்மூர்த்திகளின் இலங்கை விவகாரக்கொள்கை எப்படி இருக்கும் என்று சற்று நோக்கலாம்.

இலங்கையின் சீன உறவை இந்தியா சாதாரணமாக எடுத்துக் கொள்ளாது இந்திய அதிகார மண்டலத்தின், இந்திய மேலாதிக்கத்தை இலங்கை முழுமையாக ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

காங்கிரஸ் அரசு இலங்கை விஷயத்தில் ஒரு Appeasement மட்டுமே கடைப்பிடித்தது. இலங்கையில் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கக்கூடிய ராஜதந்திர உடமையான தமிழர்களை அது இழந்துவிட்டது. ஆனால் மோடி அரசு இலங்கையுடன் இணக்கமாக நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இனிமேல் தமிழர்களைத் தனது ராஜதந்திர உடமையாகக் கருத வாய்ப்பில்லை. ஏனெனில் ஈழத்தமிழர்களின் சார்பில் அங்கே தமிழர்களின் பெரிய சக்தி எதுவுமில்லை. அத்துடன் புலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு கடந்த காலச் சமன்பாடுகளை மீளவும் முயலும் அளவுக்கு மோடி முட்டாள் இல்லை. நாம் இந்திராகாந்தி காலத்தில் இல்லை என்பதை உணர்ந்துகொண்டுதான் ஆக வேண்டும். பாகிஸ்தானிலிருந்து வங்கதேசம் உருவாக்க உதவியது போல் இலங்கையிலிருந்து எதையாவது பெற மோடி உதவ முடியுமா?

ஒரு வேளை ராஜபக்ஷ அரசு தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுமெனில் இந்திய மாநிலமொன்றின் உரிமைகளுக்கு அப்பால் எந்தவொரு சுயாட்சித் திட்டத்தையும் அதனால் முன்மொழிய முடியாது. காரணம் அதை இந்தியா ஏற்காது. தற்போது காஷ்மீருக்குள்ள தனித்தன்மையே நீக்க வேண்டும் எனக் கூறுகிற மோடி அரசு, காங்கிரஸ் அரசு கூறிவந்த 13வது திருத்தம் என்ற அளவைக் கூட ஏற்குமா என்பது சந்தேகமே.

ஈழ ஆதரவு சக்திகளை மோடி அரசு சிறு அளவு கூட கணக்கிலெடுக்காது இருந்தும் எப்போதாவது ஈழம் சார்ந்த குரல்களுக்கு செவிமடுப்பதாய்த் தோன்றினால், அவை இலங்கை அரசுடன் பேரம் பேசுவதையே குறிக்கும் எனக் கூடச் சொல்லலாம்.

தமிழ்நாட்டில் ஒலிக்கும் ஈழ ஆதரவுக் குரல்கள் தமிழ்நாட்டின் பிரிவினைக்கு வித்திடக்கூடாது என்பதில் மோடி அரசுக்கு கவலை நிச்சயமாக உருவாகும். இந்த விடயத்தில் காங்கிரஸ் போலவே சற்று அலட்சியமாக மோடி அரசு இருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழகத்தில் தமிழ்த் தேசிய வளர்ச்சி குறித்து மோடி அரசு நிச்சயமாக கவலைப்படும். அதை முளையிலேயே கிள்ளி எறிய எல்லா முயற்சிகளையும் எடுக்கும் எனத் தோன்றுகிறது. சர்வதேச அரங்குகளிலோ இலங்கையுடனான உறவிலோ மன்மோகன்சிங் ஆடிய நாடகங்களைக்கூட மோடி ஆடமாட்டார். (காமன்வெல்த், ஜெனீவா விவகாரங்கள் போல) இலங்கையுடனான உறவில் அவர் தெளிவாக இருப்பார். சீற வேண்டுமெனில் சீறுவார். உடன்படாவிட்டால், நிச்சயமாக தூக்கியெறியப்படுவார். இந்தியாவுக்குத் தேவை இலங்கைதான், ராஜபட்சே அல்ல.

இலங்கை இனப்படுகொலை, விவகாரத்தில் இந்தியாவின் பங்கு பற்றி இந்த இந்த உலகம் ஒரு போதும் பேசாது. எனவே இலங்கை மீதான சர்வதேசிய விசாரணை எல்லாம் இனி வெறும் கனவே, அமெரிக்காவோ பேரம் பேசப்போகிறது. தெற்காசியாவில் இந்தியாவின் மேலாண்மையை அங்கீகரித்துவிடுவதுதான் நல்லது இந்தியாவின் பொறுப்பில் அளவை எட்டுவிடும்.

ஆசியாவில் அமெரிக்காவை சமநிலைப்படுத்தும் காரணிகளில் உள்ள ரஷ்யாவுடனும் சீனாவுடனும் நெருக்கம் பேணுவது நல்லது என மோடி நினைத்தால் (அதில் நிறைய பலன்களும் இருக்கின்றன. இந்தியாவுக்கும் கூடுதல் செல்வாக்கு கிடைக்கும் அப்போது இந்தியாவின் தெற்காசிய மேலாதிக்கத்தை சீனாவும் தற்காலிகமாகவாவது அங்கீகரிக்கும் மத்திய ஆசியாவில் எப்படிச் சீன-ரஷ்ய சமன்பாடுகள் வேலை செய்கின்றனவோ, மேற்காசியாவில் எப்படி சீன ஈரான் சமன்பாடுகள் வேலை செய்கின்றனவோ, அதைப்போல சீன-இந்திய சமன்பாடுகள் தெற்காசியாவில் வேலை செய்ய வாய்ப்பிருக்கிறது. (கவனிக்க இது பல துருவ உலகம் மட்டுமல்ல, வல்லரசுகள் ஒருவருக்கொருவர் பகைவர்கள், அல்லர், போட்டியாளர்கள்) இப்படியொரு நிலையில் உலகின் எந்த சக்தியும் இந்தியாவின் தெற்காசிய நாட்டாமைக்கு எதிராக கொடி பிடிப்பது மிகவும் கடினமாகிவிடும். அப்போது ராஜபட்சே சீன சார்பை மறுபரிசீலனை செய்ய நேரிடும் இலங்கை இந்தியாவுக்கு அடிபணியும் பட்சத்தில் அதற்குப் பிரதியுபகாரமாக, அதனுடைய வரைபடத்தில் ஒரு கீறல்கூட விழாதபடி இந்திய பார்த்துக்கொள்ளும்.

ஆனால் இந்தியாவின் 'பழைய பாணி' சீன எதிர்ப்பு ராஜதந்திரிகளின் கை மட்டுமே ஓங்குமானால், மேலே நான் குறிப்பிடும் நிலைமை எழாமல் போய்விட வாய்ப்புள்ளது.

ராஜபட்சேவைப் பொறுத்தவரை அவரால் சீனாவை சரியாகச் சமாளிக்க முடிந்துவிட்டால், இதை விட, பெரிய சந்தர்ப்பம் வேறொன்றுமில்லை. இந்தியாவுடனான சமன்பாடுகளைச் 'சரிசெய்து கொண்டால் போதும். இலங்கையின் சர்வாதிகாரியாக அவரும் அவரது குடும்பத்தினரும் நெடுங்காலத்துக்கு தனது ஆட்சியைச் செலுத்துவர்.

அந்த விதத்தில் பார்த்தால் மோடி, சுஷ்மா, அஜித் ஆகிய மூவரும் ராஜபட்சே யின் எதிர்காலத்தை உறுதியாகப் பாதுகாப்பார்கள்.

இப்படிப்பட்ட நிலையைத்தான் ஈழ அரசியலும் ஈழ ஆதரவு அரசியலும் எதிர்கொள்ளப்போகின்றன. இது எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு மோடி அரசை நாடாளுமன்றத்தில் எதிர்கொள்ளக்கூடிய எந்த கட்சியும்



இப்போது இல்லை. 1989க்குப் பிறகு தமிழ்நாட்டின் செல்வாக்கு சிறிதுமற்ற அதே சமயம் பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்றுள்ள, ஒரு ஹிந்து-ஹிந்தி-ஹிந்துஸ்தான் அரசு ஆட்சிபீடத்தில் இருக்கிறது.

இந்திய தெற்காசிய ஆசிய மற்றும் உலகளவில் ஆடப்படும் இந்த பிரமாண்டமான ஆட்டத்தைப் புரிந்துகொள்வதே அனுபவமற்ற நம் தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் சவாலான காரியம் ஈழம் அமைவதற்கும் அமையாமல் போவதற்கும் நாம் கருணாநிதி, ஜெயலலிதா, வைகோ போன்றவர்களின் அரசியல்தான் காரணம் என்று இங்கே அடித்துக்கொண்டிருக்கிறோம் என்கிற நிலையில், இதைப் பற்றிய உரையாடல்கள்கூட நமக்கு இன்று சாத்தியப்படாமல் போகலாம்.

மேலும் மோடி, ஜெயலலிதா குறித்து இங்கு சிலர் தப்பாகக் கணக்குப்

நரேந்திரமோடியை அலரி மாளிகைக்கு அழைப்பித்து எல்லோருக்கும் கொடுப்பதுபோல் அவருக்கும் கோப்பி குடிக்கக்கொடுத்து அரசியல் பாடம் நடத்தலாம் என இந்த நாட்டில் சிலர் முட்டாள்தனமாகக் கனவு காண்கிறார்கள்.

போடுகின்றனர் என மனோ கணேசன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

நரேந்திர மோடியை அலரி மாளிகைக்கு அழைப்பித்து எல்லோருக்கும் கொடுப்பதுபோல் அவருக்கும் கோப்பி குடிக்கக் கொடுத்து, அரசியல் பாடம் நடத்தலாம் என இந்த நாட்டில் சிலர் முட்டாள் தனமாகக் கனவு காண்கிறார்கள். அது மட்டுமல்ல, நரேந்திரமோடிக்கு தமிழ்நாட்டு ஜெயலலிதா லேடி தேவையில்லை என்று இவர்களே உரக்கச் சொல்லி, இவர்களே முடிவுக்கு வந்து, இவர்களே குருட்டு சந்தோமடைகிறார்கள். இந்நாட்டுத்தமிழ், முஸ்லிம், மக்களை அடக்கி ஒடுக்கி தங்கள் இனவாத அரசியலை முன்னெடுக்க மோடி உத்தரவிடுவார் என இவர்கள் மனப்பால் குடிக்கிறார்கள்.

நரேந்திர மோடி மூன்று முறை குஜராத் மாநில முதல்வராக பதவி வகித்து அந்த மாநிலத்தை நாட்டின் முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டி இன்று இந்தியாவின் தேசியத் தலைவராகப் போகும் இரும்பு மனிதன், முதல்வர் ஜெயலலிதா தமிழ்நாட்டின் 39 தொகுதிகளில் 37ஐ வென்று மிகப்பெரும் சாதனைச் செய்துள்ள தமிழ்நாட்டு இரும்புப் பெண். தென்னிந்தியாவில் தனது செல்வாக்கை வளர்க்கும் முனைப்பில் இன்று மோடி ஜெயலலிதாவை அழைத்துப் பேசி அவருடன் இணைந்து செயற்படும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே இந்த நாட்டில் சிலர் காணும் இனவாதக் கனவுகள், சிறு கோப்பையில் பெரும் முதலைகளை காணும் முட்டாள்களின் முட்டாள்களின் கனவுகள் ஆகும் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங்கள, தமிழ்மொழிகளில் உரையாற்றிய மனோகணேசன் மேலும் கூறியதாவது; தமிழ்நாட்டின் ஆதரவு இல்லாமல் டில்லியில் ஆட்சி நடத்த மோடிக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்பது இன்று இங்கு அரசு தரப்பில் பெரும் சந்தோஷ சமாச்சாரமாக பேசிக்கொள்கிறார்கள். அரசு ஊடகங்களில் எல்லாம் இதை மீண்டும் எழுதி, சொல்லி இவர்களே மகிழ்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஒரேயொரு தொகுதியில் மாத்திரமே மோடியின் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. கேரளாவில் ஒரு தொகுதியிலும்



வலுவான அரசுகள் அவற்றின் விளைவுகள்

– அகிலன். கதிர்காமர் (யாழ்ப்பாணத்தை தளமாகக்கொண்ட



பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியாவில் வலுவான அரசு ஆட்சிக்கு வந்திருப்பதால் இந்திய-இலங்கை உறவுகளில் மாற்றங்கள் ஏற்படக்கூடும். உண்மையில் கடந்த இருபதாண்டுகளாக வலிமையற்ற அரசுகளாலும் நன்மைகளைச் செய்துமுடிக்க வேண்டும் என்ற உந்துதல் இல்லாத தலைமையாலும் இலங்கை தொடர்பான வெளியுறவுக்கொள்கை சரியாகத் தீர்மானிக்கப்படாமலே தத்தளித்துக்கொண்டிருக்கிறது.



பிரதமரும் மத்திய அமைச்சர்களும் பதவியேற்ற நிகழ்ச்சிக்கே இலங்கை அதிபர் மகிந்த ராஜபட்ச உள்ளிட்ட 'சார்க்' நாடுகளின் தலைவர்களை அழைத்திருந்த விதம் புதிய இந்திய அரசின் வலிமையையும் நம்பிக்கையையும் பறைசாற்றியது. இந்தியாவிலும் இலங்கையிலும் இப்போது ஆளும் அரசுகளுக்குப் பெரும்பான்மை வலு இருக்கிறது. எனவே, அவர்களுடைய முடிவுகளுக்கு வலுவான எதிர்ப்புக்கு வாய்ப்புகள் இல்லை. இருப்பினும், வலுவான இரண்டு அரசுகளின் நட்புறவு ஆக்கப்பூர்வமான முடிவுகளுக்கே வழிவகுக்கும் என்பது நிச்சயமில்லை.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பிரதமர் ராஜீவ்காந்தி இதேபோல அறுதிப் பெரும்பான்மை பெற்று இந்தியாவில் ஆடசிக்கு வந்த நேரத்தில் இலங்கையில் அதிபர் ஜெயவர்த்தனா மிகுந்த அரசியல் வலிமையுடன் ஆட்சி செய்துகொண்டிருந்தார். அப்படியிருந்தும் இலங்கை-இந்திய உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் பெருத்த தோல்வியே ஏற்பட்டது.

இலங்கையில் அரசின் நிலைத்தன்மை வலுப்பட்டு வருகிறது. நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. என்றாலும் கடந்த காலம் உணர்த்தும் உண்மையின் அடிப்படையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது; இலங்கைத் தமிழர்கள், சிறுபான்மைச் சமூகத்தவரான முஸ்லிம்கள் ஆகியோரின் வாழ்நிலையில் எந்தவித முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று அடுத்துவரும் மாதங்களில் நாம் எப்படி மதிப்பிடுவது?

பாக் விரிகுடா பகுதியில் இருநாட்டு மீனவர்களுக்கு இடையிலான மோதல்கள் தொடர்ந்து பதற்றத்தை அதிகரித்து வருகிறது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வசிக்கும் சுமார் 2 லட்சம் தமிழர்கள், முஸ்லிம்களை இந்தப் பிரச்சினை நேரடியாக பாதித்து வருகிறது. எல்லைமீற வந்து மீன் பிடித்தவர்களை திடீரென ஒட்டுமொத்தமாக விடுதலை செய்வது அரசியல் நோக்கங்களுக்காக என்று அனைவருக்கும் புரிகிறது.

தமிழக அரசு தன்னுடைய அணுகுமுறையை மறுபரிசீலனை செய்யாவிடில், எதிர்காலத்தில் இலங்கைத் தமிழர்களுடனான உறவைக் குலைத்ததாக ஆகிவிடும். இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தமிழக அரசு பொருத்தமற்றும் போய்விடும். இலங்கை மீனவர்களுக்கான கடல் பரப்பில் தமிழக மீனவர்கள் அத்துமீறி வந்து மீன்பிடிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாவிடில், இந்திய மீன்பிடி படகுகள் இலங்கை மீனவர்களின் வாழ்வாதரமாக விளங்கும் மீன்பாடுகளுக்கு விளைவிக்கும் கடும் சேதத்தைத் தவிர்க்காவிடில், இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் வேறு துறைகளுக்கும் பரவும். வேறு சில பிரிவு மக்களையும் பாதிக்கும்.

இலங்கை அரசியல் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட 13-வது சட்ட திருத்தத்தை மதித்து, தமிழர் பகுதிகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குமாறு ராஜபட்ச அரசை மோடி அரசால் வலியுறுத்த முடியுமா என்பது அடுத்த கேள்வி. இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரம் கிடைக்கும் வகையில் அதைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று இந்திய அரசு கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்திவருகிறது. விடுதலைப் புலிகளுடனான போர் முடிந்துவிட்டாலும் நாட்டில் சமரசத்தை ஏற்படுத்துவதற்கு அடிப்படையான இந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல், சிங்கள பௌத்த தேசியவாதத்துக்கு ஆதரவாக, ஏமாற்றிக் கொண்டே வருகிறது இலங்கை அரசு.

இறுதியாக, மோடி அரசு புதிய தாராளமயக் கொள்கை அடிப்படையிலான சீர்திருத்த நடவடிக்கைகளை மூலம் இந்தியப் பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்ட முயற்சிக்கப்போகிறது. அதன் விளைவுகள் , இலங்கையிலும் எதிரொலிக்கும். கல்வி மேலும் தனியார்மயப்படுத்தப்படும், வங்கித்துறையில் சீர்திருத்தங்கள் அமலாகும். இத்தகைய சீர்திருத்தங்களால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி பலரை ஒன்றுமில்லாதவர்களாக்கி நெருக்கடியை ஏற்படுத்திவிடும்.

வர்த்தகம், லாபம் ஆகியவற்றின் மீது மட்டும் அக்கறை கொண்டு இலங்கையுடன் இந்திய வர்த்தக உறவுகளை மேற்கொண்டால், மறுகட்டுமானத்துக்கு உதவும் வகையில் வளர்ச்சிக்கான உதவிகளைச் செய்யத் தவறினால் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்கள், முஸ்லிம்களின் நிலைமை மேலும் பரிதாபமாகிவிடும். சிறுதொழில்களுக்கு உதவுவதன் மூலம் இவ்விரு பிரிவு மக்களுக்கும் உதவ முடியும்.

இவ்விரு வலுவான தலைவர்கள் இடையில் ஏற்பட்ட சந்திப்பு எந்த திசை நோக்கிச் செல்லும், இருநாட்டு உறவுகளை எந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதெல்லாம் மேலே கூறப்பட்ட 3 விவகாரங்களைப் பொறுத்தது. இரு நாடுகளின் புதிய அரசியல் தலைமைகளும் இந்து தேசிய வாதம், சிங்கள பௌத்த தேசிய வாதம் ஆகியவற்றை அரசியல் தளமாகக் கொண்டவை; இரண்டுமே புதிய தாரளமயக் கொள்கையை ஆதரிப்பவை. இதனால் இரு நாடுகளின் சமூகங்களிலும் இருப்பவர், இல்லாதவர் இடையே ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும். எனவே இரு நாடுகளிலும் உள்ள முற்போக்குச் சக்திகள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்திய - இலங்கை எதிர்கால உறவுகள் மீதும் கண்காணிப்பு தேவை.

தமிழில் : சாரி

(தொடர்ச்சி) முடியுமா மோடியால்

அந்தக் கட்சி வெற்றி பெறவில்லை. இந்நிலையில் தனிப்பெரும்பான்வைம இருந்தாலும் தென்னிந்தியாவில் தன் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இந்தியாவை ஆள வேண்டும் எனத் திட்டம் போட்டுள்ள மோடிக்கு ஜெயலலிதா ஒரு நம்பகமான அரசியல் பங்காளியாக இருப்பாரென இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இன்று இந்தியப் பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி சுமார் 40க்கு சமீபமான ஆசனங்களையே பெற்றுள்ளது. இன்னொரு பிராந்தியக் கட்சியான மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் மேற்கு வளங்காளத்தில் 84 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் அ.தி.மு.க. திரணாமுல் காங்கிரஸ் இரண்டும் ரேந்து 71 ஆசனங்களை வைத்து எதிர்க்கட்சி அந்தஸ்த்தைப் பெறுவோம். என மம்தா பானர்ஜி, ஜெயலலிதாவுக்கு யோசனை கூறியுள்ளார். அந்தளவுக்கு ஜெயலலிதாவின் செல்வாக்கு இருக்கின்றது. இந்நிலையில் ஜெயலலிதாவை மட்டம் தட்டி இலங்கை அரசின் அதிகாரப்பூர்வப் பேச்சாளர் அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல பேசுகிறார். அதன்மூலம் இவர்கள் குருட்டு சந்தோஷமடைகிறார்கள்.

மோடி நேற்றுப் பிறந்து இன்று காலையில் இந்திய அரசியலுக்கு வரவில்லை. அவருக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அதைவிட இலங்கை தேசிய இனப்பிரச்சினை தொடர்பில், இந்திய பாதுகாப்பு தொடர்பில், இந்திய நாட்டுக்கு இலங்கை அரசு கொடுத்துள்ள உத்தரவாதங்களை நிறைவேற்ற மகிந்த ராஜபக்ஷ அரசு தயாராக வேண்டும். இன்று இலங்கையில் தமிழர்கள் ஒரே நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வு கேட்கிறார்கள். அதை உறுதிப்படுத்துவதில் தான் இந்நாட்டின் அமைதி நிலவுவதற்கான உத்தரவாதம் இருக்கிறது. இந்த அமைதிதான் இந்திய நலனுக்கும் உகந்தது. இலங்கை நலனுக்கும் உகந்தது.

இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நலன்களுக்கும் உகந்தது. இதை விடுத்து குறுக்கு வழியில் சென்று நரேந்திர மோடியை அலரி மாளிகைக்கு அழைப்பித்து எல்லோருக்கும் கொடுப்பது போல் அவருக்கும் கோப்பி குடிக்கக் கொடுத்து அரசியல் பாடம் நடத்தலாமென முட்டாள்தனமாக கனவு காண வேண்டாம் என இந்த அரசாங்கத்துக்குக்கா கூறுகிறேன். மோடியை இன்னொரு ராஜபக்ஷே என்றும் அவரை ராஜபக்ஷவின் இந்தியப் பதிப்பு என்றும் சொல்லி நேரத்தை வீணடிக்க வேண்டாம் எனவும் இந்த அரசை நான் கேட்டுக் கொள்கின்றேன். எனது இந்தக் கருத்தை சிங்கள மொழி ஊடகங்கள் சிங்கள மக்களுக்கு எடுத்துச் செல்லும் எனவும் அறிக்கை விடுத்திருக்கிறார்.


RJ
Ranjana
Jewelers & Pawn Brokers
Pawn Broking
Buy & Sell
Trade center
CASH FOR GOLD
ரஞ்சனா ஜீவலர்ஸ்
தங்க நகைகள் வாங்க விற்க மற்றும் அடகு வைக்க நாடுங்கள்
Steeles Ave
Markham Rd
Yellow Building
108-6055 Steeles Ave E
Toronto Ont M1X0A7
Tel : 647 247 2868
www.ranjanajewelers.com

யுத்தம் முடிந்தும் 5 ஆண்டுகளின் பின்னும்...

இதுதான் எங்கள் வாழ்க்கை!

– சிருஷ்டி

வடமாகாணத்தில் உள்ளக கட்டமைப்பு வசதிகளில் குறிப்பிடத் தகுந்தளவு முன்னேற்றம் இருக்கின்றது. யுத்தத்தின் பின்னர் பெருந்தெருக்கள், ரயில் பாதை கள். வீடமைப்பு, போக்குவரத்து எனப் பணிகள் நிகழ்கின்றன. ஆனால் குடிநீர் ஒரு பிரச்சனையாகிக் கொண்டிருக்கிறது. தவிர பருவ நிலை மாறுதல்கள், வறட்சி, மாசடைந்து வரும் சுற்றாடல் என்பன பெரும் சவால்களாக உருவாகியுள்ளன.

மரபுரீதியான மீன்பிடி, விவசாயம் ஆகிய துறைகளைத் தவிர வேலை வாய்ப்புக்கள் பெருகவில்லை. விவசாயத்தில் இன்றைய தலைமுறையினருக்கு அவ்வளவாக நாட்டமில்லை.

தொழில் துறைகள் என்று குறிப்பிடும் படியாக எதுவுமில்லை. தெருக்கள், கட்டிட நிர்மாண, வீடமைப்புப் பணிகளில் கணிசமான ஒரு தொகையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் குறைவு பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இதில் கணிசமாக இருக்கிறார்கள்.

பனை தென்னை சார்ந்த தொழில்களில் ஓரளவு வேலைவாய்ப்புக்கள் இருக்கின்றன. வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தொழில் துறைகள் இனிமேல் தான் நிறுவப்பட வேண்டும்.

யாழ்குடா நாட்டில் செம்மண் பிரதேசம் வெளிப்படையாகவே கொங்கிறீட் காடாகி வருகிறது. யாழ்ப்பாண சிறுபயிர் செய்கையின் எதிர்காலம் மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. அதிகாலை எழுந்து பார்க்கும் போது செடிகள் முளைக்கிறதோ இல்லையோ கொங்கிறீட் காடுகள் முளைவிட்டிருக்கும். எமது சுற்றாடல் அச்சம் தரும் விதமாக அழிவடைந்து வருகிறது. இதுபற்றிய விழிப்புணர்வு, கல்வி அவசியப்படுகிறது.

மலசல கூடங்கள் அருகருகே பக்கத்துப் பக்கத்து காணிகளில் கிணறுகளுக் கருகாமையில் அமைவதில் எந்த கட்டுப்பாடும் இல்லை. பிளாஸ்டிரிக் பொருட்களின் தேக்கம் சிறுபயிர்ச் செய்கைக்காக மிதமிஞ்சிய நீரைக் கிணற்றிலிருந்து நாளாந்தம் இறைத்துத் தள்ளுவது பாரிய அளவிலான உர கிருமி நாசினிப்பாவனைகள் என்பன நிலத்தை மோசமாகப் பழுதடையச் செய்துள்ளது. உள்ளாட்சி சபைகளோ பிரதேச செயலகங்களோ கண்டுகொள்வதாக இல்லை.

வட மத்திய மாகாணத்தில் 20 வீதமானவர்களுக்கு சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்கள் இருப்பதை அறிந்திருப்பீர்கள். அது கிளிநொச்சி, வவுனியா மன்னாருக்கும் விதிவிலக்கில்லை. புற்றுநோய் நீரிழிவு நோய் போல் பரவலான நோயாகியிருக்கிறது.

பிரதேசங்கள் நச்சுக்குப்பை கிடங்குகளாக மாறிவிடும் அபாயத்தையும் நாம் மறுதலித்து விட முடியாது.

வேறு நாடுகளிலும் நிகழ்ந்ததைப் போல யுத்தத்திற்கு பிந்திய ஆண்டுகளில் லீசிங்கம்பனிகள் மற்றும் வங்கிகளுக்கு மக்கள் கடனாளிகளாகியுள்ளனர். லான்ட் மாஸ்ரர், கலப்பைகள், ரக்ரர்கள் மற்றும் தொழில் உபகரணங்கள் ஆட்டோக்கள், காஸ் அடுப்பு, பிறிட்ஜ், கம்ப்யூட்டர், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களுக்கும் வட்டி கட்ட முடியாத நிலையில் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் மக்கள் திண்டாடுகிறார்கள்.

நாளாந்த வாழ்வில் தொலைபேசி, எரிபொருள் மின்சாரம் என நாலாவித செலவும் அதிகரித்திருக்கிறது. செலவுகளுக்கேற்ப வருமானம் இருக்கிறதா பெருகியிருக்கிறதா என்றால் அது தான் இல்லை.

கடன்களைச் செலுத்த முடியாத நிலை, பொதுவான ஒன்றாகியிருக்கிறது. சேமிப்புக்கள் காலியாகிக் கொண்டிருக்கின்றன. அவநம்பிக்கை விரக்தி தலை தூக்கியுள்ளன.

தவிர பிரதானப்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயம் இராணுவ பிரசன்னம், மக்களின் அன்றாட வாழ்வின் மீது தலையீடு சாடைமடையாக பழையபடி தலை தூக்கியுள்ளன.

அதாவது சுதந்திரமாக சமூக அரசியல் செயற்பாடுகளில்ஈடுபடுவதற்கான இடைவெளி வேண்டும் தமது வாழ்வு பாதுகாப்பாக இருக்கிறது என்று மக்கள் தமது அனுபவத்தில் உணர வேண்டும். ஏதாவது பாரிய விபரிதம் எப்போதும் நிகழலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. பிரதானமாக அதிகாரப்பகிர்ந்தளிப்பு முறையாக நிகழ வேண்டும்.

வடமாகான சபைத் தேர்தலில் நல்லூர் தேர்த்திருவிழாவிற்கு செல்வது போல் சென்று மக்கள் வாக்களித்தார்கள். இந்த அரசின் மீதான வெறுப்பு அவர்களை அவ்வாறு வாக்குச் சாவடிகளுக்கு அழைத்துச்சென்றது என்பதே உண்மை.

தெருக்கள், போக்குவரத்து எல்லாவற்றையும் விட சுதந்திரம் பெரியதென்ற உந்துதல், படலையில் நிற்கும் ஆமி வெளியேற வேண்டும் என்ற அங்கலாய்ப்பு ஆனால் 13வது திருத்தத்தின் கீழமான அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் இழுபறி தொடர்கிறது.

இந்த அதிகாரப்பகிர்வு நிகழ்ந்தால் உண்மையில் மக்கள் மத்தியில் பாதுகாப்புணர்வை ஏற்படுத்தும். எமது பிரதேசத்தில் எமது நிர்வாகம் இருக்கிறது.





அச்சுவேலியில் தொழிற்பேட்டை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. அதன் உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

கிழக்கில் கால்நடை வளர்ப்பதற்கான மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்துவது மற்றும் காகிதத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வது, நீராதாரங்களைப் பாதுகாப்பது அபிவிருத்திகள் செய்வது உள்ளிட்ட கோரிக்கைகள் திரும்பத் திரும்ப முன்வைக்கப்படுகின்றன. வலியுறுத்தப்படுகின்றன.

கிழக்கில் குறிப்பிடத் தகுந்தளவில் உல்லாசப்பயணத்துறை மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. கல்வி, விழிப்புணர்ச்சி செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. ஆனால் தொழிற்சாலைகளை உருவாக்குவதில் சுற்றாடல் மற்றும் நீர்வளத்தில் கணிசமான அக்கறை செலுத்த வேண்டியிருக்கிறது. இவ்விடயங்களில் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை எனலாம்.

சுகாதார சேவைகள் நவீன வைத்தியசாலைகள் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை உட்பட அமைக்கப்பட்டும, மேம்படுத்தப்பட்டும் இருக்கின்றன. கிராம ஆரம்ப சுகாதார நிலையங்கள் பிரதேச வைத்தியசாலைகளின் நிலையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் சனங்கள் மத்தியில் விழிப்புணர்வு அதிகரிக்கப்பட வேண்டும்.

உலகின் பல பாகங்களில் போலவே நுகர்வுக் கலாச்சாரம் பாரிய பிரச்சினை. உரிய நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இன்னும் ஓரிரு தசாப்தங்களில் எமது பயம், மன அழுத்தம், கோபம், எரிச்சல் என்பவற்றை ஏற்படுத்தியுள்ளன. உயர் பாதுகாப்பு வலயங்களான தமது சொந்த இடங்களுக்கு கால் நூற்றாண்டுகளாக செல்ல முடியாதவர்கள் வயோதிபர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகளுடைய சிறுவயது ஞாபகங்களே மறந்துபோன நிலை.

எங்கும் எதிலும் படை முன்னுரிமை; புத்தர் சிலைகள், ஸ்தூபிகள், கலாச்சார ஆக்கிரமிப்புக்கள் உறுத்தலாக அமைகின்றன

ஒரு கணிசமான பகுதியின் பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள் அழுத்தங்களுக்கு மத்தியில் மீளக் குடியேற்றப்பட்டாலும் இன்னும் பல ஆயிரக்கணக் கானவர்கள் மீள் குடியேற வேண்டியிருக்கிறது. உரிமை கோர ஆட்கள் இல்லாமல் புலம்பெயர்ந்துபோன நிலைமைகளும் இருக்கின்றன.

எங்கும் எதிலும் படை முன்னுரிமை, புத்தர் சிலைகள், ஸ்தூபிகள், கலாச்சார ஆக்கிரமிப்புக்கள் உறுத்தலாக அமைகின்றன. இப்போது சுற்றி வளைப்புக்கள், கைதுகள், புலனாய்வு என்ற பிரச்சனைகள் சட்டம் ஒழுங்கிருக்கிறது என்று மக்கள் உணர வேண்டும். இலங்கையின் அதிகாரத்தில் தாமும் பங்குதாரர்கள் என்ற நிலை வேண்டும்.

இந்திய ஆட்சிமுறையில் மத்திய மாநில அரசுகள் பரஸ்பரம் அனுசரித்து கண்ணியம் காத்து தத்துமது அதிகார எல்லைகளுக்குள் செயற்படுகின்றன. ஆனால் இலங்கையில் அவ்வாறில்லை. பேரினவாத அகங்காரம் இருக்கிறது.


நிலப்பிரச்சினை வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டது. இராணுவ ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட குடியேற்றங்கள் போக காலாதிகாலமாக தமிழ் சமூகத்தினுள்ளேயே சமூக ரீதியாக, வர்க்க ரீதியாக ஒடுக்கப்பட்டவர்கள் நிலமற்றவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

மறுபுறம் சமூகத்தில் விரவிக் கிடக்கும் வன்முறை மனோநிலை ஒரு வியாதியாக இருக்கிறது. ஈவிரக்கமற்ற சுயநல எண்ணங்கள் அதிகரித்திருக்கின்றன. கண்ணியமான வார்த்தைகள்

மார்க்கம் நகரசபை - 5ம் வட்டாரத்தில் Councillor ஆகப் போட்டியிடும் முதற் தமிழ் வேட்பாளர்

சிவா சிவஞானம்

கடந்த 25 வருட காலமாக மார்க்கம் நகரில் பல்லின மக்களோடு சமூகசேவை செய்துவரும் சிவா சிவஞானம் ஆகிய என்னை வாக்களித்து தெரிவு செய்யுங்கள்










Your Choice for Ward 5

Siva Sivagnanam

Candidate for Councillor
Ward 5 - City of Markham

MARKHAM



905-350-1274 | info@sivasivagnanam.com | www.sivasivagnanam.com



தேவைப்படுகின்றன. யுத்தத்திற்கு பின்னர் வார்த்தைகள் தடித்துப்போயுள்ளன. எடுத்தெறிவதாக உள்ளன. கண்ணியமான மனிதர்கள் இந்த வார்த்தைகளைவிட்டு வருத்தமும் எரிச்சலும் அடைகிறார்கள்.

சிறந்த சேவையை வழங்குவதற்கான அக்கறைகள் குறைவடைந்துள்ளன. பல்கலைக்கழகம், வைத்தியசாலை என்பன முறையான தராதரங்களை கட்ட வேண்டியிருக்கிறது. சுயாதீனமாக அவை விருத்தியடைய வேண்டியிருக்கிறது.

யுத்த காலத்தில் அங்கிருந்த மகாசன்னிதானங்கள் புதியவர்கள் வருவதை காலத்திற்கேற்ப பல்கலைக் கழகம் வளர்வதை விரும்பவில்லை. பாரதியார் சொன்ன ''கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்போம்'' இவர்களுக்கு அறவே பிடிக்காது.

மாணவர்களின் பரந்த அறிதலுக்கான வாய்ப்புக்களும் முடக்கப்பட்டிருக்கின்றன. ஊடகங்கள் அறிதலுக்கான ஜன்னல்களாக இல்லை. அவை வானம் கிணற்றின் வாயளவு என்பது போல் நடந்துகொள்கின்றன. அறிதல் சுதந்திரமும் இல்லை. சமூகமும் தன்னை அதற்கு இசைவாக்கி கொண்டு இந்த ஊடகங்களின் கருத்துக்களைத் தனது சொந்த அறிவில் உரைத்துப் பார்க்காமல் இதையே நம்பும் ஏமாளியாகவும் இருக்கிறது.

பாலியல் பலாத்காரங்கள் ஈவிரக்கமற்ற வன்முறைகள் பெருகியுள்ளன. இதுவும் யுத்தத்திற்கு பிந்திய விகாரங்களே, எனவே பிரமாண்டமான ஆற்றுப்படுத்தலும் வன்முறை மனநிலையிலிருந்து விடுவித்தலும் பாதுகாப்புணர்வும் தேவைப்படுகிறது.

சாதாரண சராசரி மனிதர்களே பாதுகாப்பின்மையை உணரும்போது, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் மற்றும் ஊனமுற்றோர் அனாதரவானோர் நிலையைச் சொல்லவே வேண்டாம். அவர்கள் நாளாந்தம் பல்வேறு தரப்பிடமிருந்தும் வன்முறைகளை அவமானங்களையும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தன்னம்பிக்கையுடன் பாதுகாப்பாக வாழ்வதாக அவர்களால் உணரப்படவில்லை.

எங்காவது கண்காணாத தேசத்திற்கு ஓடிவிடுவோம் அங்கு பாதுகாப்பாக வாழ்வோம் என்ற மனோநிலை இளம் சமுதாயத்திடம் விரவிக்கிடக்கிறது. ஓடுவதற்கு வசதயிருந்தால் ஊர் காலியாகிவிடும்!

என்னதான் தேசியம் என்று பேசினாலும் சொந்த மண்ணில் வாழ்வதில் அச்சம் இருக்கிறது. பொருளாதார வாழ்வு பிழைப்பு கவலைகள் இருக்கின்றன. வெறுப்பிருக்கிறது. மனங்கசந்து போயுள்ளது. எங்காவது கண்காணாத தேசத்திற்கு ஓடிவிடுவோம். அங்கு பாதுகாப்பாக வாழ்வோம் என்ற மனோ நிலை இளம் சமுதாயத்திடம் விரவிக்கிடக்கிறது. ஓடுவதற்கு வசதியிருந்தால் ஊர் காலியாகி விடும்.

அதாவது இருப்பு வாழ்வதற்கான நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். நாடு ஜனநாயக மயப்படுத்தப்படுவதில் மக்களின் சுதந்திரமான வாழ்வும் பல்வேறு சமூகங்களின் சுதந்திரமான இருப்பும் அடிப்படையான நிபந்தனை.

இராணுவமயப்பட்ட சூழல் சுதந்திர உணர்வு கொண்ட பெருவாரியான மக்களுக்கு காலம் காலமாக வெறுப்பை சலிப்பை கோபத்தை ஏற்படுத்துவது எனவே இங்கு இலங்கையில் ஜனநாயக அதிகார மாற்றமும் தேவைப்படுகிறது. இராணுவ மயப்பட்ட பேரினவாத வம்ச பிரபுத்துவ பாணி ஆட்சிக்கு மாற்றான ஜனநாயக பன்முக மனித உரிமைகளை மதிக்கும் சிவிலியன் ஆட்சி தேவைப்படுகிறது. யுத்தத்திற்கு பிந்திய சூழலில் இது முக்கிய பிரச்சனையாகும்.

மக்கள் மத்தியில் இனப் பெருமித எண்ணங்கள் பாராட்டப்படுகின்றன. எதிரிகள் கற்பிதமாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் விலைவாசி ஏற்றம் விரிவடைந்து செல்லும் ஏற்றத்தாழ்வு என்பவற்றை அதிக காலத்திற்கு பராமரிக்க முடியாது. பிரமாண்டமான கட்டுமானங்கள், கடுகதிப் பாதைகள் அம்பார் தோட்டைத் துறைமுகம், விமான நிலையம், சர்வதேச விளையாட்டுத்திடல் சங்கரிலா போன்ற பிரமாண்டமான ஹோட்டல்கள் தேவைதான். ஆனால் அவை சாதாரண மக்களின் வாழ்வில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன?

சொந்த இடங்களுக்கு கால்நூற்றாண்டுகளாக செல்லமுடியாதவர்கள் வயோதிபர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கு சிறுவயது ஞாபகங்களே மறந்துபோன நிலை

மக்களின் ஜீவாதாரமான விடயங்களில் முதலீடுகள் குறிப்பிடும்படியாக இல்லை. மத்திய கிழக்கில் பணிப் பெண்களாக வேலைபார்ப்பவர்களின் வருவாய் இலங்கைக்கு ஒரு முக்கிய பொருளாதார வரும்படி. பெரும் மனித உரிமை மீறல்களையும் இழப்புக்களையும் சந்தித்து அந்த பெண்தொழிலாளர்கள் வருமானம் ஈட்டுவதும் அதில் இலங்கை வாழ்வதும் ஒரு தேசிய அவமானமாகும். இற்றை வரை அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை.

தண்ணீர் நஞ்சாவதை எதிர்க்கும் விவசாயிகள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும் சம்பவங்கள், ஓய்வூதிய உரிமை கோரிய சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் நிகழ்கின்றன. கல்வி வணிகமாகும் போக்கிற்கெதிராக வீதியிலறங்கிப் போராடும் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன.

ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்பிள்ளைகளின் நிலையிலோ மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய நிலையிலோ வாழ்க்கை நிலையிலோ எந்த முன்னேற்றகரமான மாறுதல்களும் நிகழவில்லை.

விலைவாசிக்கும் ஊதியத்திற்கும் இடையிலான முரண்பாடு அகலித்து ஆழமாகி வருகிறது. கல்வி தனியார் மயமாகி வருவதும் கல்விச் சுதந்திரத்தின் மீதான தலையீடு எனவும் பாரிய பிரச்சினைகள்.

பிரதான எதிர்க்கட்சிகள் பலவீனமடைந்துள்ளன. வீதியிலிறங்கிப் போராடுவதற்கான இடைவெளிகள் இல்லை. நாடு இராணுவ மயப்பட்டு வருகிறது. உண்மைகளைக் கண்டறியும் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தப்படவில்லை. காணாமல் போனோர் கொல்லப்பட்டோர் கைதிகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் இனப்பிரச்சினைத் தீர்வு சமூக நல்லிணக்கம் - முன்னேற்றம் எதுவும் இல்லை நீதி - சட்டம் ஒழுங்குத் துறைகள் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலை.

1978இற்குப் பின்னர் உருவாகிய சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறை படிப்படியாக இலங்கையில் ஜனநாயக இடைவெளியை அரித்தழித்து வந்திருக்கிறது. இன்று எல்லாமே ஈடாட்டம் கண்டுள்ளன. சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையின் இரும்பு பிடிக்குள் சிக்கியுள்ளன.

வன்முறை மனோநிலை ஒரு வியாதியாக இருக்கிறது. ஈவிரக்கமற்ற சுயநல எண்ணங்கள் அதிகரித்திருக்கின்றன. வார்த்தைகள் தடித்துப்போயுள்ளன. கண்ணியமான வார்த்தைகள் தேவைப்படுகின்றன.

இலங்கை சுதந்திரம் பெற்ற 65 ஆண்டுகளில் 1970களில் இருந்து 40 ஆண்டுகளுக்கு மேலாக அவசர காலச் சட்டத்தின் கீழும் 1978இல் இருந்து 36 ஆண்டுகளாக இந்த நாடு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் இருந்து வருகிறது. இது பாகிஸ்தான் மியன்மாரை விட மோசமான நிலையாகும். இந்த நிலை மாற வேண்டும்.

நவிநீதன்பிள்ளையின் காரியாலயம் கொழும்பில் அமைந்தால் இலங்கையின் மனித உரிமை ஜனநாயக நிலைமைகள் தொடர்பாக மாறுதல்கள் ஏற்படலாம். ஆனால் அதற்கான சாத்தியங்கள் அண்மையில் இல்லை போல் தெரிகிறது.

நாட்டின் ஜனநாயக சக்திகள் இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது. பெரும் மக்கள் எழுச்சிகளே இன்றைய இலங்கையில் ஜனநாயக மாறுதல்களுக்கு வழிவகுக்கும். தமிழ் தரப்பிலிருந்தோ நாடு தழுவிய அளவிலோ அத்தகைய வெகுஜன நடவடிக்கைகள் காணப்படவில்லை.

உலகின் ஜனநாயக - மனித நேய சக்திகளுடன் - நாடுகளுடன் இணைந்தே நாம் முன் செல்ல வேண்டும். ஒரு புதிய பண்பாடு நிறுவப்பட வேண்டியிருக்கிறது. உலக மக்களுடன் நாமும் மனிதர்கள் என்று ஒருங்கிணைந்து வாழ்வதற்கான மனோநிலையும் ஸ்தாபிக்கப்பட வேண்டும். எமது மக்களில் ஒரு பகுதியினர் உலகம் முழுவதும் சிதறுண்டு பரந்து சென்றிருந்தாலும் எமது மனநிலையில் இன்னும் பிரச்சனை இருக்கிறது. குறுகியதிலும் குறுகியதான சிந்தனை எம்மை ஆக்கிரமித்திருக்கிறது. புலம் பெயர் தளத்தின் புதிய தலைமுறைகள் இதிலிருந்து விடுபடலாம். ■



வெளிநாட்டு புதினம்

கடந்த 2003ம் ஆண்டில் சுவீடன் நாட்டை சேர்ந்த கலைஞரும் தொழிலபதிருமான மைக்கேல் ஜென்பர்க் என்ற நபர் நிலவில் வீடு அமைக்கும் பணியை தொடங்கியுள்ளார். பலரால் நிதியுதவி பெற்றப்பட்டு வந்த இந்த பணி கடந்த 2010ம் ஆண்டில் பொருளாதார பிரச்சனையின் காரணமாகத் தடைப்பட்டது. ஆனால் தற்போது மீண்டும் தொடரப்பட்டுள்ள இந்த வீட்டின் உருவாக்கம் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் முடிந்துவிட்டதாக கூறப்படுகின்றது.

கார்பன் கட்டமைப்பின் மீது இதற்கென தயாரிக்கப்பட்ட சிறப்பு துணி கொண்டு இந்த வீடு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் நிலவில் சென்று இறங்கியவுடன் வாயுவினால் இந்த கூடாரத்தை நிரப்பிய பின்னர் சில நிமிடங்களில் இந்த வீட்டின் கட்டமைப்பு சுயமாக உருவாகிவிடும்.

சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் செய்யப்பட்டு வரும் இந்த வீடானது சுவீடன் நாட்டில் காணப்படும் சிறிய குடிசை வீட்டை ஒத்திருக்கும். மூன்றுக்கு இரண்டு மீட்டர் பரப்பளவும் 2.5 மீ உயரமும் கொண்ட இந்த வீடு வளர்ந்த ஒரு மனிதன் வசிப்பதற்குப் போதுமான இடத்தை கொண்டிருக்கும்.



இதற்காக சுவிடனின் விண்வெளி பொறியாளர்கள் பல ஆண்டுகளாய் தொடர்ந்து ஆய்வு நடத்தி தங்களது கனவினை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாய் உள்ளனர். நாசாவையும் தங்களின் தொழில்முறை பங்குதாரர்களாகக் கொண்ட அஸ்ட்ரோபோடிக் என்ற அமெரிக்க விண்வெளி தொழில் நுட்ப நிறுவனம் இந்த வீட்டை நிலவுக்கு எடுத்துச்செல்ல இணங்கியுள்ளது. அடுத்த வருடம் அக்டோபர் இந்த பயணம் திட்டமிட்டுள்ளது.

இங்கிலாந்தில் மந்திரம் செய்த இந்தியருக்கு ஜெயில்

இங்கிலாந்தில் மோசடி வேலைகளில் ஈடுபட்ட வந்த இந்திய நபருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவை சேர்ந்த மந்திரவாதியான முஹம்மது அஷ்ர∴பி என்பவர், இங்கிலாந்தில் உள்ள லிய்செஸ்டர் நகரில் நூதனமான விளம்பரங்களை துண்டு பிரசுரங்கள், வானொலி நாளேடுகளின் மூலம் வெளியிட்டு வந்தார்.

'கமல் ஜி' என்று தன்னைத்தானே அழைத்துக்கொண்ட இவர், தன்னை சாய்பாபாவின் பக்தர் என்றும், ஜாக குறைபாடுகள், குடும்ப உறவுகள், தொழில் மற்றும் வியாபாரத்தில் ஏற்படும் சிக்கல்களும் தனது மந்திர சக்தியின் மூலம் நிவாரணம் செய்து வைப்பதாக தொடர்ந்து விளம்பரப்படுத்தி வந்ததை அறிந்த லிய்செஸ்டர் நகர பொலிசார் இது தொடர்பாக பொதுமக்களை எச்சரித்து வந்தனர்.

இருப்பினும், இவரது விளம்பர மாயவலையில் மயங்கி, சிக்கிய ஒரு பெண்ணிடம் அவருக்கு லாட்டரியில் 6 கோடி பவுண்டுகள் விழுந்துள்ளதாக கூறி, போலி ஆவணங்களை காட்டி, அந்த பெண்ணிடம் இருந்து 60 ஆயிரம் பவுண்டுகளை மோசடியாகவும், மிரட்டியும் பறித்துக்கொண்டார்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரையடுத்து, அந்த போலி மந்திரவாதியை கைது செய்த பொலிசார், உரிய ஆதாரங்களுடன் லிய்செஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கின் மறு விசாரணையை இம்மாத இறுதிக்கு ஒத்திவைத்த நீதிபதி குற்றவாளியை சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்கா இராணுவ வீரர் விடுதலை

5 ஆண்டுகளாக பிணையக் கைதியாக பிடித்து வைத்திருந்த அமெரிக்க ராணுவ வீரரை ஆப்கானிஸ்தான் தாலிபான்கள் விடுவித்தனர். பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள பாக்டிக்கா மாகாணத்தில் இருந்து அமெரிக்க படையை சேர்ந்த சார்ஜண்ட் போவே பெர்க்டால் (28) என்பவரை தாலிபான்கள் கடந்த 2009-ம் ஆண்டு கடத்திச் சென்றனர்.

அமெரிக்காவின் குண்டனாமோ சித்ரவதை கூடத்தில் அடைப்பட்டிருக்கும் 5 தாலிபான்களை விடுவிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்த அவர்கள், அமெரிக்க ராணுவ வீரரை பிணையக் கைதியாக அடைத்து வைத்திருந்தனர். அவரை விடுவிக்க ரகசியமாகவும், அதிகாரபூர்வமற்ற முறையிலும் பேரம் நடந்து வந்ததாக கூறப்பட்டது. இந்நிலையில், அமெரிக்க அரசு ஐந்து தாலிபான்களை விடுதலை செய்ததாகவும், இதனையடுத்து, சார்ஜண்ட் போலவே பெர்க்டால் விடுவிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

படித்துக்கொண்டே கார் ஓட்டிய பெண் புகைப்படத்தால் பிடிபட்டார்

இங்கிலாந்தில் உள் ஒரு பெண் புத்தகம் படித்துக்கொண்டே பிசியான சாலை ஒன்றில் 70 கி.மீ. வேகத்தில் கார் ஓட்டிக்கொண்டு சென்றுள்ளார். அவர் புத்தகம் படித்துக்கொண்டே கார் ஓட்டுவதை ஒருவர் புகைப்படம் எடுத்து தனது ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்தார். ஃபேஸ்புக்கில் பதிவு செய்யப்பட்ட ஒரு மணி நேரத்தில் அந்த பெண் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டார்.

இங்கிலாந்தில் உள்ள Leicestershire என்ற இடத்தில் உள்ள பிசியான M1 சாலையில் ஒரு இளம்பெண், தனது காரில் 70 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருந்தார். அவர் தனது கார் ஸ்டியரிங்கில் புத்தகத்தை வைத்துக்கொண்டு அந்த புத்தகத்தைப் படித்துக்கொண்டே காரை ஓட்டினார். இதை பார்த்த ஒரு சிலர் அந்த எச்சரிக்கை செய்தனர். ஆனால் அவர் எதையும் கண்டுகொள்ளாமல் புத்தகம் படிப்பதிலேயே குறியாக இருந்தார். இந் நிலையில் மற்றொரு காரில் சென்று கொண்டிருந்த ஒருவர் கார் ஓட்டிக்கொண்டே புத்தகம் படிக்கும் அந்த பெண்ணை புகைப்படம் எடுத்து உடனடியாகப் ஃபேஸ்புக், டுவிட்டர் மற்றும் வாட்ஸ்அப் போன்ற



சமூக வலைத் தளத்தில் அந்த புகைப்படத்தைப் பதிவிட்டார். கார் எண்ணையும் குறிப்பிட்டு அந்தப் பதிவை இங்கிலாந்து போலீஸாருக்கும் பார்வேர்டு செய்தார். அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்தப் பெண் கைது செய்யப்பட்டார். போலீஸார் அவரது லைசென்ஸை கேன்சல் செய்ததோடு அவருக்கு அபராதமும் விதித்தனர்.

கொபி அனானுக்கும் விசா மறுக்கப்படுமா?

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு இலங்கைக்கு வர வீசா அனுமதி வழங்குவது தொடர்பில் அரசாங்கத்திற்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமிக்க உள்ள விசாரணைக்குழுவின் தலைவராக கொபி அனான் நியமிக்கப்பட உள்ளார்.

விசாரணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட உள்ள கொபி அனானுக்கு இலங்கைக்குள் வர கட்டாயம் வீசா அனுமதி வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கைக்குள் வந்து அவ்வாறான விசாரணைகளை நடத்த எவருக்கும் வீசா அனுமதி வழங்கப்படாது என்ற அரசாங்கத்தின் கொள்கையை கொபி அனானுக்கும் செயற்படுத்த வேண்டும் என மற்றைய தரப்பு கோரி வருகிறது.

இந்திய நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சி அமெரிக்காவிற்குச் சவாலாக உள்ளது

ஒபாமா கருத்து

இந்திய நடுத்தர வர்க்க மக்களின் வாழ்க்கைத்தரம் அமெரிக்காவிற்கு பெரும் சவாலாக உள்ளதாக பராக் ஒபாமா கருத்துத் தெரிவித்துள்ளார். நியூயார்க்கில் மிலிட்டரி அகாடமியில் அதிபர் பராக் ஒபாமா சமீபத்தில் உரையாற்றியுள்ளார்.

அப்போது அவர் பேசுகையில், பிரேசிலாக இருந்தாலும், இந்தியாவாக இருந்தாலும், அந்த நாடுகளின் நடுத்தர வர்க்க மக்கள் பெற்றுள்ள வளர்ச்சி அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளுக்குப் போட்டியாக மாறியுள்ளது.



மேலும், வளரும் நாடுகளின் சில நேரங்களில் சந்தைப் பொருளாதாரத்திலும், ஜனநாயகத்திலும் வளர்ந்த நாடுகளை ஆச்சரியப்படுத்திவிடுகின்றன.

24 மணி நேரச் செய்தி ஊடகங்களும், சமூக வலைத்தளங்களும், பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன. மேலும், இதுதான் வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று தெரிவித்துள்ளார்.

சூட்கேஸ் ஸ்கூட்டரை உருவாக்கிய சீனர்



விமான நிலையங்களுக்கோ, ரயில் நிலையங்களுக்கோ சூட்கேசை இழுத்துச் செல்லும் நடைமுறை மாறும் நிலை வெகு தொலைவில் இல்லை. சூட்கேசை நாம் இழுத்துச் சென்ற நிலையை மாற்றி சூட்கேஸ் நம்மை சுமந்து செல்லும் நிலையை சீன விவசாயி ஒருவர் உருவாக்கிச் சாதனை படைத்திருக்கிறார்.

ஹே லியாங்காய் என்னும் சீன விவசாயி மின்சார சூட்கேஸ் ஒன்றை வடிவமைத்திருக்கிறார். இதன்மீது இருவர் அமர்ந்து மணிக்கு 12 மைல் வேகத்தில் பயணம் செய்யலாம். மத்திய சீனாவில் சாங்சா நகரில், ஹே லியாங்காய் தான் கண்டுபிடித்த சூட்கேஸ் - ஸ்கூட்டர் மீது அமர்ந்து 7 மைல் தூரத்திலிருந்த சாங்சா ரயில் நிலையம் வரை சென்று திரும்பினார். இந்த சூட்கேஸ்-ஸ்கூட்டரில் மணிக்கு 12 மைல் வேகம் வரை பயணம் செய்யலாம். சுமார் 7 கிலோ எடையேயுள்ள இந்த சூட்கேஸ்-ஸ்கூட்டர் ஒரு சிறிய பேட்டரி மூலம் இயங்கக்கூடியது.

இதன் மீது இருவர் பயணம் செய்யலாம். 37 மைல்கள் வரை பயணம் செய்யலாம். பேட்டரி தீர்ந்து போனால் உடனடியாக மீண்டும் ரீசார்ஜ் செய்து கொள்ளலாம்.

இதனைக் கண்டுபிடித்துள்ள ஹே லியாங்காய் ஒரு பொறியாளர் அல்ல மாறாக அவர் ஒரு விவசாயி. முறையாகக் கல்வி கற்றவர் அல்ல. முறைசாராக் கல்விமான் அவர். ஹே 1999இல் கால் பாதுகாப்பு முறை ஒன்றை வடிவமைத்தமைக்காக அமெரிக்காவிடமிருந்து விருதினைப் பெற்றிருக்கிறார். அமெரிக்காவிற்கு விருதினைப் பெறுவதற்காகச் செல்கையில் லக்கேஜை எடுத்துச் செல்ல மறந்துவிட்டார்.

அப்போதுதான் லக்கேஜ் மீதே பயணம் செய்யக்கூடிய விதத்தில் சூட்கேஸ் ஸ்கூட்டரைக் கண்டுபிடித்தால் என்ன என்று சிந்தித்திருக்கிறார். அத்தகைய சிந்தனையின் செயல் வடிவம்தான் தற்போது யதார்த்தமாகி இருக்கிறது.

தேனீக்களை நான் விரும்புகிறேன்

சீனாவைச் சேர்ந்த நபரொருவர் அதிக நேரம் உடலில் தேனீக்களை தாங்கி புதிய கின்னஸ் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

62.1 கிலோ கிராம் தேனீக்களை உடலில் தாங்கி கின்னஸ் உலக சாதனை படைத்திருக்கிறார் ருவான் லியாங்மிங் என்பவர். இவர் தனது உடலில் சுமார் ஒரு இலட்சம் தேனீக்களை 53 நிமிடங்கள் 35 விநாடிகளுக்கு போர்வையாக்கியுள்ளார்.

இதில் மிகப்பெரும் ஆச்சரியம் என்னவெனில் ஒரு தேனீகூட அவருக்கு கொட்டவில்லை.

சீனாவின் ஜியாங்ஸி மாகாணத்தின் யிசிங் நகரில் புதிதாக ஏற்படுத்திய தனது சாதனை குறித்து லியாமிங் பேசுகையில், 'நான் தேனீக்களை விரும்புவதுடன் அவை என்னை விரும்புகிறன். எனது தேனீ நண்பர்களால் மிக அரிதாகவே நான் கொட்டப்படுகிறேன். தேனீக்கள் மிகவும் உணர்வுமிக்கவை. எனவே என்னால் முடியுமானவரை என் மீது அவை நிலைகொள்ளும் வரையில் எனது உடலைப் பேணினேன். நான் தேனீக்களை விரும்புகிறேன். அவை எனது வாழ்க்கை எனத் தெரிவித்துள்ளார்.





அண்மையில் சீனாவைச் சேர்ந்த தேனீ வளர்ப்பாளரான ஷீ பிங் என்பவர் தனது உடலில் 45 கிலோ கிராம் நிறையுடைய சுமார் 4,60,000 தேனீக்களை சுமந்து தனது தேனீக்கள் வியாபாரத்தினை அதிகரிக்க முயற்சித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அகதிமுகாமிலிருந்து ஓர் ஈழ அகதி

– பத்திநாதன்



கால் நூற்றாண்டையும் தாண்டி நிற்கும் அகதி வாழ்க்கையில் இழந்தது அதிகம். அடிப்படை உரிமை முதல் கொண்டு கல்வி, பொருளாதாரம், உறவுகள் உணர்வுகள் என டில் தற்காலிக வாழ்க்கை என்பது தாமரை இலை மேல் தண்ணீர் போல் ஒட்டாமல் தொடர் கதையாக முடிவில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

எனது போரின் மறுபக்கத்தில் அகதி அனுபவத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக பதிவு செய்திருக்கிறேன். அதன் மிக சுருக்கிய வடிவம் இக்கட்டுரை 1983ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிற்கு ஈழ அகதிகள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். 1990ல் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமாக வந்த அகதிகளில் நானும் ஒருவன் அப்போது எனக்கு பதினாறு வயது இந்தியாவை பார்க்க வேண்டும் என்ற ஆசையே என்னை அம்மாவிடமிருந்து பிரித்துக் கொண்டு வந்தது. ஐந்து அல்லது ஆறு மாதங்களில் ஊர் திரும்பி விடலாம் என்ற எண்ணம் வலுவாக இருந்தது.

மண்டபம் அகதிமுகாமில் சமைத்த உணவு பிளாஸ்டிக் பையில் வாங்கி சாப்பிட்டதும் வாந்தி எடுக்க வைத்தது. இது இந்திய ராணுவத்தை ஞாபகப்படுத்திய முதல் அனுபவம்.

சுத்தி கம்பிவலை அடிக்கப்பட்ட கோழிப்பண்ணையில் மூன்று மாத வாழ்க்கை சுவாரஸ்யமானது காரணம் அப்போது எல்லாம் புதுமையாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

உசிலம்பட்டி கோழிப்பண்ணையிலிருந்து உச்சப் பட்டி அகதிகள் முகாமிற்கு அகதியாக குடிபெயர்ந்து வந்தது கோழிப்பண்ணையிலிருந்து கிடைத்த விலையாக இருந்தது. அகதிமுகாமில் அகதியாக போன அவலத்தை எங்கு போய் சொல்வது.

உச்சப்பட்டி அகதிமுகாமில் அடித்த காற்றுக்கும் மழைக்கும் ஆறுமாதம் கூட தாங்காத ஓலைக்கொட்டில் தரையோடு படுத்துக்கொண்டது. தண்ணீரோடு வந்த பாம்பும் தவளையும் சிங்கள ஆமியைப் பார்த்து ஓடியதை ஞாபகப்படுத்தியது.

காலை எட்டுமணிக்கு எழுந்து அரைக்கிலோ மீற்றருக்கும் அதிக தூரமுள்ள பம்புசெட்டில் குழித்துவிட்டு கூடவே வெட்டிக்கதையும் பேசி கொண்டு வீடு வர பத்து மணியாகும் அக்கா தோச்சு அயன் பண்ணி வச்ச சட்டை மடிப்பு குலையாமல் இருக்கும்.

அடுத்து நேராக முகாமில் உள்ள தேனீர் கடை, தேனீர் சாப்பிடவா இல்லை.... அங்குதான் தினத்தந்தி பத்திரிக்கை வரும். பத்திரிகையில் நாட்டு நடப்பு நல்ல விசயங்கள் படிப்பது நல்லது தானே என்று அவசரப்பட்டு இதைப் படிப்பவர்கள் முடிவு செய்து விட வேண்டாம். அந்த காலக்கட்டத்தில் வெள்ளிக்கிழமைப் பத்திரிக்கை படிக்காமல் தூக்கம் வராது. ஒரு பத்திரிக்கை பெரியவர்கள் கை மாறி சிறியவனான என் கைக்கு வரும் போது மதியத்தை தொட்டுவிடும் பொறுமையாக காத்திருந்து எப்படியும் படித்து விடுவேன் காரணம் வெள்ளிக்கிழமை தான், சினிமா சிறப்பிதழ் வரும். அதற்கு அடுத்து என்ன புதுப்படம்? எந்த தியேட்டர்? இவ்வளவுதான் பத்திரிக்கை படிப்பு. கதை பேசி வீடு வந்தால் மதிய உணவு மாலை நான்கு மணி வரை தூக்கம் அதன்பின்பு கைப்பந்தாட்டம். ஆறுமணி வரை அதன்பின்பு காரம்போடு விளக்கு வெளிச்சத்தில் ஆட்டம் தொடரும் (அப்போது முகாமில் மின்சாரம் இல்லை) ஞாயிற்றுக்கிழமையெனில் சினிமா படம் இப்படியே கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் முகாமில் கழிந்து போனது. பள்ளிக்கூடமாவது படிப்பாவது கேள்வி கேட்பார் யாருமில்லை. அதற்கான அவசியமும் இல்லை. ஊரில் பிரச்சனை முடிந்துவிடும் நாம் ஊருக்கு போகப் போகிறோமே? இப்படி ஐந்து வருடங்களுக்கு மேல் கடந்து கொண்டிருந்தது, என்னைப்போல் பலரது கதை இப்படித்தானிருந்தது.

குடும்பச் சூழல் மாறுபட்டதே தவிர அகதிகள் முகாம் மாறவில்லை. சீட்டு விளையாட கற்றுக்கொண்டேன் (தற்போது முகாம்களில் சூதாட்டம் நடக்கிறது) தண்ணியடிக்க கற்றுக்கொண்டேன், சிகரட் புகைக்க கற்றுக்கொண்டேன். வயது பெண் வாசம் தேடிச் சென்றது ரவுடித்தனம் செய்ய, வீட்டோடு தொடர்பு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துபோனது காசு தேவைப்பட்டது, 1997 முதல் 98 வரை கொத்தனார் வேலை, பெயின்டிங் வேலை வாச்மேன் வேலை, கிரசரில் கல்லுடைக்கும் வேலை, ரயில்யேவில் தண்டவாளம் போடும் சாலைவேலை, கடைசியாக ஒயின்சாப் வேலை தொடர்ச்சியாக மதுரை அரசடி மத்திய சிறைச்சாலையில் மூன்று நாட்கள் திரும்பிப் பார்க்கிறேன் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் வீணாக கழிந்திருந்தது.

ஊரில் இருந்திருந்தால் பாதிரியாராக ஆகியிருப்பேன். . அல்லது போராட்டத்தில் கலந்து இருப்பேன். உயிரோடு இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம்.

எனக்கு நன்றாக கோழி திருடத் தெரியும் முகாமில் ஒரு காலத்தில் முகாமில் காணாமல் போன கோழிகளில் பெரும்பான்மையாக எனது கைவண்ணமிருக்கிறது என்று தற்போது கூறினால் ஆச்சர்யப்படுவார்கள். நிறைய கள்ளக்காதல் கதைகள் தெரியும், சுயபரிசோதனை செய்கையில் ஏன் என்ற கேள்வி எழும்போது நான் முடிவுக்கு வருவது இந்த அகதிமுகாம்களின் சூழல் அப்படித்தானிருக்கிறது. பெரும்பாலும் முகாம் இளைஞர்கள் நான் மேற்குறிப்பிட்ட வாழ்வியலுக்குள் சிக்குண்டு மீண்டு வந்தவர்கள், பலர் மாண்டு போனவர்கள். (தமிழ்நாட்டு அகதிகள் முகாம்களின் சூழல் எப்படியிருக்கு என்று அறிய விரும்பியவர்கள் நேரில் வந்து ஆய்வு செய்யவும்)

கியூப் பிராஞ்சின் பார்வை என்னில் படுகிறது முகாம் கட்டுப்பாடுகள் என் கண்ணைக்குத்துகிறது மூன்று நாள் சிறை வாசத்தில் ஞானம் பிறந்தது என்று கூறி விட முடியாது. ஆனால் அதனால் ஏற்பட்ட அவமானம் முகாமிலிருந்து என்னை விரட்டியது.

1999 முதல் 2006 வரை தமிழ்நாட்டில் எங்கும் எனக்கு பதிவில்லை. இந்த ஏழாண்டு காலம் சென்னை வாழ்க்கை சவாலானது எந்தச் சான்றிதழும் இல்லாமல் பொய் மேல் பொய்யாக ஐந்து நட்சத்திர விடுதியில் வேலை செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை பொது நிர்வாகம் உண்மையாக நேர்மையாகப் படித்தேன் (சென்னை நண்பர்கள் உபயம்) அதே வேளை புத்தகத்தின் வாசம் பிடிபட ஆரம்பித்தது இதுவும் நண்பர்கள் உபயம் முக்கியமாக போரின் மறுபக்கம் புத்தக எழுத ஆரம்பித்து எழுதி முடித்தாலும் அதனை வெளியிடுவதற்கான போராட்டம் மிகப்பெரிதான சவால்களாக இருந்தது. கடுமையான தொடர் முயற்சி தேவைப்பட்டது, காரணம் அப்போது பொடாச்சட்டத்தில் பல அரசியல் கட்சிகளின் தலைவர்களே சிறையிலிருந்தார்கள்.

முகாமில் ஒரு மாதம் இல்லை என்றால் முகாம் பதிலை துண்டித்து விடுவார்கள். ஆனால் மீண்டும் மீள் பதிவு எடுப்பது என்பது மிகுந்த பொறுமையும் சவாலும் நிறைந்தது. 2006ல் மீண்டும் முகாமில் மீள்பதிவுக்கான போராட்டத்துக்கும் தயார் மனநிலையில் வந்திறங்கினேன். முகாம் அகதிகள் என்னை விசித்திரமாகப் பார்த்தார்கள் காரணம் நாள் அகதிகளிலிருந்து முற்றிலுமாக மாறுபட்டிருந்தேன். படிப்படியான பல போராட்டத்திற்கு பின்பு காலச்சுவடு பதிப்பகம் மூலமாக புத்தகம் வெளிவந்தபோது ஆச்சர்யம் மட்டுமல்ல அதிர்ச்சியாகவும் இருந்தது கியூப் பிரிவு அதிகாரிகளுக்கு.



"டேய், உனது நாள் வருகிறது - எண்ணிக்கொள்! எனது வாழ்க்கையை அழித்த ஆண்களே, அதற்கான விலையை நீங்கள் செலுத்த வைத்தே தீருவேன்!"

2000 ஆண்களுக்கு எய்ட்ஸ் பரப்புவதே எனது குறிக்கோள். இதுவரை 324 பேருக்குப் பரப்பிவிட்டேன். அதில் 156 பேர் எனது பல் கலைக்கழக மாணவர்கள், மீதி விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், திருமணமான ஆண்கள், பிரபலங்கள், அரசியல்வாதிகள்... இதற்காக, ஒரு நாள்கூட உடலுறவு இல்லாமல் நான் கழித்ததில்லை. அனேகமாக ஒரு நாளில் நான்கு பேர்!

இப்படியான ஒரு ஆவேசத்தின் உச்சத்தில் கறுவும் இப்பெண் 19 வயதுப்பெண் உண்மையில் தனக்கு நேர்ந்த கதிகுறித்து அந்தளவு துடிதுடித்துப் போனாள். கென்யாவின் காபறாக் பல்கலைக்கழக மாணவியான இவள் கடந்த செப்டம்பர் 22ம் திகதி ஒரு பார்ட்டியில் மதுபோதையில் மயங்கிக் கிடந்து எழுந்தபோது, தன்னை சக மாணவன் ஒருவன் உடலுறவுக்குட்படுத்தியிருப்பதை உணர்ந்தாளாம். சோதித்தபோது அவளுக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டிருப்பது உறுதியாக்கப்பட்டதாம். அந்த மாணவனைத் தேடிப்பிடித்து நீதி கேட்டிருக்கிறாள். அவன் அலட்சியமாக மறுத்துவிட்டான். அழுதாள். புரண்டாள். தற்கொலை செய்ய முயன்றாள். பின்னர் வாழ்நாளுக்குள் முடிந்தவரை இப்படியான கேலமான ஆண்களை அம்பலப்படுத்தி பழிதீர்த்தே தீருவதென்ற முடிவுக்கு வந்தாள்.

"நான் அழகி. எனக்கு இடமும் வலமும் நடுவிலும் என்று வழிந்தபடி சுற்றிவரும் மணமாகாத, மணமான ஆண்கள் அநேகர், அனைவரும் விழுவர் என் வலையில்!" - இவ்வாறு குமுறும் அவள் "என்னுள் இருந்த "நல்ல பெண்ணைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டேன். நான் இறக்குமுன்னர் எவ்வளவு பேரைப் பழிவாங்க முடியுமோ, அவ்வளவு பேரைப் பழிவாங்குவதே என் லட்சியம்" என்கிறாள்.

தன் பெயரை மறைத்துக்கொண்ட அவள் கென்யன் டெய்லி போஸ்ட் பத்திரிகைக்கு இவ்விபரத்தைச் சொல்ல, அவர்கள் அவளது



பேஸ்புக் புரொபைலைக் கண்டுபிடித்து இப்படத்தை வெளியிட்டிருந்தார்கள். இந்தச் செய்தி வெளிவந்ததும் முகம் காட்டாத ஒருவர் பதறியடித்துப் பதிலளித்துள்ளார் இப்படி.

"ஓ மை காட்! இவளா? இவளைத் தெரியும். இவ்வருடத்தில் மூன்று தடவைகள் நான் அவளுடன் உறவுகொண்டிருக்கிறேன். நீ எனக்கு இப்பிடிச் செய்திருக்கக்கூடாது. யாரோ செய்த தவறுக்காக மற்றவர்களைப் பழிவாங்குவது நியாயமில்லை. நான் இப்போது செய்வதறியாது தவிக்கிறேன்."

❖

துயர் சொல்லும் கதைகள்

- மரீனா

சிறையிலிருந்து நளினி

ராஜீவ்காந்தி கொலை வழக்கில், வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆயுள் தண்டனைக் கைதியான நளினி, விடுதலையின் வாசல் வரை சென்றும், உச்ச நீதிமன்றம் அந்த வழக்கை அரசியல் சாசன பெஞ்சுக்கு மாற்றியதால் இன்னும் சிறையில் இருக்கிறார். தந்தையைப் பார்ப்பதற்கு பரோலும் மறுக்கப்பட்ட நளினியிடம், எடுக்கப்பட்ட நேர்காணலிலிருந்து தொகுத்தவை.

ஒரு மனிதனை பல ஆண்டுகள் கட்டிவைத்தாலோ, இருட்டறையில் அடைத்து வைத்தாலோ, வானம் தெரியாத இரும்புக்கூரையின் கீழ் வாழ வைத்தாலோ அவன் மனச்சிதைவு நோய்க்கு ஆளாகி விடுவான். நான் 23 ஆண்டு களாகத் தனிமைச்சிறையில் இருக்கிறேன். ஓர் ஆயுள் தண்டனைக் கைதிக்குரிய எந்தச் சலுகைகளும் எனக்கு வழங்கப்படவில்லை. எனக்கு வழங்க வேண்டிய விடுமுறைக்குக்கூட நான் நீதி மன்றத்தில் போராட வேண்டியுள்ளது. சிறை, அதன் அளவில் வகுத்துள்ள சுதந் திரத்தைக்கூட எனக்கு வழங்கவில்லை. நான் இங்கு எவருடனும் பேச முடியாது.

வேலூர் பெண்கள் சிறையில, 10 முதல் 12 குழந்தைகள், அந்தக் குழந்தை களை நான் தொட்டுத் தூக்கவோ, கொஞ் சவோ கூடாது. என் சுதந்திரத்தின் அளவை, என்னைப் போன்ற கைதிகளுக்குப் பிறந்த குழந்தைகள் அதன் தன்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

பெண் சிறைவாசிகளும் என்னைச் சரியாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இங்குள்ளபெரும்பாலானபெண்கைதிகள், சபிக்கப்பட்டவர்கள்; அவ்வப்போது வந்து செல்கிறவர்கள், சிறைக்குள் வந்துவிட்ட பிறகு பெரும்பாலும் சமூகமும் உறவுகளும் அவர்களைக் கைவிட்டு விடுவதால், சிறை அதிகாரிகள் மனது வைத்தால் மட்டுமே விடுதலை என்று அவர்களை, கடவுளைப் போல நம்பத் தொடங்கி விடுகிறார்கள். அது பயமும் மிரட்சியும் கலந்த பக்தி.

இவளால்தான் ஆயுள் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு கிடைப்பது இல்லை, இவளால்தான் நமக்கும் பரோல் விடுப்பு கிடைப்பது இல்லை என்று நம்ப வைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் என்னோடு பேசத் தயங்குகிறார்கள்.

உணர்வுகளை மரத்துப்போகச் செய்யும் சிறை வாழ்வில், மாதம் இருமுறை என் மகள் அரித்ராவுக்கு நான் எழுதும் கடிதங்களும், கடவுளோடு என் பிரார்த்தனைகளுமே நான் சிதைந்து போகாமல் காப்பாற்றி வருகின்றன!

அரித்ராவை நான் பார்த்தே எட்டு வருடங்கள் ஆகின்றன. நாங்கள் விடுதலை ஆவோம் என்ற நம்பிக்கையில் இருந்தாள். எங்களைச் சந்திப்பதற்காக அவள் விசாவுக்கு விண்ணப்பித்த போதும், அதைக் கொடுக்கவில்லை, 15 நாள்களுக்கு விசா அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டும், தரவில்லை. இப்போது பட்டப்படிப்பைமுடித்திருக்கிறாள். மேற்படிப்பா, வேலையா என்பதை அவளே முடிவு செய்வாள். முழுமையான ஒரு வாழ்வை அவளுக்குப் பரிசாக அளிக்க முடியாவிட்டாலும், அவளது வாழ்க்கையே, எங்கள் எதிர்கால அடிப்படை என்பதை மட்டும் உணர்ந்திருக்கிறேன்!

முருகனைக் காதலித்ததால் அதிகமாகத் தண்டிக்கப் பட்டதாக நினைக்கிறேன்.

கடைசி வரை என் காதலில் உறுதியாக இருந்தேன். நான் காதலித்த போது அவர்களை பல இடங்களுக்கு அழைத்துச் சென்றேன். மொழி புரியாதவர்களுக்கு, நான் என்னால் ஆன உதவிகளைச் செய்ததைத் தவிர, எனக்குத் தெரிந்து நான் எந்தத் தவறும் செய்யவில்லை. இந்த வழக்கில் சிக்கவைக்கப்பட்ட பின்னர், என் கண வரிடம் இருந்து என்னைப் பிரித்து, அவருக்கு எதிராக என்னைப் பயன்படுத்த முயன்றார்கள். நான் மட்டுமல்ல, இந்த வழக்கின் தேவைக்காகப் பல குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. சிலர், போலீ ஸாரின் அழுத்தங் களையும் மீறி குடும்ப வாழ்வில் உறுதி யாக நின்றார்கள். வேறு சிலர் பிரிந்து போனார்கள்.

வேலூர் சிறையில் பிரியங்கா காந்தியைச் சந்தித்ததை?

ஒரு கெட்ட கனவாக மறக்க நினைக்கிறேன். அந்தச் சந்திப்பையொட்டி உருவாக்கப்பட்ட செய்தி களும், கருத்துக்களும் எனக் குள் மோசமான விளைவு களை உருவாக்கிவிட்டன. அதனால் பட்ட வேதனை களை, வலிகளை நான் மட்டுமே அறிவேன். அன்று சிறையில் அசாதாரணமான சூழல் நிலவியது. நடமாடு வதைத் தடைசெய்து அனைத்து கைதிகளையும் சிறைக்குள் அடைத்தார்கள். திடீரென சிறைக் கண்காணிப் பாளர் அழைப்பதாகச் சொல் லி, என்னை அழைத்துச் சென்றார்கள். அவரின் அறைக்குள் சென்ற போது அங்கு ஒரு பெண் அமர்ந்திருந்தார். அவரை எனக்குள் அடையாளம் தெரியவில்லை. நான் சென்ற தும் சிறைக் கண் காணிப் பாளர் எழுந்து வெளியில் சென்றுவிட்டார். வந்திருந் தவர், தன்னை 'பிரியாங்கா காந்தி' என்று அறிமுகம் செய்துகொண்ட போது நான் குழம்பிவிட்டேன். 'இவருடன் பேசுவதா... வேண்டாமா?" என்று யோசிக்கத் தொடங்கினேன். ஆனால், சிறைக் கைதிக்குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த எனக்கு, அந்தச் சூழ்நிலையில் அவருடன் பேசுவதைத் தவிர வேறு எந்த வாய்ப்பும் இல்லை.


ராஜீவ்காந்தி கொலை வழக்குப் பற்றியும், விசாரணை முறை பற்றியும் எனது காதல், திருமணம் பற்றியும் கேட்டார். 'உங்கள் தந்தை கொலையில், நான் மட்டும் அல்ல, முருகன், சாந்தன், பேரறிவாளனும் நிரபராதிகள்தான்' என்றேன். அதை அவர் நம்பினாரா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அந்தச் சந்திப்பு முழுவதும் கொந்தளிப்பான ஒரு மனநிலையில் அவர் இருந்தார். ஒரு தந்தையை இழந்த இளம்பெண்ணின் வேதனையாகவோ, மன எழுச்சியாகவோ அது இருக்கலாம். நான் அதை அப்படித்தான் புரிந்துகொண்டேன்.

பிரியங்காதான் என்னை விரும்பிச் சந்தித்தார். ஏழு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அதற்கான பழியை மட்டும் நான் சுமந்து கொண்டிருக்கிறேன். அவரவர் லாபங்களுக்காக, என்னை ஒரு துருப்புச்சீட்டாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.



வந்திருந்தவர், தன்னை 'பிரியாங்கா காந்தி' என்று அறிமுகம் செய்துகொண்ட போது நான் குழம்பிவிட்டேன். 'இவருடன் பேசுவதா... வேண்டாமா?" என்று யோசிக்கத் தொடங்கினேன்

பகிரங்க கடிதம்



மாண்புமிகு நீதியரசர் கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன்

முதலமைச்சர் அலுவலகம்

வடமாகாணசபை,

இல 26, சோமசுந்தரம் வீதி,

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

இலங்கை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே,

தங்களிடம் பெரும் எதிர்பார்ப்பு வைத்திருந்த சாதாரண குடிமகனாகிய நான், தங்களது ஆரோக்கியமான உடல்நலத்தை முதற்கண் வேண்டிக்கொண்டு பணிவன்புடன் எழுதுவது யாதெனில்.

தமிழ் மக்களின் பேரனர்த்தம் நிகழ்ந்த முள்ளிவாய்க்காலை, முல்லைத்தீவைச் சென்று பார்த்து ஆறுதல் கூறியதற்கு மனமார்ந்த நன்றி. ஆனால் இதற்கு உங்களுக்கு ஏழு மாதம் எடுத்திருக்கிறது. வசதியற்ற நாமே தன்னார்வத்தின் உந்தலில் என்றோ சைக்கிளில் சென்று பார்த்துவிட்டோமே. பரவாயில்லை.

தேர்தல் முடிந்து 7 மாதங்கள் கடந்தும் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாத நிலையை இட்டு நீங்கள் வேதனை அடைவது புரிகிறது. நீங்கள் பதவிக்கு வரும்போது தமிழ் மக்களுக்கு உருப்படியாக ஏதும் செய்யமுடியும் எனக் கருதியிருக்கக்கூடும். உண்மையில் மகிந்த அரசு தமிழ்மக்களின் பெரும் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் கடமை ஆற்றுவதற்கான ஒத்துழைப்பை வழங்கியிருக்க வேண்டும். சுயமாக, சுலபமாக நீங்கள் செயற்படுவதற்கான நிலைமைகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இலங்கை அரசு முறைமை யின் ஒரு பகுதி தான் வடக்கு மாகாண சபை என்ற நல்லெண்ண சமிக்ஞையை அது காட்டியிருக்க வேண்டும். அரசியல் சட்டப்பூர்வமான தங்களது அதிகாரம் மற்றும் மத்திய அரசின் நல்லெண்ணத்தின் அடிப்படையில் இது நிகழ வேண்டும். ஆனால் இலங்கை அரசு, தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை என்பது இலங்கைக்கு சம்பந்தமற்ற ஒன்றுபோல் நடந்து கொள்கிறது.

எனினும் இவையெல்லாம் தாங்கள எதிர்பார்க்காதவையல்லவே. இவை தேர்தலுக்கு முன்னரே தங்களுக்குத் தெரிந்திருந்தவைதானே. இவற்றை எதிர்கொண்டு மாகாண சபைமூலம் ஆக்கப்பூர்வமான செயறபாடுகளைச் செய்வீர்களென்ற நம்பிக்கையில்தானே தங்களை - சட்ட நுணுக்கங்களை தெரிந்த, உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த தங்களை - முதலமைச்சரென்ற ஸ்தானத்தில் எம் மக்கள் அமர்த்தினார்கள்.

வடக்கு கிழக்குப் பகுதிகள் உள்ளடங்கிய மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம் அப்பீல் நீதிமன்றம் எனப் பணியாற்றி இறுதியில் உச்சநீதின்ற நீதிபதியாவும் நீங்கள் செயற்பட்டிருக்கிறீர்கள். ஒடுக்குமுறைகளுக்கெதிராக தமிழினம் போராடிக்கொண்டிந்தவேளை, அத ஒடுக்குவதற்காக இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் கொண்டுவந்த பயங்கரவாதத் தடைச்சட்டம், புலித்தடைச் சட்டம், அவரசரகாலச் சட்டம் போன்றவற்றின் சட்ட விதிகளை அமுலாக்கும் தீர்ப்புக்களை வழங்கும் நிலையில் நீங்கள் இருந்தீர்கள்.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய குட்டிமணி தங்கதுரை உட்பட பல்லாயிரம் போராளிகளை சிறையில் தள்ளிய இச்சட்டங்களை ஏற்று நீங்கள் தீர்ப்பெழுதினீர்கள். உங்கள வெற்றிக்கான தேர்தல் பிரசாரத்தில் நீங்கள் உச்சரிக்கத் அதே விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்மீதான வழக்கு உங்களிடம் வந்திருந்தால்கூட நீங்கள் விதிவிலக்காய் தீர்ப்புச் சொல்லியிருக்கப் போவதில்லை.

இருந்தும் எம் சமூகம் இதுகுறித்து தங்கள்மீது குறைகாணாமல், 40 வருடகால போராட்டத்தின் வழிவந்த யாவரையும் தாண்டி, தங்களைத் தேர்ந்தெடுத்து இப்பதவியில் அமர்த்தியது ஏனெனில், தங்கள் கல்வித் தகமையும், சட்ட அறிவும், உயரிய சமூக ஸ்தானமும் பெருத்த இடர்பாடுகளுக்குள் எமக்கென எஞ்சியிருக்கும் இம்மாகாண சபையின் சவால்களை கம்பீரமாக எதிர்கொண்டு, அதை வீச்சுடன் செயற்பட வைக்க உதவும் என்ற நம்பிக்கையில்தானே ஐயா.

ஆனால் அவற்றை விடுத்து அவசியமற்ற விடயங்கள்தான் நிகழ்ந்தேறிச் செல்வதை நாம் காண்கிறோம். மாகாண சபைக்கு சம்பந்தமில்லாத விடயங்களை வடமாகா சபையில் பிரேரணையாக கொண்டு வருபவர்களை நீங்கள் கட்டுப்படுத்த தவறியுள்ளீர்கள். இந்த வீண் விவாதங்களிலும் சர்ச்சைகளிலும் மூழ்கி, கடந்த வருடம் மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட பணம் பாவிக்கப்படாமலே திறைசேரிக்குத் திரும்பிச்செல்ல விட்டுவிட்டீர்கள். இதைவிடுத்து மாகாணசபையில் மக்களின் நன்மைகருதி தங்கள் ஆழுமையை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். மாகாண சபையைப் பலப்படுத்துவதற்கான நடைமுறையினைப் பின்பற்றி இருக்க வேண்டும். இனிமேலாவது அதனைச் சரிசெய்ய வேண்டும்.

நீங்கள் கவனம் செலுத்த வேண்டியது மாகாணத்துக்குரிய அதிகாரங்களுக்கு அரசியல் சட்டரீதியான அந்தஸ்த்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளிலேயே. அதாவது மாகாண சபைக்கான சட்டவாக்கல் அதிகாரங்களை நிட்சயப்படுத்தும் விதத்தில் சாசனங்கள் (statutes) பிறப்பிப்பதிலேயே, ஆனால் அதற்கான முயற்சிகள் சபையில் மேற் கொள்ளப்படவேயில்லை. உங்கள் 15வீதமான ஆட்சிக்காலம் ஏற்கெனவே விரயமாகிவிட்டது. எஞ்சியிருக்கும் காலத்தில் செய்வதற்கு எவ்வளவோ இருக்கிறது.

மக்களுக்கு மாகாணசபையின் அதிகாரங்கள் பற்றி அதிகம் தெரியாவிட்டாலும், தங்களுக்குமா தெரியாது? மாகாணத்தில், மத்திய அரசுக்கான அதிகாரங்கள், மாகாண அரசுக்கான அதிகாரங்கள், இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்களென வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்ளில் மாகாண அரசுக்கான அதிகாரங்களையாவது செயல்படுத்த எத்தனிக்கலாமல்லவா? அதற்கான சட்டவாக்கல்கள் சபையில் மேற்கொள்வதையாவது செய்தால் என்ன தடைகள் வருகின்றன என்பது புலப்படுமல்லவா? அப்போது அதை எதிர்த்து நீதிமன்றம் செல்லுங்கள். உச்சநீதிமன்ற நீதியரசராயிருந்த தாங்கள்தானே அதற்கு மிகப்பொருத்தமானவர்? அங்கும் நீதி கிடைக்காவிடத்து, அதை அம்பலப்படுத்துங்கள். இந்தச்சபையில் அதிகாரமில்லையென்பதை அம்பலப்படுத்தவே தேர்தலில் போட்டியிடுவதாக உங்கள் கட்சி சொன்னதையாவது செய்யுங்கள். நீங்கள் இதைச் செய்யும்வேளையில் இவ் உரிமைகள் வேண்டி மக்கள் போராட்டங்களை உங்கள் கட்சி இன்னொரு புறத்தில் மேற்கொள்ளமே. எல்லாவற்றுக்கும் முன்னர் நீங்கள் செயற்பட்டால்தானே அதைத் தடுப்பதை எதிர்த்துப் போராட முடியும்?

இந்திய மாநில சபைகளை ஒரு முன்னுதாரமாப் பாருங்கள். கடந்த 50, 60 வருடங்களில் இந்திய அதிகாரப்பகிர்வு நடைமுறை எத்தனை நீதிமன்றம் சென்று வாதப்பிரதவாதங்களூடாக முன்னோக்கி நகர்ந்தது. அது தெலுங்காவின் தனிமாநிலம் வரை முன்னோக்கி நகர்ந்திருக்கிறது.

இலங்கையிலும் இதுபற்றிய போராட்டம் ஒன்று ஏதோ ஒரு அளவில் நடந்துகொணடுதான் இருக்கிறது. அது விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கும் இரண்டு சட்டவாக்க சபைகளின் இருப்புக்குமிடையிலான போராட்டமாக உள்ளது. இவ்விரண்டு சட்டவாக்க சபைகள் இருப்பதாக நீதிமன்றத்தால் சொல்லப்பட்டது முக்கியமான கருத்தாக்க மாகும்.

அதிகாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான பிரச்சினைகளில் அடிக்கடி நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான நிலைமைகளை நீங்கள் உருவாக்கியிருக்க வேண்டும். அதற்கான கட்டமைப்பு வசதிகள் ஆற்றல்கள் தங்களிடமே உள்ளன.

இதிலே வடக்கு மாகாண முதலமைச்சரான தங்களை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்த முற்படுவதுஅதிகாரப் பகிர்வை குறைத்து மதிப்பிடும் நிந்தனை செய்யும் கூட்டுச்சதி முயற்சியின் ஒரு அங்கமாகும். இதை உங்கள் கட்சியின் முக்கி பிரமுகர்களே முன்மொழிவது அவர்கள் யாருக்காக சேவையாற்றுகிறார்களெனத் திகைக்க வைக்கிறது. பாராளு மன்றம் ஜனாதிபதி தேர்தல் எல்லாவற்றையும் விட தமிழ் மக்களுக்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் அதிகாரப்பகிர்வு அலகு முக்கியமானது. மாகாணத்திற்கு அதிகாரங்களைப் பெறுவதற்கான கட்டமைப்பு ஏதோ ஒரு எவல் இருக்கிறது. சீர்குலைவுவாதிகள் இழுப்புகளுககு எடுபட்டு அது சிதைவடைய அனுமதிக்காதீர்கள்.

தமிழ்ப்பேசும் மக்களின கௌரவம், தன்னாதிக்கம், பாதுகாப்பு புனர்வாழ்வு, சுபீட்சம், அடையாளம் என்பவற்றுக்கெல்லாம் மகாணசபையே இன்று மையப்புள்ளியாக உள்ளதென்பதன் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். அதிலும் அதன் முதலமைச்சரென்பவர் பாராளுமன்ற எம்பிகள் அமைச்சர்கள் என்பவர்களைவிட உயர்வானதும் தற்சிறப்பானதுமான தமிழ் மக்களின் குறியீடாகத் திகழும் ஒரு பாத்திரம். அதனால் உங்களைத் தமிழ்மக்கள் தாங்களாக உணரும் வகையில் நீங்கள் செயலாற்ற வேண்டும். இதுவே எம் ஆதங்கம்.

தங்கள் உண்மையுள்ள தமிழ்க்குடிமகன்.

– சிருஸ்டி–



இலங்கைத்தீவில் இரு தேசங்களா?

தீபச் செல்வன்

ஈழமும் சிங்கள தேசமும் வரலாற்றின் எல்லாக் காலங்களிலும் இரண்டு நாடுகளாகவே இருக்கின்றன. அந்நியர்களால் ஒன்றிணைக்கப்பட்ட இந்த தேசங்கள் இன்னமும் தனித்தனித் தேசமாகவே காணப்படுகின்றன என்பதை அண்மையில் நடந்த நிகழ்வுகள் மீண்டும் உணர்த்தியிருக்கின்றன. இந்த இரு தேசங்களும் நிலத்தாலும் நிலத்தின் குணத்தாலும் இனத்தாலும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது. வடக்கில் பனைகளும் தெற்கில் தென்னைகளும் மாத்திரம் இந்தப் பிரிவை உணர்த்தவில்லை. இந்த நாட்டின் மக்களின் உணர்வுகளும் இரண்டாகவே பிரிந்திருக்கின்றன.

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பாரபட்சம் காட்டப்படுவதுதான் இந்த தீவின் அறுபதாண்டுகாலப் பிரச்சினை. ஸ்ரீலங்காவில் நாங்கள் இரண்டாம் தரப் பிரசைகள் கூட இல்லை. இரண்டாம் பிரசை என்றால் இரண்டாவது இடமாவது உண்டு. இலங்கைத் தீவில் ஈழ மக்களுக்கு எந்த இடமும் வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. எந்த உரிமையும் எங்களுக்கு இல்லை. எங்களை அழித்து ஒழிப்பதைத் தவிர சிங்கள அரசுக்கு வேறு எந்த நோக்கமும் கிடையாது. எங்களிடம் இருக்கும் சின்னச் சின்ன உரிமைகளைக்கூட மெல்ல மெல்ல சிங்கள அரசு பறித்துக்கொண்டிருக்கிறது.

வெற்றி விழாவும் நினைவுநாளும்

முள்ளிவாய்க்காலில் நடந்த யுத்தம் ஈழ மக்களைப் பொறுத்தவரையில் ஒரு இனப் படுகொலை யுத்தம். மிகக்கொடிய - மனித குலத்திற்கு விரோதமான போர்க்குற்றங்கள் நடந்த மனித உரிமைகள் மீறப்பட்ட யுத்தம். எங்கள் போராட்டத்தை முறியடித்த கொடிய யுத்தம். வன்னி மக்களின் வாழ்க்கையை முற்றுமுழுதாக சிதறடித்த யுத்தம். ஆனால் சிங்கள மக்களுக்கு இது வீர யுத்தம். தமிழ் இனத்திற்கு எதிரான போரில் வீரப் படைகள் வென்ற யுத்தம். சிங்கள மக்கள் யுத்த வெற்றியை கொண்டாடலாம். ஆனால் தமிழ் மக்கள் இந்தக் கொடிய போரில் கொல்லப்பட்ட மக்களைக்கூட நினைவுகூர முடியாதுதான் குரூரமான யதார்த்தம்.

சிங்கள மக்கள் இந்த நாட்டில் எங்கும் குடியமர்த்தப்படலாம். தமிழ் மக்கள் சொந்த நிலத்திலே வாழ முடியாது. தமிழர் நிலத்தில் இன்று மேற்கொள்ளப்பட்டும் பலவந்த திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் மேற்கொள்ளப்படுவது ஏன்? இதற்குப் பெயர் என்ன? வெசாக் அலங்காரங்களைப் பார்க்க தெற்கிலிருந்து வடக்கு கிழக்குக்கு மக்கள் வருகிறார்கள். "யாழ்ப்பாணத்தில் புத்தர்" என்று இராணுவத்தினர் எழுதி மக்களை வரவேற்கிறார்கள். ஆனால் மாத்தறையில் தங்கியிருந்த வடக்கு கிழக்குப் பிரசைகள் இருபதுபேர் கைது செய்யப்பட்டார்கள். ஸ்ரீலங்கா அரசாங்கம் தன் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஈழ மக்களை அந்நியப் பிரசைகளாகவே காலம் காலமாக நடத்தி வருகிறது என்பது மாத்தறையிலும் அம்பலமாகியிருக்கிறது. இந்த நிகழ்வு தெற்கை விட்டு தமிழர்கள் வெளியேற்றப்பட்டதையும் தெற்கில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதையும் நினைவுபடுத்துகிறது.

கொல்லப்பட்ட தமிழ் மக்களை பயங்கரவாதிகள் என்று நினைவுகூர இடமளிக்காமல் சிங்கள இராணுவத்தின் யுத்த வெற்றியை வடக்கு கிழக்கு மக்களுக்கு கிடைத்த சமாதானத்தின் வெற்றி என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வாய்கூசாமல் சொல்லுகிறார். இப்படிச் சொல்லிக்கொண்டே தமிழில் பேசிக்கொண்டே தமிழ் மக்களை அழித்து ஒழிப்பதில் மகிந்த ராஜபக்ச வல்லவர். கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர இடம் மறுக்கும் சிங்கள அரசிடம் வேறு எதை எதிர்பார்ப்பது?

தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இறந்த மக்களுக்காக மாணவர்கள் தீபம் ஏற்றுவார்கள் என்பதற்காக பலக்லைக்கழகத்தை மூடுகிறார்கள். அதே பல்கலைக்கழகத்தில் வெசாக் தினத்திற்காக தீபங்கள் ஏற்றப்படுகின்றன. தெற்கில் உள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களும் திறந்து கல்விச் செயற்பாடுகள் நடக்கின்றன. இன்றைய தலைமுறை மீது இதைவிட கொடிய பாரபட்சம் என்னவாக இருக்கும்? தமிழ் தாயகத்தில் வடக்கில் உள்ள யாழப்பாணப் பல்கலைக்கழகம் மாணவர்கள் உள் நுழைய முடியாத அளவில் தடை போடப்பட்டிருக்கிறது.

இங்கு இரண்டாம் தரப் பிரசை மாணவர்கள் என்ற இடம் கூட தமிழ் மாணவர்களுக்கு இல்லையே? யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்ந்தால் மாணவர்களை படுகொலை செய்வோம் என்று சிங்கள இராணுவம் எச்சரிக்கிறது. பல்கலைக்கழக வளாகத்திற்குள் இராணுவம் நுழைய நேரிடும் என்று மிரட்டுகிறது. ஆனால் உங்கள் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய மாட்டோம் என்பதை உணர்த்தி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அடக்குமுறை எழுச்சியைத்தான் உருவாக்கும் என்பதை சிங்கள இராணுவத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள் உணர்த்தியுள்ளனர்.

பாராளுமன்றில் பாரபட்சம்

ஜே.வி.பியின் ஆயுதப் போராட்டத்தில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூறும் வீரமறவர்கள் தினத்திற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தடைவிதிக்கவில்லையே? தெற்கில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களும் மக்களும் அந்த நாளை நினைவுகூருகிறார்கள்தானே? தெற்குப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் கொல்லப்பட்ட ஜே.வி.பியினரின் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கொல்லப்பட்ட மக்களுக்கு நினைவஞ்சலி செலுத்தத் தேவையில்லை என்று கூறும் ஜே.வி.பி. வீரமறவர்கள் தினத்தை கொண்டாடாமல் இருக்குமா? ஸ்ரீலங்கா அரசாங்கத்தை ஆளும் கட்சியைப் போலவே ஜே.வி.பியும் இப்படித்தான் பாரபட்சம் காட்டி சிங்கள மனோபாவத்தை வெளிப்படுத்துகிறது.

கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தவிடாமல் வடக்கில் மிகப்பெரும் முற்றுகையை இலங்கை இராணுவம் மேற்கொண்டது ஏன் என்று ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் மாவை சேனாதிராசா கேள்வி எழுப்பினார். அவரை பேசவிடாமல் ஆளும் தரப்பு இனவாதிகள் கூச்சல் போட்டு குழப்பினார்கள். தமிழ் மக்கள் அவர்களின் சொந்த நிலத்தில் உயிர் வாழும் உரிமை மறுக்கப்படுவதுபோல் கொல்லப்பட்ட அவர்களின் உறவுகளை நினைவுகூரும் உரிமை மறுக்கப்படுவதுபோல ஸ்ரீலங்கா பாராளுமன்றத்திலும் அவரை பேசவிடாமல் இனவாதிகள் கூச்சலால் முற்றுகையிட்டார்கள். இங்கும் இரண்டாம் பிரசைகளுக்கான இடம்கூட இல்லையே?

மாவை சேனாதிராசாவுக்கு அருகில் இருக்கும் ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அநுரகுமாரதிஸ்ஸநாயக்க. பேச முடியாது இனவாத கூச்சல் முற்றுகைக்குள் பேசும் மாவை சேனாதிராசாவைப் பார்த்து கிண்டலாக சிரித்துக்கொண்டிருந்தார். தமிழரின் நிலமையை நினைத்து சிரித்தி ருப்பார்போல விமல் வீரவன்சவின் தம்பி அநுரகுமார. அவர்களுக்குள் ஆயிரம் அதிகாரப் போட்டிகள் இருந்தாலும் தமிழ் மக்கள் விடயத்தில் அநுரகுமாரவும் விமல் வீரவன்சவும் ராஜபக்சவும் ஒன்றுதான். அனைவரும் உரிமை மறுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதிகளே.



போர் வெற்றியும் இனப் படுகொலையும்

தெற்கில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச யுத்த வெற்றி அணிவகுப்புக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வடக்கு மாகாண சபைப் பிரதிநிதியான அனந்தி கீரிமலைக்குச் சென்றபோது தடுக்கப்படுகிறார். வடக்கில் உள்ள தமிழ் மக்களின் தலைவர்கள் தங்கள் சொந்த இடத்திற்கு செல்ல முடியாமல் தடுத்து வைக்கப்படுகிறார்கள். கூட்டமைப்பின் அலுவலகம் முற்றுகையிடப்படுகிறது. தெற்கில் சிங்களத் தலைவர்கள் யுத்த வெற்றி விழாக்களை பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். வடக்கு கிழக்கிலோ தமிழ் தலைவர்கள் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள்.

தெற்கு யுத்த வெற்றியைக் கொண்டாடுகிறது. வடக்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் நினைவுகளில் தோய்ந்திருக்கிறது. தெற்கில் மாத்தறை நகரம் யுத்த வெற்றி வேட்டுக்களால் அதிர்கிறது. வடக்கில் வன்னி போரில் இறந்துபோன மக்களின் உறவுகளின் வாய்விட்டு அழ முடியாக் குரலில் அமுங்கியிருக்கிறது. யுத்த வெற்றி சாகசங்கள் தெற்கில் நிகழ்த்தப்படுகின்றன. வடக்கில் மக்கள் தங்கள் உறவுகளை நினைவுகூர இடமற்று ஆலயங்களுக்கு அலைகிறார்கள். தெற்கில் ராஜபக்சவுக்கு இராணுவ மரியாதை செய்து சிங்கள மக்களுக்கு சாகசம் காட்டும் இராணுவம் வடக்கில் ஆலயங்களையும் நகரங்களையும் தெருக்களையும் வீடுகளையும் ஈழ மக்களையும் சுற்றி வளைக்கிறது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்காக தீபங்கள் ஏற்ற அனுமதிக்கப்படவில்லை. தீபங்கள் எற்றி மக்கள் நினைவுகூரப்பட்டால் சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யயலாம் என்று ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது. சிங்கள இராணுவம் தீபங்களைக் கண்டால் தனது சப்பாத்துக்கால்களால் மிதித்து அணைக்கிறது. வடக்கு மாகாண சபையில் சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி ஏற்றிய தீபத்தை அவ்வாறே மிதித்தணைத்தது. ஒரு தீபத்தைக்கூட தமிழ் மக்களுக்கு ஏற்ற உரிமையில்லை என்று சொல்கிறது ஸ்ரீலங்கா அரசு.

ஆனால் வடக்கு கிழக்குப் பகுதியில் புத்தர் சிலைகளை வைத்து இராணுவம் வெசாக் தீபங்களை ஏற்றுகிறது. தமிழ் மக்களின் ஆலயங்களில் தீபம் ஏற்றி வழிபடுவது மரபு. அந்த ஆலயங்களை எல் லாம் சுற்றி வளைத்து துப்பாக்கி ஏந்திய இராணுவம் நின்று கொண்டிருக்கிறது. ஆனால் வடக்கு கிழக்கு என்ற தமிழர் மண்ணில் புத்தருக்கு தீபங்களை ஏற்றி வெசாக் கொண்டாட்டங்களை செய்யும் இராணுவம் அந்த மண்ணின் மக்களுக்கு ஒரு தீபத்தை ஏற்ற அனுமதிக்காது துப்பாக்கியுடன் நிற்கிறது. இது மிகப் பெரிய பாரபட்சமும் உரிமை மறுப்புமல்லவா?

இங்கு இலங்கை அரசால் காட்டப்படும் பாரபட்சம்தான் இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பும் அடிமைப்படுத்தலும் ஒரு இனத்தின் அடிப்படை உரிமைகளைக் கூட இராணுவ வழிமுறைகளிலும் அரசியல் வழிமுறைகளிலும் உறிஞ்சி எடுக்கின்ற பேரினவாதப் போக்கே இது. இலங்கை அரசு தனது இயந்திரமான இராணுவத்தை வைத்து அறிவித்து சட்டங்களை உருவாக்கி ம னித உரிமைகளை மதிக்காமல் இதைச் செய்து கொண்டிருக்கிறது. முள்ளிவாய்க்கால் நினைவுக் காலத்தில் ஈழத்தில் ஒரு போர் நடந்தது. அக்காலம் ஒரு போர்க்களமாகவே இருந்தது. அறிவிக்கப்பட்டு மே ற்கொள்ளப்பட்ட இந்த யுத்தம் கத்தியினன்றி இரத்தம் இன்றி கண்ணீருக்கும் வெற்றிக் கொண்டாட்டத்திற்கும் இடையில் நடத்தப்பட்டது.

சிங்கள தேசம் வேறு தமிழ் தேசம் வேறு

அணுகுமுறைகளால் பாரபட்சங்களால் வடகிழக்கும் தெற்கும் பிரித்துப் பார்க்கப் படுவது ஸ்ரீலங்கா அரசால்தான். பிரிவி னையை ஏற்படுத்துவதே சிங்கள அரசுதான். இந்தப் பாராத பட்சங்களும் பிரச்சினைகளும் தான் வடகிழக்கையும் தெற்கையும் இரண்டாக பிரிக்கிறது. இரண்டு தேசங்கள் ஆக்குகின்றன. சிங்கள தேசம் வேறு தமிழ் தேசம் வேறு என்பதையும் சிங்க மக்களுக்கு உள்ள உரிமை தமிழ் மக்களுக்கு இல்லை என்று காட்டுவதுதான் இலங்கைத் தீவில் வடக்கு கிழக்குப் பகுதி தமிழீழம் என்ற தனித் தேசமாகவே இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. தமிழ் மக்களுக்கு அவர்களின் சுய நிர்ணய உரிமை தேவை என்பதை நிர்பந்திக்கிறது.

இலங்கை அரசாங்கம் காட்டி வந்த இந்த பராட்சம் இன்று சிங்கள மக்களின் போக்குகளாக மாறிவிட்டன. சிங்களவர்களை நாங்கள் சந்திக்கும் எந்த இடத்திலும் சமத்துவம் இருப்பதில்லை. அவர்கள் தமிழர்களுக்கான இடத்தை கொடுக்கும் மனநிலை இல்லாத இடத்திற்குச் சென்றுவிட்டார்கள். இவ்வாறான அணுகுமுறைகளினால் ஏற்படும் அநீதிதான் பிரிந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிவிட்டன. எங்களுக்கான உரிமைகளை தட்டிக் கேட்கும் நிலமை யை ஏற்படுத்துகின்றன. இன அழிப்பை செய்யும் அணுகுமுறையை இந்தப் பரரட்ச உரிமை மறுப்பு அரசியலுக்கு இன நல்லிணக்கம் என்று ராஜபக்ச பெயர் வைத்திருக்கிறார்.

நிறைவாக சுருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றைக் குறிப்பிட முடியும். கடந்த யுத்த வெற்றி விழாவும்-முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாளும் இந்தத் தீவில் இரண்டு தேசங்கள் உள்ளன அவை ஸ்ரீலங்காவும் ஈழமும் என்பதை தெளிவாக காட்டியுள்ளன. இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் உள்ளனவா? என்ற கேள்வியை சிங்கள அரசின் நடவடிக்கைகள் எழுப்புகின்றன? ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளை அழித்து ஒட்டுமொத்த நிலபரப்பையும் கைப்பற்றி ஆக்கிரமித்திருந்தபோதும் இன்னமும் தனிநாடாகவே தமிழீழம் இருக்கிறது. நீங்கள் வேறு நாடு நாங்கள் வேறு நாடு என்பதை தமிழர்கள் சொல்லவில்லை. ஸ்ரீலங்காவே எமக்குச் சொல்கிறது.

❖



நோயாளி : டாக்டர் என் உடம்புக்கு என்ன பண்ணுதுன்னே சொல்லத் தெரியலை...
[illegible] : டோன்ட் ஒர்ரி... எனக்குக் கூட எப்படி ஆபரேசன் பண்ணப் போறேன்னு சொல்லத் தெரியலை... நான் பயப்படறேனா...



"காதுகிட்ட வந்து முணுமுணுக்காதே... கெட்ட பழக்கம் ! என்ன விஷயம்னு உரக்கச் சொல்லு. ! "
"[illegible] வேணாமாம்... வீட்டில பால் கிடையாதாம்.... அம்மா சொல்லச் சொன்னாங்க..!"



"அம்மா ! டிபன் சாப்பிட மாமாவை எழுப்பணும்னு சொன்னீங்களே.... எழுப்பலாமா......? ! "

ஒன்டாரியோ மாகாணசபை தேர்தல்!

- ஆத்மன்

முடிவுகள் உணர்த்தியிருப்பது என்ன?

லிபரல் அறுதிப் பெரும்பான்மையுடன் வென்றுவிட்டது. கதீன் வென்னி பிரதமராகிவிட்டார். ஒன்டாரியோ மாகாணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் பிரதமர் என்ற பெயரை அவர் இதன்மூலம் எய்திக்கொண்டார். அத்தோடு அவரே கனடாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் ஓரினச்சேர்க்கையாளரான பிரதமர் என்னும் ஒரு சிறப்புப் பெருமை அவருக்கு.

107 ஆசனங்கொண்ட ஒன்டாரியோ மாகாண சபையில் 59 ஆசனங்களை லிபரல் வென்றது. 54 ஆசனங்களே ஆட்சியமைக்கத் தேவை. அதனால் மேலதிக ஆசனங்களைக் கொண்டுள்ள அது, கடந்த தடவைபோல் கூட்டரசாங்கம் அமைக்கத் தேவையில்லை. அதனால் ஆட்சிக் கவிழ்ப்பு பற்றிய



அச்சுறுத்தல் ஏதுமின்றி நிம்மதியாக ஆட்சிசெய்யும் வசதியை அது பெற்றுக்கொண்டது.

சென்ற தடவை அதற்கு 48 ஆசனங்களே இருந்ததால் மேலும் 6 ஆசனங்கள் தேவைப்பட்டு, என்டிபி கட்சியுடன் கூட்டுக்குச் சென்றிருந்தது. இப்போது, என்டிபி தனது ஆதரவை மீளப்பெற்றுக்கொண்டதால் ஆட்சி கவிழ்ந்து இடைத்தேர்தலுக்குச் செல்ல நேர்ந்தது.

என்டிபிக்கு தேவைதானா இது?

ஒருவகையில் என்டிபி லிபரலுக்கு நன்மைதான் செய்திருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஏனெனில் இப்போது அது என்டிபியிலோ வேறு எந்தக்



கட்சியிலோ தங்கியிருக்காமல் ஆட்சியமைக்கலாம். தீர்மானங்களை நிறைவேற்றலாம்.

ஒருவர் வென்றால் ஒருவர் தோற்க வேண்டுமல்லவா? அப்படித் தோல்வியைச் சுமந்துகொண்ட கட்சி இம்முறை கொன்சவேர்டிவ் கட்சிதான். அது சென்றதடவை பெற்றிருந்த 37 ஆசனங்களிலிருந்து பத்தை அப்படியே இழந்து 27 ஆசனங்களைத்தான் பெற்றுக்கொண்டது.

ஆனால் என்டிபியோ, எந்த மாற்றமுமில்லாமல் சென்ற தடவை பெற்ற அதே 21 ஆசன எண்ணிக்கையை இந்தத்தடவையும் பெற்றுக்கொண்டது. இந்த விதத்தில் அதற்குத் வெற்றி தோல்வி இல்லைதான்.

ஆனால் தோல்வி எதிலென்றால், ஆட்சியதிகாரத்திலிருந்த பங்கினை இழந்தமையே! இனி இதனால் ஆட்சியை ஆட்டிப்படைக்க முடியாது. அத்தோடு அது எதிர்க்கட்சியாயும் இல்லை. இதனை விட அதிக ஆசனங்களுடனுள்ள கொன்சவேர்டிவ் கட்சிதான் உத்தியோக பூர்வமாக எதிர்க்கட்சி.

இரண்டு பாத்திரங்களையும் இழந்துவிட்டமை அதன் கணிப்பில் ஏற்பட்ட தவறுதான். தனக்கு மக்கள் மத்தியில் ஆதரவு கூடியிருப்பதாகக் கணித்து அது தேர்தலுக்கு வழியேற்படுத்தியிருந்தால், அது முதலாவது தவறு. கொன்சவேர்டிவ் கட்சிக்கான ஆதரவில் ஏற்பட்ட சரிவு தன்னைப் பாதிக்கும் என்று புரிந்துகொள்ளாதது மற்றைய தவறு.

அப்படிப் புரிந்துகொள்வதும் சிரமம்தான். ஏனெனில், என்டிபி கொள்கையளவில் பிரதான எதிரியாக எதிர்கொள்வது கொன்சவேர்டிவ் கட்சியையே. எனவே தனது வெற்றியென்பது கொன்சவேர்டிவ் கட்சியின் தோல்வியில்தான் தங்கியிருக்கிறது என்பதால் அது கொன்சவேர்டிவின் தோல்விக்காகவே வேலை செய்யும். ஆனால் கொன்சவேட்டிவின் தோல்வி, என்டிபியின் மற்றொரு போட்டியாளரான லிபரலின் வெற்றிக்கு வழிசெய்யும் என்பது தவிர்க்க முடியாத ஒரு மாற்றுச் சூத்திரம். ஆங்கிலத்தில் ஐரணி என்பார்களே, அந்த எதிர்வினை!

ஒரே குளத்தில் இரண்டு கொக்குகள்

ஆனால் லிபரலும் என்டிபியும் ஒரே குளத்தில் மீன்பிடிக்கும் கொக்குகள்தான்! கொன்சவேர்டிவுக்கு எதிரான மனோபாவமுள்ள மக்கள் கூட்டத்தில்தான் இவ்விரு கட்சிகளும் தங்கள் வாக்குகளைப் பங்குபோட்டுக் கொள்கின்றன. ஆனால் அது வெறும் குளமல்ல, மாறாக ஒன்டாரியோ ஏரியைப்போல் பெருத்த ஒரு ஏரி. கொன்சவேர்டிவ் ஆதரவு வட்டத்தைவிட மிகவும் பெரிய வட்டம்.


காரணம், இம் மாகாணத்தில்தான் பிற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்த மக்கள் - நாம் புலம்பெயர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்வோமே, அத்தகைய மக்கள் - பெரும்பான்மையாகவாழ்கிறார்கள். கொன்சவேர்டிவ் கட்சி, புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான சுபாவம் கொண்டதென்ற பொதுவான அபிப்பிராயம் இவர்கள் மத்தியில் நிலவுகிறது.

அண்மைக்காலங்களில் அது குடிவரவுச் சட்டங்களில் மேற்கொண்ட மாற்றங்கள் - குறிப்பாக பிற நாடுகளிலிருந்து குடிவருவதற்கான சட்டங்களையும் நடைமுறைகளையும் கடுமையாக்கியமை, பெற்றோரை ஸ்பொன்சர் செய்வதில், முழுச் சுமையையும் ஸ்பொன்சர் செய்பவர்மீது சுமத்தி, அப்படி வரும் பெற்றோர் இங்கு குடியேறுவதைக் கட்டுப்படுத்தி, அவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் சுகாதார வசதிகளை ரத்துச் செய்தமை - இவையெல்லாம் புலம் பெயர் மக்களைக் கொன்சவேர்டிவ் கட்சிமீது கொதிகொள்ளச் செய்திருந்தன.

இதனை மத்திய அரசில் ஆட்சியதிகாரத்திலுள்ள கொன்சவேர்டிவ் கட்சிதான் செய்திருந்தாலும், - மாகாணசபை இவ்விடயத்துக்குப் பொறுப்பற்றதாக இருந்தாலும் - செய்த கட்சி அதுதானே! மத்திய ஆட்சி செய்த பாவத்தை மாகாணத்தில் சுமக்க வேண்டியதாகிவிட்டது கொன்சவேர்டிவுக்கு. இப்படியான அதன் ஆதரவுச் சரிவு மறுபக்கமாக ஓடி, என்டிபியை பலப்படுத்துவதற்குப் பதிலாக லிபரலைப் பலப்படுத்தி விட்டது. இந்தக் கணிப்பில்தான் என்டிபி அடுத்த தவறினை இழைத்தது.

தமிழ் வேட்பாளர்கள்

சரி போகட்டும். இந்தக் கட்சிகளில் போட்டியிட்ட தமிழர்களுக்கு என்னாச்சு? மொத்தம் மூன்று தமிழ் வேட்பாளர்கள் நீதன் ஷான், கென் கிருபா, சண் தயாபரன் ஆகியோர் இத் தேர்தலில் களமிறங்கியிருந்தனர். ஸ்காபுறோவைப் பொறுத்தவரை நீதன், ரூஜ் றிவர் தொகுதியில் என்டிபியிலும் கிருபா, கில்வூட் தொகுதியில் கென்சவேட்டிவிலும் கேட்டிருக்க, மார்க்கத்தில் சண், கென்சவேர்டிவில் கேட்டிருந்தார். மூவருமே வெல்லவில்லை என்றாலும் மூவருமே இரண்டாம் நிலையில்தான் இருக்கிறார்கள். இம் மூன்று இடங்களிலுமே லிபரல் கட்சிதான் வெற்றியடைந்தது. ஆனால் தமிழர்கள் எவரும் லிபரல் கட்சியில் போட்டியிட வில்லை.



ரூஜ் றிவரில் லிபரல் கட்சியில் போட்டியிட்ட பாஸ்கல்கிஸன் 16134 வாக்குகளுடன் 38.86 வீதத்தைப் பெற்று வெற்றிபெற, என்டிபியில் போட்டியிட்ட நீதன் அடுத்த ஸ்தானத்தில் 12863 வாக்குகளுடன் 30.98 வீதத்தைப் பெற்றிருந்தார்.



கில்வூடில் லிபரலைச் சேர்ந்த மிட்ஸி ஹண்டர் 17498 வாக்குகளுடன் 50.06 வீதத்தைப் பெற்று பெருவெற்றி ஈட்ட, அடுத்த நிலையில் கொன்சவேர்டிவ் கட்சியில் போட்டியிட்ட எமது கென் 9688 வாக்குகளுடன் 27.72 வீதத்தைப் பெற்றுள்ளார்.

மார்க்கத்திலும் லிபரலின் மைக்கல் சான் 21517 வாக்குகளுடன் 51.33 வீதத்தைப் பெற்று பெருவெற்றி ஈட்டி நிற்க அடுத்த நிலையில் கொன்சவேர்டிவில் போட்டியிட்ட சன் 14241வாக்குகளுடன் 33.98 வீதத்தைப் பெற்றுள்ளார்.



இரு தமிழ் வேட்பாளர்கள் கொன்சவேர்டிவ் கட்சியில் போட்டியிட்டும் ஒருவர் என்டிபியில் போட்டியிட்டும் உள்ளனர். ஆனால் மொத்தத்தில் தமிழ் சமூகத்தின் பிரதிநிதித்துவம் மாகாணசபையில் ஈட்டப்படவே இல்லை. எதிர்காலத்தில் நாம் எமக்கான சரியான தந்திரோபாயத்தையிட்டுச் சிந்திக்க வேண்டிய தேவையை இப் பெறுபேறுகள் உணர்த்திச் சென்றிருக்கின்றன.

துறவி

சுயகட்டுப்பாடற்ற, பொய் பேசித் திரிகின்ற ஒருவன் தலையை மட்டும் மழித்து விடுவதால் பிட்சு (துறவி) ஆகிவிட மாட்டான். ஆசையும் பற்றும் கொண்ட ஒருவன் எப்படி துறவியாக முடியும்?, புண்ணியம்-பாவம் இரண்டையும் விட்டவன், புனிதமானவன், அறிவுடன் வாழ்பவன் எவனோ அவனே உண்மையான துறவியாவான்.

- புத்தர்

மரண வாசல்

பேராசை, கோபம், ஆணவம், கர்வம், பொறாமை போன்ற தீய குணங்கள் எல்லாம், பணம் சேரச் சேர வளர்ந்துகொண்டே செல்லும். இவை எப்போதும் மனத்தூய்மையைத் தர முடியாது. காமம், பேராசை, நாக்கை கட்டுப்படுத்தாமல் இருப்பது ஆகிய இம்மூன்றும் ஒருவனை நேராக மரணத்தை நோக்கி அழைத்துச் செல்கின்றன.

- ஆதி சங்கரர்

சொந்தமான ஒரு வீடு
உங்கள் வாழ்க்கையின்
மிகப்பெரியதோர் முதலீடு

வீடு
வாங்க
விற்க

உங்கள் இல்லத்தை இலாபாகரமாக விற்பனை செய்ய
எம்மால் உங்களுக்கு உதவமுடியும் அழையுங்கள்



ஈசன் குலசேகரம் :416 835 1700
Sales Representative info@esanhomes.com


Toronto East

we need more listings!

SOLD
OVER ASKING!

This Beautiful, Well-Maintained, Semi-Detached Home Is Located Within A Friendly Neighbourhood. 4 Bedrooms And 2.5 Bathrooms. Gorgeous Hardwood Floors On Main And 2nd Floor. Fully renovated, Newly Painted. Eat-In Kitchen. Main Floor Laundry. Master Suite Features Ensuite Bathroom With Jacuzzi Whirlpool Tub. Walk-Out Basement. House looks brand new, no need for any renovation.

71 Misty Trails Trail, Scarborough, Ontario



$479,900

Toronto East

3050 Ellesmere Road, Unit #1215, Toronto

Immaculate Unit. Excellent View. Well Kept. Convenient Location. Steps U OfT Campus, Ttc, Centennial College, Close To West Hill Collegiate, 401, And All Amenities. Indoor Pool, Exercise Room, Tennis Court, Nature Trail, Bbq Area, Party Room And Lots More! Unit Rented Until September. Tenants To Be Assumed.

2 Bedrooms : 2 Washrooms

IDEAL FOR SMALL FAMILY, OR FIRST TIME BUYERS



$179,900

Toronto West

30 Netherly Drive, Etobicoke, Ontario

Well Kept Bungalow with 4 Bedrooms. Hardwood Floors, Newly Painted Walls, Stonework patio in the Backyard with a Swimming Pool. 4br, 2wr

4 Bedrooms : 2 Washrooms



$549,900

விக்கி வேலாயுதன் :416 457 7162
Sales Representative vvelauthan@yahoo.com

RE/MAX

அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

Office: 416-321-2228
Fax: 416-321-0002




RE/MAX
RE/MAX ... Inc., Brokerage
... and operated

2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6 www.esanhomes.com



ஓவியம்

மணிவண்ணனின் தூரிகையின் வண்ணங்கள்



ஓவியத்தை விளக்க முடியுமா? முடியாது. அதை ரசிக்கத்தான் முடியும். நவீன ஓவியமும், அப்படித்தான். கலைகளுமே ரசிக்கக்கூடிய மாதிரியே அமைந்திருக்கும். ஒருவருக்கு உதவலாம். ஒருவரைப் பயிற்றுவிக்கலாம். ஆனால் இதற்கு முயற்சியும் கட்டுப்பாடும் தேவை. ஒரு தத்ரூபமான படம் நாம் 'படிக்கக்' கூடியது. இது காது, இது இடது கை, இது ஒரு கிளை, இது ஒரு பெண், இதுதான் அவர்கள் செய்வது என்பது போல். நம்மால் இப்படிப் புரிந்துகொள்ள முடிவதற்குக் காரணம், ஒரு படம் நமக்குத் தெரிந்த அல்லது நாம் யூகிக்கக்கூடிய ஒரு படிமத்தை அல்லது ஒரு கதையைக் கொண்டிருப்பதும் அல்லது அதைச் சார்ந்திருப்பதும் ஆகும்.



ஓவியர் மணிவண்ணன்

மூன்றாம் பால்

இந்திய நீதிமன்றத்தின் திருப்புமுனைத் தீர்ப்பு!

—ஹரன்



விண்ணப்பப் படிவங்களிலோ நீ ஆணா பெண்ணா என்றுதான் கேட்கிறார்கள்.பேத் சேர்டிபிகேட், ஐடென்டிகாட், பாஸ்போட் முதற்கொண்டு அத்தனை டாக்குமென்டுகளிலும் நாம் ஆண் அல்லது பெண் என்றுதான் பதியப் பட்டிருக்கும். அப்படியானால் ஆணும் பெண்ணும் கலந்த மனிதர்கள் - எப்படி விண்ணப் படிவம் நிரப்புவது, வகுப்பில் ஆண் வரிசையிலா பெண் வரிசையிலா இருத்துவது எந்த ரூம் மேட்ஸோடு தங்குவது?

அப்படி ஆணாகவோ, பெண்ணாகவோ அல்லாவதர்களுக்கு இப்படி எத்தனை பிரச்சினைகள். ஆனால் அவர்களும் மனிதர்கள்தானே? மற்றைய எல்லாக் குடிமக்களுக்கும் உரிய உரிமை இவர்களுக்கு இல்லையா?

இந்தியாவில் இப்படி இரண்டு மில்லியன் திரு நங்கையரும் திருநம்பியரும் இருக்கிறார்கள். இரண்டு மில்லியன் என்பது பெரிய தொகை. கனடாவிலுள்ள மொத்தப் புலம்பெயர் தமிழரைவிட சுமார் எட்டு மடங்கு அதிகம். ஏன் உலகம் பூராவும் இருக்கும் புலம்பெயர் தமிழர்களின் தொகையைவிட அதிகம் இலங்கையில் தற்போதிருக்கும் பாரம்பரியத் தமிழரின் சனத்தொகைக்கு சமம்னா இத்தகைய பெரும் மக்கள் தொகைக்கு பொது வாழ்வில் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள சட்டரீதியான வழியில்லை.

சமூகரீதியிலோ இவர்களின் நிலைமை படு மோசம். இவர்களை நகைப்புக்கிடமான பிறப்புக்களாக நோக்குவோரே அதிகம். பிச்சையெடுக்கவும் விபச்சாரம் செய்யவும், கேளிக்கைக் கூத்துக்களில் சிரிப்பூட்டவோ அல்லது எம் விகாரமான ரசனைக்குக் களிப்பூட்டவோ காட்சிப் பொருளாக வந்து ஆடிவிட்டுப் போவதற்குத்தான் உகந்தவர்களென ஒதுக்குகிறது சமூகம்.

இந்த ஒதுக்கல் காரணமாகவே இவர்கள் இந்நிலைக்கு தள்ளப்படுவதே உண்மையில் நிகழ்கிறது. இந்த ஒதுக்கலால் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் புறக்கணிக்கப்படுகின்றன. அப்படி வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு அவர்கள் கல்வி கற்க வேண்டுல்லவா? ஆனால் கல்விக்கூடங்களிலேயே அவர்கள் பெருத்த அவமானங்களைச் சந்திக்கிறார்கள். சக மாணவர்களால் கேலி செய்யப்படுகிறார்கள். ஆசிரியர்களாலும் அந்தக் கேலிகள் ரசிக்கப்படும்போது மனம் சுண்டிப்போகிறார்கள். மிகப்பெரும்பாண்மையானவர்கள் இதனால் இடைநடுவிலேயே படிப்பைக் கைவிட்டு விடுகிறார்கள். இப்படி ஒதுக்கப்பட்டால் அவர்கள் பிழைப்புக்கு எங்கு போவார்கள்? பிச்சையெடுக்கவோ, விபச்சாரம் செய்யவோ நேர்வது அவர்களின் தவறல்லவே!

இவற்றுக்கெல்லாம் மேலாக இந்த ஒதுக்கல் அவர்களின் வீடுகளிலேயே தொடங்குகிறது. ஏன், பெற்றார்கூட, அவர்களின் மன உணர்வைப் புரிந்து கொள்வதில்லை. அவர்களை எந்தப் பாலினராகக் கருதுவதென்பதில் அவர்களுக்கே தெளிவில்லை. தாம் நினைத்த பாலவராக ஒழுகச்சொல்லி நிர்ப்பந்திக்கிறார்கள்.

இத்தகைய இக்கட்டுக்குள் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்போதுதான் சென்ற ஏப்ரல் மாதம் ஒரு திருப்புமுனையான தீர்பபொன்றை வழங்கியிருக்கிறது இந்திய உச்சநீதிமன்றம்!

அது, ஆணியல்பும் பெண்ணியல்பும் கலந்த இத்திருநங்கையரையும் திருநம்பியரையும் மூன்றாம் பாலினமாக அங்கீகரித்துள்ளது. அதாவது, அவர்கள் தம்மை ஆணா பெண்ணா என்று நிரூபிக்கவோ, அடையாளப்படுத்தவோ தேவையில்லை. தம்மை 3ம் பாலவரென்று உரிமை கோரலாம். கல்வி வேலைவாய்ப்புகள் முதற்கொண்டு சகலவற்றிற்கும் அவர்கள் மூன்றாம் பாலவரென்ற அடையாளத்துடன் தகுதிபெற்றவர்களாகிறார்கள். இனி விண்ணப்பப் படிவங்களிலும் மூன்றாவது பெட்டி ஒன்று தோன்றும்.

இத்தீர்ப்பின்படி எந்த மனிதனுக்கும் தனது பால் என்னவென்று தேர்ந்தெடுக்க உரிமை உள்ளது. அதனால் இயற்கையாகவே பால் மாறுவது மட்டுமின்றி செயற்கையாகப் பால் மாறுவதற்கும் இது அங்கீகாரமளிக்கிறது. அத்தோடு “சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய மக்கள் பிரிவினருக்கு சலுகையளிப்பதுபோல் இம்மூன்றாவது பாலினத்தவர்களையும் கருத்தி லெடுத்து சலுகையளிக்கும்படி நீதிமன்றம் அரசைக் கோரியுள்ளது.

இத்திருப்புமுனைத் தீர்ப்புக்கு முன்னோடியாக இருந்தது. 2009ம் ஆண்டின் இந்தியத் தேர்தலே, அதில் இந்தியத் தேர்தல் கமிஷன் ஆண், பெண் என்று குறிப்பிட முடியாதவர்களை மற்றய பாலார் என்று குறிப்பிட அனுமதித்தது.

ஆனால் நேபாளமோ இம் 3ம் பாலினத்தை 2007லேயே அங்கீகரித்துவிட்டது. பங்களாதேஷோ சென்ற வருடம் அங்கீகரித்திருந்தது.

இவ்வாறாயினும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு ஒரு வகையில் அவர்களுக்கிருந்த பேரிடரைப் போக்குவதாயிருந்தாலும், இன்னும் தீர்க்கப்படாத சிக்கல்கள் பல இருக்கத்தான் செய்கின்றன. ❖

முற்றுப்பெறாத பால் – ஸ்மைல் வித்யா



ஆணாகப் பிறந்து சரவணன் என்ற பெயரில் வளர்ந்து பின் பெண்தன்மை பெற்ற வித்யா, திருநங்கைகள் திருநம்பிகள் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருபவர். அவரோ இந்நீதிமன்றத்தீர்ப்பு உடலியல் ரீதியாகப் பொருத்தமற்றதென்கிறார். அவரின் விளக்கம் இதுதான்.

திருநங்கைகள் அல்லது திருநம்பிகள் எப்படி உருவாகிறார்கள்? அவர்கள் கருவிலேயே அப்படிப் பிறப்பதில்லை. இடையில்தான் இந்த மாற்றம்.

கரு தோன்றி முதல் 4 மாதத்திற்கு எல்லோருமே பெண் குழந்தைகள்தான். அதன்பின் ஆணாகிக்கொள்வோர் ஆணாகிவிட, பெண்கள் பெண்களாகவே தங்கிவிடுகிறார்கள். ஆணாகும்போது, உடல் கூறுகளோடு சேர்ந்து மனக்கூறுகளும் சமாந்தரமாக மாற்றமடைகின்றன. அதனால்தான் அவர்கள் தம்மை ஆண்களாக உணர்கிறார்கள்.

இப்படியான உடல்கூறின் மாற்றம் இடையிலேயே தடைப்பட்டுவிட, மனக்கூறு மட்டும் ஆணாக மாற்றமடைவதாலேயே திருநம்பிகள் உருவாகிறார்கள். அதாவது இவர்கள் தம்மை ஆண்களாக உணர்ந்தாலும் பாலுறுப்புகள் பெண்ணுக்குரியதாகவே இருக்கும்.

மறுதலையாக, அவர்களின் மனக்கூறு பெண்ணுக்குரியதாகவே இருக்க, உடற்கூறு தொடர்ந்து மாற்றம் கண்டு ஆணுக்குரிய பாலுறுப்புகளைப் பெற்றுக்கொள்வதே திருநங்கைகளுக்கான காரணம்.

இப்படி விளக்கும் வித்யா, முன்வைக்கும் வாதம் இதுதான். அதாவது இது ஒன்றும் மூன்றாம் பாலல்ல. முற்றுப்பெறாத பாலே. இங்கே ஆண்களாகத் தங்களை உணர்வோரை ஆண்பாலாகவும், பெண்களாகத் தங்களை உணர்வோரைப் பெண்பாலாகவும் அங்கீகரிப்பதே தகும்.

குட்டிக் கதை

கடவுள் அடிமையானார்

எஸ்.பொ.

ஆரம்பத்தில் கடவுளும் சாத்தானும் நண்பர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால் திடீரென்று ஒருவரை ஒருவர் விரோதித்துக்கொண்டு பகைவர்களாக மாறினார்கள். போட்டியும் பூசலும் ஏற்பட்டன. கடவுளுக்கு ஆசை, சாத்தானைப் பணிய வைக்க வேண்டுமென்று; சாத்தானுக்கு ஆசை கடவுளைப் பணிய வைக்க வேண்டுமென்று.

கடவுள்ஒருநாள்நிஷ்டையிலிருந்துவிழிப்படைந்தார். விநோதமான எண்ணம் அவரை வளைத்துக்கொண்டது. 'ஓர் உலகத்தைப் படைக்க வேண்டும். சகல எழிலையும் வடித்துப் படைக்கப்படும் அதில் தன் நாமத்தைப் பூஜிக்கத் தன் சாயலிலேயே மனிதனைப் படைக்க வேண்டும்.' அவர் நினைத்த மாத்திரத்திலேயே சிருஷ்டியும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.



சாத்தானின் முகத்தில் வாட்டம் ஏற்பட்டது. தன்னால் அப்படி ஓர் அழகுப்படைப்பைக் கற்பிக்க முடியவில்லையே என்று மனம் புழுங்கினான். கடவுளின் முன்னிலையில் தன் தோல்வியை ஒப்புக்கொள்ள நேரிடுமோ என்று கூடப் பயந்தான். கடவுள் சாத்தானின் முகவாட்டத்தைப் பார்த்துக் 'கடகட'வெனச் சிரித்தார்.

மனிதன் பார்த்து மகிழ மலைகளையும் நதிகளையும் கடலையும் கடவுள் படைத்தார். மலைகளில் முகில் கொஞ்சும் எழிலையும், காடுகளில் அழகிய விலங்குகளையும் பட்சி இனங்களையும், கடலிலே வகை வகையான மச்சங்களையும் படைத்தார். சில பறவைகள் விலங்குகள் முதலியனவற்றுக்குத் துஷ்டத்தனத்தையும் நச்சுப் பற்களையும், நதிகளிலே வெள்ளப்பெருக்கையும் கடலிலே பயங்கரப் புயலையும் படைத்தான். ஆனால், மனிதன் இன்பமாக வாழ்ந்தார்; கடவுள் மகிழ்ச்சி கொண்டார். கடவுள் அறிவையும், அதை நல்ல வழிகளில் உபயோகிக்கும் பண்பையும் படைத்தார். சாத்தான் ஆணவத்தையும் தீய வழிகளையும் கற்பித்தான். ஆனால் மனிதன் இன்பமாக வாழ்ந்தான்; கடவுள் மகிழ்ச்சி கொண்டார்.

இதற்கிடையில் பல நூற்றாண்டுகள் உருண்டோடி விட்டன. கடவுளின் அபூர்வ சிருஷ்டியான மனிதனைத் தீயவனாக்க வேண்டும். இல்லாவிட்டால் கடவுளின் ஆயிரம் ஆண்டுக் கட்டளையை நிர்மூலமாக்க முடியாத வலிமையற்றவனாகிவிடுவான் சாத்தான். தோல்வியை ஒப்புக்கொண்டு, கடவுளுக்கு அடிமை சாசனம் எழுத வேண்டும். அப்படி ஒரு பந்தய ஒப்பந்தம் அவர்களுக்கிடையில் கைச்சாத்தாகி இருந்தது.

சாத்தான் பொறுமையாக மனித வாழ்க்கையைக் கவனித்தான். ஆணும் பெண்ணும் பிறந்த மேனியாகத் திரிந்தார்கள். இரண்டு இணைபிரியாத நண்பர்களைப் போன்று பழகினார்கள். இயற்கையைப் பார்த்துப் பரவசம் அடைந்தார்கள். இரவு நேரங்களில் சத்திர தாரகைகளைப் பார்த்து இன்புற்றார்கள். அலுப்புத் தட்டிய நேரங்களில் இலைகளினாலான படுக்கையில் தூங்கினார்கள். அவன் ஒரு பழத்தைப் பறித்துப் கடிப்பான். அவளும் அதைக் கடிப்பாள். பழத்தை வீசி எறிவார்கள். நதியின் சலசலப்பு ஓசைகளையும், பறவைகளின் கீதங்களையும் கேட்டு இன்புற்று, அதே குரலில் கடவுளுக்குத் துதி பாடினார்கள். அவ்வளவுதான். தினம் தினம் இதே வாழ்க்கைத்தான் திரும்பத் திரும்ப.

சாத்தான் பலகமாகச் சிந்தித்தான்.

சாத்தான் பசியைப் படைத்தான்; காமத்தைப் படைத்தான்.

கடவுள் சற்றே திக்குமுக்காடினார். ஆனாலும் கடவுள் உழைப்பைப் படைத்தார். காதலைப் படைத்தார்.

மனிதன் இன்பமாக வாழ்ந்தான்; கடவுள் மகிழ்ச்சி கொண்டார்.

சாத்தான் மொழிகளைப் படைத்தான்; மதங்களைப் படைத்தான்.

வேறு வழியில்லை. கடவுள் தோல்வியை ஒப்புக் கொண்டார். கடவுள் அடிமையானார்.

நகைச்சுவைக் கதை

பல்லுப்போன கிழவியும் கொக்கட்டுப் பறவையும்

அனா என்ற ஒரு மூதாட்டி வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் அவளது செல்லப் பிராணியான கிளி இறந்து விட்டது.

சில நாட்கள் பிரிவுத் துயரால் வாடிவிட்டு, தனக்குத் துணையாக வைத்திருப்பதற்காக செல்லப்பிராணி ஒன்றை வாங்குவதற்காக செல்லப் பிராணிகளை விற்கும் கடை ஒன்றிற்குச் சென்றாள்.

அவள் அந்தக் கடை வாசலை மிதித்ததும் கடையிலிருந்த கொக்கட்டுப் பறவை அவளைப் பார்த்து 'தாயே! நீ ரொம்ப அழகாயிருக்கய்!" எனப் புகழ்ந்தது.

அந்தப் புகழ்ச்சியில் மயங்கிய அந்த மூதாட்டி கடைக்காரனிடம் "ஐயா கடைக்காரரே! இந்த கொக்கட்டுப் பறவையை நான் என் செல்லப்பிராணியாக வளர்ப்பதற்கு வாங்கப்போவதாகச் சொன்னாள் ஆனால் கடைக்காரன் வேண்டாம் என்று தடுத்தான்.

தனது முடிவை மாற்ற விரும்பாத அந்த மூதாட்டி அனா அந்தக் கொக்கட்டுவை வாங்கித் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

வீட்டை அடைந்ததுதான் தாமதம். "ஏய் அனாக் கிழவி! நீ ஒரு பொல்லாத கிழவி! பல்லுப் போன கிழவி! அழகுக்கும் உனக்கும் வெகுதூரம்!" என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி அந்த கொக்கட்டுப் பறவை அனாவைத் திட்டியது.

மிகவும் கோபமடைந்த அனா. 'பொறு! பொறு! உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று கூறியபடியே அந்தக் கொக்கட்டுப் பறவையைத் தன் சமையலறையிலிருந்த குளிர்சாதனப் பெட்டியினுள் வைத்து அதன் கதவை இறுக மூடினாள்.

சில நிமிடங்கள் கழித்து கொக்கட்டுவை வெளியே எடுத்துவிட்டு அதைப் பார்த்து, " இப்போதாவது நீ திருந்திவிட்டாயா?" எனக் கேட்டாள் அந்த மூதாட்டி!

நீ ஒரு ராட்சசி முண்டக்கிழவி என்றது திரும்பவும்.

"ஏய் கொக்கட்டுப் பறவையே! இன்னும் நீ திருந்தவில்லையா? உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று ஆத்திரத்துடன் அந்தப் பறவையின் கழுத்தைப் பிடித்து குளிர்சாதனப் பெட்டியின் மேலறையினுள் அதாவது ஃப்ரீஸரினுள் தள்ளி விட்டாள் அனா.

சில நிமிடங்கள் கழிந்த பின்னர் ஃப்ரீஸரைத் திறந்து கொக்கட்டுப் பறவையை வெளியே எடுத்தாள்.

இப்போது மிகவும் சாந்தமாக அமைதியாக



அவளது தோள் பட்டையில்உட்கார்ந்தபடியே அனாக் கிழவியைப் பரிதாபமாகப் பார்த்தபடி அந்த கொக்கட்டுப் பறவை என்ன கேட்டது தெரியுமா?

"அது சரி; நான்தான் உன்னைத் தகாத வார்த்தைகளால் திட்டினேன் என்று என்னை ஃப்ரீஸரினுள் தள்ளினாய்! பாவம் ஃப்ரீஸரில் செத்துக் கிடக்கும் அந்தக் கோழி உனக்கு என்ன பாவம் பண்ணிச்சு?"


ஆங்கில மூலம் : கிறிஸ் பிரேடிங் (CHRIS BRADING)

தமிழாக்கம்:
உஷா ஜவாகர் (அவுஸ்திரேலியா)

சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

- பெரிய கோழை கூட, உலகமெலாம், அவனைப் புகழும் என்றால் பெரிய வீரனாக மாறிவிடுவான்.
- துருப்பிடித்து தேய்வதைவிட, உழைத்து தேய்வது மேல்.
- ஒவ்வொருவரும் தனக்கென்று ஒரு சொந்த இலட்சியத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.
- நல்ல வழியில் செல்வத்தைச் சேர்ப்பதும் சமுதாயத்துக்கு அதைச் செலவிடுவதும் ஒரு பெரும் வழிபாடாகும்.
- ஆன்மீகத்துக்கு சாதியில்லை. அதுவெறும் சமுதாய ஏற்பாடுதான்.
- உலக ஏளனம் பொருட்படுத்தாமல் நீ உன் கடமைகளைச் செய்து கொண்டு போ!
- மதம் பற்றி ஒரு நாளும் சண்டை போடாதே! மதம் பற்றிய சண்டைகளும் வாதங்களும் ஞான சூனியத்தையே புலப்படுத்துகின்றன. (ஞான சூனியம் அறிவுக் குறைவு, அறிவின்மை)
- எதிர்ப்பு இல்லாவிட்டால் வெற்றியும் இல்லை.
- வலிமையான மனம் படைத்தவன் தன்னைச் சுற்றிலும் தெய்வீக ஒளியை வெளிப்படுத்துகிறான்.
- எப்போது எல்லாம் தேவை ஏற்படுகிறதோ அப்பொழுது எல்லாம் வற்றாத ஆன்மீக வெள்ளம் பாய்ந்து உலகத்தை மூழ்கடிக்கிறது.
- எழுந்து நில் தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்புடன் முழுவதையும் உன் தோள் மீது சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்து கொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கிறது.

அலுவலகத்தில் டென்ஷனா?



அலுவலகத்திற்கு செல்லும் பலருக்கும் அதிகப்படியான வேலைப்பளுவினால் உண்டாகும் டென்ஷனால் மனஅழுத்தம் ஏற்படுகிறது. இத்தகைய மன அழுத்தத்தினால் ஒருவர் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு வாழ்க்கையின் மீது வெறுப்பு வருவதோடு, எந்த ஒரு செயலையும் செய்ய முடியாமல் தவிப்பார்கள்.

எவ்வளவு தான் அலுவலகத்தில் வேலைப்பளு அதிகம் இருந்தாலும் செய்யும் வேலையை விரும்பி செய்தால் நிச்சயம் எவ்வளவு வேலை இருந்தாலும் மன அழுத்தத்தில் இருந்து எளிதில் வெளிவர முடியும். அலுவலகத்தில் ஏற்படும் டென்சன் மற்றும் மன அழுத்தத்தில் இருந்து எளிதில் வெளிவர சில வழிமுறைகளை பார்க்கலாம்.

டென்சன் அதிகரிப்பது போன்று இருந்தால் உடனே சிறிது நேரம் கண்களை மூடி ஆழ்ந்து சுவாசிக்க ஆரம்பியுங்கள். இதனால் மனமானது அமைதி அடைந்து, அதிகப்படியாக உணர்ச்சிவசப் படுவது கட்டுப்படுத்தப்பட்டு, டென்சனால் எடுக்கப்படும் தவறான முடிவுகளைத் தவிர்க்கலாம்.

அனைவரும் கோப்பி குடித்தால் டென்சன் குறையும் என்று நினைத்து அவ்வப்போது கோப்பி குடிப்பார்கள். ஆனால் உண்மையில் கோப்பி குடித்தால் டென்சன் தான் அதிகரிக்கும். ஏனெனில் கோப்பியில் உள்ள கொப்ஃபைனானது மனதை அமைதிப்படுத்த உதவும் அடினோசைனை குறைக்கும். ஆகவே கோப்பியை அதிகம் குடிக்காதீர்கள்.

மனமானது அமைதியிழந்து இருக்கும்போது தியானம் செய்தால் மனம் மட்டுமின்றி, உடலும் ஆரோக்கியமாக இருக்கும். ஏனெனில் தியானம் செய்யும் போது உடலில் இரத்தஓட்டமானது அதிகரித்து மனமானது அமைதியடையும்.

டென்சன் மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்க தண்ணீரை அடிக்கடி குடிக்க வேண்டும். இதனால் சோர்வடைந்துள்ள தசைகளை நீரானது அமைதியடையச் செய்வதோடு, மனதையும் அமைதிப்படுத்தும்.

உண்ணாணச் சொல்லுறன்



அந்த ஈழத்தமிழனுக்கு 62 வயதிருக்கும். ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த அந்தத்தமிழன்'வெள்ளி' 'சனி' 'லோங் வீக்கென்ட்' போன்ற நிகழ்ச்சிகளில் ஒரு "ஷொட்" அடித்தபடி தனது குலப்பெருமை பற்றியும் தமிழ்த் தேசியம் பற்றியும் பொழிந்து தள்ளுவார். அந்நியரால் தமிழர் படும் துயரங்களினால் சொல்லொணாது துயருறுவார். அண்மையில் "வக்கேஷனில்" இலங்கை சென்றவர் திரும்பி வரும்போது ட்ரான்சிற்றில் நின்றபோது தனது நண்பருடன் டெலிபோனில் உரையாடும்போது ஊருக்குச் சென்ற விடயத்தில் தான் நடாத்திய வீரப் பரிதாபம் ஒன்றினை எடுத்தியம்பினார் நடந்தது இதுதான்.

ஒருநாள் யாழ்ப்பாணத்தில் தனது கிராமத்து வீட்டிலிருந்து வெளியே வந்தவர் நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த தனது உறவினருக்குச் சொந்தமான அயல்வீட்டில் ஆள் ஆர்வம் கண்டிருக்கிறார். அந்நிய நாட்டமோ ஆக்கிரமிப்போ அவருக்குக் கண்ணிலும் காட்டமுடியாத விடயம். உடனடியாக அங்கு சென்று பாத்திருக்கிறார். இருந்தவள் 40 வயது மதிக்கத்தக்க பெண், யுத்தத்தில் உறவுகளை இழந்து தனித்து அனாதரவானவள் இந்தக் கைவிடப்பட்ட வீட்டில் தனித்துத் தஞ்சமடைந்திருக்கிறாள்.

தனது அதிகார வலயத்தினுள் ஊடுருவியிருந்த அந்த அந்நிய சக்தியைக் கண்ட இந்தப் புலம்பெயர் தமிழன் கொதித்துப் போனான். உடனே தனது மேலாண்மையையும் ஆண்மையையும் பயன்படுத்தி அந்த அவலைப் பெண்ணை சரணடையச் செய்து அனுபவித்து விட்டார்.

தாயகம் சென்று அவர் நிகழ்த்திய வீரப் பரிதாபம் இதுதான். இப்போது கனடாவிலிருந்து அவரது நண்பர் கேட்டார். "இப்போது அந்தப் பெண் எங்கே?"

புலம்பெயர் தமிழன் அநாயசமாகப் பதிலளித்தார் "நான், ஊரில் நிற்கும் போதே ஊருக்குள்ளே விபச்சாரம் செய்கிறாள் என்று சொல்லி அவளை அடித்துத் துரத்தி விட்டனர். நாங்கள் யார்?

முற்றிலும் உண்மை

சென் கவிதைகள்

நரன்

தொடர்ந்து இயற்கையை
அவதானித்துக் கொண்டிருந்தேன்
தொடர்ந்து...
வயதாகிவிட்டது
என் மகனிடம் கையளித்துவிட்டுச்
செல்கிறேன்
மரங்களும் தன் பங்கிற்கு
கிளைமரங்களை எழுப்பியிருக்கின்றன.

வனத்தில் அமர்ந்து
சிறிது நெருப்பை
பற்ற வைத்தேன்
மரங்கள்...
....மரங்கள்....
அவற்றை தன் அருகிலிருக்கும்
துணை மரங்களுக்கு
கைமாற்றிவிட்டுக்கொண்டேயிருந்தன.

குளிருமில்லை
வெயிலுமில்லை
அப்பிரதேசத்தை
நான் கனவில் வழியே
கடந்து சென்ற
பொழுது.

கிளையை பிடித்துத் தொங்காதே
கிட்டத்தட்ட 127 ஆண்டுகள்
பழையது
இந்த மரம்
ஆனால் அதன் இலைகள்
அப்படி இல்லை.

கவிதை

ரதன் சந்திரசேகர்

ஊர்வன பறப்பன
ஒரு நாளில்
சாவன
நீரினில் தாழ்வன
நீரிலும் நிலத்திலும்
ஒரு சேர வாழ்வன
ஓரறிவுள்ளன
பார்வைக்குப் பெரியன
பார்வையில் அற்றன
அணுவிலும் அணுவென
சிறியதிற் சிறியன
பாக்டீரியா வெனும்
நுண்ணுயிர் சார்ந்தன
மண்ணுயிர் சேர்ந்தன
அறிந்தன அறியாத
பேபெரன இருப்பன
வேரிலே வாழ்வன
விழுதிகளைக் காண்பன
புழுக்கள் கரப்பான்
பூச்சிகள் வகையின
செடியெனக் கொடியென
பரந்திடப் படர்வன
காற்றிலே மிதப்பன
ஆழ்கடல் அடியிலே
அலைவன திரிவன
காடறிவன
ஓடுறைவன
வானிலே மறைந்தன
இப்படி எத்துணை
பல்லுயிர் தோன்றின!?
அத்துணை உயிரிலும்
அப்புற மாக்கியே
தப்பெனப் படைத்தனை
இப்பிறவியினை
இத்துணை சீவனை
சீரழித்திட
சுற்றமும் சூழலும்
சேர்ந்தழித்திடும்
அற்பனாய் எனை
ஆக்கினை மனிதனாய்
எத்தனைப் பிறவிகள்
தோன்றித் தோன்றினே
எப்படிக் கரைப்பதென்
பாவத்தின் கரையினை!
அப்பனே தப்பிபோ
திருவொற்றி யூருறை
திருவாளன் தியாக
ராசனே ஈசனே!
சட்டெனப் புண்ணியன்
ஆகிடும் மந்திரம்
ஓதிடுவா யெந்தன்
காதினில் மாத்திரம்!

விலக்கப்பட்டவை

ஈழவாணி

இரட்டையாட்டம் ஆரம்பித்தாயிற்று
சதுரங்கள் மாற்றப்பட்டு
சிறைப்பிடிக்கத் துடிக்கும்
ராஜாவை விட்டு விட்டு
ராணி இஸ்ரத்திற்கு மேவுகிறாள்
இலக்கிலிருந்து மேவி
விதியை அறுத்துவிட்டு
ஆட ஆரம்பிக்கிறாள்
தூசிப்படையொன்று
ராணியாக முயற்சிக்கிறது
திட்டங்கள் அறியாது
இது
ராஜாவிற்கான ராணியின் சதுரங்கச் சதியென்பதையும்.

ஒப்பனைகள் எதற்கு
உரித்துப்போட்ட
வார்த்தைகளைத் தான் நேசிக்கிறேன்
வா எனை நிர்வாணமாய் நேசித்துப்பார்
குற்றங்களைக் களைந்தெறிந்து
சதைத் துண்டங்களைப்
புனிதப்படுத்த முயலாதே
பிய்ந்துருகி அழுகி நாறிடும் பிண்டங்கட்கு
பிரதியாணைகளைப் பறைந்துன்
நிர்வாணத்தை இழிவுறுத்தாது
நிறுவல்களால் முக்தியளி
நான் விரும்புவதும்
குற்றங்களோடான உன் நிர்வாணத்தையே.

பழக்கப்பட்ட வார்த்தைகளை
பயன்படுத்துவதால் நானாய்
அறியப்பட்டு விட முடியுமா...

யாராக அறியப்பட்டுக் கொண்டிருக்கிறேன்
புனையப்படும் பெயரெச்சத்திலா
மச்சங்களாய் உறையும்
பெண்ணெச்சத்திலா
முழுதுமாய் புரிந்துள்வாங்கா
சித்தமாய் நானிருக்கும்
இயல்நிலைகளின்
கலவையாகிய வேச வார்த்தைகளிலா...

அங்கப்பதிவுகளுடான
வளைவு பொந்துகளில்
விளைந்து கிடக்கும்
பெண்மை எதிர்ப்போகும்
ஆண் அழைப்புகளிலா...

எனைக்குறித்த பல
சோடனைப் பேச்சுகளில்
சுற்றம் கட்டிப் போடும்
சடங்குக் கயிறுகளில்
பிணைந்து திணறும்
புனைவுகளின் இறுதிநிலைகளில்...
அதுவாக வெளிப்படுவதா
நான்...

உங்களில் சிலரிட்ட
உள்மனப் பாலியல் தன்மைகளிலானவையா...

இவைகளையும் நினைத்துத்தான் பார்க்கலாம்
ஏனெனில்
நானென்பதே மிச்சமான
வலிகளாயிருக்கலாம்....

மாகாணசபைக்கு பொலிஸ் அதிகம் தர அரசு மறுப்பு

இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களை அமுல்படுத்த முடியும் என இலங்கை அரசாங்கம், இந்தியாவுக்கு அறிவித்துள்ளது.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி, அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் இதனை கூறியுள்ளது.

பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கினால், பொலிஸ் திணைக்களம் முற்றாக வீழ்ச்சியடையும் என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள ஏனைய அதிகாரங்களை அமுல்படுத்த முடியும் என அரசாங்கம் இந்தியாவிற்கு தெரியப்படுத்தியுள்ளது. இந்தியாவின் புதிய பிரதமராக பதிவியேற்றுள்ள நரேந்திர மோடி, இலங்கை அரசாங்கம் 13வது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் சென்ற அதிகாரத்தை மாகா ணங்களுக்கு பரவலாக்க வேண்டும் என இலங்கை ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

தனித்திருக்கையில் மாரடைப்பா?

இருமுங்கள் உடனே!



நீங்கள் மிகவும் படபடப்பாகவும், தொய்வாகவும் உள்ளீர்கள். திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக "வலி", அந்த வலி, மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுகிறது.

வீட்டில் யாருமில்லை எப்படி நம் உயிரைக் காப்பது?

உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது.. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளன. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது.

"தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இருமுதல் வேண்டும். ஒவ்வொரு முறை இருமலுக்கும் முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும். இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரை அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரை ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக்கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரையீரலுக்கு ஆக்சிஜன் சீராக செல்ல வழிவகுக்கிறது.

இருமல் இதயம் தொடர்ச்சியாக துடித்துக்கொண்டே இருக்க உதவும். இதனால் ரத்த ஓட்டம் சீரடையும். இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும். பின்னர் இதயம் சீரடைந்ததும், அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்.

மாத்தளைப் புதைகுழி மண்டையோட்டுக்குள் ஆணிகள்!

மாத்தளையில் 1012ல் ஒரு மனிதப் புதைகுழி கண்டெடுக்கப்பட்டது. அதில் 153 மண்டையோடுகள் காணப்பட்டன. அந்த மண்டையோடுகளை ஆராய்ந்து முடித்தபின் தற்போது நீதிமன்றம் வந்திருக்கும் இவ்வழக்கில் அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்துள்ளன.

அம்மண்டையோடுகள் சிலவற்றுள் இரும்பு ஆணிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஆணி அறையப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டிருக்கக் கூடுமென்ற சந்தேகத்தை இது ஏற்படுத்துகிறது. அத்தோடு, விரல்களிலும் உடம்பின் வேறு பாகங்களிலும் கூர்மையான ஆயுதம் கொண்டு தாக்கப்பட்டதற்கான அடையாளங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

எனவே இந்த வழக்கு மரணங்கள் பற்றிய விசரணையாக அன்றி படுகொலைகள் பற்றிய விசாரணை என்ற கோணத்தில் நகர்த்தப்பட வேண்டுமென்று சட்ட வல்லுநர்கள் கோருகிறார்கள்.

இந்த எலும்புக்கூடுகள் 1988–89 காலப்பகுதியில் நடந்த கலவரங்களின் போது காணாமற் போனவர்களுடையதாக இருக்கலாமென அவர்களின் உறவினர்கள் தெரிவிக்க, மறுபுறம் எண்பதுகளின் பிற்பகுதியில் நிகழ்ந்த ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கைதான வர்களுடையதாக இருக்கலாமெனவும் ஆய்வாளர்கள் கருது கிறார்கள்.

இவை இப்படியிருக்க அதிகாரிகள் என்ன கூறுகிறார்களென்றால், இதெல்லாம், அண்மைக்கால சாமாச்சாரமல்ல, 1940களில் (பிருத்தானியர் காலத்தில்) பெரியம்மை தொற்று ஏற்பட்டு இறந்தவர்களாகவோ, அல்லது மண் சரிவு வந்து இறந்தவர்களாகவோ இருக்கலாமாம்.



ஆனால் அந்த ஆணிகள்...?

காக்கை வலிப்பு வந்து இறந்தவர்களாத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்காகத்தான் இரும்பைக் கையில் கொடுப்பார்கள்... என்று யுக்தியாக மட்டும் யோசித்துவிடாதீர்கள்.

கடந்தொழிலாளர்கள்

கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலாக வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட மாற்று மானியத் திட்டத்தினை அமுல்படுத்தாமல் அரசாங்கம் தம்மை ஏமாற்றி வருவதாக அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்கள் கடும் சினத்தில் உள்ளனர்.

இதேவேளை, தமக்கான எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டமையினால், தாம் அடிக்கடி தொழில் நஷ்டத்துக்கும், நிதி நெருக்கடிகளுக்கும் உள்ளாவதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எரிபொருள் விலையேற்றத்தின் தாக்கத்தை குறைக்கும் பொருட்டு, கடற்றொழிலாளர்களுக்கு 2012 மார்ச் மாதம் முதல் எரிபொருள் மானியம் வழங்கப்படுகிறது. கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினூடாக, இந்த மானியத்தினை அரசாங்கம் ஒரு லீற்றர் டீசலுக்கு 12 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 25 ரூபாவும் மானியமாக வழங்கியது.

இதற்கமைய, மாதமொன்றுக்கு உச்சபட்ச மானியமாக - பல நாட்த் தொழிற்கலமென்றுக்கு 31200 ரூபாவும், வெளி இணை இயந்திரம் பூட்டப் பட்ட படகு மற்றும் தோணிகளுக்கு 9375 ரூபாவும், ஒரு நாட் கலங்களுக்கு 19200 ரூபாவும் மானியத் தொகையாகும். இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில், 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தொடர்ச்சியாக 14 மாதங்கள் வழங்கப்பட்டு வந்த மீனவர் எரிபொருள் மானியமானது 2013 ஏப்ரல் மாதம் நிறுத்தப்பட்டது. எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டமையினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் - மீண்டும் தமக்கான எரிபொருள் மானியத்தினை வழங்குமாறு கூறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதனையடுத்து, 2013 செப்டம்பர் மாதம் மீளவும் எரிபொருள் மானியத்தினை மீனவர்களுக்கு வழங்கிய அரசாங்கம் - அந்த முயற்சியினை அதே மாதத்துடன் நிறுத்திக் கொண்டது.

இதன் காரணமாக, எரிபொருள் மானியம் இல்லாமையால் கடற்றொழிலாளர்கள் பாரிய தொழிற்பிரச்சினைகளையும், நிதி நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருக்கிறார்கள்.



தமக்கான எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டமையினால், தாம் அடிக்கடி தொழில் நஷ்டத்துக்கும், நிதி நெருக்கடிகளுக்கும் உள்ளவாதாகக் கூறும் மீனவர்கள், நிறுத்தப்பட்ட எரிபொருள் மானியத்துக்குப் பதிலாக மாற்று மானியம் வழங்கப்படும் எனக் கூறி அரசாங்கம் தம்மை கடந்த 06 மாதங்களுக்கும் மேலாக ஏமாற்றி வருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இன்னுமின்னும் காலம் தாழ்த்தாது மீனவர்களுக்கான மாற்றுமானியத் திட்டத்தை வழங்குமாறு அம்பாறை மாவட்ட மீனவர்கள் வேண்டுகோள், விடுத்திருக்கிறார்கள்.

யாழ் நிலங்கள் பறிபோகின்றன

-பாலகி

அச்சுவேலி பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்ற மாடி வீட்டுடன் சேர்ந்த சுமார் 10 பரப்பு விஸ்தீரணமான காணியை பொலிஸார் சுவீகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளதுடன் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள 18 பரப்பு விஸ்தீரணமான காணியையும் அதற்கு அருகிலுள்ள 3 ஏக்கர் விஸ்தீரணமான தனியாருக்குச் சொந்தமான நிலத்தையும் சுவீகரிக்கவுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

அச்சுவேலி சங்கானை வீதியில் தற்பொழுது பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்ற மாடி வீட்டுடன் கூடிய சுமார் 10 பரப்பு விஸ்தீரண மான காணியை சுவீகரிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இக்காணி நில அளவை செய்யப்பட்டு சுவீகரிப்புச் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

வெளிநாட்டில் வசிக்கின்ற வைத்திய நிபுணர் ஒருவரரிடம் கடந்த வருடம் நீண்ட காலக் குத்தகையின் அடிப்படையில் குறித்த காணியும் வீடும் பொலிஸ் நிலையம் இயங்குவதற்காக பெறப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக இக்காணியிலேயே அச்சுவேலிப் பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் தற்பொழுது குறித்த மாடி வீட்டுடன் சேர்ந்த ஆதனத்தை சுவீகரிப்பது தொடர்பான அறிவித்தல் பொது இடங்களில் மூன்று மொழிகளிலும் ஒட்டப்பட்டுள்ளது. மேலும் இச் சுவீக ரிப்புக்கு ஏற்ற வகையில் இக்காணி நில அளவை செய்யப்பட்டுள்ளது. உரிமை யாளர் ஐரோப்பிய நாடொன்றில் வாழ்ந்து வருகின்றமையினால் இந்த அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அச்சுவேலிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தி அக்காணியைச் சங்கத்தின் செயற்பாடு களுக்குக் கையளிக்குமாறு சங்க நிர்வாகம் அமைச்சர் தேவானந்தாவிடம் நேரடியாக கோரிக் கைகளை முன்வைத் துள்ளது.

காணிச் சுவீகரிப்புத் தொடர்பாக காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலமாக தனித்தனியான அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்களை மாவட்டத்தின் அரசாங்க அதிபரான எம்.வை.எஸ். தேசப்பிரிய தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறாராம்.

கடந்த சில தினங்களுக்கு முன் மன்னார் மாவட்ட பிராந்திய செய்தியாளர் ஒருவருடம் தற்போதைய அரசாங்க அதிபரான எம்.வை.எஸ். தேசப்பிரிய வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக மாவட்டச் செயலகத்தின் பணியாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்க அதிபர் தொடர்பில் செய்தி வெளியிட்டால் குறித்த சில ஊடகவியலாளர்கள் கடமையாற்றும் ஊடக நிறுவனங்களில் இருந்து இடை நிறுத்தி விடுவதாகவும், எச்சரித்துள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரான எம்.வை.எஸ்.தேசப்பிரிய முன்னால் இராணுவ உயர் அதிகாரி யாகவும் கடமையுள்ளமை குறிப்பிடத் தக்கது.


தற்போது இவர் மன்னார் மாவட்டத்தில் சிங்கள மக்கள் வர்த்தகம் ரீதியாக வந்து சென்ற முசலி, சௌத்பார், தலை மன்னார் ஆகிய இடங்களில் சிங்கள மக்கள் யுத்தத்திற்கு முன் வாழ்ந்து வந்ததாகக் கூறி போலி ஆவணங்களை தயாரித்து குறித்த பகுதி களில் சிங்கள மக்களை குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொண்டபோது, ஊடக வியலாளர்கள் செய்திகளைப் பரப்பியமையினாலேயே இந்த தொடர்ந்து அச்சுறுத்தல் நிகழ்ந்து வருகிறது.

❖

- சத்தியத்திலிருந்து ஒரு அங்குலம் கூட எவன் விலைபோவதில் லையோ அவனே உண்மையான மனிதன்.
- எல்லா வாழ்க்கையும் தீமைதான். ஏதாவது ஓர் உயிரைக் கொல் லாமல் ஒரு படி சோற்றைக்கூட உண்ண முடியாது.
- சில நேரங்களில் இன்பத்தைவிட, துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது.
- பிராமணனின் அறிவாற்றல், புத்தனின் இதயம், உயர்ந்த உள்ளம், வியப்பிற்குரிய மனிதாபிமானம் ஆகியவற்றை ஒன்று சேர்ப்போமாக.
- உண்மையானவர்களும் அன்புடையவர்களும் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.
- நன்மையைப்போலவே தீமையிலிருந்தும் மனிதன் பெரும் பாடங்களைக் கற்றுக் கொள்கிறான்.

நன்றி : பழமொழிப் பெட்டகம்

விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்



இரணைமடு அணை நீர் இழுபறி!

இலங்கையின் வடமாகாணத்திலேயே மிகப்பெரிய நீர்த்தேக்கம் கிளிநொச்சி நகருக்குத் தெற்கே 8 மைல் தொலைவிலுள்ள இரணைமடுக்குளம். 5ம்நூற்றாண்டில் தாதுசேன மன்னனால் கட்டுப்பட்டு 1920ல் புனரமைக்கப்பட்டு 8455 ஹெக்டயர் பரப்பில் வாழும் சுமார் 7000ம் குடும்பங்களின் விவசாயத்துக்கு நீர் வார்த்து வருகிறது. 2002ல் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மாலை தீவிலிருந்து சீபிளேனின் மூலம் வந்து இறங்கியதும் இவ் இரணைமடுக் குளத்தில்தான்.

அதன்மீதுதான் இப்போது ஒரு கண் விழுந்திருக்கிறது யாழ்ப்பாணத்தின் குடிநீர் சிக்கலுக்கான தீர்வுக்கு! யாழ்ப்பாணத்தில் நிலைமை என்னவென்றால் அங்குள்ள நிலத்தடி நீர் குடிப்பதற்குத் தகுதியற்றதாக மாறிச் செல்கிறது. அதற்கு நிறையவே காரணங்கள்.

வற்றிச் செல்லும் நிலத்தடி நீர்

யாழ் விவசாயம் கிணற்றுத்தண்ணீரை நம்பித்தானே இருக்கிறது? அதாவது அந்த நிலத்தடி நீரை! அங்கு ஆறுகளோ பெரிய குளங்களோ இல்லையல்லவா? இந்நீரைத் தொடர்ந்து இறைத்து வந்தால் என்னாகும்? முன்னர் துலாவினால் இறைத்தார்கள், இப்போது வாட்டர் பம் பாவித்து பெருவாரியாக இறைக்கிறார்கள். அதனால் நிலத்தடி நீரின் அளவு குறைகிறது.

நைத்திரேட்டால் நஞ்சாகும் நீர்

இப்படிக் குறையும்போது மறுபுறம், விவசாயிகள் செயற்கைப் பசளைகளையும் பாவிக்கத் தொடங்கிவிட்டார்கள். புகையிலை உற்பத்தியாளர்களோ அதிகளவு யூரியாவைப் பாவித்து வருகிறார்கள். யூரியா, அமோனியம் சல்பேற் போன்ற உரங்களில் மிகுந்திருக்கும் நைத்திரேட்டுக்கள் சுலபமாக இந்த நிலத்தடி நீரில் கரைந்து விடுகின்றன. ஒரு லீற்றர் நீரில் 45 மில்லி கிறாமுக்கு அதிகமாக நைத்திரேற் இருந்தால் உடலுக்கு ஆபத்து. ஆனால் இப்போது விளைவு என்னவென்றால் - கோண்டாவிலில் மேற்கொண்ட ஆய்வின்படி - ஒரு லீற்றர் நீரில் 149 மில்லிகிராம் நைத்டிரேற் இருக்கிறது. ஆபத்துப் புள்ளிக்கு - இரண்டல்ல - மூன்று மடங்கிலும் அதிகம்!

உப்புநீரில் ஊடுருவல்!

இப்படி நைத்திரேற் ஒரு பக்கத்தில் செறிய, மறுபக்கமாக, விவசாயிகள் கிணற்று நீரை இறைத்துத் தள்ள, கடல் நீர் நிலத்தின் கீழாக சுவர்ந்து நன்னீருடன் கலந்து உப்பாக்கி வருகிறது. கரையோரங்களில் சீமேந்துத் தொழிற்சாலைக்காக சுண்ணாம்புக் கற்களைத் தோண்டிவந்ததும் இந்த கடல் நீர் ஊடுருவலுக்கு வழிதிறந்து கொடுத்தது.

கழிவு நீரின் கசிவு

இவற்றைவிட அடுத்த பிரச்சினை யாழ்ப்பாணத்தின் கழிவகற்றும் கட்டமைப்பு இல்லை. கழிவுகள் யாவும் பூமிக்குள்ளேயே புதைக்கப்படுகின்றன. இதனால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்ந்து அசுத்தம் வைக்கின்றன. பாக்டீரியாக்கள் போன்ற நோய்க்கிருமிகளின் தொற்றுக்கு இந்நிலத்தடி நீர் உள்ளாகும் சாத்தியமும் இருக்கவே செய்கிறது.

நீலக் குழந்தைகளும் அங்கவீனர்களும் தோன்றும்... ஆபத்து!

இவற்றின் விழைவு மோசமானது. ஆண்களின் மரபணுவைப் பாதித்து அங்கவீனச் சந்ததியினரையும் நீலக் குழந்தைகளையும் ஏற்படுத்தக்கூடியது. இப்போதே பொதுமக்களைப் பாதிக்கத் தொடங்கிவிட்டது. உதாரணத்துக்கு இலங்கையில் ஏற்படும் தைரொயிட் காச்சலில் 30 வீதம் யாழ்ப்பாணத்திலேயே ஏற்படுகிறது.

இரணைமடுக் குளத்து நீரை... யாழுக்குத் திருப்பும் திட்டம்

இப்போது என்ன செய்வது? யாழ் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வேண்டுமே! இதனால்தான் இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் திட்டம் ஆலோசிக்கப்பட்டது.

ஆனால் அந்தத் திட்டத்துக்கு பலத்த எதிர்ப்பு கிளிநொச்சி விவசாயிகளின் சார்பாக எழுந்தது. அந்த நீர் அங்குள்ள விவசாயிகளுக்கே போதவில்லை. விவசாயம் காலந்தோறும் அதிகரித்துச் செல்ல, இன்னும் தட்டுப்பாடு ஏற்படவே சாத்தியமுள்ளது. மறுபுறம் வறட்சியும் சேர்ந்து வாட்டுகிறது. 8000 ஏக்கரில் மேற்கொள்ளப்பட வேண்டிய விவசாயம் இம்முறை 800 ஏக்கரிலேயே மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிலையில் ஒரு பகுதி நீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்சென்றால், இவர்கள் கதி என்னாவது? இதுவே கேள்வி.

மாகாணசபையின் தீர்வு

எனவே வட மாகாண சபையும் இத்திட்டத்தை நிராகரித்தது. இதற்கு ஒரு தீர்வாக அது ஒரு திட்டத்தை முன்வைத்தது. அதாவது தற்போது இரணைமடுக் குளத்திற்கு



வட மாகாண சபை விவசாய அமைச்சர்

வடமாகாண சபையின் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனிடம் கேட்டபோது, அவர் "அரசியலை விடுத்து நாம் ஒரு தொண்டர் நிறுவனம்போல் இதை அணுக முடியாது. மகாவலித் திட்டத்தின் மூலம் குடியேற்றம் செய்து இன முரண்பாட்டை கூர்மைப்படுத்திய அனுபவம் எமக்கு எச்சரிக்கை தருகிறது. இத்திட்டம் மூலம் சமூகளுக்கிடையே முரண்பாடு தோன்றிவிடக்கூடாது. அத்தோடு எமக்கான உணவு உற்பத்திக்கும் குடிநீருக்கும் நாம் தங்களைச் சார்ந்திருக்க வேண்டுமென்ற அரசின் மறைமுக அரசியலுக்குள்ளும் மூழ்கிவிடக்கூடாது" என்கிறார்.

இவற்றினடிப்படையில் இரணைமடுக் குளத்தின் புனரமைப்பையும் யாழ் குடா நாட்டுக்கான குடிநீர் விநியோகத்தையும் ஒருங்கிணைந்த திட்டமாக அல்லாது தனித்தனித் திட்டமாகப் பரிசீலிக்கும்படி ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் தாம் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார்.

இது இப்படி விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்" கதையாக எவ்வளவு நாள் இழுப்பட்டப் போகிறதோ தெரியவில்லை! ❖

34 அடி உயர அணையே உள்ளது. அந்த 34 அடி நீரில் கை வைக்கவும், அணையை உயர்த்தி, உயர்த்தப்பட்ட நீரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரனுப்பலாமென சிபாரிசு செய்தது. இத் திட்டத்தை ஆராய்ந்த ஆசிய அபிவிருத்தி வங்கி இதனை அங்கீகரித்து கட்டுமானப் பணிகளுக்கு கடன் வழங்குவதற்காக 2011லேயே அரசாங்கத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டும் விட்டது. அதேபோன்று ஆசிய அபிவிருத்தி வங்கி வட மாகாணசபையின் தற்போதைய பிரதம செயலாளருடனும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடனும்கூட இத்திட்டத்தை துரித கதியில் முடிப்பதெனக் கைச்சாத்திட்டு இத்திட்டம் தொடங்கப்படும் விட்டது.



ஆனால் இத்திட்டத்தை முற்றுமுழுதாகக் கைவிடக்கூறி இரணைமடுக் குளநீரில் விவசாயம் செய்யும் விவசாயிகள் போராட்டம் நடத்துகிறார்கள். கடந்த ஏப்ரல் 20 திகதி அவர்கள் ஒரு அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் நடத்தினார்கள்.

இதேவேளை இப்பிரச்சினையை அரசியல்வாதிகள் அரசியலாக்கவும் முனைகிறார்கள்.

அரசியல் என்றால் என்ன?

எட்டு வயது சுட்டிப் பையனுக்கு எல்லாம் அறிந்துவிட ஆசை. அப்பாவிடம் கேட்டான், "அப்பா, இந்தப் பொலிடிக்ஸ் என்றால் என்ன?" இதையெப்படி இவனுக்கு விளக்குவது என்று தலையைச் சொறிந்த அப்பா, இலகுவாக இப்படிச் சொல்லிப் பார்த்தார். "இந்தா இந்த வீட்டில, காசு கொடுக்கிறது நான்தானே? அப்போ நான்தான் முதலாளி வர்க்கம். அந்தா வேலை செய்யிறாளே வேலைக்காரி, அவள்தான் தொழிலாளி வர்க்கம். இந்த வீட்டை பராமரிக்கிற உன்னோட அம்மாதான் அரசாங்கம். நீ பொதுமகன். அந்தா அந்தச் சின்னத் தங்கச்சிதான் எதிர்காலம். புரிஞ்சுதா?" என்றார். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை, போய்விட்டான்.



பின்னர் மாலையில் விளையாட்டு முடிந்து வந்து பார்த்தால் சின்னத் தங்கச்சி அழுதபடியிருந்தாள். அம்மா எங்கோ ஊர் சுற்றப் போய்விட்டா. அறைக்கதவு பூட்டியிருந்தது. கதவுத் துறைக்கசுடாகப் பார்த்தால், அங்கே அப்பா வேலைக்காரியோடு குலாவிக் கொண்டிருக்கிறார். மறுநாள் அவன் அப்பாவிடம் சொன்னான். "அப்பா, எனக்கு இப்ப அரசியல் விளங்கிட்டுது!" "என்ன விளங்கிட்டுது...?" அப்பா கேட்டார். பையன் சொன்னான் "முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தைக் கசக்கிப் பிழிய. அரசாங்கம் கண்டுகொள்ளாமல் தன்ர சோலியப் பார்க்க. எதிர்காலம் அழுது கொண்டிருக்க, பொதுமகன் ஒண்டும் விளங்காமல் நிப்பான்." இப்போது அப்பாவுக்கு தலை சுற்றியது!

சுட்ட கடி!

சமூக வலைத்தளங்கள் இன்று வாழ்கையின் அன்றாட பகுதிகளாகிவிட, இந்தப் புதிய வெளி எமக்குப் பாதுகாப்பானதா, எம் ரகசியங்களை, தனிப்பட்ட வாழக்கையை அம்பலப்படுத்தி விடாதா, எம் இளைய சமுதாயத்தைப் படுகுழியில் தள்ளிவிடாதா என்றெல்லாம் ஒருபுறத்தில் "அக்கறையாளர்கள்" புலம்பியபடியிருக்க, முன்னரெல்லாம் முன்வீட்டிலிருந்தாலும் முகமெடுத்துப் பார்க்காமல் சஞ்சலப்பட்டபடி ஒதுங்கிச் சென்ற, மறந்துபோன முகங்களெல்லாம் இந்த வலைத்தளங்களில் எத்திக்கிலிருந்தோ தோன்றி, "ஹாய்" சொல்லி "லைக்" போடுகிறார்கள், உற்சாகமாகக் கொமண்ட் அடிக்கிறார்கள். பலதும் பத்தும் நடக்கும் இக் கணனிக் களத்தில் நமக்கு சுவையான சில சங்கதிகளும் கதைகளும் பொறுக்கக் கிடைத்ததுதான் புண்ணியம். அப்படிப் பொறுக்கியவற்றைப் பகிர்வதுதான் இந்த சுட்ட கடி.



$400 பில்லியன்!

நூற்றாண்டின் மிகப்பெரிய எரிவாயு ஒப்பந்தம்! கதிகலங்கிப்போனது மேற்குலகு!

—ஆதி

பத்தாண்டுகாலப் பேச்சுவார்த்தையின் பின் சென்ற மே 21ம் திகதி சீன விஜயம் செய்த ரஷ்ய ஜனாதிபதி விளாமிடிர் புட்டினுக்கும் சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கிற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட மிகப்பெரும் திரவ எரிவாயு ஒப்பந்தம் மேற்கத்தேய பொருளாதார உலகையே கதிகலங்க வைத்து விட்டது. 400 பில்லியன் தொகைக்கு மேற்கொள்ளப் பட்ட இவ் ஒப்பந்தம், ரஷ்யாவிலிருந்து சைபீரியப் பாலைவனம் வழியாக திரவ எரிவாயுவை நேரடியாக விநியோகிக்கவழிசெய்துள்ளது. 30வருடங்களுக்கான இந்த ஒப்பந்தம் 2018ல் அமுலுக்கு வரவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி குறைந்த விலையில் சீனாவிற்கு ரஷ்யா விற்கவுள்ள திரவ எரிவாயுவின் விலை இரகசியமாக வைக்கப்பட்டுள்ள போதிலும் கசிந்த செய்திகள் ஒரு மில்லியன் கன அடிக்கு 10 முதல் 11 டாலராக இருக்குமெனக் கூறுகின்றன.

இது உடனடியாகவே கனடாவின் திரவ எரிவாயு ஏற்றுமதிக் கனவில் மண்ணள்ளிப் போட்டுவிட்டது. கனடா எல்.என்.ஜி. திட்டம் எனப்படும் லீக்கீவ்ட் நெச்சுரல் கேஸ் திட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் கொலம்பியா திரவ எரிவாயுவை மில்லியன் கன அடிக்கு 14 முதல் 18 டாலருக்கு விற்கலாமெனத் திட்டமிட்டிருந்தது. ஆனால் ரஷ்யா இப்படி சீனாவின் பாரிய திரவ எரிவாயுச் சந்தை வாய்ப்பை, குறைந்த ஒரு விலையை வீசி ஒரேயடியாகச் சுருட்டியள்ளி வாயில் போட்டு மென்றுவிடுமெனக் கனடா நினைத்திருக்கவில்லை.

அதுமட்டுமா? இந்தக் குறைந்த விலையைச் சுட்டிக்காட்டி கனடாவின் திரவ எரிவாயு வாடிக்கை யாளர்கள் விலையைக் குறைக்கும்படி அழுத்தம் கொடுக்கப்போகின்றனர். ஏற்கனெவே இந்த எல்.என்.ஜி. மார்க்கெட்டில் இருந்த ஜப்பான் இதுகண்டு குளம்பிப்போய் விட்டது. அதன் 38 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ஷின்ஸோ அபியிடம், நிறுத்தப்பட்டிருந்த ரஷ்ய - ஜப்பானிய திரவ எரிவாயுக் குழாய்த் திட்டத்தைப் புதிப்பிக்கும்படி அழுத்தம் கொடுக்கக் கிளம்பிவிட்டனர்.

உக்ரேனியப் பிரச்சினைக்குள் தடியை ஓட்டி, ரஷ்யாவுக்குத் தலையிடி கொடுக்கலாமென அமெரிக்கத் தலைமை மேற்குலக நாடுகள் முண்டு கட்டி நின்ற வேளையிலேயே ரஷ்யா தடாலடியான இவ் ஒப்பந்தத்தின் மூலம் தன்னை யாரென்று காட்டியுள்ளது. உக்ரேனின் சக்தி வளங்களையும் இரும்பு முதலான உலகின் மிகப்பெரிய தாதுப்பொருள் படிமங்களையும் எப்படியும் ரஷ்யாவின் பிடியிலிருந்து பறித்தெடுத்துவிட வேண்டுமென்ற மேற்குலகின் பிரயாத்தனத்துக்கு, ரஷ்யா எப்படிப் பதில் கொடுக்குமென்று புரிய வைத்துள்ளது. இவ் ஒப்பந்தம் மூலம் அது 400 பில்லியன் டொலர்களையும் ஒரு நீண்டகால வாடிக்கையாளரையும் உறுதிப்படுத்திக்கொண்டது.

மறுபுறம் சீனாவும்கூட மேற்கத்தேய நாடுகளின் திரவ எரிவாயுவில் தங்கியிருக்கும் தழையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டது. சக்தித் தேவைக்காக நிலக்கரியைத்தான் இதுவரை அது அதிகம் பாவித்து வந்தது. உலக நிலக்கரிப் பாவனையின் அரைவாசி சீனாவே பாவித்து வந்தது. இவ் ஒப்பந்தம் மூலம் சூழல் மாசடைவை ஏற்படுத் தும் நிலக்கரி எரிப்பைப் பெருமளவு கைவிட்டு, மாற்றீடாக திரவ எரிவாயுவைப் பயன்படுத்த வழி யேற்பட்டுள்ளது. இதன் வாயிலாக உலகின் அதிக அளவு திரவ எரிவாயு பாவிக்கும் நாடாக 1035இல் சீனா மாறிவிடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாரிய ஒப்பந்தத்தால் திடுக்கிட்டுப் போன மற்றொரு சந்தை ஐரோப்பா. ஏனெனில் ஐரோப்பிய திரவ எரிவாயுக் கொள்வனவில் 30 வீதத்தை ரஷ்யாவே வழங்குகிறது. இவ் ஒப்பந் தத்தைக் கண்டதும் ரஷ்யாவில் திரவ எரிவாயுக்காகத் தங்கியிருப்பதைக் குறைப்பது எப்படி என்று அது சிந்திக்கத் தொடங்கிவிட்டது. இது குறித்த அதன் கவலையை மே 28ம் திகதி "சக்தி வளங்களின் பாதுகாப்பு" என்ற பெயரில் ஐரோப்பிய கமிஷன் வெளியிட்ட அறிக்கை புலப்படுத்துகிறது.

ஆனால் ரஷ்யாவுக்கும் இந்தச் சந்தையை இழப்பது பெருத்த நஷ்டமே. இதுவே அதன் மிகப்பெரிய திரவ எரிவாயுச் சந்தை. 160 பில்லியன் டாலர் வருட வருமானம் இவ் ஐரோப்பிய சந்தையால் ரஷ்யாவுக்குக் கிடைக்கிறது.

இதில் இருபக்கத்தினருக்கும் பிரச்சினை உள்ளது. 160 பில்லியன் டாலர் வருமானத்தை இழப்பது ரஷ்யாவுக்கும் முடியாது. அதேவேளை 30 வீத திரவ எரிவாயுவை ரஷ்யாவின் விலையில் வழங்கக்கூடிய மாற்று வழிகளை ஐரோப்பிய சந்தை உடனடியாகத் தேடிக்கொள்ளவும் முடியாது. எனவே கடுப்பான இந்த நிலமையைச் சகித்துக்கொண்டே காலம் தள்ள வேண்டிய கட்டாயம்!

ஆனால் மேற்குலகுக்கு இதனால் விளைந்த ஆபத்துச் சமிக்ஞை என்னவென்றால், தம்மில் தங்கியிராத நிலையை ரஷ்யா, சீனா போன்ற (எதிர்க்கொள்கைகள் கொண்ட) பெரும் சக்திகள் உருவாக்கிக் கொண்டால், தங்கள் பொருளாதார எஜமானத்துவம் மட்டுமின்றி அரசியல் ஆதிக்கமும் ஆட்டம்கண்டு விடலாமென்ற அச்சம்தான்!

கொக்கிக் கை தீவிரவாதிக்கு 100 ஆண்டுகள் சிறைத்தண்டனை

வாஷிங்டன் : கொக்கி கை தீவிரவாதிக்கு 100 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அமெரிக்க நீதிமன்றத்தில் தீர்ப்பளித்துள்ளது.

எகிப்தைச் சேர்ந்தவர் அபு ஹம்சா அல் மஸ்ரி (56 வயது). இவர் படிப்புக்காக லண்டனில் குடியேறி அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற ஒரு விபத்தில் 2 கைகள், ஒரு கண் பார்வையை அபுஹம்சா இழந் தார். அதன் பின்னர் அவர் தனது ஒரு கையில் இரும் பிலான கொக்கியை அணிந்தார்.

1990களில் வடக்கு லண்டனில் உள்ள பின்ஸ்பரி பார்க்க மசூதியில் இமாம் ஆகப் பணி யாற்றிய அபுஹம்சா, அமெரிக்காவுக்கு எதிராகப் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. அதன் பேரில் 2012இல் அவர் அமெரிக் காவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

யேமன் நாட்டில் 4 வெளிநாட்டினரைத் தீவிரவாதிகள் கடத்தி கொலை செய்த சம்பவம், அமெரிக்காவின் ஓரிகானில் அல்கொய்தா தீவிரவாத பயிற்சி மையத்தை அமைக்க ஆட்களை அனுப்பியது. ஆப்கானிஸ்தானுக்கு தீவிரவாதிகளை பயிற்சிக்கு அனுப்பியது. உட்பட அபு ஹம்சா மீது 11 வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்குகளில் விசாரணை நியூயோர்க் நகர நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. 11 வழக்குகளிலும் அபு-ஹம்சா குற்றவாளி என்று அறிவித்த நீதிமன்றம் அவருக்கு 100 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து திங்கட்கிழமை தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அட்டர்னி பிரீத் பகாரர் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு அபுஹம்சாவுக்குத் தண்டனை பெற்றுத் தந்துள்ளதாக அமெரிக்க நாளிதழ்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.



யாழ் நூலக நினைவுகள்

–குழலி

இலங்கையின் வடமாகாணத் தலைநகரமாக விளங்குவது யாழ்ப்பாணம் இங்கு வாழ்பவர்கள் பழைமையில் ஊறியவர்கள்; உயரிய பண்பாட்டினைகொண்டவர்கள். கல்வியே அவர்களின் முதலீடு.

அந்தக் காலத்தில் ஒருவர் பத்திரிகையைப் பணம் கொடுத்து வாங்குவார்; அதே பத்திரிகையை அயல் அட்டையில் உள்ளவர்களெல்லாம் இரவல் வாங்கிப் படிப்பார்கள். பத்திரிகை அல்லது புத்தகத்தைப் படிப்பதில் ஆர்வம் காட்டியமையால் விரும்பத்தகாத போட்டா போட்டிகள் வாசகர் மத்தியில் நிலவும். இதைக் கண்ணுற்ற படித்த மனிதர் ஒருவர், அவர் வீட்டில் ஓர் அறையை ஒதுக்கி, சில பத்திரிகைகளையும் வேறு பிரசுரங்களையும் வாங்கி வைத்து, விரும்பியோர் யாரும் வந்து அவற்றைப் படிக்கலாமென்று ஏற்பாடு செய்தார். கே.எம். செல்லப்பா என்ற அம்மனிதர் இதற்குக் பணம் வாங்கியது கிடையாது. இது நடந்தது 1933ஆம் ஆண்டிலாகும். பலர், இளைஞரும் வயோதிபரும் அந்த வீட்டில் வந்து வாசித்துச் செல்வார்கள். செல்லப்பா, தாமே பணம் கொடுத்து அந்தக் காலத்தில் பிரசுரமாகிய புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவ ஏடுகள் முதலியவற்றை வாங்கி சிறிய வாசிகசாலையை 'லங்கா ஹவுஸ்' என்று தம் மனையில் விருத்தி செய்தார். யாரும் வந்து தமது தகவலையும், படிப்பறிவையும் தணித்துச் செல்ல அவர் வழி செய்தார். இவ்வாறு அந்தப் பரோபகாரி யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் என்று ஓங்கிவளர்ந்த பெரு விருட்சத்துக்கு விதை தூவினார்.

செல்லப்பா அந்தச் சமயத்தில் யாழ்ப்பாண மாவட்டமொன்றில் செயலாளராகப் பணிபுரிந்து வந்தார். இளைஞர்கள் மத்தியில் படிப்பறிவைப் பரப்புவதற்கான வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்ய முனைந்தார். இதன் பொருட்டு, 1933 நவம்பர் 11ஆம் தேதி கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி முதலான நகரங்களுக்கும் தமிழர் வாழும் இடங்களுக்கும் "இலவச மத்திய தமிழ் வாசிகசாலை" ஒன்றை நிறுவ விண்ணப்பம் அனுப்பினார். அந்த விண்ணப்பத்தை இந்து சாதனம் மற்றும் 'சிலோன் ஃபிறி பிரெஸ்' என்ற பத்திரிகைகளில் பிரசுரிப்பித்தார்.

செல்லப்பா விடுத்த விண்ணப்பத்துக்கும் அதில் அடங்கியிருந்த உருக்கமான வேண்டுகோளுக்கும் நாட்டங்கொண்ட பல படித்த மனிதர்கள் அல்லது வாசிகசாலையை உருவாக்கி நடத்துவதென்பதை ஆராயும் பொருட்டு கூடினார்கள். 1934 ஜூன் 4 சனிக்கிழமை, யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேறியது.

"கூட்டத்திற் பிரசன்னமானவர்களை தாபன அங்கத்தவர்களாகக் கொண்டு மத்திய இலவச தமிழ் வாசிகசாலைச் சங்கம் என்ற பெயரில் உருவாக்குதல்"

இந்த விடயத்தை முடிக்குரிய வழக்கறிஞர் கனகசபை பிரோரிக்க, வட மாநிலத்துக்குக் கல்வி அதிபர் கே.எஸ். அருள்நந்தி ஆமோதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

இப்புதிய நிருவாக சபையினர் அயராது பாடுபட்டு புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் ஏட்டுச் சுவடிகளையும் திரட்டினார்கள். குறிப்பாக ஏட்டுச் சுவடிகள் பண்டைய தமிழர் பண்பாட்டுக்குச் சான்று பகர்ந்தமையால் அவற்றைப் பேண வேண்டுமென்று விரும்பினார்கள்.

நூலகம் 1934 ஆகஸ்ட் மாதம் முதலாம் தேதியில் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் அதிக இடவதி கொண்ட பெரிய கட்டடத்துக்குப் பெயர்ந்தது.





நூலகத்தை அழித்த காவல்துறையினர் தங்கியிருந்த யாழ்ப்பாண விளையாட்டரங்கு



சேதமுற்ற சுப்பிரமணியம் பூங்காவும், ஏரியும், சேதமுறாத செல்வநாயகம் நினைவுத்தூபியும்

அதற்கான மாதாந்த வாடகை ரூ.25/- நூலகர் ஒருவர் மாதச் சம்பளத்தில் அமர்த்தப்பட்டார். அவருக்கான மாத ஊதியம் ரூ. 20/- ஆகும். அவர் அந்தத் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர். அல்லர்; பதிலாக, அர்ப்பண சிந்தையுடன் ஒழுங்கு செய்வதில் வல்லவர்.

செல்லப்பாவின் அயராத, தளராத முயற்சியில் ரூ. 1,184.22 சேகரித்தார்; இதை அவர் வாசிகசாலையில் மூலதனமாகப் பாவித்தார். ஆரம்பத்தில் 844 புத்தகங்களையும் 30 பத்திரிகை, சஞ்சிகைகளையும் சேகரித்தார். பெறுமதி மிக்க பல புத்தகங்கள் இந்தச் சேகரிப்பில் அடங்கின. அவற்றிற் சில வருமாறு:-

சிவதருமோத்திரம், நீலகண்ட பாஷ்யம், சித்தாந்த தீபிகை, ஆறுமுகத்தம்பிரானின் பெரிய புராணம் கல்யாணசுந்தரனான் நவசக்தி மற்றும் பழைய சஞ்சிகைகளான செந்தமிழ்ச் செல்வி, நவசக்தி பிரசுரங்களும் அடங்கும்.

இந்தப் புத்தகங்களும் வேறு பலவும் கவனமாகத் தூசு தட்டி, துப்புரவாக்கி, பெயர் எழுதிப் பேணப்பட்டன.

பின்வரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அவற்றின் பிரசுரகர்த்தர்களால் இலவசமாக வழங்கப்பட்டன. வீரகேசரி, இந்து சாதனம், உதயதாரகை, சத்திய வேத பாதுகாவலன், ஈழகேசரி, இந்து ஒர்கன், ஃபிறி பிரெஸ், மோர்ணிங் ஸ்டார், கத்தலிக் கார்டியன் மற்றும் சண்டே கத்தலிக் டைம்ஸ்.

பின்வரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வாசிகசாலையால் வாங்கப்பெற்றன : தமிழ்நாடு, சுதேசமித்திரன், செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, ஆனந்தபோதினி, பாரதி, சித்தாந்தம், கலைமகள், கொங்குமலர், தமிழ்ப்பொழில், டைம்ஸ் ஓவ் சிலோன், டெயிலி நியூஸ், மட்ராஸ் ஹிந்து, மொடோர்ன் றிவியூ, திரிவேணி மற்றும் ஹிந்து மைன்ட்.

வசிகசாலை பிரபல்யம் பெற்றது. நாளாந்தம் சுமார் ஐம்பது வாசகர்கள் வரத்தொடங்கினார்கள். நாள்தோறும் காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை பொதும க்களுக்காக வாசிகசாலை திறந்துவைக்கப்பட்டிருக்கும்.

தளவாடங்கள் என்றிருந்தவை, இரண்டு நெடும் மேசைகளும். இரண்டு வாங்குகளும், ஓர் எழுதும் மேசையும், கூடிய இரண்டு புத்தக அலுமாரிகளும், இரண்டு அறிவித்தல் பலகைகளும் ஒரு கடிகாரமும் ஆகும்.

இந்த வாசிகசாலை வர்த்தகம் நடைபெறும் இடத்தில் அமைந்திருந்தது. வர்த்தகர்களும் கடைச் சொந்தக்காரர்களும் வாசிகசாலை அளப்பரும் சேவை செய்வதைக் கண்டு, 25 சதம் தொடக்கம் சுமார் ரூ. 2/- வரை மாதாந்தம் செலுத்தத் தொடங்கினார்கள்.

1934 டிசெம்பர் 20இல் கூடிய மத்திய இலவச வாசிகசாலைச் சங்கம், வாசிகசாலையை நகராட்சி மன்றத்திடம் கையளிக்கத் தீர்மானித்தது. யூ.டி.சி. எனப்படும் நகராட்சி மன்றத்தில் அங்கத்தவராய் இருந்த சுப்பிரமணியம் என்பார் நகராட்சி மன்றம் கூடிய வேளையில் வாசிக சாலையை நகராட்சி மன்றம் எடுத்து நடத்த வேண்டுமென்ற பிரேரணையை முன்வைத்தார். அதற்கமைய 1935ஆம் ஆண்டு ஜனவரி 1ல் வாசிகசாலை நகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தில் வந்தது. அவ்வேளை ஆர்.ஆர். நல்லையா அவர்கள் நகராட்சி மன்றத்தின் தலைவராக இருந்தார்.

கௌரவ பதவி வகித்து வந்த சி.எஸ். இராசரத்தினம் என்பார் மெட்ரிகுலேசன் பரீட்சையில் சித்தியடைந்தமையால், அவரை ரூ. 40/- மாதாந்த சம்பளத்தில் நூலகராக நியமிப்பதென்று சபை முடிவு செய்தது. 1936ஆம் ஆண்டில் வாசிகசாலை மறுபடியும் இடம்பெயர்ந்தது. இம்முறை, யாழ்ப்பாணம், பிரதான வீதியில் அமைந்த, அபூபக்கர் கட்டடத்திற்குக் குடிபோனது; அதற்கு மாதாந்த வாடகை ரூ. 35/- அந்த இடம், நெருக்கடியும் சத்தமும் நிறைந்ததாய் இருந்ததால், பரந்த இடவசதியுள்ள வீட்டுக்கு மீண்டும் குடிபெயர்ந்தது. அரசாங்க வாடி வீட்டுக்கு அண்மையில் அமைந்த இந்தக் கட்டடத்துக்கு மாதாந்தர வாடகை ரூ. 65/- ஆகும். இந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர் புத்தூர் மல்லவராயர் குடும்பம்; கட்டடத்தில் வராந்தாவுடன் கூடிய, காற்றுப் புக வசதியுள்ள பெரிய இரண்டு அறைகள் இருந்தன.

1936இல் நகராட்சி மன்றத்துக்கும் நகர மண்டபத்துக்கும் திராவிடச் சிற்பக்கலையைப் பின்பற்றி அழகான கட்டடம் கட்டப்பெற்றது. ஆயினும், வாசிகசாலையை இடமாற்றம் செய்வதற்கு திட்டம் ஒன்றும் இருக்கவில்லை. வாசிக சாலை தொடர்ந்ததும் மல்லவராயர் கட்டடத்திலேயே செயற்பட்டு வந்தது.

1954ஆம் ஆண்டு மார்ச் 29இல் நூலக கட்டடத்துக்கு அத்திவாரம் இடும் வைபவம் நடைபெற்றது. புகழ்பெற்ற ஐவர் அத்திவாரம் இட்டார்கள். அவர்கள் விவரம் வருமாறு: நகரபிதா சாம், ஏ. சபாபதி, வண, சுவாமி லோங் அவர்கள், பிரித்தானிய உயர் தானிகர் சேர் சிசில் சேயர்ஸ் அவர்கள், அமெரிக்கத்தூதுவர் பிலிப் குரோவ் அவர்கள், இந்திய தானிகராலயத்தைச் சேர்ந்த முதலாம் செயலாளர் சித்தார்ந்த சாரி அவர்கள்.

கட்டடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாகி 1959ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி சம்பிரதாய முறைப்படி, அன்று யாழ்ப்பாண நகரபிதாவாகவிருந்த அல்பிரட் துரையப்பா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் ஒழுங்காக இயங்கி, சர்வதேச தராதரத்துக்கேற்பச் செயற்பட்டு தென்கிழக்காசியாவிலேயே சிறந்ததொன்றாகக் கருதப்படுமளவிற்குக் கீர்த்தி பெற்றது. இந்த நூலகம் அறிவுக் களஞ்சியமாக விளங்கி இன, மத வேறுபாடின்றிக் சகலருக்கும் ஞான ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடக்கவிருந்த 1981ஆம் ஆண்டு மே-ஜூன் பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸ்காரர்கள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டனர். இவர்கள் நூலகத்துக்கு நானூறு மீற்றர் தூரமிருந்த விளையாட்டரங்கில் தங்கவைக்கப் பெற்றார்கள். மே மாதம் 31ஆம் தேதியிலிருந்து இந்த மனிதர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்த வாகனங்கள், கடைகள், கட்டடங்கள் முதலியவற்றைத் நாசம் செய்து தீக்கிரையாக்கினார்கள்.

ஜூன் 1ஆம் தேதியன்று சுமார் காலை 10.00 மணியளவில் இந்த மனிதர்கள் நூலகக் கட்டடத்துள் புகுந்து அங்கிருந்த தளவாடங்களையெல்லாம் நிர்மூலமாக்கினார்கள்; இதன் பிறகு விலமைதிப்பற்ற புத்தகங்கள், புராதன கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய ஆவணங்கள், ஓலைச் சுவடிகள் எல்லாவற்றையும் தீக்கிரையாக்கினார்கள். ஒருசில நிமிடங்களுள் கட்டடமும் தீப்பற்றி எரிந்தது. நாகாரர்கள் பாடியும் நடனமாடியும் எரியும் நூலகத்தைக் கண்ணுற்றுக் களிப்படைந்தார்கள். இவ்வளவு அகோரங்களும் சிரேஷ்ட மந்திரிகளும் பாதுகாப்பு உயரதிகாரிகளும் பக்கத்தில் இருக்கும்போதே நடந்தேறின. இலங்கைத் தமிழருக்கு. திட்டமிட்டு இழைக்கப்பட்ட கலாசாரத் தீவைப்பாக இதைக்கொள்ளலாம்.

அறிவகம் சாம்பலாகி, சின்னாபின்னமடைந்து கிடந்த வேளை, 1997ம் ஆண்டில் சனாதிபதியாகவிருந்த சந்திரிகா குமாரதுங்க, “சகல மக்களும், அவர்களின் இனம், மதம் அரசியல் வேறுபாடுகளை மறந்து, செய்த மாபெரும் பிழையை நிவர்த்தி செய்வதற்கு பொன்னான சந்தர்ப்பம் கிடைத்ததென்று” எண்ணினார். சேதமுற்ற யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தைப் புனரமை த்துக் கொடுப்பதென்று தீர்மானித்தார்.

கட்டடத்தைப் புனரமைக்கும்போது ஆரம்பத்தில் இருந்த அதே கட்டடக்கலை வேலைப்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஒவ்வொரு சிற்ப வேலைப்பாடும் சேதமுற்ற கட்டடத்தில் சிதறிக் கிடந்தது.

அவையெல்லாவற்றையும் சேகரித்து அளந்து, பிரதி எடுத்து ஒளிப்படம் பிடித்து மிகக்கவனமாக சிதைந்துபோன கட்டடத்தில் முன்பு தோன்றிய வண்ணம் அச்சொட்டாக வடிவமைக்கப்பட்டது. திராவிடச் சிற்பக்கலையில் அனுபவமுள்ள உள்ளூர் சிற்பிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள்.

சேதமடைந்த சரஸ்வதியின் சிலையும் பூர்வமுறையில் வடித்து மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இவை இன்று நூலகத்தின் முன் பக்கத்தை அலங்கரிக்கின்றது.

2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புனரமைப்புப் பணிகள் முற்றுப்பெற்றன. இன்று இக்கட்டடத்தைப் பார்ப்பவர்கள் எவரும் வியப்பார்கள், இக்கட்டடம் எப்போதாவது எரிக்கப்பட்டதா என்று, யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் இன்று சாம்பலிலிருந்து புத்துயிர் பெற்று அறிவைத்தொடும் மக்களுக்கு ஒரு புனிதச் சின்னமாகத் திகழ்கின்றது.

1981ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட யாழ் நூலகம் பல அரசியல் சர்ச்சைகளின் பின்னர் 23-2-2004 ஆம் திகதி மீளவும் மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. ❖

முற்கூட்டி நிகழக்கூடிய இலங்கை ஜனாதிபதி தேர்தல் எமது ராஜதந்திரம் என்ன?

– சாணக்யா

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முற்கூட்டி நிகழ்த்தப்படும் சாத்தியம் தோன்றியுள்ளது. அடுத்து அமையப்போகும் ஆட்சியென்பது, தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பிரதான பாத்திரம் வகிக்கப்போகிறது. தமிழ்ப்பேசும் மக்களின் பிரதிநிதியொருவரை இலங்கை ஜனாதிபதியாக ஆக்கும் வாக்குப்பலம் எமக்கில்லை. ஏனெனில் 78வீத மான இலங்கைக் குடிமக்கள் சிங்களவரே. ஆனால், சிறுபான்மை மக்களின் கையில் மற்றொருவகை நிர்ணய சக்தி உள்ளது. அதாவது, சிங்களத் தரப்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரை வெல்ல வைப்பது என்பதை சிறுபான்மை வாக்குகள் தீர்மானிக்க முடியும். இவ்வகையில் அவர்களை எம்மில் தங்கியிருக்க வைக்க வழியுண்டு. அது எவ்வாறு என்று பார்ப்போம்.

யுத்தத்தில் வெற்றிகண்ட கையோடு 2010ல் இறுதியாக நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலும், முற்கூட்டி நடத்தப்பட்ட ஒன்றே. 2005ல் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலையடுத்து 6 வருட ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிந்து 2011லேயே இந்தத் தேர்தல் நடாத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், யுத்தத்தில் வெற்றிகொண்ட செல்வாக்கைப் பயன்படுத்தி தேர்தல் வெற்றியை உறுதிசெய்துகொள்வதற்காக அத்தேர்தல் முற்கூட்டியே வைக்கப்பட்டது. இதுபோல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் முற்கூட்டி வைத்ததுண்டு. தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்காலம் 2016 வரை நீடிக்க முடியும். இருந்தும் அதை முற்கூட்டி நடாத்த ஜனாதிபதி வட்டாரங்கள் திட்டமிடுவதாகத் தெரிய வருகிறது.

முற்கூட்டிய ஜனாதிபதித் தேர்தல் ஏன்?

இதற்குப் பிரதானமான காரணம், இலங்கையின் பாராளுமன்ற ஆட்சிக்காலம் அடுத்த வருடம் (2015) முடிவடைகிறது. அதனால் அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்த்தல் நிகழ்த்தப்பட வேண்டும். அதற்கும் ஜனாதிபதி தேர்தலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? விடயம் இதுதான். பாராளுமன்றத்தில் ஆளும் பொதுஜன முன்னணி தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உள்ளது. ஒருவேளை அடுத்த பொதுத்தேர்தலில் இந்த செல்வாக்கு வீட்சிகண்டாலோ அல்லது ஆட்சி மாற்றம் நிகழ நேர்ந்ததோ, இச்செல் வாக்கை அதையடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் பாவிக்க முடியாது.

எனவே பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னராக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, மீண்டும் அடுத்த 6ஆண்டு ஜனாதிபதி ஆட்சிக்காலத்தை உறுதிப்படுத்திக்கொள்வதே சாதுரியமானதென ஜனாதிபதி வட்டாரங்கள் எண்ணுகின்றன. அத்துடன் இவ் ஜனாதிபதித் தேர்தலில் ஈட்டிக்கொள்ளும் வெற்றி பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறும் சூழலை உருவாக்கும். இப்படி ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டி வைப்பதால் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட ஆட்சிக்காலத்தை தியாகம் செய்தாலும் அடுத்த 6 ஆண்டு ஜனாதிபதிப் பதவியை உறுதி செய்துகொள்ள முடிவது, ஜனாதிபதிக்கு மிகவும் ஆதாயமான ஒன்று.

எனவே ஜனாதிபதிப் பதவியையும், பாராளுமன்ற ஆட்சியையும் ஒருசேர உறுதிப்படுத்திக்கொள்ள



ஜனாதிபதித் தேர்தலை பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் நிகழ்த்துவதே உகந்ததெனக் கருதுகிறார்கள். அப்படி ஜனாதிபதித்தேர்தலை முற்கூட்டி நடத்துவதில் வெற்றிக்கான மேலும் பல அநுகூலங்கள் அவர்களுக்கு உண்டு.

ராஜபக்ஷவுக்கான அநுகூலங்கள்

யுத்தத்தில் வெற்றி கண்டதற்கான செல்வாக்கு ராஜபக்ஷவுக்கு சிங்கள மக்களிடையே இன்னும் மங்கவில்லை. ராஜபக்ஷ குழுமத்தின் இந்தியாவையும் சீனாவையும் ஒருசேரக் கையாளும் ராஜதந்திரம், சிங்க மக்களுக்கு இந்தியா பற்றி இருந்த அச்ச உணர்வைப் போக்கி ராஜபக்ஷவே இதற்குத் தகுந்த ஆளென்ற மாயையை உருவாக்கியுள்ளது. சிங்கள உணர்வாளர்களின் கை மேலோங்கிச் செல்ல ராஜபக்ஷ பதவியில் நீடித்திருக்க வேண்டுமென்ற கருத்து அங்கே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பாராளுமன்ற ஆட்சியில், முஸ்லிம் காங்கிரஸ், மலையகத் தமிழரின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசாங்கத்தில் கூட்டுச்சேர்ந்து உள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இரண்டும் பொதுவாகவே யுஎன்பியின் கூட்டாளிகள் தமக்கு அமைச்சுக்கள் தேவை என்ற அவசியத்தின் நிமித்தம் விருப்பமின்றிறே ராஜபக்ஷ அரசாங்கத்தில் சேர்ந்துள்ளன. இந்த அரசாங்கத்தில் அவை அதிகாரமின்றியே காலம் கடத்துகின்றன. அடுத்த பாராளுமன்றத் தேர்தலுல் அவைதனித்துச்சென்றுவிடவும் கூடும். ஆனால் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் வைத்தால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அவர்கள் வேறுவழியின்றிராஜபக்ஷவை



ஆதரிக்க வேண்டியிருக்கும்.

எதிர்க்கட்சியின் நிலை

ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடக்கூடிய மற்றொரு சம போட்டியாளர் தற்போதைய இலங்கையின் பிரசித்தமான அரசியல் பரப்பில் இல்லை. தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தல் நிகழ்ந்தால் மீண்டும் ராஜபக்ஷதான் ஜனாதிபதியாகும் சாத்தியம் அதிகம். சிங்கள மக்கள் மத்தியில் அவர் யுத்த வெற்றியில் ஈட்டிய செல்வாக்கு இன்னும் ஆட்டம் காணவில்லை. அவர்கள் மத்தியில் அவரை எதிர்க்கக்கூடிய வலுவான எதிர்க்கட்சித் தலைமை இல்லை. பல தடவை தோல்வியைத் தழுவிய ரணிலே வலுவிழந்த போட்டியாளராக அங்கு நிற்கிறார். அவரது கட்சியிலேயே அவருக்கு ஒருமித்த ஆதரவு இல்லை. அவருக்கு மாற்றாக, பிரேமதாஸாவின் மகன் சஜித் பிரேமதாஸாவை முன்னிறுத்தினாலும், பிரேமதாஸாவின் செல்வாக்கு அவருக்கு உருவாகப் போவதில்லை. அவரது தொகுதிக்கான செல்வாக்கை மட்டுமே கொண்ட அவர் நாட்டு மக்களின் பொது ஆதரவு கொண்டவராக இல்லை.

பொன்சேகா போட்டியிட்டால்....?

மீண்டும் சரத் பொன்சேகாவை நிறுத்துவதும் அர்த்தமற்ற பழைய பரிசோதனைதான். முன்னைய செல்வாக்கைக்கூட இழந்து ஜேவீபியின் பிரதிநிதி யென்றளவுக்கு சுருங்கிப்போன அவர் ஒரு வெற்று வேட்டு என்பதுடன், அவர் என்ன பெரிய உத்தமரா, எமக்குத் தீர்வு தர? யுத்த அழிவுகளை மேற்கொண்ட இராணுவத்தின் தளபதியான அவரை ஆதரிக்கும்படி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களைக் கோரிய ரிஎன்ஏயின் தோல்விகண்ட ராஜதந்திரம் எதிரியின் எதிரி நண்பன் என்று கூறிக்கொண்டு அடுப்பிலிருந்து நெருப்பில் குதிக்கும்படி கேட்டுக்கொண்ட தாகும். அதை இம்முறை நாம் சிந்திக்கவும் முடியாது.

ஜேவிபியின் செல்வாக்கு



ஒருமுறையல்ல, இருமுறை புரட்சி நடத்த முயன்று பலத்த அடிவாங்கி பல்லாயிரம் இளைஞர்களையும், கட்சித் தலைமையையும் பறிகொடுத்த ஜேவிபி, தன்னை சுதாகரித்துக் கொண்டு ஜனநாயக அரசியலுக்கு வந்து, எதிர்பாராத அளவு பலம் பெற்று வளர்ச்சி கண்டு வந்தது. ஆனால், இதே ஜனநாயக அரசியலின் சுடாட்டங்களுக்குள் சிக்கி, வலுவிழந்து, பிளவுற்று, அடுத்து எவ்வழி நகர்வதென்ற திசையற்ற நிலையில் நின்று, இனவாதத்தை தேசப்பற்றென்ற முலாமாகப் பூசிக்கொண்டு தளைத்தெழ முயற்சி செய்கிறது. வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையைத் துண்டாடியதன் மூலமும், மாகாண சபைக்கான பொலீஸ், மற்றும் நில உரிமைகளைக் கடுமையாக எதிர்த்து நிற்பதன் மூலமும், இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகளை வலியுறுத்தும் நாடுகளைக் கர்ண கடூரமாகக் கண்டிப்பதன் மூலமும் தனது இனவாதச் சாயலை வெளிக்காட்டி வருகின்ற அது, ராஜபக்ஷவுக்கு மாற்றாகக் கருதக்கூடிய ஒன்றேயல்ல. அத்தோடு வெற்றி வாய்ப்பு இல்லாத அது, தனித்துப் போட்டியிட முனையப்போவதில்லை. மாறாக, தனக்கு வாய்ப்பான எந்தத் தரப்பையாவது பலப்படுத்தவே அது முனையும்.

இடதுசாரிகளின் பலம்...?

ஓரளவு மனசாட்சியுடன் நடக்கக்கூடிய இடதுசாரித் தலைமைகளிலும் யாரும் பெயர் சொல்லக்கூடியவாறு இல்லை. இடதுசாரிக் கட்சிகள் பலவும் இன்று அரசாங்கத்தின் தொங்குதசைகளாகிவிட்டன. இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்தில் வலுப்பெற்றிருந்த இடதுசாரி இயக்கமும் அதன் ஆதார மூலமான தொழிற்சங்க இயக்கமும் ஆட்சியைப் பிடித்துவிடுவார்களோ என்ற அளவு வலுப்பெற்றிருந்தன. அதை முறியடிக்கும் வகையில் தான் பெரும் தொழிலாளர் பலத்தைக் கொண்டிருந்த மலையகத் தமிழருடைய வாக்குரிமை, பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்டன. அதன்பின்னரும் இடதுசாரிகளின் கூட்டணியோடுதான் ஆட்சியமைக்கலாமென்ற நிலைமை நிலவியது. ஆனால் இப்போதோ, அவர்கள் வலுவிழந்து, தம்மைத் தக்கவைத்துக்கொள்ள அரசாங்கத்தின் தொங்கு தசைகளாக ஒட்டிக்கொள்ள வேண்டிய நிலமைக்கு உள்ளாகிவிட்டன. இதற்காகவே அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளைக்கூட கண்டுகொள்ளாது இருக்க வேண்டி இருப்பதுடன், அதனைச் செயற்படுத்த வழிகோலும் அவரகாலச் சட்டம், வரவுசெலவுத் திட்டம் போன்றவற்றிற்கெல்லாம் தாம் வரித்துக்கொண்ட கொள்கைகளையும் மீறி ஆதரவளித்துச் செல்கின்றன. இதனால் தனித்துவமிழந்துவிட்ட இவர்கள் மத்தியில் தேசத்தின் தலைமையாகப் பிரகாசிக்கக்கூடிய எவரும் இனம்காணும் வகையில் இல்லை.

சந்திரிகா மீண்டும் வந்தால்...

இன்நிலையில், முயற்சிக்கக்கூடிய ஒரு ராஜதந்திரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை பொதுவேட்பாளராக நிறுத்துவது என்பதாகும். அவரது கடந்தகால 10 வருட இருபோக ஆட்சிக்காலத்தில் அவரால் ஒரு சில வரைவுகள், எத்தனங்கள் என்ற இனப்பிரச்சினையின் தீர்வுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் எதையுமே சாதிக்க முடியவில்லை. அதுவும் அவர் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி ஒரு கண்ணைப் பறிகொடுத்ததன் பின்னால், அப்படியே எல்லா முயற்சிகளையும் தொப்பெனக் கைவிட்டுவிட்டு மெத்தனப்போக்கில் காலம் கடத்தியதையே காண முடிந்தது. எனினும்



"உள்ளதற்குள் வள்ளீசு" என்பார்களே, அதுபோல இன்று வெற்றி வாய்ப்பை கொஞ்சமேனும் கொண்டிருக்கக்கூடிய, அதேவேளை உலக நாடுகளின் சொல்கேட்டு நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இணங்கவும் கூடியவராக தெரியவர் அவராகத்தான் தென்படுகிறது.

அவரை பொதுவேட்பாளராக முன்னிறுத்தும்போது, இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் அதிருப்தி கொண்ட அக்கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களே பொது வேட்பாளருக்கு ஆதரவாகத்த திரும்பக்கூடும். பொதுஜன ஐக்கிய முன்னணியின் வாக்குவங்கியை உடைக்கக்கூடியவரும் அவரே. அவரது பண்டாரநாயக்கா - சீறீமாவோ - விஜய குமாரதுங்க - என்ற பாரம்பரிய அரசியல் செல்வாக்கும் அவருக்கு உறுதுணையாயிருக்கும். போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் அமோக வெற்றியீட்டிய செல் வாக்கை மீண்டும் திரட்டிக்கொள்வது அவருக்கு சுலப மாயிருக்கும். ஏற்கெனவே இருமுறை ஜனாதிபதியாக இருந்த அனுபவமும் அதனால் விளைந்த நல்லுறவுகளும் துணைநிற்கும். அத்தோடு அவருடன் உறவு பாராட்டிய இடதுசாரிக் கட்சிகளும் அவர் பக்கம் சரிய வாய்ப்புண்டு. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இத்தலைமைகள் வெளிப்படையாக இவருக்கு ஆதரவளிக்காவிட்டால்கூட, அவை, ராஜபக்ஷவுக்கு உத்வேகமாக ஆதரவளிப்பதற்கு பின்னடிப்பதும் அவர்களது ஆதரவாளர்கள் தன்னிச்சை யாக இவருக்கு வாக்களிப்பதும் சாத்தியமாகும். மேலும், இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதரவையும் பெறக்கூடியவராக அவர் இருப்பார். இவற்றுடன் எதிர்க்கட்சியின் வாக்குகளும், தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை மக்களின் வாக்குகளும் இவருக்குச் சேரும்போது அவரால் "சிங்கள மக்களின் யுத்த நாயகன்" என்ற ராஜபக்ஷேவின் செல்வாக்கை எதிர்கொண்டு முறியடிக்க முடியும்.


ஆனால் கேள்வி யாதெனில், அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வருவரா என்பதே. அப்படி முன்வராத பட்சத்தில் அடுத்துள்ள வழியென்ன?

பேராசிரியரின் யோசனை

பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை முன்னாள் பேராசிரியரான கலாநிதி வெள்ளைத்தம்பி அமிர்டின் மாற்று யோசனையொன்றை இப்படி முன் வைக்கிறார். இதைப் புரிந்துகொள்வதற்கு நாம் ஜனாதிபதி தேர்தல் முறைமையைச் சற்று விளங்கியிருக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் ஒரு வாக்காளர் தனது முதலாவது தெரிவு இரண்டாவது தெரிவு, மூன்றாவது தெரிவு என மூன்று வேட்பாளர்களுக்கு ஒரே தடவையில் வாக்களிககலாம். முதலில் வாக்காளர்களின் முதலாவது தெரிவு மட்டுமே எண்ணப்படும். அதில் யாராவது 50வீத வாக்குகளுக்கு மேல் பெற்றுக்கொண்டால் அவரே ஜனாதிபதியாவார். எவரும் 50 வீதத்திற்கு மேல் பெறவில்லையானால், முன்நிலையிலிருக்கும் முதலிரு வேட்பாளர்கள் தவிர்த்த ஏனய வேட்பாளர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவர். நீக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் முதலிரு வேட்பாளர்களுக்கான மொத்த விருப்பு வாக்கு எண்ணப்பட்டு அவை, அவர்களது முன்னைய வாக்குகளின் எண்ணிக்கையுடன் சேர்க்கப்பட்டு, யார் அதிகம் வாக்குகளைப் பெற்றிருக்கிறார்களோ அவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார்.

ஆனால், இதைவிட இன்னொரு வழியும் உள்ளது. அதாவது, நீக்கப்படும் வேட்பாளர்கள் தமது ஆதரவை யாரேனுமொரு வேட்பாளருக்கு வழங்க முன்வந்தால், அவர்களது வாக்குகளும் வழங்கப்பட்ட வேட்பாளரது



வாக்குகளுடன் சேர்க்கப்பட்டு அவ் எண்ணிக்கை 50 வீதத்திலும் அதிகமாக அமைந்தால், இரண்டாம் சுற்றுக் கணக்கெடுப்பை நிகழ்த்தாமலே அவரை ஜனாதிபதியாக அறிவிக்கலாம். இதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதே இங்கு விடயம்.

இப்போது பேராசிரியர் முன்வைக்கும் திட்டத்தின் முக்கியமான அம்சம் எவரும் முதல் தெரிவிலேயே 50வீத வாக்குப்பெற்று வெற்றியடைவதைத் தடுப்பதே. பெரும்பான்மைக் கட்சிகள் எதிரும் புதிருமாக ஜனாதிபதி தேர்தலில் நிற்கும் தறுவாயில், சிறுபான்மைக் கட்சிகள் இணைந்து தமக்கான ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தி, சிறுபான்மையினரின் விகிதாசாரத்துக்குரிய வாக்குகளை - குறைந்தபட்சம் 15 சதவீத வாக்குகளை - தமது வேட்பாளருக்கு விழவைக்க முடியுமானால் இது சாத்தியமெனக் கூறுகிறார் பேராசிரியர். இதனால், அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் மீதியுள்ள 85 வீதத்துக்கும் குறைந்த வாக்குகளையே பெரும்பாண்மைக் கட்சி வேட்பாளர்கள் தம்மிடையே பகிர வேண்டியிருப்பதால், எவருக்கும் 50வீதத்துக்கு மே ற்பட்ட வாக்குகள் கிடைப்பது சாத்தியமற்றுப் போவதற்கே வாய்ப்பு அதிகம். அதனால் இரண்டாம் சுற்று வாக்குக் கணக்கெடுப்பிற்கு செல்ல வேண்டிய நிலை தோன்றும். இப்போது சிறுபாண்மைக் கட்சிகளின் வேட்பாளர் யாருக்கு ஆதரவளிக்கிறாரோ, அவர் வெற்றிபெறும் நிலைமை தோன்றும். அதாவது எமது கையில் துருப்புச் சீட்டு கிடைக்கும்!

ஒரு உதாரணத்துக்கு ராஜபக்ஷவுக்கு 49வீத வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிடும் பெரும்பான்மை இனத்து வேட்பாளருக்கு 36வீத வாக்குகளும் எம் சிறுபாண்மைக் கட்சிகளின் வேட்பாளருக்கு 15வீத வாக்குகளும் விழுகின்றதென வைத்துக்கொள்வோம். முதலாவது கணக்கெடுப்பின்படி யாரும் ஜனாதிபதியாக முடியாது. ஏனெனில் எவருமே 50 வீதத்திற்கு மேல் எடுக்கவில்லை. இப்போது சிறுபான்மைக் கட்சி வேட்பாளர் யாரை ஆதரிக்கிறாரோ அவர் 50 வீதத்துக்கும் கூடுதலான வாக்கினைப் பெற்று ஜனாதிபதியாகலாம். இதன் மூலம் குறைந்த 36 வீத வாக்குப்பெற வேட்பாளரைக்கூட 49வீத அதிக வாக்குப்பெற்ற வாக்காளரையும் தாண்டி ஜனாதிபதியாக்கக்கூடிய துருப்புச் சீட்டு எம்வசம் இருக்கும். இச்சீட்டுக்கு அத்தருணத்தில் மதிப்பு



மிக மிக அதிகம். சிறுபான்மையினருடைய அபிலாஷைகளை முன்வைத்து பேரம் பேசக்கூடிய பலத்தை இது வழங்கும். இது எப்போது சாத்தியமென்றால், இரு பெரும்பான்மையின வேட்பாளர்கள் மோதும் போது சிறுபான்மை யின் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தும்போதுதான்.

சுமத்திரன் யோசனை பலனளிக்குமா?

மாறாக தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் முன்மொழி வதுபோல், எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகவே வடமாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரனை நிறுத்துவதாலல்ல, தமிழரை ஜனாபதயாக்க தமிழ் வாக்குப்பலம் அறவே போதாது. அத்தோடு சிங்கள வாக்குகள் நிட்சயம் விழப்போவதுமில்லை. எனவே வெற்றியடையப்போவதில்லை. ஆனால், இது தமிழரின் ஆதரவற்ற சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கே மறைமுகமாக உதவும். எப்படியென்றால், தமிழ் வேட்பாளருக்கு எதிராகத் தூண்டப்படும் சிங்கள உணர்வு. அவர் பக்கம் குவியும். அதேவேளை அவரை எதிர்த்துப் போட்டியிடும் சிங்கள வேட்பாளருக்கு கிடைக்கக்கூடிய தமிழ் வாக்குகள் தமிழ் வேட்பாளருக்கு சிங்கள வேட்பாளருக்கு கிடைக்கக்கூடிய தமிழ் வாக்குகள் பயனற்றதாகிவிடும். இறுதியில் இது ராஜபக்ஷ வெற்றிபெற நாமே வழிவகுத்துக் கொடுக்கும் மார்க்கம ாக அமைந்துவிடும்.

எமது ராஜதந்திரம் எவ்வாறு அமையலாமென்பது பற்றிய அரசியல் நிபுணர்களின் ஏனய கருத்துக்களை முகவரி ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறது.

❖

தமிழும் தொழில்நுட்பமும்

—விஞ்ஞானி டில்லிபாபு

தமிழுக்கும் தொழில்நுட்பத்திற்குமான உறவு நீண்ட நெடியது.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

பெண்பாற்புலவராக அறியப்படுகிறபொன்முடியார் எழுதிய பாடல் இது. பிள்ளையைப் பெற்றெடுத்தல் என் கடன், சான்றோனாக்குதல் தந்தையின் கடன் என ஒவ்வொருவரின் கடமையையும் பட்டியலிடுகிறாள் பண்டைய தமிழ்த்தாய்.

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;

என்கிற அடியில் வேலின் தொழில்நுட்பமும் பேசப்பட்டிருக்கிறது. வடித்து என்பது Forging என்று அறியப்படுகிற உருவாக்கு முறை. Forging என்ற உருவாக்கு முறையைப் பற்றிய ஆங்கிலக் குறிப்புகள் 12 ஆம் நூற்றாண்டில்தான் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழில் இத்தொழில்நுட்பம் ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது.

கூடங்குளம் அணுமின்நிலைய விவகாரத்திற்குப் பிறகு அணுப்பிளவு (Nuclear Fission) தொழில்நுட்பத்தைப் பற்றிய விவாதங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கின்றன. Nuclear Fission என்ற அணுப்பிளவை 1938 ஆம் ஆண்டு ஓட்டோ ஹான் மற்றும் ஃபிரிட்ஸ் ஸ்ட்ராஸ்மேன் ஆகியோர் கண்டறிந்தனர். ஆக, 20 ஆம் நூற்றாண்டில் தான் அணுப்பிளவு உலகறியப்பட்டது.

கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்த தாகக் கருதப்படும் ஔவையார் திருக்குறளை இவ்வாறாக விளிக்கிறார்.

'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.'

உலகம் அறிவதற்கு 18 நூற்றாண்டுகளுக்கு முன்பே அணுப்பிளவைப் பதிவு செய்த மொழி தமிழ் மொழி.

"தமிழ்த்திரைப்படங்களைப் பார்ப்பதும், செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளில் குடும்பமாக, அர்த்த மற்ற நகைச்சுவைக் காட்சிகளைக் கண்டு ரசிப்பதும், தமிழுக்குச் செய்கின்ற சேவையாகக் கருக வேண்டாம்."

இன்னொரு செய்தி,

முன்னேறிய மேற்கத்திய நாடுகளின் ஆடவர்களால் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் பேசப்பட்ட தொழில்நுட்பங்கள் சங்க காலப் பெண்பாற் கவிஞர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது தமிழ்ச் சமூகத்தின் தொழில் நுட்ப ஆளுமைக்கும், பண்டைய மகளிரின் அறிவு மேன்மைக்கும் சான்றாகும்.

உலகின் பிற மொழிகளைப் பின்னுக்குத் தள்ளிய தொழில்நுட்பம் பொதிந்த நம் தமிழின் இன்றைய நிலையென்ன?

ரஷ்ய, ஜெர்மானிய, சீன மற்றும் ஜப்பானிய மொழிகளோடு ஒப்பிட்டால், தமிழில் வெளிவந்திருக்கின்ற தொழில்நுட்பப் படைப்புகள் மிகக்குறைவு.

பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட செந்தமிழ், தொழில்நுட்பப் பதிவுகளைப் பொறுத்த வரையில் வறுமைக் கோட்டுக்குக் கீழேதான் வாடி நிற்கிறது.

அழகியலையும், வாழ்வியலையும் மட்டுமே பேசிக் கொண்டிருப்பது ஒரு ஆழமான மொழிக்கு அழகல்ல. உலகத்தமிழர்களின் முன் உட்கார்ந்திருக்கிற மிக முக்கிய கேள்விகள் இரண்டு.

ஒன்று, தமிழை அடுத்த தளத்திற்குக் கொண்டு செல்வது எப்படி? இது மொழி சார்ந்தது. மொழியை முன்னேற்றுகின்ற முயற்சி.

இரண்டாவது, தமிழை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டுசெல்வது எப்படி? இது மொழியின் பயன்பாடு அல்லது உபயோகம் சார்ந்தது.

முதல் கேள்விக்கு வருவோம். தமிழை அடுத்த தளத்திற்குக் கொண்டுசெல்வது எப்படி?

விமான எஞ்சினை ஆராய்ச்சி செய்யும் எங்கள் ஆய்வுக் கூடத்தின் தொழில்நுட்ப நூலகத்தில் ஒரு தமிழ் நூலுமில்லை. ஒரு குறிப்பிட்ட விமான தொழில்நுட்பத்தகவலைத் தேடிய போது, அது குறித்த புத்தகத்தைக் கண்டுபிடித்தோம். ஆனால் அது ரஷ்ய மொழியில் எழுதப்பட்ட புத்தகம், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பயன்படுத்தினோம்.

இதுபோல தமிழில் உயர் தொழிநுட்ப நூல்கள் எழுதப்பட வேண்டும். உலக நாடுகள் தமிழ் நூல்களைத் தேடிப் பிடித்து மொழிபெயர்க்கும் நிலை வேண்டும். இதுவே தமிழ்மொழியின் அடுத்த அத்தியாயம்.

இயல், இசை, நாடகத்தைத் தொடர்ந்து நான்காம் தமிழாக தொழில்நுட்பத்தமிழ் துவங்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

தமிழின் எதிர்காலம் தமிழ் சாராத துறைகளைச் சார்ந்த தமிழர்களிடமிருக்கிறது.

விண்வெளி நிபுணர்களும், கண்வலி மருத்துவர்களும் தங்கள் துறை சார்ந்த தகவல்களைத் தமிழில் எழுத வேண்டும். மென்பொருள் பொறிஞர்களும், திண்பொருள் வல்லுநர் களும் தங்களின் தொழில் நுட்பங்களைத் தமிழில் பதிவு செய்ய வேண்டும்.

இரு தளங்களில் இந்நிகழ்வுகளை எதிர் பார்க்கலாம். அமைப்பு சார்ந்த பதிவுகள் மற்றும் அமைப்பு சாராத பதிவுகள்.

அரசின் ஆதரவோடு பல்கலைக்கழகங்களும், பிற அமைப்புகளும், தொழில்நுட்பத் தமிழ்த்துறையை உருவாக்கி, தமிழில் தொழில்நுட்ப நூல்களையும், கட்டுரைகளையும் தகுந்த படைப்பாளிகளைக் கொண்டு எழுதி வெளியிட வேண்டும்.

இரண்டாவது, உலகின் பல்வேறு பகுதிகளில், பல்

வேறு துறைகளில் பணிபுரிகிற தமிழர்கள், தத்தமது துறை சார்ந்த தகவல்களைத் தமிழில் பல்வேறு ஊடகங்களில் பதிவு செய்யத் துவங்க வேண்டும்.

இப்பணியில் தமிழ்த்துறையினரின் பங்களிப்பு என்ன? இவ்விரு முயற்சிகளுக்கும் தோள் கொடுத்து புதிய கலைச்சொற்களை ஆக்கித் தந்து, பதிவுகளைச் செப்பனிடும் அரும்பணியைத் தமிழறிஞர்களும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் செய்ய வேண்டும்.

தமிழை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்கின்ற கனமான பணி படைப்பாளிகளிடமும், பெற்றோரிடமும், பிள்ளைகளிடமும் இருக்கிறது.

படைப்பாளிகள், மாறி வருகின்ற அறிவியல், பொருளாதார, சமுதாய மாற்றங்களை மனதில் கொண்டு, கால மாற்றத்திற்கேற்ற ஊடக வாகனங்களில் தமிழை வாசகனுக்கு ஊட்டி விட வேண்டும்.

ஐபாட் தலைமுறைக்கு ஐயப்பாடு இல்லாமல் தமிழைக் கொண்டு சேர்க்கும் புதிய தலைமுறை படைப்பாளிகள் புறப்பட்டு வர வேண்டும்.

பெற்றோர்களுக்குச் சில வார்த்தைகள்:

தமிழ்த்திரைப்படங்களைப் பார்ப்பதும், செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளில் குடும்பமாக, அர்த்தமற்ற நகைச்சுவைக் காட்சிகளைக் கண்டு இரசிப்பதையும், தமிழுக்குச் செய்கின்ற சேவையாகக் கருத வேண்டாம்.

அழகியபிள்ளைகளை உலகுக்கு அறிமுகம் செய்த நீங்கள், அன்னைத் தமிழை உங்கள் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து வையுங்கள்.

தூய தமிழில் பேசப் பிள்ளைகளைப் பழக்குங்கள். தரமான தமிழ்ப் படைப்புகளையும், படைப்பாளிகளையும், அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, வாசிக்கும் பழக்கத்தைச் சுவாசிக்கும் வழக்கமாக மாற்றுங்கள்.

மாணவர்களுக்குச் சில வார்த்தைகள்:

தமிழ் கூறும் நல்லுலகும், தமிழைக் கூறுபோடும் நல்லுலகும் சமவிகிதத்தில் சேர்ந்தியங்கும் இருபத்தியோராம் நூற்றாண்டின் தமிழ்ப் பூக்களே!

பல கோடி ஆண்டுகள் பழமைவாய்ந்த சூரியனையும், சந்திரனையும், இது என் வீட்டுச் சூரியன், என் குடும்ப நிலவு என நம்மால் பெருமை பாராட்ட இயலாது. இவை உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. ஆனால் தொன்மையும், சிறப்பும் வாய்ந்த தமிழை 'என் தமிழ்' என மார் தட்ட நமக்கு மட்டுமே உரிமை.

இது பாரதி பாடிய மொழி, வள்ளுவன் பேசிய மொழி... தமிழர்களின் தேசிய மொழி. எந்தப் படிப்பு படித்தாலும், தூய தமிழ் பேசுவதில் பெருமைப்படுங்கள்.

மாதம் ஒரு தமிழ் நூலைக் கட்டாயம் வாசியுங்கள்.

இன்னொரு மகாத்மாவாக, அக்னி சிறகுகள் சூடிய அதிசய மனிதராக வலம் வரும் பாரத ரத்னா, டாக்டர். அப்துல்கலாம் அவர்கள் தமிழ் வழியில் படித்தவர்.

ஒலியைவிட ஐந்துமடங்கு வேகமாகப்பறக்கக்கூடிய பிரமோஸ் ஏவுகணையை உருவாக்கிய பத்மஸ்ரீ டாக்டர். சிவதாணு பிள்ளை அவர்கள் தமிழ் வழியில் படித்தவர்.

'எந்திரன்' படத்திற்குச் சீட்டு வாங்க முண்டியடித்தது ஒரு கூட்டம். எந்திரனுக்கு வரிசையில் நின்ற மனிதர்களுக்கு மத்தியில் சந்திரனுக்கு ஓடம் விட்ட டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை தமிழ் வழியில் படித்தவர்.

ஆக, தமிழ் வழியில் படித்தால் வாழ்வில் முன்னேற முடியாது என்பது வெறும் மாயை.

தமிழர்களின் கேள்வி ஞானமும், அறிவுத் திறனும் உலக அரங்கில்அங்கீகரிக்கப்பட்டிருக் கிறது.

இந்தியாவைச் சேர்ந்த அல்லது இந்திய வம்சாவளியைச் சார்ந்த 9 பேர் இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளனர். இந்த 9 பேரில் அறிவியல் துறையில் நோபல் பரிசு பெற்றவர்கள் 5 பேர். இந்த ஐவரில் மூவர் தமிழர்.

சி.வி. ராமன், சுப்ரமணியம் சந்திரசேகர், வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன்.

அறிவார்ந்த இத்தமிழ்க் குடும்பத்தின் நீட்சிதான் நீங்களும் நானும்.

உயிரான தமிழிருக்கிறது. செழித்த பாரம்பரியம் இருக்கிறது, சாதித்த தமிழர்களின் சரித்திரமிருக்கிறது. வேறென்ன வேண்டும்?


வாருங்கள் தமிழை அடுத்த தளத்திற்கும், அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்வோம்.

சிம்புட் பறவையே சிறகை விரி, எழு
சிங்க இளைஞனே திருப்பு முகம், திற விழி
கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய் விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென்பாரெனில்
வழி வழி வந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற்றெங்கே? விழிப்புற்றெழுக!

(பெங்களூரு தமிழ்ச்சங்க அரங்கில் 08.01.12 அன்று நிகழ்ந்த கருத்தரங்கில் ஆற்றிய உரை)

ஈழத்துக் குறும்படங்கள்

—கோபி



தி வேக்கப்

பாரதி தயாரிப்பு தயாரித்த 2வது குறும்படம் தி வேக்கப் இது காதல் தோல்வியில் முடிவு தற்கொலை தானா என்றும் கருத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்டது. இலங்கையை சேர்ந்த அபயன் என்பவர் இயக்கி நடித்துள்ளார்.

விளையாட்டுத்தனமாக இருக்கின்ற ஒரு காதலனும் Sesitive ஆக உள்ள ஒரு காதலிக்கும் இடையிலான ஒரு காதல் காதலன் விழையாட்டுத்தனமாக இருக்கையில் விரக்தி அடைந்த காதலி கோபத்தில் தற்கொலை செய்து கொள்கிறாள்.

தன்னுடைய விளையாட்டுத்தனம் தான் அந்த தப்பான முடிவுக்கு காரணம் என்று எண்ணி விரக்தியில் தானும் தற்கொலை செய்ய பல தடவை முயற்சிக்கிறான். ஆனால் இறந்த காதலியின் அண்ணா இவரை பழிவாங்க ஒருபுறமாக இவர பின்தொடர்கிறார். ஒரு நிலையில் தன்னுடைய தப்பை உணர்ந்து தானும் தற்கொலை செய்ய முயற்சிக்கிறார் என்று எண்ணி கொலை செய்ய வந்த அண்ணன் மனம் மாறி காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு கடைசியல் அவளது குற்றவுணர்வைப் போக்கி அறிவுற கூறி செல்கிறார். நடிப்பு இயல்பாக உள்ளது. ஒளிப்பதிவு நன்று. திரைக்கதை நல்ல முயற்சி இன்னும் சற்று தெளிவுபடுத்தி இருக்கலாம். கதை வழமையானது. பின்னணி இசை நன்றாக உள்ளது. மீண்டும் பல வித்தியாசமான கதைகளுடன் சந்திக்க வாழ்த்துக்கள்.

கராளம்

ஈழ தமிழ் கலைஞர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட குறும்படம் 'கராளம்'.

இக்குறும்படம் இளைஞர்களிடையில் பரவி வருகின்ற போதை பழக்கங்களை காட்டுகின்ற ஒரு குறும்படமாக Faculty of Management and Finance ஆல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை இயக்கி உள்ளார் மகில்.



படிப்பதற்காக ஊரில் இருந்து நண்பனுடைய Roomல் தங்குவதற்காக ஒரு சாதுவாண் புத்தக பூச்சி போன் ஒருவன் வருகிறான் நண்பர்கள் காலி மது அருந்தி இவளையும் அருந்தும ாறு கேட்கையில் இவனுக்கு வேண்டாம் என இவன் நண்பன் சொல்ல அவர்களும் வற்புறுத்துவதை விடுகின்றனர் இவன் படிப்பு முடிந்ததும் பகுதி வேலையாக Petrol Shedல் வேலை பார்க்கிறாள். நண்பன் ஒருவன் அந்த படிக்கும் நண்பன் மீது அவதானம் செலுத்த சொல்ல இவனும் அவளை நோக்கமிடுகிறார் அப்பொழுது அவர் போதை மயக்கத்தின் உச்சியில் இருப்பதை புரிந்து கொள்கிறார்.

Petrol, Marker, Paint போன்றவற்றில் வாசனைகளுக்கெல் லாம் இவன் போதையாகி அடிமையாகி இருப்பது தெரிய வருகிறது. நண்பர் தடுத்ததன் பிற்பாடு அவன் தன்னை கட்டுப்படுத்த முடியாது கஸ்ட்ப்படுகிறான்.

இதற்கிடையில் நண்பன் உளநல வாத்தியாரின் ஆலோசனைய நாடுகிறான் அவர் உச்சக்கட்ட தருணத்தில் ஏதாவது இவ்வாறான போதை ஏற்பட்டும் பொருட்களை குடித்து விடுவான் என எச்சரிக்கிறார். இறுதியில் கதவிற்கு அடிக்க வைத்திருந்த

செக்மேட்



பாலுமகேந்திரா சினிமா பட்டறை மூலம் ஜனகன் சுதாகரன் வழங்கும் இந்திரமட்டம் ஓரளவுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதை கோவத்தன் எழுதி இயக்கி உள்ளார். கோவத்தன் இலங்கையை சேர்ந்தவர் சில குறும்படங்களை இயக்கி நடித்தும் உள்ளார் திறமை மிக்கவர். இந்த செக் மேட் திரைப்படத்தை பொறுத்தவரை நல்ல பொதுவகான திரைக்கதை நன்றாக உள்ளது. நடிப்பது யதார்த்தமாக உள்ளது. ஆங்காங்கே டிவி சீரியல் தன்மை கொண்டு இருக்கின்றது. பழைய சினிம ா பாணியில் வருவது போன்று சில வழமையாக திரைக்கதை முடிச்சுககள் போடப்பட்டுள்ளது. உதாரணமாக சட்ட பையில் கடிதம் இருப்பதும் அதைத் துவைக்க போடும்போது மாணவி தெரிந்து கொள்முதல் போன்றவை.

ஒரு பழைய தம்பதியர் குழந்தை இல்லாமல் வாழ்கின்றார். ஆனால் கணவன் கள்ளத்தனமாக ஒரு காதலியை வைத்திருப்பதாகவும் அதனால பலமுறை வேறு பலரால் அவரின் மனைவி அறிந்து கொள்கிறார். அதனால் மனைவியை பற்றி தப்பாக வதந்தி வருவது போன்று அவரே ஒருவரை வைத்து கடிதம் எழுதி அது மனைவி கண்ணில் படுவது போன்று செய்கிறாய் அவருடைய கள்ளக்காதலியின் முன்னாள் காதலன் இவ்வாறு இவரின் தப்புகள் வெளிப்படுத்தும் வேலைகளை செய்கிறார். இறுதியில் இவரின் நாடகம் அம்பலமாகிறது இதுதான் கதை. கதை கரு பழையதாக உள்ளது நடிப்பு பாராட்டத்தக்கது.

மீண்டும் கோவர்த்தனின் வித்தியாசமான முயற்சிகளுக்கு வாழ்த்துக்கள்.



இலங்கையில் சினிமா – ஓர் அறிமுகம்

- ஈழவாணி

இலங்கைக்கான சினிமா என்று நோக்கினால் இரண்டு வகையில் பார்க்க வேண்டும், தமிழ் சினிமா. சிங்கள சினிமா இலங்கையின் தமிழ் சினிமாவை விட ஆரோக்கியமாகவும் ஜனரஞ்சகரமானவையாகவுமே இருந்திருக்கின்றன.

இலங்கையின் சிங்கள சினிமாவை நோக்கினால் அதில் மிகப்பிரபலமாக இருந்தவர்களுள் மிக முக்கிய மான பலர் தமிழர்களாகவே இருந்திருக்கிறார்கள், சிங்கள சினிமாவிற்காக ஒத்துளைத்த பாடுபட்ட இம்மனிதர்கள் இலங்கைக்கான தமிழ் சினிமாவை ஆரம்பிக்கவில்லை, அதைப் பற்றிய கவனமும் செலுத்தவில்லை. இந்தியத் தமிழ் படங்களை இறக்குமதி செய்து அதை வியாபாரம் செய்ததன்றி நமது சினிமாவை உருவாக்குவதிலேயோ அல்லது அதற்கு ஆதரவு கொடுப்பதிலேயோ அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை.

மாதன் கம்பெனி 1913இல் இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து. இக்கம்பெனி சில திரையரங்குகளை நிர்மாணித்ததுடன், இங்கு திரைப்பட பிரக்ஞையை ஜனரஞ்சகப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. பார்ஸி தூண்டல் கொண்ட நூர்தி நாடகங்களை பார்ப்பதற்கு ஆரம்பத்தில் திரண்டு வந்த ரசிகர்கள், பாரிய உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருந்த திரைப்படங்களுக்கு ஆதரவளிக்கத் தொடங்கினர். அப்பொழுது டவர்ஹோல் அரங்கின் தலைமைப்பொறுப்பில் இருந்த ஜீ.டி. ஹென்ட்ரிக் செனவிரத்னவே திரைப்படத் துறையில் பிரவேசித்த முதல் சிங்கள வணிகராவார். அவர் மாதன் கம்பெனிக்கு ஊடாக தனது படங்களைப் பெற்று உள்ளூர் திரையரங்குகளில் திரையிட்டார். அவருடைய காலத்தின் போது, மாதன் கம்பெனிக்கு ஊடாகப் பெறப்பட்ட இந்தியப் படங்கள் மேலைத்தேச படங்களைப் பார்க்கிலும் பெருமளவுக்கு ஜனரஞ்சக நிலையை கொடுத்தன இதன் விளைவாக மாதன் கம்பெனி அதன் ஆதாயங்களைப் பெருக்கி, இலங்கையில் காலூன்றிக் கொள்ள முடிந்தது. உள்நாட்டு தொழில் முயற்சியாளராக சித்தம்பலம் ஆபிரகாம் கார்டினரின் தலையீட்டின் பின்னரேயே இந்த ஏகபோக நிலை முறியடிக்கப்பட்டது. திரைப்படத்துறையில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்த அவர் தனது பல சகாக்களின் முனைப்பான உதவியுடன் 1928இல் சிலோன் தியேட்டரில் கம்பெனியை ஸ்தாபித்தார். உயர் அந்தஸ்தில் இருந்து வந்த பல நபர்கள் பல்வேறு காரணங்களினாலும் கார்டினரின் முயறிச்சிகளில் இணைந்து கொள்வதில் அக்கறை காட்டினர். மாதன் கம்பெனியின் ஆதிக்கத்துக்கு எதிரான சவாலும், நவீன கேளிக்கை வடிவமொன்றைவழங்கக்கூடிய திரைப்படக் கைத் தொழிலொன்றை இலங்கையில் உருவாக்குவதற்கு விருப்பும் அவர்களுடைய கம்பெனிக்கும் இடையில் கடுமையான போட்டி தோன்றியது.



சிங்கள இயக்குநர் மேதை லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்

1929இ இலங்கையில் முதலாவது பேசும் படம் திரையிடப்பட்டது. மெலடி ஒப் லவ் என்ற இந்தப்படத்தை திரையிடுவதற்கு மாதன் கம்பெனியே ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இது உள்ளூர் ரசிகர்கள் மீது முக்கியமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.ஏனெனில், அவர்கள் முதல் தடவையாக திரையில் கட்புல காட்சியையும் ஒலியையும் ஒன்று சேர ரசித்து தயாரித்தது என்பதனை இங்கு நினைவுபடுத்துவது சுவாரஸ்யமானதாகும். அது அலம் ஆரா என்ற இனிய இசைப் படமாகும். இலங்கையில் முதன் முதல் திரையிடப்பட்ட இந்திய பேசும் படம் பில்வா மங்கள் ஆகும்.

1940களில் உதயம் தொடக்கம் இலங்கை ரசிகர்களிடையே நவீன வெகுஜன கேளிக்கைச் சாதனம் ஒன்று என்ற முறையில் திரைப்படம் குறித்த ஆர்வம் பெருகத் தொடங்கியது. அதுவரை காலமும் முதன்மை நகர்சார் கேளிக்கை சாதனமொன்றாக இருந்து வந்த நாடகத்தின் மீது இது இயல்பாகவே மிக மோசமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது. கீழ் நடுத்தட்டு வர்க்க ரசிகர்களும் நகர்ப்புற தொழிலாளர் அப்போதைய வணிக சினிமாவின் பால் அதிக அளவில் கவரப்பட்டு வந்ததுடன், இந்தப் புதிய கலை தொடர்பாடல் சாதனத்தின் மீது படித்த மேல்தட்டு மக்களும் ஆர்வம் காட்டத் தொடங்கினர். மேலை நாடுகளில் தயாரிக்கப்படும் புதிய கலைத்துவ திரைப்படங்களைப் பார்ப்பதில் அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர். ஆனால், அவற்றை உடனடியாக வணிகரீதியான திரையரங்குகளில் பார்ப்பதற்கு வாய்ப்பு இருந்து வரவில்லை. எனவே, கொழும்பு திரைப்படக் கழகத்தை உருவாக்கிக் கொள்வதற்கு அவர்கள் முன்வந்தனர். உண்மையிலேயே இதுவே ஆசியாவில் அமைக்கப்பட்ட முதலாவது திரைப்படக் கழகமாகும்.

இலங்கையில் சிங்களத் திரைப்பட உலகம் பொன்விழாக் கண்டுவிட்டது. அதாவது 60 வருடங்களையும் தாண்டி விட்டது. இந்தச் சிங்களச் சினிமா உலகுக்கு வளமூட்டிய பெருமை தமிழர்களையும், முஸ்லிம்களையுமே சாரும்.

சிங்களச் சினிமாவுக்கு அடி எடுத்துக்கொடுத்த பெருமை சுந்தரம் மதுரநாயகம் என்ற தமிழரையே சாரும். இவர் தனது பெயரை எஸ்.எம். நாயகம் என்று சுருக்கிக் கொண்டார். சிங்களச் சினிமா வரலாற்றில் முதலாவது சிங்கள பேசும் படமான ‘கடவுனு பொறொந்துவ’ என்ற படத்தை எஸ்.எம். நாயகமே தயாரித்தார்.

1947ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி சிங்கள ரசிகர்கள் எவராலும் மறந்துவிட முடியாத பொன்னாளகும் அன்றுதான் ‘கடவுனு பொறாந்துவ’ (சிதைந்த வாக்குறுதி) இலங்கையில் திரையிடப்பட்ட நாளாகும்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட இந்தச் சிங்களப் படத்தை எஸ்.எம். நாயகம் தயாரித்தார். அரசியல் காரணங்களால் சிங்களப் படங்கள் 1956ஆம் ஆண்டுகளுக்கு பின் இலங்கையிலேயே தயாரிக்க வேண்டும் என்ற நிலை உருவாகியது. ■


பூஜை-யில்
விஷால் - சுருதி

கோச்சடையான்

'இந்தியாவில் முதன்முறையாக நடிப்பு பதிவாக்கம் தொழில்நுட்பத்தில் உருவான திரைப்படம்' என்று அறிவித்துக் கொள்வதில் ரஜினி குடும்பம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய சினிமா குடும்பங்களும் பெருமைப்படலாம்.

'ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தாராம்...' கதையை இவ்வளவு பிரமாண்டமாய் திரையில் கொண்டுவந்த இயக்குனர் சௌந்தர்யா ரஜினிகாந்த் அஸ்வின் பாராட்டப்படுவார்.

படத்தின் முதல் சில நிமிடங்கள், பக்கத்து ஊரில் பார்த்த பொம்மலாட்டம் போலவே நகர்கின்றன. கேரக்டர்கள் எல்லாம் தாங்கித்தாங்கி நடக்கிறார்கள். இந்தப் படத்தை யார்தான் தாங்கிப்பிடிப்பதோ என்று யோசிப்பதற்குள் விடையாய் வந்து நிற்கிறார் ரஜினி.

கலிங்கபுரி அரண்மனையின் அந்தரங்க குகைக்குள் அடிமைகளாக அடைபட்டிருக்கும் கோட்டைப்பட்டின வீரர்களை மீண்டும் படைவீரர்கள் ஆக்குவதில் வெற்றி பெறுகிறது ரஜினியின் 'தளபதி ராணா' கேரக்டர்.

ராணாவால் மீண்டும் தனக்கு வெற்றி வரும் என்று எதிர்பார்த்த அரசன் ஜாக்கி ஷெரா∴ப் ஏமாறுகிறார் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த ராணா திட்டமிட்டே கலிங்காபுரியில் நுழைந்து, தளபதியாகி, தனது நாட்டு வீரர்களை மீட்டெடுத்தது தெரிய வருகிறது.

தாய்நாட்டுக்குத் திரும்பும் ராணாவுக்கு பலத்த வரவேற்பு கிடைத்தாலும், மன்னன் நாசருக்கு அவர் மீது பழைய கொலைவெறி மறைமுகமாக இருக்கிறது. ராணாவின் தங்கை ருக்மணியும், மன்னன் மகன் சரத்குமாரும் காதலிக்கிறார்கள். ரஜினியின் தந்திரத்தால் திருமணம் நடக்கிறது. நாசரின் தந்திரத்தால் அவர்கள் நாட்டைவிட்டே போய்விடுகிறார்கள். மன்னர் மகள் தீபிகா படுகோனேவைக் காதலிக்கும் ரஜினி ஒரு கட்டத்தில் மன்னரையே கொல்லப்போய், மாட்டிக்கொண்டு சிறையில் அடைபடுகிறார். அப்பாவைக் கொல்லவந்த காரணம் என்ன என்று கேட்கும் தீபிகாவுக்கு சொல்லும் சாக்கில், அப்பா கோச்சடையான் ∴ப்ளாஷ்பேக் நமக்கு முன்னே விரிகிறது.

ராணா, கோச்சடையான் இரண்டிலும் கேரக்டர் வித்தியாசத்தால் கம்பீரமாகத் தெரிகிறார் ரஜினி, கோச்சடையான் கேரக்டருக்கு மனைவியாக வரும் ஷோபனா, இன்னொரு கண்ணகியாய் மாறி கணவனுக்கு நியாயம் கேட்டு மன்னனிடம் போராடுவது மனசைத் தொடும்.



கலிங்கபுரி மன்னனின் மகன் ஆதி நண்பனாக இருந்த போதும் எதிரியாக மாறியபோதும் அதே நட்பைக்காட்டி 'நட்பைவிட நாடுதான் முக்கியம்' என்று கிளைமாக்ஸில் ரஜினி பேசும் வசனத்துக்கு கைதட்டல் உறுதி செய்யப்படுகிறது.

ராணாவின் மாமாவாக நாகேஷ் கேரக்டரை வடிவமைத்தவர்களை, இருப்பிடம் தேடிப்போய்ப் பாராட்டலாம். 'திருவிளையாடல்' தருமியைப்போல வளைவதும் நெளிவதுமாக அசத்தும் அந்த கேரக்டருக்காக நடித்தவர் ரமேஷ் கண்ணா, பொம்மை படத்துக்கு பாடல்கள் எதற்கு என்று கேட்டவர்கள் முன் வசிய வார்த்தைகளைக்கொட்டி, 'புகுந்து' விளையாடியிருக்கிறார் வைரமுத்து.

படத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது ஏ.ஆர். ரஹ்மானின் இசை.

கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கிறார் கே.எஸ்.ரவிக்குமார், பொருத்தமான பொன்மொழிகளைக் கண்டுபிடித்து' அங்கங்கே வசனமாகத் தொங்கவிடுகிறார்.

தொழில்நுட்ப சிறு குறைகளைத் தவிர்த்து, 'சேனா'வின் ஆட்டத்தைப் படமாக்க சௌந்தர்யா ரஜினிகாந்த் அஸ்வினுக்கு வாழ்த்துக்கள்!



இரண்டு இந்திப் படங்களில் அசின்

தமிழ் முன்னணி நடிகையாக இருந்த அசின் பாலிவுட்டில் முன்னணி நடிகையாக மாறிய பின்னர் தமிழ் சினிமாவில் நடிப்பதை தவிர்த்து வந்தார். தற்போது மற்ற நடிகைகளின் போட்டி காரணமாக அசினுக்கு இந்தி பட வாய்ப்புகள் குறையத் தொடங்கின.

இப்போது அபிஷேக் பச்சனுடன் 'ஆல் இஸ் வெல்' என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதைத் தொடர்ந்து அக்ஷய் குமாருடன் 'ஷாகீன்' என்ற படத்திலும் நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இந்தப் படத்தில் முதலில் நடிக்க பேசப்பட்டவர் நர்கீஸ் ∴பக்ரி, கால்ஷீட் பிரச்சனை காரணமாக நர்கீஸ் ஒதுங்கிக்கொள்ள இப்போது அந்த வாய்ப்பு அசினுக்கு கிடைத்துள்ளது. 'ஹவுஸ்∴புல் - 2', 'கில்லாடி 786' படங்களை தொடர்ந்து அக்ஷய் குமாருடன் மூன்றாவது முறையாக ஜோடி சேருகிறார் அசின்.

விமர்சனம்

எது நல்ல சினிமா...

ஹரி இயக்கத்தில்

பூஜை

'நாட்ல இப்ப இருக்கிற முக்கியமான ஒரு பிரச்சனையை எதிர்த்து ஹீரோ போராடுறான். அதை ஒரு குடும்ப பின்னணி அழுத்தமாக காதல் சேர்த்து சொல்கிறோம். சேஸிங், ஆகஷனோட ஃபோர்ஸான காதலும் படத்துல இருக்கு. முக்கோணக் காதல் கதை மாதிரி, இது முக்கோண ஆக்ஷன் கதை, கோயம்புத்தூர்ல ஆரம்பிக்கிற கதை பீகார்ல போய் முடியும்.

நம்ம படத்துல எல்லாமே கலந்து தானே இருக்கும். ஏழு வருஷத்துக்கு முன்னாடி விஷாலோட 'தாமிரபரணி' பண்ணேன். அது முழு நீள ஆக்ஷன் படம் கிடையாது. "விட்டுக்கொடுத்தா வாழ்க்கையில் பிரச்சனை இல்லைன்னு குடும்ப செண்டிமெண்ட் தான் மெசேஜ், இந்த ஏழு வருஷத்தில் ஆக்ஷன், டான்ஸ் மட்டுமில்லாம ஒரு பெர்ஃபாமராவும் விஷால் வளர்ந்திருக்கிறார். அதே மாதிர "பூஜையும்" நான் ஏற்கனவே பண்ண படங்களின் பெட்டர் வெர்ஷனா இருக்கும். இப்படி எங்க ரெண்ட பேருக்கும் அடுத்து லெவல் பாய்ச்சலா இருக்கும். இந்த படம்.

"கதை நடக்கிறது கோயம்புத்தூர்ல, அங்கே இதைவிடப் பிரமாதமான காஸ்ட் யூம்ஸ் கிடைக்குமே, படத் துக்கு ரொம்ப மாடர்னா ஒரு பொண்ணு தேவைப் பட்டாங்க. அந்த மாடர்ன் லுக், புரொஃபஷன்ல் டச் எல்லாமே ஸ்ருதிக்கு கரெக்ட் மேட்ச், என் படங்கள்ல இருந்து விலகி ரொம்ப மாடர்னா ஒரு லவ் போர்ஷன் வெச்சிருக்கோம்.



ஆரம்பத்தில் இருந்து க்ளைமாக்ஸ் வரை ஸ்ருதிக்கு படத்துல வேலை இருந்துட்டே இருக்கும்.

தெனாலிராமன்

மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, வடிவேலு நடிப்பில் இன்று வெளியாகியிருக்கும் படம் "தெனாலிராமன்."

மன்னராக ஒரு வடிவேலு, அவரது நவரத்தின அமைச்சர்களான ஒன்பது பேரும் வில்லன் ராதாரவியுடன் இணைந்துகொண்டு, நாட்டையே குடுடிச்சுவராக்குகிறார்கள். இது ஏதும் அறியாத மன்னன் அந்தப்புரத்தில் மனைவிகளோட லயித்து இருக்கும்போது, தெனாலிராமனான இன்னொரு வடிவேலு மந்திரியாக வருகிறார். பிறகு அவர் எப்படி மன்னனைத் திருத்தி மந்திரிகளிடம் ஈருந்து காத்து, இளவரசியை லபக்குகிறார் என்பதே கதை.

ஒன்பது மந்திரிகளும் சீன அரசிடம் நமது நாட்டை வியாபார்துக்கு திறந்து விட ஒப்புக்கொள்வதுடன் படம் ஆரம்பிக்கிறது. மன்னர் ஒரு மக்கு என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அப்பாவியான மன்னர் நாடு நலமாக இருப்பதாக மந்திரிகள் சொல்வதை நம்பிக்கொண்டு அந்தப்புரத்தில் 36 மனைவிகளுடன் ஜாலியாக இருக்கிறார்.

சீனப்பயணத்தில் ஒரு நல்ல மந்திரி சீன வில்லனால் கொல்லப்பட்ட அந்த பதவிக்கு யாரைப் போடுவது என போட்டி நடக்கிறது. தெனாலிராமன் ஜெயித்து மந்திரியாக உள்ளே நுழைகிறார். அவரை ஜெயிக்க விடாமல் தடுக்க, மந்திரிகள் போராடுவதும் வடிவேலு அதையும் மீறி ஜெயிப்பதும் கலகலப்பான காட்சிகள்.

தொடர்ந்து தெனாலிராமனின் புத்திசாலித்தனத்தில் மன்னரும் இளவரசியும் மயங்குகிறார்கள். மன்னர் ஏதாவது, டெஸ்ட் வைப்பதும் தெனாலிராமன் ஜெயிப்பதுமாக கலகலப்பூட்டும் காட்சிகளுக்கு இடையே, மன்னரைத் திருத்தும் வேலைகளும் நடக்கின்றன.



ஆனாலும் மந்திரிகள் தெனாலிராமன் மேல் பழி சுமத்தி, அரண்மனையை விட்டே விரட்டுகிறார்கள். மீண்டும் மன்னரும் தெனாலிராமனும் இணைந்தார்களா, மன்னர் திருந்தினாரா என்பதை சுவையாக ஆனால் ஸ்லோவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

தெனாலிராமன் கதைகளை ஏற்கனவே படித்தவர்களுக்கு வடிவேலு எப்படி சமாளிப்பார் என்பதை எளிதாக யூகிக்க முடியும் என்துதான் படத்தின் பலவீனம். ஆனாலும் வடிவேலு தனது மேனரிசத்தாலும் டயலாக் டெலிவரியாலும் சமாளிக்கிறார். 'புலிகேசரி' பாதியில் மக்களைக் கவனிக்காத மன்னர் மற்றும் போராளி கான்செப்ட்டையே 'தெனாலிராமன்' எனும் தேன் தடவி சொல்லியிருக்கிறார்கள்.

கதை கொஞ்சம் சீரியஸ் ஆனாலே ஃப்ளோஷ்பேக்.



ஜெயம் ரவி – ஹன்சிகா மோத்வானி நடிப்பில் புதிய இயக்குனர் லஷ்மன் இயக்கும்

ரோமியோ ஜூலியட்

காதலையும் காதலர்களை யும் அடையாளப்படுத்த ரோமியோ ஜூலியட் என்ற பெயரை காலம் காலமாக உபயோகப்படுத்தி வருகி றோம். அப்படிப்பட் கவித்துவமான ரோமியோ ஜூலியட் என்ற தலைப்பை எந்த படத்துக்கும் சூட்டாமல் விட்டு வைத்தது ஆச்சர்யம் தான்.

இப்படி ஒரு அருமையான காதல் தலைப்பை எஸ். நந்தகோபால் வழங்க மெட்ராஸ் எண்டர்பிரைசஸ் பட நிறுவனம் தயாரிக்கும் படத்திற்கு சூட்டி அந்த பெருமையை பெற்றிருக்கிறார். எஸ். நந்தகோபால் மெட்ராஸ் எண்டர்பிரைசஸ் பட நிறுவனம் சார்பாக தயாரிக்கும் ரோமியோ ஜூலியட் படத்தின் கதாநாயகனாக ஜெயம் ரவி நடிக்கிறார்.

கதாநாயகியாக ஹன்சிா மோத்வானி நடிக்கிறார், மற்ற நட்சத்திரங்கள் அனைவரமே முன்னணி நடிகர்களே.

ஒளிப்பதிவு - எஸ். சௌந்தர் ராஜன், இசை இமான், கலை - மிலன், சண்டைப்பயிற்சி - திலீப் சுப்பராயன் எழுதி இயக்குகிறார் லஷ்மன். இவர் பல விளம்பரப்படங்களை இயக்கியதுடன் எஸ்.ஜே. சூர்யாவிடம் உதவி இயக்குநராக பணியாற்றி இருக்கிறார்.

படம் பற்றி இயக்குனர் லஷ்மன்... பேண்டஸியான காதல் கதை இது. ஜாலியான காதலை எப்படி ஜாலியாக சொல்கிறோம் என்பது திரைக்கதை.

இந்த 2014-ல் 1947களில் இருந்த ஒரு கவித்துவமான காதலை எதிர்பார்க்கும் ஹீரோவும், இதே 2014ல் 2025ல் தான் வாழ்க்கையை எப்படிப் பாதுகாப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கால்குலேட்டிவாக யோசிக்கும் ஹீரோ யின் இவர்களுக்கிடையே ஏற்பட்ட சுவாரஸ்யமான காதலை ஜாலியாக சொல்வதே இந்தப்படம்.

இதோ எங்கள் சினிமா

அண்மைக்காலமாக வருகின்ற படங்களில் கொஞ்சம் வித்தியாசம் தெரிகிறது இல்லையா? கொஞ்சக் காலத்துக்கு முன்னர்தான் புதுவரிசையாக சில படங்கள் வந்து எங்கள் சினிமாவில் ஒரு மாற்றத்தை கோடிகாட்டு விட்டுச் சென்றிருந்தன. [illegible] எங்கேயும் எப்போதும், [illegible] வழக்கு எண் 18... இப்படி ஏதோ வந்தது [illegible] இன்னொரு [illegible] பக்கத்தைக் காணோம். [illegible] சாட்டை... இந்த வரிசை?

[illegible]யே, இப்பவும்கூட புது புதுசா வித்தியாசமான படங்கள்... என்னமோ மாற்றம் நிட்சயமா நடந்திட்டிருக்கு. [illegible] எங்கள் புதுவரிசை டைரக்டர்கள் முடிவு பண்ணிவிட்டார்கள் போலும்.

[illegible] என்கிறது. அண்மையில் நான் பார்த்த தமிழ்ப் பணடங்களைப்பற்றிச் சொல்கிறேன் சரிதானா [illegible]

கோலி சோடா!



டைரக்ஷன்: விஜெய் மில்ட்டன்
புரொடக்ஷன்: விஜெய் மில்ட்டன்
இசை : எஸ்.என். அருநகிரி

நடிகர்கள் : கிஷோர், ஸ்ரீராம், பகோடா, பாண்டி, முருகேஷ், சீதா, சாந்தினி

அண்மையில் வந்து அசத்திய படம். ஒரு மார்க்கெட்டைச் சுற்றி விடலைச் சிறுவர்களைக் கதாநாயகர்களாக்கி பின்னப்பட்ட கதை. அந்தச் சூழலில் ஆதிக்கம் செலுத்தும் அதிகார சக்திகள், மார்க்கெட் சிறுவர்களது பிழைப்புக்குக்கு நடுவே குறுக்கிட்டு அடிபணிந்து போக நிர்ப்பந்திக்கும் போது கிளம்புகின்ற ஒரு ஓர்மம்தான் படத்திற்கான தில்!

சிறுவர்களாயிருந்தால் என்ன? அவங்களுக்குத்தான் பயமறியாக் கோபம் பீறிடும்! இதைத் தத்ரூபகமாகச் சித்திரிக்கிறது படம். அந்த அதிகார சக்திகளையே நொறுக்கித் தள்ளி, சந்தையை விடுவிக்கும் அபாரத்தனம் பண்ணாமல், அளவோடு நிறுத்தி, யதார்த்தத்தை அனுசரித்துப் போகிற கச்சிதமான முடிவு. கொஞ்ச விடலைக் காதலின் வசனை, அதுவும் அளவோடு, கதைக்கு ஒரு சுவை தந்த பணியோடு நின்றுவிடுவதும் ஒரு அழகு. கோலி சோடா - நம்பி வாங்கிக் குடிங்க - டைரக்டர் விஜெய் மில்ட்டனுக்கு ஒரு சேர்ஸ் சொல்லியபடி!

நிமிர்ந்து நில்

டைரக்ஷன்: சமுத்திரக்கனி
புரொடக்ஷன்: சமுத்திரக்கனி
இசை: ஜி.வி. பிரகாஷ்குமார்

நடிகர்கள்: ஜெயம் ரவி, அமலா பால், சரத்குமார், சூரி, கோபிநாத்

நிமிர முடியலயே...!! ஒரு இரண்டடி படத்துக்குள் பிரவேசிக்க முன்னரே, இந்த நாட்டிலே உண்மையானவனாக வாழ்வது முடியாத காரியமென்பதை அடிச்சாற்போல சொல்லிவிடுகிறது படம். இங்கு லஞ்சம் கொடுத்து இல்லாத ஒருவனைப் படைக்கலாம். அவனுக்கு கற்பழிப்பு வழக்கும் பதிவு செய்யலாம். பிறந்த ஹொஸ்பிட்டல் தொடக்கம் செத்து சுடுகாடு போகும்வரை லஞ்சமாகக் கொடுத்துத்தான் பிழைப்பு நடத்த வேண்டிய நிஜ வாழ்க்கையை அப்பட்டமாகக் காட்டிய வெற்றி படத்துக்கு உண்டு.



லஞ்சக் குற்றச்சாட்டை எப்போதும் ஒரு பெரிய புள்ளியில் போடும் வழமைத்தனத்தை மாற்றி, முகந்தெரியாத சராசரிப் பொதுமக்களும் இதில்

பங்குதாரர்களெனக் காட்டியிருப்பது இடித்துக்கூறும் ஒரு வலுவான உண்மை. ஆனாலும் அப்பாவி ஜெயம் ரவியின் ஆரம்பக்கட்ட அறியாத்தனம் கொஞ்சம் ஓவர் - அதை வலுப்படுத்தும் பின்னணி போதாது. அத்துடன் இரகசிய தொலைக்காட்சி நிகழ்ச்சியூடாக அம்பலப்படுத்தலாமெனச் சொல்வது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் எதிர் நடவடிக்கையின் நாடகத்தனம், வில்லனான ஜெயம் ரவிக்கு கொடுக்கும் பில்ட்டப் இறுதியில் சப்பென்ற முடிவடைவது போன்றவை சொதப்புகின்றன. எனினும் இம்முயற்சிக்காக சமுத்திரக்கனிக்கு ஒரு வாழ்த்து!

பண்ணையாரும் பத்மினியும்

டைரக்ஷன் : எஸ்.ஆர். பிரபாகரன்
புரொடக்ஷன் : எம்.ஆர். கணேஷ்
இசை : ஜஸ்டின் பிரபாகரன்

நடிகர்கள் : விஜெய் சேதுபதி, ஜெயபிரகாஷ், ஐஸ்வர்யா, ராஜேஷ், பாலா



ஒரு கார், அந்தக் காரோடு ஒன்றிப்போன பாத்திரங்கள், இப்பாத்திரங்களுக்கிடையே ஓடும் மானசீகமான அன்பின் இழை - இதுதான் இங்கு ஒரு சடப்பொருளை உயிர்ப்பொருளாக்கி மனதில் பதியவைத்த கதை.

ஒன்று கவனித்தீர்களா? வில்லனே இல்லை! யாரு, அந்த பொருள்-பிடுங்க? மகள் வில்லியா? சே. அதெல்லாம் இல்லை. அவ்வப்போது காருக்கு வரும் ஆபத்துக்கள்தான் வில்லன். உருவமில்லாத வில்லன்! கார் ஓனருக்கு சுகயீனமா மென்று சொன்னதும், "ஹேய்" என்று தன்னையறியாத மகிழ்ச்சியில் குதித்தாரே அந்த பண்ணையார் (ஜெயப்பிரகாஷ்), அதுதான் அந்த ஃபீல் - காருடன் ஏற்பட்ட காதல்! கல்யாண நாளன்று பண்யைார் கரோட்டியபடி தன்னைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்பது அவரது மனைவியின் ஆசை. அதை நிறைவேற்ற வேண்டிய கடமை உணர்வுக்கும் பண்ணையாருக்கு காரோட்டப் பழக்கிவிட்டால் எங்கே தன்னைக் கழட்டிவிடுவாரோ என்ற பயத்துக்கும் நடுவில் ஊசலாடும் ட்ரைவர் விஜெய் சேதுபதியின் மனக்குழப்பத்தை இன்னும் உச்சநிலைக்குக் கொண்டுபோயிருக்கலாம். காதலை முரண்பாட்டுக்கு பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் காரில் ஏற ஏங்கும் ஒரு சிறுவன் பெரியாளாகி, சொந்தக் காரை மறைத்து, இந்தக் காரில் ஏறுவதில் கதையை முடிப்பது கால நீட்சியை மறந்த சென்ரிமென்ட்டாகிப்போய் விட்டது. எல்லாவற்றையும் மீறி, ஒரு இரும்புப் பொருளைப் பஞ்சாக்கி நெஞ்சில் தடவிவிட்டார் டைரக்டர் எஸ்.ஆர். பிரபாகரன்!

தெகிடி

டைரக்ஷன்: பி. ரமேஷ்
புரொடக்ஷன்: பி. ரமேஷ்
இசை : நிவாஸ் பிரசன்னா

நடிகர்கள் : அஷோக் செல்வன், ஜெயபிரகாஷ், ஜனனி ஐயர்

ஒரே திக்-திக் தான்! டெம்போ மாறாத திறில், திறிலுடன் பிணைந்திருக்கும் அக்கறை. அக்கறைக்கும் திறிலுக்கும் இடையே பிணைக்கப்பட்ட கயிற்றில் தான் படத்தின் வெற்றி நடைபோடுகிறது. தன் உளவறியும் தொழில் சில மரணங்களுக்கு வழிவகுப்பதும், அவை கொலைகளென்றறிகையில் மரணத்தின் கரம் தன் காதலியை நோக்கி நீள்வதை உணர்வதும், காதலியின் சந்தேகத்துக்கு ஆளாகிய நிலையில் அவளைக் காப்பாற்ற வேண்டியவனாக இருப்பதும் படத்தின் டென்ஷனை உச்சநிலைக்கு இட்டுச் செல்கிறது. எமக்கும் முதுகுத் தண்டு சில்லிடுகிறது. ஆனால், கொலையாளிகளே யாரெனத் தெரிந்து, அவர்களே தலைமறைவாகிவிட, அதன்பின் மரணம் அவளை நெருங்குவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இப்போது படத்தில் அச்சம் விலகிவிடுகிறது. கொலையாளிகளையும் கொலைகளுக்கான காரணத்தையும் தேடி, கதை நகர்கிறது. அந்த மரணத்தின் அச்சத்தை இறுதிவரை நிறுத்தி வைத்திருந்தால் விறுவிறுப்பாயிருந்திருக்கும். இறுதியில் மர்மம் துலங்கும்போது நாம் எதிர்பார்க்காத சூத்திரதாரி வெளிக்கொணரப்படுகிறார்.

அவரது தன்நிலை விளக்க உளறல்களை வெட்டி எறிந்துவிட்டு, எம்மை அந்த அதிர்ச்சியுடனேயே கதிரையிலிருந்து எழும்பப் பண்ணியிருக்கலாம். எனினும் குலைவுறாத சஸ்பென்ஸ் மூடில் கதை நகர்த்தியுள்ளார் டைரக்டர் பிரமேஷ்.




வல்லினம்

டைரக்ஷன்: அறிவழகன் வி.
புரொடக்ஷன்: அஸ்கார் ரவிச்சந்திரன்
இசை: தாமான். எஸ்

நடிகர்கள்: நாகுல், மிருதுலா பாஸ்கர், அதுல் குல்மானி, ஜெயபிரகாஷ்

வல்லினம், இடையினம், மெல்லினம் - எம் மொழியில் உண்டு. விளையாட்டிலுமா?

இந்தியாவில் மேலாதிக்க நிலையிலுள்ள கிரிக்கெட்டுக்கும், அதன் செல்வாக்கின் கீழ் நசுங்கும் ஏனைய விளையாட்டுக்களுக்கும் - இங்கே அது கூடைப்பந்தாட்டத்துக்கும் - உள்ள முரண்பாட்டைப் பேசுகிறது படக்கதை. கிரிக்கெற் வல்லினம், கூடைப்பந்தாட்டம் மெல்லினம், ஆனால் அக்கிரிக்கெட் செல்வாக்கு, படத்தின் வெற்றியையும் பாதித்துவிடுமோ என்ற கவலை. விடயத்தைச் சொல்லுவதிலுள்ள தயக்கத்தில் தெரிகிறது. இந்த உரசலுக்கு வந்து சேருவதற்கே, ஒரு சுற்றி வளைத்த பாதை தேவைப்படுகிறது. கூடைப்பந்தை கிரிக்கெட்டைப்போல் பிரபலமாக்கி, அதில் சாம்பியன் அந்தப் பிரபல்யம், உரித்த வாழைப்பழம்போல், பணக்காரக் காதலியின் தந்தை மூலம் கிடைத்துவிடுகிறது. காதலா, விளையாட்டா என்ற இன்னொரு முரண்பாடு இவ்விடத்தில் எழுந்து பின் தெளிவின்றி முடிகிறது. நண்பனின் மரணத்தின்பின் கூடைப்பந்தைத் தொடாத ஆதிக்க விளையாட்டுக்குமுன் பாதிக்கப்பட்ட விளையாட்டுக்குள்ள சவாலைப் படப்பொருளாக்கியமை புதிய விடயம் மட்டுமின்றி டைரக்டர் வி. அறிவழகனின் துணிச்சலான முயற்சியும்தான்! இது கடந்த வருட தமிழ் திரைப்படங்களில் படத்தொகுப்புக்கு தேசிய விருதைப் பெற்ற படம்.



மதயானைக் கூட்டம்

டைரக்ஷன் : விக்ரம் சுகுமாரன்
புரொடக்ஷன்: ஜி.வி. பிரகாஷ்குமார்
இசை: என்.ஆர். ரகுநந்தன்

நடிகர்கள்: கதிர், ஓவியா, ஜெயபிரகாஷ், வெலராமமூர்த்தி, விஜி சந்திரசேகர்



அப்பப்பா! என்ன ஒரு வக்கிரம்! மனித மனங்களுள் உள்ளூறைந்து போயுள்ளமதம்! வாழ்ந்து முடியும் காலத்துக்குள் எம் வாழ்க்கையை அழித்துக்கொள்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற தத்ரூபமான படம். உண்மைக் கதைபோல் அமைந்திருக்கும் இப்படத்தில் போலி வேலைப் பாடுகள் அறவே இல்லை. பெண்களும், இக்கொலை வெறிக்குள் தோய்ந்து போய் அவ்வன்மத்தின் அம்சமாகிப் போய்விட்டதை ஒரு உண்மை விளம்பி போல் அப்பட்டமாகச் சொல்லிவிடுகிறது படம். இங்கே மிஞ்சப் போவது எதுவுமில்லை. காதலோ, பாசமோ, உறவுகளோ... எல்லாம் மடிந்துவிட.... இரத்தம் தோய்ந்த ஒரு போலித்திமிரின் கறைமட்டும் அழியாது உறைந்திருக்கும். வாயடைத்துப்போய் எழும்பிச் செல்லும் எம்மை இப்படம் சில நாட்களாவது நடைப்பிணமாக்கிவிடும். ஒருபுறத்தில் கூத்தாடிகளின் வாய்ப்பாட்டின் மூலம் மரணச் சடங்குகளை வித்தியாசமாக விபரிப்பதில் கலைநுட்பத்தை வெளிப்படுத்தும் டைரக்டர் மறுபுறம் கதாயாகனுக்கும் பார்வையாளர்களுக்கும் உணர்வுரீதியான பிணைப்பை ஏற்படுத்துவதில் தவறிவிடுகிறார். எனினும் உண்மையை உரித்துக் கதை படைத்து சினிமா சென்ரிமென்டுகளுக்காக சமரசம் செய்யாமல் அதே உணர்வுத் தளத்தில் படமாக்கித் தந்தமைக்கு டைரக்டர் விக்ரம் சுகுமாரன் வெகுவாக மெச்சப்பட வேண்டியவர்.

குக்கூ

டைரக்ஷன்: ராஜுமுருகன்
புரொடக்ஷன்: த. நெக்ஸ்ட் பிக் ஃபில்ம்
இசை: சந்தோஷ் நாராயணன்



நடிகர்கள்: தினேஷ், மாளவிகா நாயர், சோமசுந்தரம்

பார்வையற்ற பெண்ணுக்கு தந்தை விட்டுச்சென்ற கடிகாரத்தின் குரல் குக்கூ - படத்தின் பெயரானதைத் தவிர வெறுமனே ஒர சென்ரிமென்டல் டச்சாகி நிற்க, கதை பார்வையற்ற இருவருக்கிடையிலான காதலாக மலர்கிறது - பின்னர் வாடகிறது!

பார்வையற்றவர்களின் வாழ்க்கையைக் கதையோடு சேர்ந்து இயல் பாக இழையோடவிட்டது படத்தின் சிறப்பு. பிற்பகுதியில் வந்து சேரும் படத்தின் கென்ஃபிளிட் - அதாவது முரண்பாடு - அதாவது, கதாநாயகியை பணத்திற்காக இன்னொருத்தனுக்கு கட்டிக்கொடுக்கும் அண்ணனின் திட்டம் - வழமையானதுதான். நாயகனும் நாயகியும் பிரிவதற்கான ஏற்பாடுகளை தற்செயல் சம்பவங்களால் ஒழுங்குசெய்திருப்பதும், கிளைமாக்ஸை நோக்கி

"சோதனைமேல் சோதனை" எனக் கதாநாயகனை மிகவும் அடிபட்டு விழுந்து தேடியலைபவனாக நகர்த்துவதும், நாயகிக்கு அருகிலேயே நாயகனை இருக்க வைத்து அது தெரியாமலே அவளைப் பிரிய வைப்பதும் தமிழ்ப்பட சென்ரிமென்டை மனங்கொண்டு மேறகொள்ளப்பட்டுள்ள கதையமைப்பெனக் காட்டுகின்றன. படத்தின் கிளைமேக்ஸில் எல்லாச் சவால்களும் நீங்கி, நாயகியைத் தேடியலைந்து கண்டுபிடிப்பதே சவாலாகி நிற்கிறது. அதுவும் இலகுவாக ஒரு தகவல் மூலம் கிடைத்தாலும், தகவல் தந்தவர் கூட்டிச் செல் வதற்காக காத்திருக்காத போக்குகள், அபாரமான திறமைகள், வைராக்கியங்கள் என்பவற்றையெல்லாம் கையாண்டிருந்தால் நாம் அந்த உலகத்தில் சில மணித்தியாலங்கள் இருந்திருக்கலாம். வழமையான ஒரு கதை பார்வையற்ற கதாநாயகர்கள் ஊடாக என்னும் இதுவும் ஒரு மாறுபட்ட தெரிவே.

நெடுஞ்சாலை

டைரக்‌ஷன்: என். கிருஷ்ணா
புரொடக்‌ஷன்: ஆஜு சி. சௌந்தராஜன்
இசை: சி. சத்யா



நடிகர்கள் : ஆரி ஷிவதா, பிரஷாந்த் நாராயணன், தம்பி ராமையா, சலிம் குமார்

நெடுஞ்சாலைக் கொள்ளைக்காரன் ஒருத்தனின் கதை, புதிய கதைப் புலம்தான். அக்கொள்ளைக்காரன், அவனுக்கு வில்லனாக முளைக்கும் கஞ்சாக்கார இன்ஸ்பெக்டர், அவனது பாதையில் சாப்பாட்டுக்கடை போடும. பெண், இவர்களுக்கிடையிலான முக்கோண உரசல் இறுதியில் கொள்ளைக்காரனுக்கும் பெண்ணுக்குமான காதலில் தள்ளிவிட, அவன் திருந்திவாழ முனைகிறான். அதை முடியாதாக்குவதுதான் கதை. படத்தின் பாணி, பரித்திவீரனை ஞாபகப்படுத்தினாலும், புலம் முற்றிலும் வேறு. கிளைமெக்ஸ், வழமைபோல், இன்ஸ்பெக்டருக்கும் திருந்திவிட்ட கொள்ளைக்காரனுக்குமான மோதலில் முடியவில்லை. மாறாக எதிர்பாராதவாறு அந்த இன்ஸ்பெக்டர் கொள்ளைக்காரனின் பழைய முதலாளியால் திடிரெனக் கொல்லப்பட்டுவிடுகிறான். வில்லனே அகன்றுவிட்டான்! இந்த முதலாளியே வில்லனாகிவிட்டானோ என்றொரு குழப்பம். பின் அதுவுமில் லாமல், இக்காதலுக்கான இறுதித் தடையும் அகன்றுபோன ஒரு தருணத்தில், எதிர்பாராத முடிவாக, இக்கதையைச் சொல்லிவரும் கூட்டாளியிடமிருந்து வந்து சேருகிறது கதாநாயகனின் மரணம் கதை என்பது நல்ல சக்திக்கும் தீய சக்திக்கும் இடையிலான முரண் என்பது ஒரு பொதுச் சூத்திரம். அது சற்று ம றிறி, தீயசக்திக்குள் புதைந்திருக்கும் நல்ல சக்தியை மீட்டெடுக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இப்படம் தீய சக்திகள் ஒரு தொடராக நீள, அவற்றையெல் லாம் அழித்தொழித்து நல்லதோர் உலகைப் படைக்கும் முயற்சிக்கு அலையாமல் கச்சிதமாக அதன் கட்டுக்குள் நின்றுகொண்டதே இப்படத்தின் வெற்றி, அறிந்து, அளந்து இயக்கியிருக்கிறார் டைரக்டர்.

மான் கராத்தே

டைரக்‌ஷன்: கே. திருக்குமரன்
புரொடக்‌ஷன்: ஏ.ஆர். முருகதாஸ்
இசை: அனிருத் ஆர்.

நடிகர்கள்: சிவகார்த்திகேயன், ஹன்சிகா முட்வானி, சூரி, சதீஸ், வம்சிகிருஷ்ணா

ஃபன்டசி - அதாவது அதிசயங்கள் சார்ந்து புனையப்பட்ட படம். யதார்த்தம ானதா என்று பார்க்கத் ஐதேஷமைவழியில்லை. சினமாவில் யதார்த்தம் முக்கியமல்ல, பிக்ஷனல் ரியலிடி, என்ற ஒன்று (அதை நாம் புனைவு யதார்த்தம் என்று வைத்துக்கொள்வோமா?) - அதுதான் முக்கியம். அது என்ன? சுருக்கம ாக, நாம் என்ன கற்பனையைப் புனைகிறோமோ, அந்தப் புனைவிலே ஒரு வீதி உண்டாகும். அந்த வீதிக்கு உரிய யதார்த்தத்தை நாம் திரைப்படத்தில் பேண வேண்டும் என்பதே அது. அது இங்கே எங்கெங்கே பிசிறுகிறது என்பதைக் கண்டுபிடித்து உங்கள் புத்திக்கூர்மையைப் பதம் பார்த்துக் கொள்ளுங்கள். சரி, படம் எப்படி?



தங்கள் சுயலாபத்துக்காக, ஒரு அப்பாவியை ஆபத்தான பொக்ஸிங்க டுனமெண்ட்டுள் தள்ளிவிடுகிறார்கள் சில நண்பர்கள். (இதுவே போதும் ஒரு சுவாரசியமான படத்தை உருவாக்க) இங்கே, அவன் எப்படியும் வெல்வான் என்பது ஏற்கெனவே சித்தர் கொடுத்த பத்திரிகைப்படி தெரிந்துவிட்டதால், அதையும் குழப்பத்துக்குள்ளாக்க, அவனது பெயரில் இன்னொரு பாத்திரம்- உண்மை யான ஒரு பொக்ஸிங் சாம்பியனை அறிமுகப்படுத்தி, இறுதியில் அவன் பக்கமே நண்பர்களும் சார்ந்துவிட, அவன் இவனைக் கொல்வேனென சவால் விட, இவன் தனித்த பலிக்கடாவாக களம் செல்கிறான். இறுதியில் என்னாகிறது? எம் எல் லேலாரது பிரார்த்தனையும் அவன் வென்றாக வேண்டும் என்றாகிறது. (படத்திலும் ஏகப்பட்ட பிரார்த்தனைகள்!) அதனால், (நீங்கள் கொடுத்த தைரியத்தில்) இதுவரை அவன் வெற்றியடைந்த யுத்தியான மான் கராத்தேயை – அதாவது அடிவாங்காமல் உச்சி ஓடும் தந்திரத்தைக் கைவிட்டு அவனை உண்மையான பொக்ஸிங்குக்கே இறக்கி விடலாமென்ற தைரியம் வந்துவிட்டது டைரக்டருக்கு. (இந்த மான்கராத்தே புதிததல்ல. 1930லேயே சார்லி சப்ளின் தன் சிட்ரி லைட்ஸ் திரைப்படத்தில் பொக்ஸிங் பண்ணிக் காட்டியதுதான்!) பிறகென்ன! "அந்தக் காதலின் வலிமை ஒரு பெரும் சக்தியாகி, விட்ட இறுதிக் குத்தில் வீழ்ந்தான் பாருங்கள் எதிரி! - (விதியையும் மீறி?) வென்றது காதல்!

இப்போ நாம் மேட்டருக்கு வருவோம். இந்தத் திரைப்படங்களின் அனுபவங்கள், எமக்கு மசாலாப் படங்களிலிருந்து வேறு சுவையைத் தந்திருக்கின்றன அல்லவா? நாம் வெறும் ஹீரோக்களின் விசிறிகளாகிவிட்டால் எம் ரசனை ஒடுங்கிவிடும். ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு விடைபெறுகிறேன். மசாலாப்படங்கள் ஏன் எம்மை ஈர்க்கின்றன தெரியுமா? அதன் ரகசியம் இரண்டு எழுத்துக்களில் தங்கியிருக்கின்றன. அது ஈ.வி. எனப்படும் என்டடைன்மெண்ட் வால்யு - அதாவது கேளிக்கைப் பெறுமாணம்! இந்த என்டைன்மெண்ட் வால்யு என்றால் என்ன? அதை அடுத்த இதோ எங்கள் சினிமாவில் புதிய திரைப்படங்களை ஒரு பார்வை பார்த்துக்கொண்டே அலசலாம். ஓகேயா?

Video Audio advertisements

வீடியோ ஓடியோ விளம்பரங்கள்!


We make quality advertisements that slip into the minds of the audience!

உங்கள் தேவைக்கேற்ப மனங்கவரும் கதையம்சம்கொண்ட தரமான
வீடியோ ஓடியோ விளம்பரங்களைத் தயாரிக்க எம்மை நாடுங்கள்!
"விளம்பரமா இது.... ஒரே நொய் நொய். காது புளிக்குது!" என்று கூறாமல்,
"இதுவல்லவோ விளம்பரம். கேட்டுக்கொண்டே இருக்கலாம்!"
என்று ஒருவரை நினைக்க வைத்தால்...
அதுதான் உங்கள் வெற்றி!
எங்களை நாடுங்கள்... உங்களை வெல்லவைப்போம்!



Video Editing & Postproduction

வீடியோ எடிட்டிங் அண்ட் போஸ்ட் புரடக்ஷன்



Send us your video footages. We'll take care of the rest and return you the finished product in a short time.

உங்கள் திருமண, பிறந்தநாள் மற்றும் அனைத்து வைபவங்களது வீடியோக்களையும்
துரித கதியில் எடிட் பண்ணி, கலர் கரெக்ஷன் செய்து, கிரபிக் வேர்க்ஸ்ஸுடன்
இசைப் பின்னணியிட்டு முழுமைப்படுத்தித் தர எங்களை நாடுங்கள்!

Photo Works

Send us your photos and let us work on it.
We can do for you fhe following jobs
Color correction, Desiging, Printing, Laminating & Albums.



Baskey films & Creations Inc.

(647) 863 6434 baskeyfilms@gmail.com

We do subcontracts



பாலு மகேந்திரா

ஏன் இந்த சர்ச்சை?

ஆளுமை மிகுந்த ஒரு படைப்பாளியாக இந்திய சினிமாவின் மதிப்புமிக்க கலா மேதையாக உயர்ந்த இலங்கைத் தமிழர் பாலுமகேந்திரா சென்ற பெப்ரவரி 13ம் திகதி மாரடைப்பால் மறைந்தார்.

எவரது துணையுமின்றி, தன் திறமை ஒன்றையே நம்பி தன்னந்தனியாக இந்தியா என்ற மாகா கடலினுள் புகுந்து பலரும் பின்பற்றும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். ஒளிப்பதிவாளராக ஆரம்பித்து, இயக்குநராகவும், திரைக்கதை எழுத்தாளராகவும் செயற்பட்டு 5 தேதியவிருதுகள், மூன்று மாநில விதுதுகள், மூன்று பில்ம் ஃபெயார் விருதுகள், இரண்டு நந்தி விருதுகள் என்பவற்றைப் பெற்றதோடு இம் மூன்று துறைகளிலும் விருதுபெற்ற ஒரே தமிழ் இயக்குநர் இதுவரை இவரே.

மொத்தம் 26 திரைப்படங்களை இயக்கிய இவரது இறுதிப்படம் தலைமுறைகள். இவைதவிர "கதை நேரம்" என்ற பெயரில் காத்திரமான பல தொலைக்காட்சிப் படங்களை வழங்கியவர்.

இத்தகைய ஒரு புகழ்மிக்க மனிதரின் மறைவை எம்மவர் ஒரு பேரிழப்பாக உணர்ந்ததைவிட அவர் பற்றிய சர்ச்சைகளைக் கிண்டி அதில் சுவாரசியம் காண்பதுதான் வேதனை தருகிறது. அவரது மரணச் சடங்கும்கூட, சர்ச்சையுடனேயே நடந்து முடிந்தது.

அவர் தனது இன்னோர் மனைவியாக அறிவித்த மோனிகாவை அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளக்கூடாதெனத் தடுத்து, பாரதிராஜா போன்றோரது சமரசத்தால் 10 நிமிடங்கள் மட்டும் பார்வையிட அனுமதிகொடுத்து, அழவைத்தார்கள்.

பாலுமகேந்திராவின் சீடரும் வளர்ப்பு மகனென்று உரிமை பாராட்டுபவருமான இயக்குநர் பாலாவே இதில் முன்னணி வகித்தது ஏனெனத் தெரியவில்லை.

இந்த சர்ச்சை, இறுதிச் சடங்கோடு ஓய்ந்து விடாமல், பாலுமகேந்திராவை போஸ்ட் மோர்ட்டம் செய்து அசிங்கப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக எம் விமர்சகர்களுக்கும் வலைப் பதிவாளர்களுக்கும் ஆகிவிட்டது.

இத்தகைய ஒரு புகழ்மிக்க மனிதரின் மறைவை எம்மவர் ஒரு பேரிழப்பாக உணர்ந்ததைவிட அவர் பற்றிய சர்ச்சைகளைக் கிண்டி அதில் சுவாரசியம் காண்பதுதான் வேதனை தருகிறது. அவரது மரணச் சடங்கும்கூட, சர்ச்சையுடனேயே நடந்து முடிந்தது.

பாலுமகேந்திரா அகிலாவையே முறைப்படி மணந்திருந்தாலும் மோனிகாவையும் தான் மணந்துள்ளதாகப் பின்னாளில் அறிவித்தார்.

எனினும் இவர் தன் தேவதை என்று கூறிக்கொள்ளும் ஷோபாவுடனும் தாம்பத்தியம் நடத்தியதாகக் கூறி, ஷோபாவின் தற்கொலையிலும் அவரைச் சம்பந்தப்படுத்தி, அவர்மீது அனுமதியின்றி இந்தியாவில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தி, நான்கு மாதம் சிறையில் தள்ளியிருந்தனர். அதனால் அவரால் இந்தியாவைவிட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்தியாவில், "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கற்பு நெறி, மத்தியதர வர்க்கத்தில் மட்டும் பவித்திரமான ஒன்றாகக் கருதப்படும் ஒழுக்கமாகும். சட்டம் அதையே வலியுறுத்தினாலும், அதுபோன்ற பவித்திர உணர்வு மேல்தட்டு வர்க்கத்திலும் இல்லை, கீழ்த்தட்டு வர்க்கத்திலுமில்லை.

[illegible] தமிழ் சினிமாவோ இந்தப் போலித் தனத்தையே காணப்பித்துக் கொண்டிருக்கிறது.

பாலுமகேந்திராவின் தனிப்பட்ட வாழ்க்கையையும் இதுவே நோண்டிப்பார்க்க வைக்கிறது.

இந்திய சினிமா உலகம் என்பதே வேறு. ஒரு நடிகை ஒருத்தனுடன் சோடியாக சில காலம் திரிவாள். இன்னொரு சோடி வேறொரு புறத்தில் திரியும். சொற்ப காலத்தில் முதற் சோடியிலிருந்த நடிகை இரண்டாம் சோடி ஆணுடன் திரிவாள். அவனுடன் முன்னர் திரிந்தவளோ, இப்போது திரிபவனைப்பார்த்து, "என்ஜோய் யுவர் செல்ஃப்" என்று வாழ்த்திவிட்டுச் செல்வாள். இவர்கள் இந்த உறவை "கொம்பனி கொடுத்தல்" என்று சாதாரணமாகக் கூறிக்கொள்வார்கள்.

இப்படிப்பட்ட ஒரு உலகுக்குள் இலங்கையின மத்தியதரவர்க்க கருத்தாளுமைக்குள் வளர்ந்த "நேர்த்தியான மனிதன்" என்ற பார்வையை சமூகத்திடமிருந்து எதிர்பார்க்கின்ற ஒருவன் - அதுவும் ஒரு கலைஞன், வீழ்கின்றபோது, தடுமாறுவதும், அத் தடுமாற்றங்களின் வழியே இழுபட்டுக் கொண்டே அது தப்பு என்று குற்ற உணர்வில் பொசுங்குவதும், மீண்டும் அந்த "நேர்த்தியான மனிதன்" பட்டத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்



ஆதங்கத்தில் தன்னை நியாப்படுத்த முனைந்து, வகையறியாமல் விடயங்களை ஒப்புவித்து சிக்கலுக் குள்ளாகிவிடுவதும் நிகழ்கின்றது.

[illegible] செயல்களுக்கும் அவனுக்குள் [illegible]யே காரணமாக இருக்கிற [illegible] ஏனய சினிமாக்காரர்களிடம் [illegible]பதையும் நாம் கண்டுகொள்ள [illegible] அவர்கள் இவ் விடயத்தில் எவ்வளவோ [illegible] மாகாக்களாக பழம் தின்று கொட்டை போட்டுவிட்டு, சர்வ சாதாரணமாக உலா வருவார்கள் [illegible]ந்த மன உறுத்தலுமில்லாமல்.

அவர்கள் மீதெல்லாம் எம் காட்டமான விமர்சனம் பாய்வதில்லை - மாறாக, நாம் இவற்றை அவர்களின் பெருமைகளாக எடுத்துச் சொல்வோம்.

இன்று எமக்கு சேகுவராவின் தனிப்பட்ட வாழ்க்கை தெரிந்தால் நாம் அவரை உன்னத போராளியில்லை என்று உதறிவிடுவோமா, இல்லை கார்ல் மார்க்ஸின் வேலைக்காரியுடரான தொடர்பை வைத்து அவரின் தத்துவங்களைக் கூட்டியள்ளிக் குப்பைத் தொட்டிக்குள் எறிந்து விடுவோமா? மாஓ விற்கு ஒன்பது மனைவியரென்பதால் சீனப் புரட்சியே களங்கப்பட்டுப் போனதா? எம்.ஜி.ஆர் பக்கதர்களுக்கெல்லாம் அவரது சினிமா வாழ்க்கை தெரியாதா என்ன? இன்று ஜெயலலிதாவை அவர்கள் எம்ஜியாரின் உறவுப் பாலத்தூடாகத்தானே தலைவியாக்கினார்கள்?



ஆனால், பாலுமகேந்திராவை மட்டும் நாம் பிடித்து சாத்து சாத்தென்று சாத்த நினைக்கிறோம். உண்மையில் இவ் விவகாரங்களை அவரே பெரிதுபடுத்திவிட, அதை எடுத்து நாம் இன்னும் ஊதிப் பெருக்கவைத்து வெடிக்க வைக்க நிற்கிறோம்.

ஒன்றும் வேண்டாம். நீங்களே கொஞ்சம் காசைப் புரட்டிக்கொண்டு, ஒரு படமெடுக்கப் போவதாக சென்னையில் போய் இறங்குங்கள். வண்ணத்துப் பூச்சிகளின் வலைக்குள் விழுந்து காசைத் தொலைத்துவிட்டு வெறும் கையோடு வந்து வாயைப் பொத்திக்கொண்டு சுருண்டு படுத்துவிட்ட பலரின் கதைகளை நீங்களும் அடிப்பட்ட பின்னர்தான் ஒவ்வொன்றாய் அறிவீர்கள்.

ஆக. பாலுமகேந்திரா பண்ணியது அங்கு நிகழபவறறை மீறிய தப்பாகத் தெரியவில்லை.

16 வயதில் பெண் நடிகை விரல் சூப்பிக் கொண்டு பால் மணம் மாறாதவளாக சினிமாக்கு வருவதில்லை. சினிமாவிற்குள் புகமுன்னரே அதன் அந்தரங்கங்களை தெரிந்துகொண்டு, அதற்குத் தயாராக, ஒரு லாப நட்டக் கணக்குப் பார்த்துவிட்டே வருகிறாள்.

அங்கு டைரக்டரின் அதிகாரம் மட்டுமல்ல, கெமராமேனின் அங்கீகாரம் முதற்கொண்டு சகலதுக்கும் வளைந்து கொடுக்க வேண்டு மென்ற புரிதலோடுதான் வருகிறாள். அப்படி வளையா விட்டால் சினிமா அவளைக் கடாசி வீசிவிடும். (பெரும் புள்ளிகளின் உறவினர் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.) அவளில்லாவிட்டால் ஆயிரம்பேர் வரிசையில் நிற்கிறார்கள் எதற்கும் தயாராக.

அவர்கள் இந்தப் பாதையி னூடாகத் தான் செல்ல வேண்டு மென்பது, அவர்களுக்கும், அவர் களை அனுப்பிவைக்கும் பெற்றோர் களுக்கும் கூட நன்கு தெரியும். அவர்களுக்கு பாதை முக்கிய மல்ல, சேரப்போகும் இடம் தான் முக்கியம். அங்கு சேர்ந்து விட்டபின், பாதை பற்றி யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை. எல்லோரும் ஓட்டோகிறா:ப் வாங்க முண்டியடித்துக்கொண்டு நிற்பார்கள்.

ஆனால், சாதாரண வாழ்வில் யாவரும் பணக்காரராய் வர ஆசைப்பட்டு, முதலிட்டு, மண் கவ்விக் கொள்வதைப்போல, இங்கும் நடக்கும். வீழ்ந்தவர் பற்றி யாரும் பேசப் போவ தில்லை. அவர்கள்கூடப் பேச மாட்டார்கள்.

எந்த நடிகையிடமாவது போய் தமிழ்ச் சினிமாவில் பெண்ணொடுக்குமுறை எப்படி இருக்கிறதென்று கேட்டுப்பாருங்கள். உடனேயே அவள் இதை விடுத்து வேறு எதையாவது பேசுவோமா என்பாள்.

எனவே பாலுமகேந்திராவின் தனிப்பட்ட வாழ்வைக் கிளறிப் பார்ப்பதை விடுத்து அவரின் படைப்புகள் பற்றிப் பாருங்கள்.

வீடு படத்துக்கு, ஈழவிடுதலைப் போராட்டத்தில் இறங்கியிருந்த தம்பாப்பிள்ளை மகேஸ்வரனே வந்தாறுமூலை வங்கிக் கொள்ளை மூலம் பணம் கொடுத்ததாகவும் ஒரு செய்தி சில பதிவுகளில் வெளிவந்திருந்தது. ஆனால் அது தவறான செய்தியென்றும் அதற்குத் தானே முதலீடு செய்ததாகவும், தன் மனைவியான கலா தாஸைத் தயாரிப்பாளராகக் கொண்ட சிறீகால இன்டநேஷனல் என்ற தமது கொம்பனிதான் அப் படத்தைத் தயாரித்ததாகவும் லண்டனில் வசித்த, தற்போது கனடாவில் வசித்துவரும் தாஸ் என அழைக்கப்படும் என். சிறிநாராயணதாஸ் தெரிவிக்கிறார்.



அவர் கலைப் படத்துக்கும் வர்த்தகப் படத்துக்கும் இடையே, வர்தகக் - கலைப்படம் என்ற ஒரு வகையை உருவாக்க முனைந்தார். காரணம் வேறு ஒன்றுமில்லை. தமிழ் சமூகத்தில் கலைப்படங்களுக்கான ரசிகர்கள் மிகவும் குறைவு. மசாலாப் படங்களே அதிகம் வெற்றிநடை போடுகின்றன. அதனால் கலைப்படங்களுக்கான தயாரிப்பாளர்களைத் தேடிப்பிடிப்பது சிரமம்.

எனவே இப்படி வர்த்தகக் - கலைப்படம் என்ற ஒரு வகையறாவை ஏற்படுத்திக்கொண்டால், வர்த்தக ரீதியில் தோல்வியடையாத, கலையம்சம் கொண்ட படங்களை வெளிக்கொணரலாம் என்பதே அவரது ஆதங்கம்.

ஆனால் அவற்றில் பல வர்த்தக அம்சம் கலந்த கலைப்படங்களாகவும், சில கலையம்சம் கொண்ட வர்த்தகப் படங்களாகவும்தான் பெரும் பாலும் ஆகிப்போயின. மேலும் பல ஆங்கிலப் படத் தழுவல்களும் தாக்கங்களும் இவரது படைப்புகளின் சுயத் தன்மையைக் கேள்விக் குள்ளாக்கியிருக்கின்றன.

ஆனாலும் ஆங்கிலப் படங்களை அப்படியே காப்பியடிக்கும் சிலரைப்போலல்லாமல், அவற்றைத் தமிழ்மயமாக்கி, தமிழ்ப் புலத்திலான படங்களாக மாற்றியமைத்து புதியதொரு படைப்பாக்கித் தருவதில் இவரது புத்திக்கூர்மையும் கலை நுணுக்கமும் பளிச்சிடுகிறது. இவர் மிகச் சிறந்த ஒரு ஒளிப்பதிவாளர் என்பதில் சந்தேகமே யில்லை. இயற்கை ஒளியைக் கொண்டு கச்சிதமான வேலைப்பாடுகள் செய்யும் அற்புதமான கலைஞன். இந்த ஒளியை அவர் "கடவுளின் ஒளி" என்கிறார்.

பல படைப்புகளில் தன் இயக்குநருக்கான ஆளுமையை நிரூபிக்கச் செய்தது மட்டுமன்றி, சில படைப்புகளால் தமிழ் சினிமாவை விஞ்சி நிற்கவும் செய்திருக்கிறார். ஆனாலும் அவர் பேசிய அந்த வர்த்தகக் - கலைப்படம் பற்றிய அவரது பரீட்சிதங்கள் வெற்றிபெறவில்லையென்ற தோன்றுகிறது.

என்ன, தமிழ் திரையுலக வியாபாரச் சூத்திரங்களைக்கண்டு அஞ்சிகலைப்படங்களுக்குத் தயாரிப்பாளர்கள் முன்வரத் தயங்கியதால் தமிழ்த் திரையுலகில் ஒரு சத்தியஜித்ரே உருவாகுவது சாத்தியமற்றுப் போய்விட்டது. ❖

ஒரு துவக்கு ஒரு மோதிரம்

—மதுஷன்

ஷாங்காய் உட்பட பல சர்வதேச திரைப்பட விழாக்களில் விருதுகளைப் பெற்று உலக திரைப்பட வரலாற்றில் ஈழத்திற்கான திரைப்படம் இதுவென தடம் பதித்திருக்கிறார் லெனின் N. சிவம் "ஒரு துவக்கு ஒரு மோதிரம்" என்ற திரைப்படத்தின் மூலம்.

இத்திரைப்படம் சீன நாட்டில் நடைபெறும் உலகளாவிய ஷாங்காய்த் திரைப்பட விழாவில் 2014ல் பன்னிரெண்டு திரைப்படங் களில் ஒன்றாகத் தேர்வாகியது.

இதில் படலைக்கு படலை புகழ் மன்மதன் பாஸ்கியும், படலைக்கு படலை அங்கிளும் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈழ மக்களுடைய உணர்வுகளை, சொல்லுகிற திரைப்படமாக இருக்கிறது. படத்தில் அந்தந்தக் கதாப்பாத்திரங்களாக ஒவ்வொருத்தரும் வாழ்ந்திருக்கிறார்கள். ஈழத் தமிழ் பேச்சை அதே அழகியலுடன் கையாண்டிருக்கிறார் இயக்குனர்.

வர்த்தக ரீதியாக பெரும் வெற்றியினைப் பெறாவிட்டாலும் வெளிநாட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பல நாடுகளில் ஆர்வமாகத் திரையிடப்பட்டும் கொண்டிருக்கிறது.

இந்த படம் முழுக்க முழுக்க கனடாவில் எடுக்கப்பட்டாலும் ஏனைய சர்வதேச நடிகர்கள், புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் நடிகர்கள் எனப் பலரும் நடித்திருக்கிறார்கள்.

பிரவீன் மணி இசைமைத்திருக்க சுரேஸ்யோகி ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.

மேலும் ஜேண்பேரே, மதிவாசன், கந்தசாமி கங்காதரன் சேகர் பாஸ்கர், ரேணுகா, பவானி சோம சுந்தரம், போன்றவர்களும் நடித்திருக்கிறார்கள்.

புலம் பெயர்ந்த மண்ணில் வாழும் ஈழத்தமிழ்மக்களின் ஆறுவகையான பிரச்சனைகளை ஒன்றோடு ஒன்று தொடர்புப் படுத்திச் சித்தரிக்கிறது "ஒரு துவக்கு ஒரு மோதிரம்."



புலம் பெயர்ந்த மண்ணில் வாழ்ந்த போதும் தம் ஈழம், போரின் பாதிப்புகள் வலிகளினை மறந்து, புதிய தேசத்தோடு, புதிய மக்களோடு ஒட்டி வாழ முடியாமல் அல்லாடிப் போகும் மன நிலையினை வாழ்வோடு கட்டியமைக்க முயலுகையில் ஏற்படுகின்ற சிக்கல் களினை யதார்த்தமாகக் காட்டுகிறது இத்திரைப் படம் – இத்திரைப் படத்தின் சிறப்பம்சம் என்னவெனில் வர்தக ரீதியிலான சினிமா மொழியில் இருந்து மாறுபட்ட ஈழத்தின் மொழி இது, ஈழத்தமிழருக்கான, மொழி இதுவென ஈழத்தமிழ் மொழியின் அழகியலினை மிகத் தைரியமாகக் கையாண்டிருக்கும் இயக்குனருக்கு பெரும் பாராட்டுக்கள்.

இப்படத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கனேடிய ஐரோப்பிய கலைஞர்களும் நாற்பதிற்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஐம்பதிற்கு மேற்பட்ட படப்பிடிப்புத் தளங்களென மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது இத்திரைப்படம்.

இப்படத்தை விஷ்ணுமுரளி தயாரித்திருக்கிறார். தயாரிப்பாளரின் தைரியத்தையும் பாராட்டியேயாக வேண்டும். இலங்கையிலிருந்து வரும் பெரும் தயாரிப்பாளர்கள் பெரும்பாலும் இந்தியக் கதைசார்ந்த வர்த்தக ரீதியான படங்களையே தயாரித்துள்ளார்கள். ஈழத்திற்கான திரைப்படத்தை, தமக்கான திரைப்படத்தைத் தயாரிக்க வேண்டும் எனவோ, அதற்கான ஒரு தளத்தை உருவாக்க வேண்டும் எனவே நினைக்கவில்லை. ஈழத்தின் தயாரிப்பாளர்கள் பெரும் வெற்றிப் படங்களையும் எடுத்திருக்கிறார்கள் ஜீவா நடித்த தெனாவெட்டு போன்ற படங்கள், (ELK ஆன்ரனி புரோடக்ஷன்) மேலும் ஜித்தன் ரமேஷ் நடித்த புலிவருது, சியாம் நடித்த மனதோடு மழைக்காலம் போன்றவையும் பெரும் பொருட் செலவில் எடுக்கப்பட்டிருக் கிறது. ஆனால் இதில் எந்தப் படங்களும் ஈழத்தின் வாசனையைச் சிறிதும் பேச வில்லை, ஈழ சினிமாவிற்கான தளத்தை அமைக்க வில்லை. அந்த வகையில் தயாரிப் பாளர் விஷ்ணு முரளியைப் பாராட்டியே ஆக வேண்டும்.

இவர் சென்னையில் "அப்புச்சி கிராமம்" எனும் முழுநீளத் திரைப்படத்தினையும் தயாரித்துள்ளார்.

※



தீராநதி

ஈழத்திரைப்படம் "தீராநதி" ஓர் மீள் பார்வை

மன்மதனின் இயக்கம் மற்றும் நடிப்பில் "தீராநதி" என்ற ஈழம் சார்ந்த திரைப்படம் ஒன்று வெளிவந்திருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகம் வசிக்கும் பரிஸ் நகரத்திற்குப் புலம்பெயர்ந்து அந்த நாட்டின் குடியுரிமைக்காக விண்ணப்பித்துவிட்டுக் காத்திருக்கும் ஆயிரத்திலொரு இளைஞனாக, அறிமுகமாகிறார் கதையின் நாயகன் பாஸ்கர். (படலைக்குப் படலை மன்மதன்), சபேசன் என்றழைக்கப்படும் கால் ஊனமுற்ற நண்பருடன் ஒரு குறித்த வீட்டை நோக்கிப் பயணிக்கும்போது தங்களைத் துரத்தும் இளைஞர்களிடமிருந்து தப்பித்துப் பதுங்கிக் கொள்ளும் இடங்களிலிருந்து நாயகனின் நினைவுகளில் பின்னோக்கி நகர்கின்றன காட்சிகள். அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட கடிதமொன்றை படிப்பதன் பொருட்டு மொழி தெரியாக் காரணத்தால் தன்னை அணுகும் பாஸ்கருக்கு அதனை வாசித்துச் சொல்வதுடன் கதைக்குள் நுழைகிறார் நாயகி மதனா (வேோபிதா).

தனது விசா நிராகரிக்கப்பட்டதாகச் சொல்லும் அந்தக் கடிதத்தைக் கண்டு கலங்கியழும் பாஸ்கரை சமாதானப்படுத்தும் மதனா, உதவி தேவைப்படின் தன்னை அணுகுமாறு சொல்லி அகல்கிறார். ஏற்கனவே தனது உறவுகளுக்கு மீள விண்ணப்பித்து விசாவைப் பெற்றுக் கொடுத்த அனுபவத்தில் பாஸ்கருக்கும் உதவ சம்மதிக்கிறார் அவர். தொடரும் உறவு நட்பாகி, பாஸ்கரின் மனதில் காதலாக பரிணமிக்க அதனை வெளிப்படுத்தினால் எங்கே மதனா தன்னை விட்டு விலகுவாரோ என்ற எண்ணத்தில் மௌனமாகிறார். இந்த நிலையில் மதனாவின் உறவுக்கார இளைஞர்களால் மதனாவுடனான பழக்கம் குறித்துக் கண்டிக்கப்படும் பாஸ்கரும், பாஸ்கரினால் அவரது நண்பர்களும் தங்களை அறியாமலேயே குழு மோதல்களுக்குள் இழுத்து விடப்படுகிறார்கள். பாஸ்கரின் நட்புக்குறித்து எச்சரிக்கப்பட்ட போதும் அவருக்கு உதவுவதில் உறுதியாக இருக்கும் மதனா விசாவுக்கான மீள் விண்ணப்பத்தை எழுதிக்கொடுப்பதுடன் இனித் தாமிருவரும் சந்திப்பது நல்லதில்லை எனவும், குடியுரிமை குறித்த முடிவைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் சொல்லி பாஸ்கரைப் பிரிகிறார். ஆனால் தன் காதலைத் தெரியப்படுத்தும் நோக்கில் மதனாவை சந்தித்த பாஸ்கரின் காதலை மறுக்கும் மதனா முகாமில் தனக்கு நேர்ந்த அவலத்தைச் சொல்லி தன்னை விட்டுப் போகும்படி சொல்கிறார்.

இருப்பினும் தன் காதலில் உறுதியாக இருக்கும் பாஸ்கர் தன்னை அழைத்து முடிவைச் சொல்லும்படி பிரிகிறார். இந்நிலையில் தம்மைத் துரத்தும் இளைஞர் குழுவைதனது பழைய எதிரகளாக அடையாளங்காணும் சபேசன். தன் காலுக்கு நேர்ந்த கதியையும் அதற்கான தனது பழிவாங் கலையும் பாஸ்கரிடம் சொல்லி உடனடியாக அந்த வீட்டை நோக்கிய பயணத்தைக் கைவிட்டுவிடுவதுடன் பாதுகாப்பாகத் திரும்ப வேண்டிய காரணங்களையும் சொல்லுகிறார். இருப்பினும் அந்த வீட்டை அடைந்துவிடுவது குறித்த தீவிரத்தில் இருக்கும் பாஸ்கர். சபேசனை வற்புறுத்திக் கெஞ்சி தன்னுடன் அழைத்துச் செல்கிறார். அவர்கள் இருவரும் பாதுகாப்பாக சென்றுசேர்ந்தார்களா?யாரைப்பார்க்க சென்றார்கள்? சபேசனால் பழிவாங்கப்பட்ட அந்த இளைஞன் யார்? அவருக்கும் மதனாவுக்கும் என்ன தொடர்பு? பாஸ்கருக்கு என்ன நடந்தது என்பதுதான் மீதிக் கதை.

குடியரிமைக்காக விண்ணப்பித்துவிட்டு, எப்போதாவது கிடைக்கும் வேலைகளைச் செய்து கொண்டு மாமாவால் ஒழுங்கு செய்யப்பட்ட வீட்டில் மச்சன்மார்களுடனும், நண்பனுடனும் தங்கியிருக்கும் புலம்பெயர்ந்த சராசரி தமிழ் இளைஞனாக அச்சொட்டாகப் பொருந்தியிருக்கிறார் பாஸ்கர். கடிதம் சொல்லும் செய்தியைக் கேட்டு நிலைகுலைவதாகட்டும், மதனாவுக்கு நேர்ந்த அவலத்தைக்கேட்டு கலங்குவதாகட்டும், உயிருக்குப் பயந்து ஓடுவதாகட்டும் தன் பாத்திரத்தின் கனதி உணர்ந்து கச்சிதமாக நடித்திருக்கிறார் பாஸ்கர், நண்பனின் சொல்லைக் கேட்டு அவனது உடைத் தெரிவுடன் மதனாவை சந்திக்க செல்வதும், அங்கே மதனாவின் கேலியில் நண்பனை மனதுக்குள் திட்டுவதும் நயம். "இஞ்சே, நான் இப்படிக் கதைக்கிறன் எண்டு என்னைத் தப்பா நினைக்க வேண்டாம், என்ன?" என்று பாஸ்கரை ஆரம் பத்தில் எச்சரிக்கும் பேச்சில், பாத்திர வெளிப்பாட்டில் மதனா சகோதரியாக, நண்பியாக, தினமும் சந்திக்கும் சாதாரண பெண்ணாக மனதில் பதிகிறார்.

ஆரம்பத்தில் மாமா வாகத் தோன்றும் அருணகிரி (லண்டன் அங்கிள் - படலைக் குப்படலை) அவர்களும், மதனாவின் மாமாவாக வரும்சிறி (அங்கிள்-படலைக்குப் படலை) அவர்களும் தங்களுக்கேயுரிய தனித்துவத் துடன் திரையில் தோன்று கிறார்கள். மதனா வின் தாத்தாவாக வரும் ரகுநாதன் அவர்களது பங்கும் சிறப்பாக அமையப்பெற்றிருக்கிறது. பாஸ்கரை உருவேற்றி அனுப்பு வதாகட்டும், தனது ஆடையைப் போடச் சொல்லி வற்புறுத்துவதாகட்டும், மதனாவின் கதையைக் கேட்டுத் தன் அக்காவின் நிலையைச் சொல்லிக் கலங்குவதாகட்டும் தனது பாத்திரத்தை நன்றாக உள்வாங்கி நடித்திருக்கிறார் நண்பராக வரும் தயாளன். பாஸ்கரை மிரட்டுவதும், அவரைத் துரத்துவதுமாய் வரும் இளைஞர்கள் முதற்கொண்டு அனைவரும் தங்கள் பங்களிப்பை சிறப்பாக வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையில் இயக்குனரின் பாத்திரப்படைப்பு மற்றும் தெரிவு பாராட்டத்தக்கது.

கஜியின் இசையில், கவிநாத்தின் கமெராவில் விரைவாக திரையில் நகரும், "தீராநதி" சங்கரினால் எடிட் செய்யப்பட்டிருக்கிறது. சுஜித் ஜியின் உருவாக்கத்தில் ஒலிக்கும் 'அடிதடி வெட்டுக்குத்து" பாடலும், பாடல் காட்சியமைப்பும் அருமை. பிரணவனின் வரிகளில் ஒலிக்கும் பாடல் தாளம்போட வைக்கிறது. பாடல் காட்சி இயல்பாக, அழகாகத் திரையில் தோன்றுகிறது.



கூட்டாளி

உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களிடமிருந்து தமிழகச் சினிமாவுக்கு கிடைக்கும் பேராதரவு ஈழச்சினிமாவுக்கு கிடைக்காமல் போகின்றமை துரதிஷ்டவசமானதே.

ஈழத்து வாழ்வியலை யதார்த்தமாகப் பதிவு செய்துள்ளது "கூட்டாளி" திரைப்படம்,

இதுவரை தமிழகத்தில் வெளிவந்த சினிமாக் களில் ஈழப்பிரச்சினைகள் வியாபார நோக்கில் மட்டுமே தொடப்பட்டிருக்கிறதே தவிர ஈழப் பிரச்சினைகள் தொடர்பான சரியானதொரு புரிதல் ஏற்படவில்லை. ஈழத்தில் யதார்த்தமான சினிமா தயாரிப்பதற்கான எந்தவித புறநிலைகளும் இல்லை.

கூட்டாளி திரைப்படத்தில் சில காட்சிகள் பதிவு செய்யப்பட்ட விதம் கதைப்போக்கு என்பன யதார்த்தத்தை உணர்த்துகின்றன.

கூட்டாளி திரைப்படத்தினை இயக்கியுள்ள நிரோஜன் மக்களின் அவல வாழ்வை உலகின் கண்முன் காட்ட முயற்சி செய்திருக்கிறார்.

படத்தின் கதைவசனம், பாடலை வினுபாரதி எழுதியுள்ளார். இசை – நித்யன்கார்த்திக், ஒளிப்பதிவு – அகர் செங்குட்டுவன், எடிட்டிங் – மோகன், படத்தொகுப்பு – மோகன், சண்டை பயிற்சி – கஜினி குபேந்தர் மற்றும் எண்ணற்ற நடிகர், நடிகைகள் பங்கு பெற்றுள்ளனர்.



நினைவில் நீங்காத நட்சத்திரம்

திரன்

இழந்துவிட்டது ஒரு அரும்பெரும் கலைஞரை என்பதை இன்னும் நாம் உண்மையாக உணரவில்லையோ என்ற ஐயம் தோன்றுகிறது. ஏனெனில் பாலுமகேந்திராவின் மறைவின் பின் அடுத்து நாம் இழந்துவிட்ட ஈழத்துக்கலை ஆளுமை கே.எஸ். பாலச்சந்திரன். அண்மைக்காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் மேடைகளிலோ, திரைப் படங்கள், மற்றும் தொலைக்காட்சிகளிலோ தோன்றி நடிப்பதைத் தவிர்த்து வந்திருந்தால் பொதுமக்கள் மத்தியில் அவரின் இழப்பின் தாக்கம் உடனடியாக உணரப்படவில்லை. ஆனாலும் இது எத்தகைய வெற்றிடத்தை எம் கலைப் பரப்பில் ஏற்படுத்திச் சென்றிருக்கிறதென்பதை உணர்ந்தவர்கள் அவரின் வழிப்படுத்தலையும் ஆலோசனைகளையும் நாடி நின்ற கலைஞர்களே.

ஆனால் நாம் உண்மையில் இழந்தது இவற்றையல்ல. அவர் தான் சுகயீனமுற்றிருந்த வேளையிலும் நிறையவே எழுதியபடி இருந்தார். அவர் ஓய்ந்திருந்து எழுத ஆரம்பித்ததுமே, அவருள் மறைந்திருந்த இலக்கிய ஆறிமை பளிச்செனப் புலப்படத் தொடங்கிற்று. அவர் எழுதிய முதலாவது நாவல், “கரையைத் தேடும் கட்டுமரங்கள்” 2009ம் ஆண்டுக்கான அமுதன் அடிகள் இலக்கியப் பரிசைப் பெற்றது.

நாம் இழந்தது கலைத்துறையைச் செப்பனிடக் கூடிய அவரது எழுத்துக்களையே, காலம் அவரை இன்னும் சில காலம் நமக்குத் தந்திருக்குமேயானால் அவரிடமிருந்து அந்தத் தேடிக் கற்ற அரிய ஞானத்தை எமக்கு நிட்சயம் முழுமையாகத் தந்துவிட்டே சென்றிருப்பார். ஏனெனில், அவர் தன் உடல் நிலையைப் பொருட்படுத்தாத படைப்பாளி. தன் இறுதி நாட்களிலும், மறைந்த பாலுமகேந்திரா பற்றி ஒரு கட்டுரையை எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் கண் மூடினார்.


இவரிடம் பன்முகப்பட்ட ஆளுமை இருந்தது. நடிப்பென்று எடுத்தால், நகைச்சுவையில் ஒரு உச்சத்துக்குச் சென்றாரென்றால், குணசித்திர நடிப்பிலும் மறு உச்சத்தை வெளிப்படுத்தியிருந்தார். நெறியாள்கையில் தயாரிப்பில் அவரின் திறமை பளிச்சிட்டது. எழுத்துத்துறையென்றால், நாடகங்கள், சினிமாத்துறை என்பவற்றைத் தாண்டி, சிறுகதைகள், நாவல் ஏன் விளையாட்டுத்துறை பற்றிக்கூட எழுதியிருந்தார். இவர் ஒரு சிறந்த கிரிக்கட் நேர்முக வர்ணனையாளர்கூட. இதைவிட அவர் ஒரு ஓவியராகவும் இருந்தார்.

இவரிடமிருந்த முக்கியமான பண்பு, வாசிப்பு. இறுதிக்காலம்வரை வாசித்தார். அதனால் அவர் கால மாற்றத்துக்குத் தகுந்தாற்போல் தன் படைப்பாற்றலை புதுமைப்படுத்திக்கொண்டது மட்டுமின்றி, புதிய தலைமுறையினரிடமும் தலைமுறை இடைவெளியின்றிப் பழகக்கூடியவராக இருந்தார். புதுமைக்கும் பழமைக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு ஈடுகொடுத்து உடன்பாடுகளை இனம்கண்டு செயற்பட்டார். இளையவர்கள் கூறும் மாறுபட்ட விடயங்களைச் செவிமடுத்துக் கேட்டு, சிந்தித்து, மீளாய்வு செய்யத் தயங்க மாட்டார்.

இவர் இன்னும் ஒரு 15 வருடங்கள் வாழுவாராயிருந்திருந்தால் அந்த 15 வருடக் கலையிலக்கியத் துறையின் வளர்ச்சி மட்டத்தில் தன்னை இருத்திக் கொள்ளக்கூடிய தமைமையை இன்றே கொண்டிருந்தார். ஆனால் அதை அவரால் இன்றே வெளிப்படுத்த முடியாதிருந்தது. காரணம், எம் புலம்பெயர் சமூகத்துப் பொது ரசனை வேண்டி நின்ற ரசனைத் தரத்துக்கே அவரால் வழங்கவும் முடிந்தது. ஆனால் அவர் அதுகுறித்து கவலை கொள்ளவில்லை. அவர் மக்களின் ரசனையைத் தாண்டி தன் வித்தகத் திறமையை நிலையூன்ற விரும்பவுமில்லை. “அண்ணை றைட்”டுக்கு கரகோஷம் போட்டுக் குதூகலிக்கும் ஜனத்திரளின் எதிர்பார்ப்பை ஏமாற்ற விரும்பவில்லை. அதனால் ஜனங்கள் திரும்பத் திரும்ப வேண்டும் போதெல்லாம் அதையே சலிக்காது திரும்பத் திரும்பச் செய்து காட்டுவதில் மகிழ்ச்சி கண்டார்.

இவரின் மற்றொரு சிறந்த முன்னுதாரணமான பண்பு, தான் எடுத்துக்கொண்டது ஒரு சிறிய விடயமாக இருந்தாற்கூட அதை அதி சிரத்தையுடன்ஏற்று, அதனை மிகச் செப்பமாக மேற்கொள்ளக்கூடிய அத்தனை சிரத்தையையும் எடுப்பார்.

அவரை ஒருமுறை 15 நிமிடங்கொண்ட பாப்லோ நெருடாவின் பாத்திரத்தில் நடிக்கக் கேட்டிருந்தனர். அதற்காக அவர் சிலிநாட்டின் புரட்சி பற்றிய வரலாற்றை ஆராய்ந்து, அங்கு பாப்லோ நெருடா என்ற கவிஞனின் காத்திரம் மிக்க பாத்திரத்தைப் புரிந்துகொண்டு, அவரின் கவிதைகளைப் படித்து, அவரின் உணர்வுகளை உள்வாங்கி, அவரின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தேடிப் பெற்று, அவர் வாழ்ந்த வீடு, சூழல், அமைப்பு என்று எல்லாத் தரவுகளையும் இணையத் தளங்களில் பெற்றுத் தன்னைத் தயாராக்கிக்கொண்டார். அந்த நாடகம் எத்தனை நிமிடம், அதை எத்தனை பேர் பார்க்கப்போகிறார்கள் என்பதற்கு அப்பாற்பட்டு, பாப்லோ நெருடாவைத் தான் சரியாகப் பிரதிமைப்படுத்த வேண்டுமென்பதே அங்கு அவரது முனைப்பாக இருந்தது.



இது நடிப்பில் மட்டுமல்ல, அவரது ஒவ்வொரு துறையிலுமிருந்தது.

எமக்காய் வாழ்ந்த இனிய கலைஞனே, நீ பதித்த சுவடுகள் நெடுநாள் நிலைத்திருக்கும்!

❖

ராப் இசை – ஒரு கலகத்தின் குரல்!

இதென்னடா ராப்! பச்சைத் தூஷணத்தை அடைமழை போலக் கொட்டித் தீர்ப்பதும் ஒரு இசையா? இதற்கு உலகெங்கும் ஒரு ரசிகர் கூட்டம். சுடச்சுட வில்படும் அல்பங்கள் ஒரு தொகை!

இப்படித்தான் எம்மில் பலர் இந்த ராப் இசை பற்றி எண்ணிக்கொள்கிறோம். அதில் தப்பேதும் இல்லை. ராப் என்ற பெயரில் நம் காதுகளில் புளிக்கும் இசை அப்படித்தான் உள்ளது. தூஷணத்தைக் கொட்டுவது இங்கே ஒரு பெருமை வீடியோக்களில் பெண்களின் பிட்டங்கள், மார்புகள் இன்னும் பாலுணர்ச்சியை வக்கிரமாக வடிக்கும் கெமராக் கோணங்கள் என்று மற்றவர்கள் இல்லாத வேளையில் மட்டும் ரசிக்கத் தூண்டும் சரக்காக இதை நாம் கண்டு கழித்துள்ளோம்!



ஆனாலும் இதற்கு அப்பால் இந்த ராப் இதற்கு ஒரு அரசியல், ஒரு கலாச்சாரம் என்பன இருப்பது எம்மில் பலருக்குத் தெரியாத சமாச்சாரம். இது உண்மையில் ஒரு கலகத்தின் குரலாப் பிரசவித்த கலை ஒடுக்கப்படுவது, அடக்கப்படுவது, உதாசீனப்படுத்தப்படுவது, அசிங்கப்படுத்தப்படுவது என்பவற்றை எதிர்க்கும் வடிவமாகவே இது ஆபிரிக்காவில் பிறப்பெடுத்தது. இந்தப் புறக்கணிப்புகளைச் சாடும் நக்கல்கள் நளினங்கள் கொண்ட இடக்குமுடக்கான தொடர் வசனங்களே ஒரு சந்தத்தில் போர்க்குணம் கொண்ட உள்ளங்களில் பச்செனப் படிந்து, தெருவோரம் நடைபோடும் உதட்டுப்பாடலாகப் படு வேகமாகப் பரவியது.

ஆனால் எப்பொருள் இப்படிப் பரவினாலும் எம் வியாபாரச் சந்தை விட்டு வைக்குமா? உடனே அதை மேற்கத்தேய உலகம் பொறுக்கி எடுத்துக்கொண்டு தங்கள் உள்ளக்கிடக்கைகளை, கோப தாபங்களை, ஆபாசங்களை. வக்கிரங்களைக் கொட்டித் தீர்க்க உகந்த வடிவமாக மாற்றிக்கொண்டது.

இப்படிக் குப்பையாகக் குவிந்துவிட்ட இந்த ராப்புக்கு நடுவே, பொறுக்கியெடுக்கக்கூடிய பல உன்னத படைப்புகளும் வரத்தான் செய்திருக்கின்றன. இது எங்கேயும் உண்மைதானே? எம் சினிமாப் பாடல்களைப் பாருங்கள்! ஆபாசங்கள் மொய்த்தாலும் நல்ல பல பாடல்கள் இருக்கத்தானே செய்கின்றன.

ஆனாலும் ட்ரெண்ட் என்ற ஒன்று எங்கேயும் போல் இந்த ராப்பிலும் வந்து பிடித்துக் கொண்டது. லும்பன் கெரக்டர்களின் மன உளைச்சலுக்கு ஒருவகை ஆசுவாசத்தைத் தருவதாக உருவான ராப் ரெண்ட் இப்படியான பாடல்களாகத் தொடர்ந்தது.

“:பராரி காரை ஓட்டிக்கிட்டு போனப்போ
அவளப் பார்த்தேன் - அவ என்னப் பார்த்தா.
ரெண்ணுபேரும் கட்டிக்கிட்டு உருண்டோ
எதிரி கேங்கு அடுத்த நாளு என்னைப் போட அலைஞ்சுது
ரெண்டு புல்லெட் உரசிகிட்டு போக
ஒண்டு பாஞ்சுது உள்ள
ஹாஸ்பிடல்ல கிடந்தப்போ
உள்ளே ஒரு ஒளி தெரிஞ்சுது
வெளியே வந்து பார்த்தா எதுவுமே இல்ல
அந்தத் தேவடியாளும் என்னை விட்டுப்புட்டு ஓடிட்டா...

முதலில் அதிர்ச்சி தரும் உடைந்த உண்மைகளாக காதில் பாய்ந்த இந்தவகைப் பாடல்கள் பின்னர் எப்ப பார்த்தாலும் இப்படியே பாடுவது என்றாகிப்போக எரிச்சல் தருவதாக மாறிப்போனது.

2000ற்குப் பின் ராப் மிக வறட்சி கண்டுவிட்டதாகத் தோன்றுகிறது. ராப்பின் அடிநாதம் அதன் இசையிலன்றி வரிகளில்தான் இருப்பதால், அவை ஏதோ ஒரு உணர்வுச் சித்திரத்தை உண்டுபண்ணும் உள்ளுறைந்த கதையைக் கொண்டிருப்பது ஒரு தேவையாகிவிட, அத்தகைய கதைகளின் வறட்சி தான் ராப்பின் வறட்சியாகவிட்டது. கதையின் வறட்சியை தூஷணங்களாலும், திட்டுக்களாலும், வக்கிரங்களாலும் நிரப்பி, கண் பிதுங்கிப் பார்க்க வைக்கும் வீடியோ ஆபாசங்களால் மெழுகிவிடலாம் என்பதுதான் இன்றைய ராப்பர்களின் நினைப்பாகத் தெரிகிறது. இருப்பினும் ஒரு சில சில நல்ல படைப்புகள் “வன்ஸ் இன் எ புலூ மூன்” போல் வந்து போகத்தான் செய்கிறது.

காலா காலத்தில் ராப் லெஜண்டுகள் என்று சொல்லக்கூடிய பலர் வந்துபோயுள்ளார்கள். அவர்களில் எண்பதுகளில் வந்த ராகிம், ஐக்.டி, பிக் பன், தொன்னூறுகளில் வந்த நாஸ், என்பவர்களைச் சுட்டிக்காட்டலாம்.

(தகவல்களுக்கான நன்றிக்குரியவர்கள் : கொழந்த) ❖

தாழ்வு மனப்பான்மையை நீக்கும் பயிற்சியாக டீச்சர் மாணவர்களைப் பார்த்துக் கூறினார், “உங்களை நீங்களே முட்டாளென்று யாராவது நினைத்தால் எழுந்து நில்லுங்கள்.” யாரும் அப்படித் தங்களை முட்டாளென்று நினைக்க மாட்டானென்று எண்ணியிருந்த டீச்சர் திகைத்துப்போனார். ஒருவன் எழுந்து நின்றான்.

அவர் அவனைப்பார்த்து, “அப்படி உன்னை நீயே முட்டாளென்று நினைக்காதே மகனே. உன்னையே நீ நம்பாவிட்டால் வேறு யார் நம்புவார்?” என்றெல்லாம் தன்னம்பிக்கையைப் போதித்துவிட்டு, “இப்போது நீ முட்டாளில்லை, கதிரையில் இரு” என்றார். அதற்கு அவன், “இல்ல, நீங்கள் தனிய நிற்கிறீங்க... அதுதான் துணைக்கு எழும்பி நின்றேன்” என்றான்.





மேஷம்

குருப்பெயர்ச்சி
பலன்களும் – பரிகாரங்களும்

தெய்வீக சிந்தனையும், தெளிவான எண்ணமும், பகட்டான தோற்றமும் கொண்ட மேஷ இராசி நண்பர்களே,

உங்களின் இராசியின் அதிபதி செவ்வாய் என்பதால் விடாப்பிடியாக போராடி மேலும் தங்களின் காரியத்தில் வெற்றி பெறும் குணம் உள்ளவர்களாகத் திகழ்வீர்கள். பேச்சிலே மற்றவர்களை வசீகரித்து இழுக்கும் மனப்பான்மை உங்களுக்கே உரிய ஒன்றாகும். உங்கள் இராசிக்கு முயற்சி, முன்னேற்றம், வீரியம், விஜயம், தைரியம், தன்னம்பிக்கை, வெற்றி ஆகிய ஸ்தானமான 3இல் இதுவரை மிதுன இராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 4ஆம் வீடான கடக இராசியில் சஞ்சரிக்க உள்ளார். 4ஆம் இட வீடு, வாகனம், வண்டி சுகம், சௌக்கியம், தாய், கலை, வியாபாரம், வளர்ப்பு பிராணிகள் ஆகியவற்றைக் குறிக்கும். முயற்சியையும், அதைத் தொடர்ந்து பல வெற்றிகளையும் அளித்த குருபகவான் 4ஆம் வீட்டிற்கு இடம்பெயர்ந்து நல்லதை செய்வாரா? நலன்களைத் தருவாரா? என்று விரிவாகக் காணலாம்.

குரு 4இல் சஞ்சரிக்க உடல்நிலையில் பிரச்சனைகள் உருவாக அதிக அளவில் வாய்ப்புகள் உண்டு. "குரு தான் இருக்கும் இடத்தைக் கெடுக்கும்" என்பது பழமொழி எனவே சுகம் கெடும். பொருளாதார நிலையில் பணத் தட்டுப்பாடு ஏற்படும். ஏற்கனவே இருந்த சனிபகவானும் இராகுவும் இணைந்து 7இல் நின்று எட்டாக்கனியாக இன்ப வாழ்வினைக் கெடுத்துக்கொண்டு இருக்கின்றன. கோர்ட், கேஸ், வம்பு, வழக்குகள் என பல்வேறு விஷயங்களில் சிக்கி தவித்துக்கொண்டிருக்கும் இந்த நிலையில் குருவின் 4ஆம் இட சஞ்சாரம் என்னவாறு விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்ற அச்சுறுத்தலே மேலோங்கி நிற்கின்றது. ஆனாலும் 4இல் உள்ள குரு தனது 5ஆம் பார்வையாக 8ஐ பார்த்து விடுவதால் ஓரளவு விடிவுகாலம் வந்துவிடும் என எண்ணலாம். வம்பு, வழக்குகள் ஆகியவை தீரலாம். மனதில் புதியதாய் ஓரளவு நம்பிக்கை, தைரியம் பிறக்கும். உற்றார் உறவினர்களிடையே சற்று உஷாராக இருப்பது நல்லது. கொடுக்கல், வாங்கல் ஏகப்பட்ட சிக்கல்கள் உருவாகும். பணத்தட்டுப்பாட்டால் பாடாத பாடுபட நேரிடலாம். கொடுத்த பணத்தைத் திரும்பப் பெற அதிக முயற்சி செய்யும் நிலை உருவாகும். எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருப்பது கூடுதல் நலமே.

அம்மாவின் உடல் நலனுக்காக மருத்துவச் செலவு செய்ய நேரிடும். வீடு, மனை வாங்கும் முயற்சியில் அதிக முயற்சி தேவைப்படும். எனவே வீடு, வாகன வகையில் இருப்பதைக்கொண்டு திருப்தி பட்டுக்கொள்வதே நல்லது. முடிந்த அளவுக்கு நிதானமாக யோசித்துப் பேசுவது நன்மையினைத் தரும். வாக்கு கொடுத்துவிட்டு அதை காப்பாற்ற முடியாமல் தவிக்க நேரிடலாம். புதிய, புதிய வழக்குகள் வந்து மறையும்.

முயற்சிகளில் தடைகளை சந்திக்க நேரிடும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி சண்டை, சச்சரவுகளும், வாக்குவாதமும் ஏற்படலாம். ஒருவொருக்கொருவர் விட்டுக்கொடுத்தால் நலம் பெறலாம். இனி குரு தனது 5, 7, 9 பார்வையில் தருகின்ற பலன்களைக் காணலாம்.

குரு 8இல் படுவதால் ஏற்படும் பலன்கள் : -

குரு பார்க்க கோடி தோஷம் நிவர்த்தி என்னும்படி தனது 5ஆம் பார்வையாக 8ஆம் இடமான விருச்சிக இராசியை பார்ப்பதால் தொல்லைகள் நீங்கும். துயரங்கள் தூர ஓடும். நல்ல செய்திகள் வரும். நண்பர்களைக் கொண்டு பல வம்பு வழக்குகளை முடிப்பீர்கள். பணத்தட்டுப்பாடு ஓரளவு குறையும். நீண்டகாலமாக இழுத்து வந்த பிரச்சினைகள் நீங்கும். மாணவர்கள் கடினமாகப் படித்தால் மெய் வருத்தக்கூலி தரும். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் உயரும். செய்யாத குற்றத்திற்காக தண்டனை பெற்றவர்கள் உரிய நியாயம் கிடைத்து புகழ் நிலையினைப் பெறுவார்கள்.

கண்டகச் சனியால் இதுவரை என்னென்ன அவதிகள் வந்ததோ அது அத்தனையும் இரட்டிப்பு நன்மைகளை பெற்றுத் தரும். ஆன்மீகத்தில் அதிகப்பூர்வமான நாட்டம் ஏற்படும். அரசாங்கத்தின் மூலம் சிறு சிறு உதவிகள் கிட்டும். டிசம்பர் 2014 முதல், அஷ்டமச்சனி வருவதால், சற்று கூடுதல் எச்சரிக்கை தேவை.

குரு பார்வை 10இல் படுவதால் ஏற்படும் பலன்கள் : -

தொழில் ஸ்தானமான 10ஆம் இடத்தை குருபகவான் கடக இராசியில் இருந்துக்கொண்டு தனது 7ஆம் பார்வையாகப் பார்த்தால் தொழில் விருத்தியாகும். விவசாயம் செழிக்கும். வியாபாரம் வெற்றி பெறும். பணியாளர்கள் பக்குவமாக நடந்துகொள்வார்கள். கூட்டுத் தொழில் மூலம் நல்ல பலன்களைக் காண்பீர்கள். பட்ட கடனை அடைக்க உத்தியோகத்தில் இருந்து வந்த அவல நிலை நீங்கும். வீண் பழி விலகும். மதிப்புகள், மரியாதைகள் உயரும். புதிய புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் நல்ல நிலை ஏற்படும். மேலும் இராசியில் உள்ள கேது பல வழிகளில் வம்புகளைக் கொண்டு வந்து சேர்ப்பார். ஜாமீன் கொடுப்பதை தவிர்க்கவும். முன்பின் தெரியாதவர்களிடம் முடிந்த அளவு இரகசியம் காக்கவும், எதிரிகள் புதிய புதிய வழிகளில் உங்களை வீழ்த்த வருவார்கள். கிரக பலம் சரியில்லை என்றாலும், தெய்வ பலத்தால் அனைத்து காரியங்களையும், வருகின்ற இன்னல்களையும் முறியடிக்கலாம். தனியாகச் சென்று வழிபடுவதைக் காட்டிலும் கூட்டு வழிபாட்டில் கலந்துக்கொள்வது பல நன்மையினைத் தரும்.

பிள்ளைகள் கல்வியில் பின்தங்கலாம். அவர்களுக்கு தக்க அறிவுரைகள் கூறி வழிகாட்டி முயல்வீர்கள். அவர்களின் எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். எந்தவொரு புது முயற்சியானாலும் ஒரு முறைக்குப் பல முறை சிந்தித்து முடிவெடுப்பது நலம் அலைச்சலால் அடிக்கடி உடல் அசதிக்கு ஆளாவீர்கள். சிலருக்கு உஷ்ணம் வயிறு சம்பந்தமான வியாதிகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது. கடக இராசியில் குருபகவான் உச்சபலம் பெறுவதாலும் அவை மேஷ இராசிக்கு 9, 12ஆம் அதிபதியாக இருப்பதாலும் ஓரளவு பிரச்சினைகளை சமாளிக்க வழி பிறக்கும். 7இல் உலவும் சனியும் சில சோதனைகளை ஏற்படுத்தும். டிசம்பர் 2014இல் சனியும் 8இல பெயர்ச்சியாகி அஷ்டம் சனியாக மாறுவதால் சோதனை காலம் தான். அதே சமயம் குரு தனது 5ஆம் பார்வையாக சனியை பார்த்துவிடுவதால் ஓரளவு சமாளிக்க முடியும்.

குரு பார்வை 12இல் படுவதால் ஏற்படும் பயன்கள்

கடக இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் தனது விஷேச பார்வையாக 9ஆம் பார்வையாக 12ஆம் இடமான மீன இராசியினை பார்ப்பதால் சுப விரையங்களே ஏற்படும். வெளிநாட்டின் மூலம் பல நல்ல தகவல்கள் வரும். நித்திரை சுகம் தரும். 12ஆம் இராசியினைப் பார்ப்பதால் ஓரளவு கணவன் / மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும். நல்ல நண்பர்களால் ஓரளவு நன்மையே கிட்டும்.

குருபகவான் 19.6.2014 முதல் 3.7.2014 வரை புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:-

உடல்நிலையில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் மாற்றம் வரலாம். மேலதிகாரிகளிடம் ஒத்துழைப்பது நல்லது. இடமாற்றம் ஏற்படும். பக்தி கூடும். சுற்றுலா செல்ல வாய்ப்புகள் அமையும்.

குருபகவான் 4.7.2014 முதல் 2.9.2014 வரை பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :-

கொடுக்கல் - வாங்கல் சீராகும். படிப்பில் மேன்மை கூடும். வண்டி வாகனங்களைப் பராமரிப்பது நல்லது. வீடு, வாங்க, வீடு கட்ட சற்று ஆலோசனை தேவை. கணவன் - மனைவி அனுசரித்துச் செல்வது நலம். தாயாரின் ஆரோக்யத்தில் அதிக அக்கறை தேவை.

குருபகவான் 3.9.2014 முதல் 7.12.14 வரை ஆயில்யம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் : -

நேர்முக - மறைமுக எதிர்ப்புகள் ஏற்படலாம். முடிந்த அளவு வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். வம்பு, வழக்குகள் ஒரு முடிவுக்கு வரும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலில் சற்று மந்தம் ஏற்படும். வாயு தொடர்பான உபாதைகள் வந்தால் உற்ற மருத்துவ ஆலோசனை அவசியம்.

குருபகவான் 8.12.14 முதல் 8.4.15 வரை வக்ர கதியில் சஞ்சரிக்கும் காலம் : -

முன்னேற்றம் ஏற்படும். முயற்சிகள் வெற்றியாகும். புதிய தெம்பு பிறக்கும். புத்துணர்ச்சி ஏற்படும். தொழில் சிறக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். ஏற்றம் பிறக்கும். மாற்றம் வரும். மகிழ்ச்சி வரும். மொத்தத்தில் நல்ல காலம் இது.

நட்சத்திரப் பலன்கள்

அசுவினி 1, 2, 3, 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்

அசுவினி நட்சத்திரத்தின் அதிபதி கேது. உங்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு குரு பெயர்ச்சியின் மூலம் தக்க முன்னேற்றமானது ஏற்படும். அடிக்கடி வெளியூர்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். சித்தர்களின் தரிசனம், மகான்களின் ஆசிர்வாதம் என சிறப்பாக கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். உத்யோகத்தில் உயர்பதவி கிட்டும். தொந்தரவுகள் தொழிலில் நீங்கும்.

பரணி 1, 2, 3, 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்

பரணி நட்சத்திரத்தின் அதிபதி சுக்கிரன். காம, களத்திரகாரகன். 2, 7ஆம் இட அதிபதி சுக்கிரன். மாதக்கோள், மழைக்கோள், சுக்கிரன். இந்த குருவிற்கு சுக்கிரன் பகை என இந்த குருபெயர்ச்சி 4இல் சஞ்சரிப்பது நலமே தரும். சந்திரன் வீட்டில் சஞ்சரிக்கும் குருவால் புதிய புதிய வாய்ப்புகள் கூடும். புதிய வழிகள் பிறக்கும். அதிக ஆடம்பரத்தை விரும்பி கேளிக்கை சுற்றுலா சென்று மகிழ்வார்கள். வசதி வாய்ப்புகள் கூடும். தொழில் சிறக்கும் உத்யோகத்தில் புதிய, பதவி கிட்டும். வீண்பழி விலகும். ஆரோக்யம் சீர்படும். புதிய புதிய சிந்தனைகளால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும்.

கார்த்திகை 1ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் : -

கார்த்திகை நட்சத்திரத்தின் அதிபதி சூரியன் உங்கள் இராசிக்கு 5ஆம் இடமான பூர்வ புண்ணியத்தின் அதிபதி குருவிற்கு நண்பன். குரு, சூரியன், சம்பந்தம் சிவராஜ யோகம். அரசியலில் இருப்பவர்களுக்கு செல்வாக்கு, மரியாதைகள் கூடும் தந்தை வழியில் வருகின்ற நலன்கள் அனைத்தும் பெறலாம். தலைமை பதவி வகிக்க நேரிடும். மருத்துவச் செலவுகள் குறையும். கடன் சுமை குறையும். பணப்புழக்கம் கூடும். ஏமாற்றங்கள் தவிர்க்கப்பட்டு ஏற்றம் உண்டாகும். எண்ணியபடி காரியங்கள் அனைத்தும் ஈடேறும்.

பரிகாரம்

லால்குடி அருகில் பெருவன நல்லூரில் உள்ள நந்தி அடிகள் ஜீவசமாதியைத் தரிசனம் செய்யவும், நல்ல நிலை ஏற்படும். வியாழன்தோறும் குரு கவசம் படிக்கவும்.

காதல் பண்ணப் பழகலாமா? அநுபவஸ்தனின் அட்வைஸ்!



காதலிக்க விரும்புபவர்கள் கொஞ்சம் இதை வாசித்துவிட்டு ஆரம்பியுங்கள். காதலித்து ஏமாந்தவர்கள், தோற்றவர்கள், விரக்தியின் விழிம்புக்கே சென்று தற்கொலை செய்ய நினைத்து, அப்படிச் செய்தபின் ஏமாற்றியவள் துடிப்பாளா என்பதை இருந்து பார்க்க முடியாதே என்ற ஒரே காரணத்துக்காக அந்த எல்லையைத் தாண்டாதவர்கள் என்ற அனைத்து வகையறாக்களும் இதைப் படியுங்கள். தப்பு எங்கே நடந்தது என்பதைக் கண்டுகொள்ளவாவது இதைப் படியுங்கள். ஓசி அட்வைஸ் கொடுப்பதற்கு ரெடியாயிருக்கும் ஒரு தொகை நலன் விரும்பிகளும் இதைப் படித்துவிட்டு சொந்தச் சரக்கென்று சொல்லாமல் சொல்லிக்கொண்டால்கூட கேட்பவன் பயனடைவான்! வாருங்கள் காதல் படிப்போம்!

சரி! காதல்!

"மண்ணில் இந்தக் காதலின்றி யாரும் வாழ்தல் கூடுமோ... எண்ணம் கன்னிப் பாவையின்றி ஏழு சுரம்தான் பாடுமோ..." வரதராஜன் எழுதிய எஸ்பிபியின் மூச்சுவிடாத பாடல் வரி ஞாபகம் வருகிறது. காதல் யாரை விட்டது? ரம்மியமான அனுபவமல்லவா அது?

முற்றும் துறந்த முனிவர்கள் தொடக்கம் எல்லோரும் பாடிவிட்டுப் போன அது நிட்சயமாக நல்ல விடயம்தானே? அப்படியிருக்க, இதில் ஏன் இத்தனை சண்டை சச்சரவு ஏமாற்றும், துரோகம், தோல்வி எல்லாம்? எதுவாகிப் போகட்டும். அது எனக்கென்று வரும்போதுதான் ஏன் இத்தனை கோணலாகிப் போகிறது? இல்லை, எல்லோருக்குமே அது அப்படியா?

மண்டையைப் போட்டுப் பிய்த்துக்கொள்கிற இந்தக் கேள்விக்கு எத்தனை தலைமுடியைப் பிடுங்கினாலும் பதில் மட்டும் கிடைக்காமல் ரொம்பப் பேர் அலைகிறார்கள். ம்! பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்னொரு பக்கத்தில், அந்த நிலைக்குப் போகா இன்னும் சிலர் உல்லாசமாகப் படகோடிக்கொண்டிருக்கிறார்கள் - காதல் கடலில்!

இதில் *"உன் பேரைச் சொல்லும்போதே உள்நெஞ்சில் போராட்டம், உன்னோடு வாழத்தானே உயிர்வாழும் போராட்டம்..."* என்ற ஆழ்ந்த காதல் உணர்வுடன் பாடுபவர்களும் உள்ளார்கள். *"ஹேய் பேபி என் அல்பம் நீ, ஹேய் பேபி உன் மஜே நான்...."* என்று தொடங்கி *"வண்டே மட்டும் கேள் பிரன்டாக வாறியா?"* என்று கேட்பவர்களும் உள்ளார்கள்.

இந்தக் காதல் தரும் உணர்வில் மட்டும் என்னமோ இருக்கிறது. அது உணர்வா? இல்லை உணர்ச்சியா? உடலும் பரவசித்து உள்ளமும் பரவிக்க வைக்கும் இது இரண்டுமே சேர்ந்த மயக்கம்!

ஒரு இளம்பெண்ணும் ஒரு வாலிபனும் இந்தக் காதலால் பிணைக்கப்பட்ட கணமே ஏதோ வேறு மனிதர்கள்போல், இல்லையில்லை, மனிதர்களைத் தாண்டிய - குணா படத்தில் கமல் *"மனிதர் உணர்ந்துகொள்ள இது மனிதக் காதல் அல்ல"* என்று கூவுவதைப்போல்... - யாரோவாக ஆகிவிடுகிறார்கள்.

காதலியின் கையைப் பிடித்து கடற்கரையில் நடந்தாலும், ஆயிரம்பேர் கொண்ட சேனையை அடித்து விழுத்தும் வீரம் வந்துவிட்டதுபோல் நெஞ்சை நிமிர்த்திக் கொள்கிறார்கள்.

தனித்து சோலையொன்றில் அவள் மடியில் தலை சாய்த்து ஆகாயத்தைப் பார்க்கும்போது மனப் பாரமெல்லாம் எங்கோ வடிந்தோடிவிட்டதுபோல் மிதக்கிறார்கள்.

பெண்களும் அப்படித்தான். அவன் நெஞ்சில் சாய்ந்தால் சொர்க்கமென்றும், அவன் அருகே இருக்கும்போது உலகில் எதுவுமே தேவையில்லையென்றும் எண்ணி மருகுகிறார்கள். *"உருகுதே மருகுதே, ஒரே பார்வையாலே, ஒலகமே சுழலுதே ஒன்னப் பார்த்ததாலே...."* என்ற வெய்யில் படப் பாடல்போல!

இதையெல்லாம் ஏற்படுத்துவது எது? காதல் என்ற அந்த சமாசாரத்துள் உள்ளுறைந்து நின்று இப்படிப் பாடாய்ப்படுத்துவது எது?

இந்தக் கேள்விக்கு விடை தேட முயன்றால் நாம் தவிர்க்க முடியாமல் காமம் பற்றியும் மோகம் பற்றியும் ஒமோன்கள் பற்றியும் பருவ நாட்டம் பற்றியும் குடைந்து பார்க்கத்தான் வேண்டியிருக்கும். அந்தக் குடைதலுக்கு இது தருணமல்ல. அதற்கு காதல் பற்றிய புரிதல் எமக்கு இன்னும் தேவை. அப்புரிதலோடு குடைந்தால்தான் நாம் பக்குவப்பட்ட மனதோடு அவற்றைப் பார்க்கலாம்.

சரி, என்னத்தைப் புரிவது? இது நல்ல கேள்வி. இப்படி ஆரம்பிக்கலாம் இதை. எம் காதல்கள் பொதுவாக எப்படி ஆரம்பிக்கின்றன? ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டா, இல்லை, முதலில் காதலில் விழுந்துவிட்டு அதன்பின் புரிந்துகொள்ள விளைவதாகவ? இல்லையேல், புரிதல் கிரிதல் எதுவும் இல்லை, ஜஸ்ட் காதல், அவ்வளவுதான் என்றா?

மூன்று விதத்திலுமே காதல் மலர்கிறது என்பதே உண்மை. ஆனால் உங்களைக் கேட்டால் புரிந்துகொண்டு காதலிப்பதுதான் சிறந்ததாகச் சொல்வீர்கள் இல்லையா?

அப்படி நிகழ்வது சொற்பமான காதல்களே! ஒருவரின் வாழ்க்கையை, அதிலுள்ள இன்ப துன்பங்களை, நன்கு தெரிந்துகொண்டு, அவரின் எண்ணங்களை, ரசனைகளை, ஏன் குறை நிறைகளையும் கூடப் புரிந்துகொண்டு, அவற்றோடு சேர்ந்தே அவரைக் காதலிக்கும் பக்குவம் சிலருக்கே உண்டு.


அதோடு அப்படி ஒருவரை ஆழமாகப் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பமும் பலருக்கு வாய்ப்பதில்லையே! ஒரே சூழலில் வாழ்ந்து, ஒருவர் துன்பத்தில் மற்றவர் பங்கெடுத்து, உருவ அழகைத் தாண்டி உள்ளத்தின் அழகைக் கண்டு அதில் லயித்துக் காதலிப்பது என்பது ஒரு அற்புதமான ஆத்மார்த்த மான அனுபவம்தான்!

ஆனால் ஒரு ரெயிலில் பயணம் செய்யும்போது எதிரே இருக்கும் அழகான பெண்ணின் முகத்தைப் பார்க்க எங்கள் கண்கள் ஏன் தானே வட்டமிடுகின்றன? ரெயில் பயணத்தில் ஒரு காதல் இழுக்கும்போது, இல்லை, நான் உள்ளத்தைப் புரிந்துகொண்டுதான் காதலிப்பேன், போ என்று எந்த வாலிப மனது தள்ளிவிடுகிறது?

எனவேதான் பெரும்பாலானோர், காதலைக் கண்டவுடன் உடனே அதற்குள் விழுந்து விடுகிறார்கள். விழுந்த பின்தான் புரிந்துகொள்ள முனைவதும், புரிந்துகொள்ளாமலே நீச்சலடிப்பதும் கரை காணாமலே மூழ்கிப் போபவர்கள்தன் பலர்.

ஏன்தான் இப்படி? இந்தக் காதல் படகில் ஏறிப் பார்த்தால்தான் நமக்கது புரியும். வாருங்கள். ஏறித்தான் பார்த்துவிடுவோம். அடுத்த இதழில் படகுடன் வருகிறேன். - கரையிலே காத்திருங்கள்!

குறிப்பு : காதல் பற்றிக் கேள்விகள் உண்டா? தயக்கம் வேண்டாம். கேளுங்கள். பதிலளிக்கிறேன்.



ரிஷபம்

கவர்ச்சியான தோற்றமும், வசீகரித்து இழுக்கும் பேச்சுதிறமையும் கொண்ட ரிஷப இராசி நண்பர்களே.

உங்கள் இராசியின் அதிபதி சுக்கிரன் மற்றும் சந்திரன் உங்கள் இராசியில் உச்சம் என்பதால் மிகவும் குளிர்ச்சியான தேக உடலைக் கொண்டிருப்பீர்கள். அதிகக் குளிர்ச்சியால் சளி, இருமல் போன்ற தொந்தரவுகள் எப்போதும் உங்களுடனே ஒட்டிக்கொண்டிருக்கும். நீங்கள் எப்போதும் எதிர்பாலினை கவர்ந்துவிடுவீர்கள். அது உங்களுடைய ப்ளஸ். உங்களுடைய மனநிலையினை அடிக்கடி மாற்றக்கூடியவர்களால், மனகுழப்பங்கள் அதிகமாக இருக்கும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைய பெற்றவர்கள் நீர், கடல் சம்பந்தப்பட்ட தொழில் வியாபாரத்தில் ஆர்வமுடியவர்கள் ஆண்களாக இருந்தால் பெண்களுடனும், பெண்களாக இருந்தால் ஆண்களுடனும் அதிக நட்பு உடையவர்கள். குடும்பத்தில் உள்ளவர்களிடம் மிகுந்த பாசமாக இருப்பீர்கள். இது ரிஷப இராசியினரின் பொதுவான குணங்கள் ஆகும்.

ரிஷப இராசியின் அதிபதி சுக்கிரன், அசுர குரு தேவ குருவின் பகைவர் என்பதாலும், இராசிக்கு 8, 11ஆம் இட அதிபதி என்பதாலும் 3இல் உச்சம் பெறுகின்ற குரு, பல கெடுதல்களிலும் தன்மைகளையும் செய்ய வாய்ப்புகள் உண்டு. ரிஷப இராசிக்கு 8ஆவது மற்றும் 11வது ஸ்தான அதிபதியாக குரு வருகின்றார். 8வது ஸ்தானம் ஒரு துர் ஸ்தானம் ஆகும். 8ஆவது ஸ்தானம் என்பது பல கஷ்டங்களை, நோய்கள், விபத்துகள், நஷ்டம் அடைதல் ஆகியவற்றைக்குறிக்கும்.11வதுஸ்தானம்இலாபஸ்தானம் ஆகும். 11வது ஸ்தானம் கணவன் உறவினையும் மற்றும் தொழிலில் உள்ள இலாபத்தினையும் குறிக்கும்.

குருவானவர் ரிஷப இராசியின் அதிபரான சுக்கிரனை பகைவராக நினைப்பவர். 8வது இடம் மாராக ஸ்தானம் ஆகும். ஆகவே குரு, ரிஷப இராசிக்கு கடுமையான பாபியாகிறார். ஆக குரு நிற்கும் நல்ல ஸ்தானமாக இருந்தால் மட்டுமே அவரால் தொல்லைகள் உண்டாகும். மாறாக குரு துர் ஸ்தானத்தில் அமர்ந்தால் கொடிய பலனை விளைவிக்கக்கூடியவர். ஒரு வகையில் 3ஆம் இடம் ஒரு மறைவு ஸ்தானம் என்பதால் நன்மைகள் தர வாய்ப்பு உண்டு. தொழிலில் சற்று கணக்கமான நிலைகள் இருந்தாலும் சமாளித்துவிடலாம். தொழிலாளர்களை வேலை வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். இயந்திர பராமரிப்பு செலவு அதிகரிக்கும் நகை, தானியம், மளிகை, பழம், இனிப்பு, எண்ணெய் வியாபாரம் செய்பவர்களுக்கு அதிக இலாபம் கிட்டும். மற்ற வியாபாரிகளும் ஓரளவுக்கு இலாபம் சம்பாதிப்பர். தற்போது இருக்கின்ற இடத்தை மாற்ற வேண்டிய அவசியம் சிலருக்கு வரலாம். வாடிக்கையாளர்களுக்கு கொடுத்துக் கடனை வசூலிப்பவர்கள் குருவின் 11ஆம் இட பார்வை பலத்தால் எளிதில் வசூலித்து விடலாம் உத்யோகத்தில் எந்த வேலையை எடுத்தாலும், அதில் தடை, தாமதம் என பிரச்சனைகளில் சிக்கிக் கொள்ளலாம். இதன் காரணமாக, அதிகாரிகளின் கணடிப்புக்கு ஆளாக நேரும். இன்று செய்ய வேண்டிய வேலையை நாளை செய்துக் கொள்ளலாம் என ஒத்தி வைப்பதால் உங்களுக்கு திண்டாட்டமாகிவிடும். சில சலுகைகள் ஓரளவுக்கு மட்டுமே கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவும் இருக்கும். அதே சமயம் வரவும் இருக்கும். சிக்கனத்தையும், சேமிப்பையும் கடைப்பிடித்தால் ஓரளவு சமாளிக்கலாம். குடும்பப் பெண்கள் தங்கள் உடல் நலத்தை சரிவர கவணித்துக் கொள்ள வேண்டும். எடுத்த காரியத்தை சிரமத்துடன் முடிக்க முடியும். குடும்ப செலவுக்கே தேவையான பணம் கிடைக்கும் அடமானம் வைத்த நகைகளை மீட்கலாம். ஆடம்பரப் பொருட்களை வாங்குவதைத் தவிர்க்கவும். பணிபுரியும் பெண்களை கடுமையான வேலை சிரமப் படுத்தும். அலுவலகத்தில் கடன் பெற நினைப்பதை தற்போது ஒத்த வைக்கவும். இன்ஜினியரிங், சட்டம், சார்ந்த படிப்புகளில் உள்ள மாணவர்கள் உடனுக்குடன் பாடங்களை படிக்காவிட்டால் தேர்வதற்கு சிரமப்படுவர். 3ஆம் இட குரு மூளையை மழுங்க வைப்பார் என்பது பழமொழி. எனவே பல நேரங்களில் மறதி காரணமாக அவதிப்படும் சூழ்நிலை உருவாகும். மாணவர்கள் ஆசிரியருடன் சுமூகமான போக்கு இருந்தால் நான், படிப்பில் நன்மை ஏற்படும். சில தீய நண்பர்களின் சேர்க்கை உங்களைச் சிரமத்தில் மாட்டிவிடலாம். படிக்கும் நேரத்தை அணுவளவும் வீணாக்கக்கூடாது. உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் கூட முடிவெடுக்க முடியாமல் அல்லாடும் நேரம் இது இந்த நேரத்தில் தவறான வழியில் பணத்தைத் தேடி அலைந்தால் சட்டச் சிக்கலில் மாட்டக்கூடும். ஆதரவாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள்.

விவசாயத்திற்காக விண்ணப்பித்த கடன் தொகை கிடைக்கும். சாகுபடி செலவு அதிகரிக்கும். உழைகின்ற அளவுக்கு மகசூல் பெறலாம். குரு, 3இல் இருந்துக்கொண்டு தனது 5, 7, 9ஆகிய மூன்று இடங்களைப் பார்ப்பதால் திருமண காரியங்கள் வெற்றி பெறும். நல்ல நண்பர்கள் அமைவார்கள். கூட்டுத்தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் நலம் தரும். தந்தை வழியல் பல இலாபங்கள் ஏற்படும் பக்தி அதிகரிக்கும். இலாபம் கூடும். முயற்சி ஸ்தானம் 3ஆம் இடம் என்பதால் முடிவெடுக்கும் விஷயங்களில் முன்னெச்சரிக்கை தேவை. எந்த வேலையானாலும் தீவிர ஆலோசனையுடனும் முன் எச்சரிக்கையுடனும் செயல்படுவது அவசியம்.

குரு பார்வை 7இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

7ஆம் இடம் களத்திர ஸ்தானம், நண்பர்கள் ஸ்தானம் கூட்டுத் தொழிலைக் குறிக்கும் ஸ்தானம் குருவின் பார்வை கோடி தோஷத்தையும் நீக்கும் வலிமை பெற்றதால் திருமணத் தடை நீங்கி திருமணம் நடைபெறும். நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். கூட்டுத்தொழிலில் முன்னேற்றம் கூடும். கணவன், மனைவி கருத்து ஒற்றுமை ஏற்பட்டு அற்புத வாழ்வு அமையும். காதலில் வெற்றி கிட்டும். சிறு சிறு பிரயாணங்களின் மூலம் நல்ல வருமானங்கள் கிடைக்கும். கால சூழ்நிலைகளுக்கு ஏற்பட்ட உயர் பதவியானது கிட்டும்.

குரு பார்வை 9இல் படுவதால் ஏற்படும் நன்மைகள் : -

புதிய புதிய வாய்ப்புகள் உருவாகும். மகான்கள் மற்றும் சித்தர்களின் ஆசிகள் கிடைக்கும். புண்ணிய யாத்திரைகள் மேற்கொள்ள வாய்ப்புகள் கூடும் பல்வேறு ஆலய தரிசனம் ஏற்படும். தந்தை - தனயன் உறவு சமூகமாகும். பண வசதி சரளமாக ஏற்படும். தெய்வ அருள் கூடும். அதிர்ஷ்டம் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சிகள் வெற்றி தரும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் மூலம் உங்கள் தொழில் வெற்றி கிட்டும். எந்த துறையில் இருந்தாலும் அந்தத் துறையில் அரிய, அபூர்வ முன்னேற்றம் ஏற்படும்.

குரு பார்வை 11இல் படுவதால் ஏற்படும் பலன்கள் : -

இலாப ஸ்தானமான 11ஆம் இடம் உங்கள் இராசிக்கு பாதக ஸ்தானமாகவும் வருவதால் குரு பார்வை பாதகங்களைக் களைந்து சாதகமாக சூழ்நிலைகளை ஏற்படுத்தும். நல்ல வருமானம் கூடும். உடல் ஆரோக்கியத்தில் மேன்மை நிலையினை அடையும். இதுவரை இருந்து வந்த நோய் நொடிகள் நீங்கும். புதிய வண்டிகள், வாகனங்கள் யாவும் நன்மைகளைத் தரும் என்பதால் புதியதாக வீடு கட்டவும் அல்லது கட்டிய வீடுகளை வாங்கவும் யோகம் உண்டு. சொந்த தொழில் செய்பவர்களுக்கு ஆள் பற்றாக்குறை நீங்கி தொழில் விருத்தியாகும். ரியல் எஸ்டேட் சம்பந்தமான தொழில்கள் கை கொடுக்கும். நல்ல மதிப்பும், மரியாதையையும் சம்பள உயர்வும் கிட்டும். பெரியோர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். இலாபம் வந்து இலட்சியம் நிறைவேறும் நிலை ஏற்படும்.

குரு பகவான் 19.6.2014 முதல் 3.7. 2014 வரை புணர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

நிறைவான பலன் உண்டு. மெய் வருத்தக்கூலி தரும். நண்பர்கள் வகையில் உஷார் தேவை. சுயதொழில் மேன்மையாகும். கூட்டு தொழிலில் கவனம் தேவை. கணவன் - மனைவி அனுசரித்துச் செல்வது நலம். சிறு சிறு அலைச்சல்கள் உண்டு உடல் நலனில் அக்கறை தேவை.

குருபகவான் 4.7.2014 முதல் 2.9.2014 வரை பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் : -

யோக காலம் இது சாதிக்க உரிய காலம். புதிய சந்திப்புகள் ஏற்படும். புது முயற்சிகள் வெற்றி பெறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய புதிய அறிமுகம் கிட்டும். கொடுக்கல் - வாங்கல் சீராகும். தொழிலில் மேன்மை உண்டு.

குருபகவான் 3.9.2014 முதல் 7.12.2014 வரை ஆயில்யம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

வாக்கில் வசீகரம் ஏற்படும். சொல்வாக்கு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பணத் தட்டுப்பாடு நீங்கும். கல்வி சிறக்கும். பூர்வீகச் சொத்து கைகொடுக்கும். மந்திர சித்தி ஏற்படும். பிள்ளைகளால் நலம் உண்டு. குல தெய்வ ஆசி கிட்டும்.

குருபகவான் 8.12.2014 முதல் 8.4.2015 வரை வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம் :

கொடுக்கல் - வாங்கலில் உஷார் தேவை. புதிய ஒப்பந்தங்கள் போடலாம். வெளியூர் வெளிநாட்டு முயற்சிகள் பலிதமாகும். பல வகையிலும் பணம் வரும். அதேபோல் செலவும் வரும். சிக்கனத்தைக் கடைபிடிப்பது கூடுதல் நலம்.

1. கார்த்திகை 2. 3. 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :-

சூரியனின் திசையிலும் சூரியனின் நட்சத்திரத்திலும் பிறந்த உங்களுக்கு குரு பெயர்ச்சி நலன்களைக் குறைவின்றித் தரும். எடுக்கின்ற காரியங்கள் வெற்றி பெறும். முயற்சிகள் பலன் தரும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகமாகும். பல்வேறு சிவன் ஆலயங்களை தரிசித்து மகிழ்வீர்கள். உங்களுக்கு இறையருள் வெகு விரைவில் கிட்டும். அரசு வழியில் முன்னேற்றம் ஏற்படும்.

2. ரோகிணி 1. 2. 3. 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :-

ரோகிணி நட்சத்திரத்தின் அதிபதி சந்திரன். மனதை ஆளும் கிரகம். குளிர்ச்சியான கிரகம் மாதாவைக் குறிக்கும் கிரகம். சந்திர திசையில் பிறந்த உங்களுக்கு குருபெயர்ச்சியினால் குதூகலம் கூடும். குபேர சம்பத்து தேடி வரும். கூட்டுத் தொழில் மேன்மை ஏற்படும். படிப்பில் ஆர்வம் மிகும். சிலர் அம்மனுக்கு தீர்த்த யாத்திரை செய்யும் வாய்ப்பு உண்டு. குலதெய்வ வேண்டுதல் நிறைவேற்ற இதுவே சரியான தருணம்.


3. மிருக சீருஷம் 1. 2 பாதங்களில் பிறந்தவர்கள் : -

செவ்வாய் நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு குரு பெயர்ச்சி குதூகல நலம் தரும். ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். உத்யோகத்தில் உயர்வான நிலையினை அடைவீர்கள். பல்வேறு விருந்து, விழா எனச் சென்று வருவீர்கள். உஷ்ண உபாதைகள் ஏதேனும் தென்பட்டால் உடனடி வைத்தியம் தேவை.

பரிகாரம்

காஞ்சிபுரம் - செய்யார் அருகிலுள்ள இளையனார் வேலூர் எனுமிடத்தில் முருகனின் வேல் விழுந்த கோவில் உள்ளது. இந்த ஆலயத்தை தரிசனம் செய்யவும். அமாவாசையில் அன்னதானம் செய்யவும். குருவருளும் திருவருளும் கூடி வர திறம்பட அமையும்.

ஆண்களின் அங்க இலட்சணங்கள் கூறும் இரகசியங்கள்



ஆண்களின் சுபாவங்களை அறிந்துகொள்ளும் ஆசையுள்ள பெண்களுக்கு அவர்கள் பற்றிய அங்கலட்சண மதிப்பீடு ஒரு சுவாரசியம் தரும் விடயம்தான். தாம் மணமுடிக்க எண்ணும் ஆண் தனக்கு உகந்தவனாக இருப்பானா என்பதுமுதல், ஆண்களான தனது நண்பர்களைத் தேர்ந்தெடுக்க, உறவினர்களுடன் பழக, அதிகாரிகளைப் புரிந்துகொள்ள, சினிமா ஹீரோக்களை மதிப்பிட என்றெல்லாம் பல தேவைகள் உண்டல்லவா. அதற்கு எம் மனம் விஞ்ஞானபூர்வமான ஆராட்சிகளைவிட சாஸ்திரங்கள் போன்றவை தரும் நம்பிக்கைகளையே அதிகம் நாடுகிறது. ஆனால் அவை எத்தனை தூரம் சரியான முடிவுகளுக்கு வழிகோலுகிறது என்பது கேள்விக்குறிதானே. சரி. இவ் ஆண் இலட்சணங்கள் என்ன சொல்கின்றனவெனப் பார்ப்போம்.

மிருதுவான சாந்தமான முகம் :

மிருதுவான முகம் சாந்தமாக சுத்தமாக இருக்குமே யானால் பிரசித்தமடைய வாய்ப்பு இருக்கின்றது. இவர்களுக்கு சமூகத்தில் கௌரவமும், பிரதான இடமும் கிடைக்கும். எந்த இடத்திலும் மற்றவர் கவனத்தை ஈர்க்கும் அழகான உடலுக்கு சொந்தக்காரர்கள்.

கடுப்பான வசீகரமற்ற தோற்றத்தைக் கொண்ட முகம் :

இவர்கள் கஷ்டமனா வாழ்க்கையை அனுப விக்கின்றவர்களாக இருப்பார்கள். சொத்து சுகம் இருந்தாலும் அதனை அனுபவிக்கும் அதிர்ஷ்டம் இல் லாமல் போகும்.

உயர்ந்த தோற்பட்டை எலும்பைக் கொண்டவர்கள்:

ஒருவரின் சாதாரண தோற்பட்டை எலும்பை விட உயர்ந்த தோற்பட்டை எலும்பு அமையப் பெற்றிருந்தால் அவர் சந்தோஷமான வாழ்க்கைக்கு உரிமையுள்ளவர். சொத்து, சுகம், குழந்தை செல்வம், நல்ல மனைவி இவைகள் எல்லாம் இவர் வாழ்க்கையை வளம் பெறச் செய்யும்.

நெற்றியில் உள்ள ரேகையைக் கொண்டு ஆண்களின் ஆயுளையும், பலாபலன்களையும் சொல்ல முடியும்!

ஒருவரின் நெற்றியில் எந்த ரேகையும் இல்லாதிருந்தால் அவர் 95 வயது வரை ஆயுள் கொண்டவராக இருப்பார். இந்த இடைப்பட்ட காலத்தில் செய்ய வேண்டிய எல்லா கடமைகளையும் செய்து முடிப்பார்.

இளம்வயதில் எதிர்காலத்தைப் பற்றி அவ்வள வாக சிந்திக்காத போதும் நடுத்தர வயதை அடையும் போது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து நடந்து கொள்வார்கள். இப்படியானவர்கள் அதிகமாக இல்லறத்தில் நுழைந்த பிறகே முன்னேற்றம் காண்பார்கள்.

இடையிடையே விடுபட்ட ரேகை நெற்றியில் அமைந்திருந்தால் :

இடையிடையே நெற்றியில் விடுபட்ட ரேகைகள் அமைந்திருந்தால் அந்த நபர் உறுதியான எண்ணத்தை உடையவர் என்று சொல்ல முடியாது. சிறுவயதிலிருந்து நடுத்தர வயது வரை உல்லாச மான வாழ்க்கையை வாழ்கின்றவராக இருப்பார். பொறுப்பை ஏற்க பின் வாங்கும் இவர்களால் கடமையை நிறைவேற்ற முடியாமல் போகும்.

காம உணர்வு அதிகம் கொண்ட அவர்கள் வாலிப வயதிலேயே அதிகமான பெண்களோடு சிநேகம் வைத்திருப்பார்கள். திருமணத்தின் பிறகும் ஒரு சிலரே சிறந்த இல்லற வாழ்வை கொண்டு செல்கிறார்கள்.

நெற்றியில் தலைமயிர் வரையிலும் படர்ந்த ரேகைகள்

நெற்றியில் உள்ள ரேகை தலை மயிர் சகிதம் உள்ள பகுதி வரை நீண்டு இருந்தால் அவர்கள் எண்பது வயது வரை வாழ்வார்கள் என்று கூறப்படுகின்றது. சிறு பிராயத்திலிருந்து ஆரோக்கியமான சக்தி வாய்ந்த ஆண்மகனாக இருப்பார். கொஞ்சமாவது மதுவுக்கு பழகியவராக இருப்பார். இருந்தாலும் பிள்ளைகளின் கடமைகளை நிறை வேற்றும் தந்தையாக இருப்பார். சிறு வயதி லிருந்து நண்பர்களோடு பழக்கம் வைத்துக் கொண்டிருப்பார்.

பூரணமாக திடகாத்திரமான நெஞ்சு அமைந்திருந்தால் :

ஒரு ஆணின் மார்பு தசை மிக்கதாய் பரந்த மார்பாக இருந்தால் அவர் பலம் வாய்ந்தவராக இருப்பார். சமூகத்தில் அதிகமானோரின் நல்மதிப் புக்கு பாத்திர மாவார்.

இப்படியானவர்கள் எந்த இடத்திலும் மற்றவர் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் உன்னதமாக இருப் பார்கள்.

சமூக சேவைகளைப் போன்றே பொது மக் களுக்காக முன்னிலை வகிப்பார். இப்படியானவர் களுக்கு பொருள், பணம், ஆள்பலம் எல்லாம் குறை வில்லாமல் கிடைக்கும்.

ஒருவரின் மார்பு முலைக் காம்புகள் மேல் நோக்கி இருந்தால்!

ஒருவரின நன்கு வளர்ச்சி பெற்ற மார்பின் முலைக்காம்புகள் மேல் பார்த்தவண்ணம் இருந்தால் இவர் எல்லா சௌபாக்கியங்களும் பெற்றவராக இருப் பார். வீடு வாசல், காணி இவற்றோடு பணத்திற்கும் அதிபதியாக அதிர்ஷ்டசாலிகளாக இருப்பார்கள். அத்தோடு அவர்களின் முயற்சியாலும் பலதையும் பெற்றுக் கொள்வார்கள். கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

கருணை உள்ளம் கொண்ட இவர்கள் தங்கள் மனைவி மீது அன்பு காட்டுவார்கள்.

இரட்டை மார்புகளை கொண்ட ஆண்கள் :

தனவந்தர்களுக்கு இரட்டை மார்பு இருக்கும் என்று கூறப்படுகின்றது. இவர்களில் சிலர் பிறப் பால் தனவந்தர்களாக அப்படி இல்லாவிட்டால் தங் களுடைய முயற்சி மூலம் முன்னேறுகின்றவராகவும் இருக்கலாம்.

இவர்களிடம் கொஞ்சம் கஞ்சத்தனம் இருக்கும். என்றாலும் உதவி செய்ய வேண்டிய இடத்தில் பண உதவி செய்வார்கள். இரட்டை மார்புடைய நபர் வறிய குடும்பத்தில் பிறந்தாலும் அவரின் அதிர்ஷ்டத்தால் குடும்பம் முன்னேற வாய்ப்பிருக்கிறது. ■

கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடல் வீக்கம்



கர்ப்பமாக இருக்கும்போது வயிறு மட்டும் வீங்கினால் பரவாயில்லை ஆனால், கைகளும், கால் களும் வீக்கமடையும் குறிப்பாக கர்ப்பத்தின் இறுதி மூன்று மாதத்தில்தான் இத்தகைய வீக்கங்கள் ஏற் படும். அதிலும் கால் வீக்கம்தான் அதிகம் ஏற்படும். இவ்வாறு கைகள் மற்றும் கால்கள் வீக்கமடைவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

உடலில் நீர்ச்சத்து தேங்கியிருப்பது மற்றும் அதிகப்படியான இரத்த ஓட்டம் ஒரே இடத்தில் இருப்பது. இவ்வாறு ஏற்படும் வீக்கங்கள் சில நேரங்கள் வலியுடன் இருக்கும். இப்போது அந்த வீக்கங்களை இயற்கை முறையில் குறைப்பதற்கான சில எளிய வழிகளைப் பார்க்கலாம்.

எங்கும் செல்லாமல் ஒரே இடத்தில் உட் கார்ந்து கொண்டே இருந்தால் வீக் கங்கள்தான் அதிகமாகும் எனவே, எப் போதும் தசைகளுக்கு அசைவைக் கொடுக்க வேண்டும். அதற்கு தினமும் நடைபயிற்சி அல்லது மருத்துவரின் அனுமதியுடன் சில உடற்பயிற்சிகளை செய்யலாம். இதனால் ஒரே இடத்தில் தண்ணீர் தேங்கியிருப்பதை தடுக்க முடியும்.

"நீச்சல் செய்வதால், உடலின் அதிகப்படியான எடை தெரியாமல் இருப்பதோடு, வீக்கமும் குறை யும் இல்லாவிட்டால், ஒரு பெரிய டப்பில் வெதுவெதுப் பான தண்ணீர் ஊற்றி, அதில் உட்கார்ந்தாலும், வீக்கம் குறையும். குறிப்பாக, நீர் சூடாக இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், சூடான தண்ணீர் கர்ப்பிணிகளுக்கு நல்லதல்ல.

அலுவலகத்தில் நீண்ட நேரம் ஓர் இடத்தில் உட்கார்ந்து வேலை செய்தாலும், பாதங்களில் வீக்கம் ஏற்படும். எனவே பாதங்களை தொங்கவிடாமல், மேலே வைப்பதற்கு, ஒரு சிறிய நாற்காலியை பயன் படுத்தவும்.

கர்ப்பிணிகளுக்கு இடது பக்கம் படுப்பதே மிக வும் வசதியாக இருக்கும். ஏனெனில், இவ்வாறு படுப் பதால் இரத்த ஓட்டமானது சீராக இருக்கும். எனவே, எப்போதும் படுக்கும்போது இடது பக்கம் திரும்பிப் படுக்கவும்.கர்ப்பத்தின்போது, உணவில் உப்பின் அளவை குறைத்துக் கொள்ள வேண்டும். இதனால் உடலில் ஏற்படும் வீக்கத்தை குறைக்கலாம்.

கர்ப்பமாக இருக்கும்போது அதிகமான அளவில் தண்ணீர் குடித்தால், உடலில் தங்கியுள்ள நச்சுக் கள் வெளியேறி, உடல் வீக்கத்தைக் குறைக் கும். அதிலும் குறைந்தது ஒரு நாளைக்கு 8 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். ஆடைகள் இறுக்க மாக அணியும்போது அழுத்தமானது ஒரே இடத்தில் அதிக நேரம் இருப்பதால், அவை வீக்கங்களை ஏற் படுத்தும் எனவே, தளர் வான ஆடைகளை அணிய வேண்டும்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளில் உப்பு அதிகமாகவும், விற்றமின்கள் மற் றும் நார்ச்சத்து குறைவாகவும் இருக்கும். எனவே இத்தகைய உணவுகளை கர்ப்பத்தின்போது அறவே தவிர்க்க வேண்டும். கோப்பி அதிகம் குடிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில், அவை உடலில்நீர் வரட்சியை ஏற்படுத்து வதோடு, வீக்கத்தையும், ஏற்படுத்தும் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தால் அழுத்தமானது கால்களில்அதிகம் இருப்பதால், அவை கால்களில் வலியுடன் வீக்கத் தையும் ஏற் படுத்தும். ■

கோடையிலோர் அருமருந்தாம் எலுமிச்சை!

சிலருக்கு கொஞ்சம் சாப்பிட்டால் கூட வயிறு பெரிதாக பலூன்போல காணப்படும். வாயுவும் சேர்த்துத் தொல்லைக் கொடுக்க ஆரம்பிக்கும். இவர்கள் எலுமிச்சம் பழத்தின் சாறு எடுத்து அதில் வெந்நீர் கலந்து அடிக்கடி பருகி வந்தால் வாயுத் தொல்லைகள் நீங்கும்.

தற்போது கோடை வெயிலின் தாக்கத்தால் அடிக்கடி தாகம் ஏற்படும். சிலருக்கு எவ்வளவுதான் தண்ணீர் அருந்தினாலும் தாகம் குறையாமல்யிட இருக்கும். இவர்கள் எலுமிச்சம்பழத்தின் சாறு எடுத்து இரண்டு கப் நீரில் சர்க்கரை சேர்த்து பருகினால் தாகம் தணியும்.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சர்க்கரைக்கு பதிலாக உப்பு சேர்த்து அருந்தலாம்.

எலுமிச்சம் பழத்தை பிழிந்து சாறெடுத்து, அதில் தேன் கலந்து பருகி வந்தால் கல்லீரல் பலப்படும்.


ஒரு குவளை சூடான காபி அல்லது தேநீரில் ஒரு எலுமிச்சம்பழத்தை பாதியாக நறுக்கி, அரைமூடியை பிழிந்து சாறு கலந்து இருவேளையும் அருந்த வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் இவ்வாறு அருந்தி வந்தால் தலைவலி நீங்கும்.

வெயில் காலம் என்பதால் நீர்க்கடுப்பு பிரச்சினை சிலருக்கு அவதியை ஏற்படுத்தும். இந்நிலை நீங்க எலுமிச்சம் பழச்சாறுடன் சிறிது உப்பு கலந்து ஒருவாரம் அருந்தி வந்தால் நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் நீங்கும். இரத்தக் கட்டுக்கு உடம்பில் எங்காவது அடிபட்டாலோ, வீங்கினாலோ ரத்தம் கட்டி இருக்கும். இந்தப் பகுதியை தொட்டாலே சிலருக்கு வலியெடுக்கும். இந்த ரத்தக்கட்டு நீங்க சுத்தமான இரும்புக் கரண்டியில் ஒரு எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து சாறு எடுத்து அதில் சிறிதளவு கரிய போளத்தைப் (நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும்) போட்டு காய்ச்ச குழம்பு போல வரும். அதனை எடுத்து பொறுக்கும்



அளவு சூட்டுடன் இரத்தக்கட்டு உள்ள பகுதிகளில் பற்று போட வேண்டும். இவ்வாறு காலை, மாலை இரு வேளையும் சுத்தம் செய்து பற்று போட்டு வந்தால் ரத்தக்கட்டு குணமாகும்.

எலுமிச்சம் பழத்தை பிழிந்த சாற்றில் ஒரு தேக்கரண்டி அளவு சீரகத்தையும், அதே அளவு மிளகையும் கொஞ்சம் கலந்து வெயிலில் காயவைத்து காய்ந்தபின் நன்றாக பொடித்து எடுத்து பாட்டிலில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். காலை மாலை இருவேளையும் இதில் அரை தேக்கரண்டி அளவு வாயிலிட்டு வெந்நீர் குடித்த வந்தால் பித்தம் குறையும்.



எலுமிச்சை பழத்தின் தே தோல் சம்பந்தப்பட்ட நோய்க போக்கி சருமத்திற்கு பளபள தரும். எலுமிச்சம் பழத்தோலில் சக்தி கொண்ட எண்ணெய் இருப்பதை அறிந்தனர். இதுபலவகையான நறுமணத் தைலங்கள் செய்வதற்கும் உபயோகமாகிறது. மேலும் வாதம், எரிச்சல், தொண்டைப்புண் போன்றவற்றிற்கு நல் லது. நகச் சுற்று கொண்டவர்கள் எலுமிச்சம்பழத்தை விரலில் சொருகி வைத்தால் நகச்சுற்று குணமாகும். கிராமப்புறங்களில் இன்றும் இம்மருத்துவ முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எலுமிச்சம்பழத்தோலை உரித்தவுடன் அதன் மேல் வெள்ளையாக இருக்கும் சிறு தோலில் வைட்டமின் பி அதிகமாக உள்ளது.

எலுமிச்சம் பழம், உடலில் களைப்பைப் போக்கி உடலுக்கு புத்துணர்வை உண்டாக்கும்.

எலுமிச்சம் பழச்சாற்றை உடலில் தேய்த்து குளித்தால் உடல் வறட்சி நீங்கும். தாதுவைக் கெட்டிப் படுத்தும்.

உடல்நமைச்சலைப்போக்கும். மாதவிலக்கின் போது உண்டாகும் வலியைக் குறைக்கும்.

மூலத்திற்கு சிறந்த மருந்தாகும். எலுமிச்சை மருத்துவப் பயனை உணர்ந்து ஆரோக்கியம் பெறுங்கள்.

வாரத்திற்கு இரண்டு முறை மீன் உணவு அவசியம்



கடல் உணவு வகைகளான நண்டு, மீன், இறால் போன்றவை அசைவு உணவு பிரியர்களின் மிக விருப்பமான ஐட்டங்களாகும். குறைந்த அளவு கொழுப்பும், அதிக அளவு புரதச்சத்தும் உள்ள கடல் உணவு வகைகள் ஆரோக்கியமான உணவின் ஒரு முக்கிய பகுதியாக இருக்கின்றன.

உடல் தசைகளின் உறுதிக்கும், உடலின் கொலஸ்டிரால் அளவு அதிகமாகாமல் பார்த்துக் கொள்வதற்கும், இதய நோய்கள் வராமல் தடுப்பதற்கும், தலைமுடி வளர்ச்சிக்கும் மீன்களை வாரத்திற்கு இரண்டு முறையாவது உண்பது அவசியம். ஆட்டுக்கறி மற்றும் கோழிக்கறிகளை விட கடல் உணவு வகைகள் எளிதில் ஜீரணிக்கக்கூடியதாகும்.

கடல் மீன் உணவில் உள்ள ஒமேகா 3 பேட்டி ஆசிட் உடலுக்கு மிகவும் அவசியமானதாக டாக்டர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. மீன் உணவில் இது இயற்கையாகவே உள்ளது. ரத்த அழுத்தத்தை சமன் செய்வதற்கும், மாரடைப்பு வராமல் தடுப்பதற்கும் இது உதவுகிறது.

நார்வே நாட்டில் உள்ள ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஆய்வின்படி, இந்த ஆசிட் சிலவகை புற்றுநோய்களை தடுக்கிறது என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. வைட்டமின் டி, செலினியம், அயோடின் மற்றும் சில தாதுப்பொருட்களும் கடல் மீனில் உள்ளன.

ஒரு மனிதன், 100 கிராம் மீன் சாப்பிட்டால், அதில் சுமார் 20 கிராம் வரை புரதச்சத்து கிடைக்கிறது. சுமார் 60 கிலோ எடை உள்ள நடுத்தர வயது ஆண்களுக்கு கிராமும் உணவில் புரதச்சத்து இருக்க வேண்டும்.



முகத்துக்கு அழகு சேர்க்க

கடலை மாவு, பன்னீர், பால் சேர்த்து முகத்தில்பூசி ஐந்து நிமிடம் கழித்துக் கழுவிவிட முகம் முத்தாய் ஜொலிக்கும்.




முட்டையின் வெள்ளைக்கரு, தேன், பாதாம் பால் சேர்த்து Face Pack செய்து போட்டால் முகம் பளபளக்கும்.

இன்னும் அழகியாக ஜொலிக்க...



வெள்ளரிக்காயை நறுக்கி அரைத்து அதன் சாற்றில் சிறிது பன்னீர் கலந்து முகத்தில் பூசி, 10 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவினால் முகம் ஜொலிக்கும்.

சற்றே மாநிறமாய் இருப்பவர்கள் எலுமிச்சைச் சாற்றை ஒரு சொட்டு தேனில் கலந்து முகத்தில் பூசி காய்ந்ததும் குளிர்ந்த நீரில் கழுவி விட முகம் பள பளப்பாகும்.



ஆரஞ்சுச்சாறில் ஆலிவ் ஆயில் கலந்து முகத்தில் பூசி ஐந்து நிமிடம் கழித்துப் பஞ்சினால் துடைத்தபிறகு கழுவி விட வேண்டும். இதுவும் முகம் பளபளக்க ஒரு வழியாகும்.

பச்சைப்பயிறு மாவுடன் பால் கலந்து முகத்தில் பூசி இரண்டு நிமிடம் கழித்து கழுவிவிட வேண்டும். முகம் புத்துணர்ச்சியுடன் மிளிரும்.

கஸ்தூரி மஞ்சள், பால் சேர்த்து முகத்தில் பூசி இரண்டு நிமிடத்தில் கழுவி விட முகம் பளபளப்பது நிச்சயம்.

பாலாடை, சிறிது திராட்சை ரசம் கலந்து முகத்தில் பூசி இரண்டு நிமிடம் கழித்துக் கழுவ, முகம் அழகாகக் காட்சியளிக்கும்.

ஓட்ஸ், பாதாம், பால், பன்னீர் கலந்து முகத்தில் பூசி, இரண்டு நிமிடம் கழித்துக் கழுவி விட்டாலும் முகம் பளபளக்கும்.

பப்பாளிப்பழத்தை அரைத்து விழுதில் Vitamin E Oil கலந்து முகத்தில் பூசி, 3 நிமிடம் கழித்து கழுவினாலும் முகம் பளிச் என இருக்கும்.

விளக்கெண்ணெயைக் கண்களைச் சுற்றித் தடவி கொண்டு, கெட்டித் தயிரை முகத்தில்பூசி 3 நிமிடம் கழித்து கழுவினால் முகம் பளபளப்பாகும்.



கேரட்டை அரைத்து எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசி உடனேயே குளிர்ந்த நீரில் கழுவி விட முகம் பள பளக்கும்.

பால் பவுடர், பாசிப்பயறு மாவு, ரோஜா இதழ்கள், பன்னீர் கலந்து அரைத்து முகத்தில் பூசி வர முகம் பளபளக்கும்.

ஆலிவ் ஆயில் உடன் Vitamin E oil சேர்த்து முகத்தில் தடவி வர முகம் பொலிவு பெறும். குண்டு மல்லிகையை அரைத்து பன்னீர் சேர்த்து முகத்தில் தடவி 3 நிமிடம் கழித்துக் கழுவிவிட வேண்டும். இப்படிச் செய்தால் நறுமணத்துடன் சருமம் மென்மையாகவும் இருக்கும்.

பாதாம் பருப்பை ஊறவைத்து தோலுரித்து அத்துடன் பாதாம் எண்ணெய் கலந்து முகத்தில் பூசி உலர்ந்ததும் குளிர்ந்த நீரில் முகம் கழுவ, முகம் பள பளப்பாக இருக்கும்.

பச்சை ஆப்பிளை அரைத்து முகத்தில் பூசி 5 நிமிடம் கழித்துக் கழுவி விட, முகம் மென்மையுடன் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.



செர்ரிப் பழத்தை அரைத்து பாலில் கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்துக் கழுவிவிட்டால், முகம் பள பளக்கும்.

கெட்டியான பால், குங்குமப்பூ, ரோஜா இதழ் கலந்து ஊற வைத்து பிறகு முகத்தில் தடவி வர முகத்தில் பொலிவு ஏற்படும்.

மாதுளம்பழத்தை அரைத்த விழுதில் பன்னீர், எலுமிச்சைச்சாறு கலந்து முகத்தில் தடவி உடனேயே கழுவி வர, முகம் அழகாக இருக்கும்.

கொத்தமல்லி இலைகளை நன்றாகக் கழுவி அரைத்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து எடுத்தால் மிகவும் புத்துணர்ச்சியாக இருக்கும்.

சருமம் இளமையாக...

பசும் மஞ்சளை அதன் இலை யோடு சேர்த்து அரைத்து பாசிப்பயறு மாவோடு கலந்து, தினமும் உடலில் பூசிக்குளித்தால் தோல் சுருக்கத்தை கிட்ட நெருங்கிவிடாமல் இளமையை தக்க வைக்கலாம். இது நல்ல மாற்றத்தைத் தருமே தவிர முகமெல்லாம் மஞ்சளாக ஒட்டிக் கொள்ளாது. அதனால் எல்லா வயதினரும், எந்த வகை சருமத் தினரும் உபயோகிக்க உகந்தது.

சிலருக்கு ஆண்களைப் போல உடலிலும் முகத் திலும் ரோமங்கள் வளர்ந்திருக்கும். அழகைக் குலைக்கும் அந்த முடிகளை அகற் றவும், பசும் மஞ்சள் சம்பந்தப்பட்ட எளிமையான சிகிச்சைகள் ஒன்று இருக் கிறது. மஞ்சள் இலை மற்றும் குப்பை மேனி இலையை சம அளவு எடுத்து அரைத்துக் கொள்ளுங் கள்.



குளித்த பிறகு, இந்த மஞ்சள் விழுதை உடலில் பூசிக் கழுவுவதை வழக்கமாக் கிக் கொண்டால் தேவையற்ற முடிகளின் அடர்த்தி குறைந்து மென்மையடையும். கொஞ்சம் கொஞ்ச மாக அவற்றின் வளர்ச்சி குறைந்து நாட்பட வளர்ச்சி முழுமையாக நின்றுவிடும்.

எந்த வகை மஞ்சளும் முடியை மென்மையாக்குமே தவிர, முடியை நீக்கும் தன்மை அதற்குக் கிடையாது.

அந்த வேலையைச் செய் வது குப்பைமேனி இலை தான். கழுத்து, கணுக் கால், முட்டி போன்ற இடங்களில் கருமை அதற்கும் அற்புத மான ஒரு சிகிச்சை இருக்கிறது. பசும் மஞ்சளை அரைத்து தயிரில் கலந்து அந்த கருமையான இடங்களில் தடவுங்கள்.

தலைமுடி அழகுற...



முகம் மட்டுமா.... தலையும் வறட்சியாக இருக்கிறதே... என்று கவலைப்படுபவர்கள், நெல்லிக்காய் ஜூஸ், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் மூன்றையும் தலா ஒரு கப் எடுத்துக் கொள்ளவும்.

அவற்றை அடுப்பில் வைத்து காய்ச்சி, இறக்கவும், இந்தத் தைலத்தை தலைக்கு தேய்த்து, சீயக் காய் போட்டு அலசினால், தலைக்குக் குளிர்ச் ·சியை தந்து, வறட்சியைப்போக்கி, கூந்தலின்வளர்ச்சிக்குவழிவகுப்பதோடு நரை முடியையும் தடுக்கும்.

தேங்காய் எண்ணெய் தடவிக் கொள்ளும் பழக்கம் இருப்பவர்கள் அந்த தேங்காய் எண்ணெயில் காய வைத்த செம்பருத்தி பூ மற்றும் ஆல மரத்தின் இள வேர்களைப் பொடி செய்து கலந்து வைத்துக்கொண்டு தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் முடி நல்ல கறுப்பாக வளரும்.

அக்குள் கருமை நீங்க என்ன வழி?

இப்பொழுதெல்லாம் பெண்கள் அதிகமாக விரும்புவது ஸ்லீவ்லஸ் உடைகளையே. இதை அணியும்போது அக்குள் பகுதி கருமையாக இருந்தால் அந்த ஆடையின் அழகேபோய்விடும். இதனால்சிலர் முகத்திற்கு செய்யும் மேக்கப்பையே அக்குள் பகுதிக்கும் போட்டுவிட்டு செல்கின்றார்கள். இது தவறான முறை. இப்படி செய்கையில் வியர்வைச் சுரப்பிகள் மூடப்பட்டு பருக்கள், அலர்ஜி, அரிப்பு என பல தொற்றுக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நம் அன்றாட சமையலில் உபயோகிக்கும் பொருட்களைக் கொண்டே இந்தக் கருமையை நீக்கலாம். தேசிக்காய்



சாற்றை அக்குள் பகுதியில் பூசி 10 நிமிடம் கழித்து கழுவலாம். சீனியை சிறிது நீர் சேர்த்து ஸ்கரப்பாக தேய்த்து 10 நிமிடம் கழித்து கழுவ, இறந்த செல்கள் வெளியேறி புதிய செல்கள் உருவாகும். அப் பொழுது கருமை அகலும். கிழங்கை வெட்டி தேய்த்து ஒரு ஐந்து நிமிடம் கழித்து கழுவலாம். கடலைமாவுடன் தயிர் சேர்த்து கலந்து பெக்காக போட்டு காய்ந்ததும் கழுவிவிடலாம். பேக்கிங் சோடாவை சிறிது நீரில் அரைத்து பெக்காக பூசலாம். இதை அடிக்கடி செய்ய அக்குளில் ஏற்பட்ட கருமை மட்டுமல்ல துர் நாற்றமும் நீங்கிவிடும்.

குழந்தைக்கு எதைக் கொடுக்கிறீர்கள்?

குழந்தைகள் அழுகிறார்கள், அடம்பிடிக்கிறார்கள் என்ற காரணத்துக்காக பெக்கட்டுகளில் அடைக்கப்பட்டிருக்கும் உணவுகளை வாங்கித்தரக் கூடாது. எதற்காக நாம் அதை வாங்கித்தர மறுக்கிறோம் என்று குழந்தைகளுக்கு எடுத்துச்சொல்லி புரியவைக்க வேண்டும். விவரம் தெரியாத குழந்தைகளாக இருந்தால் அந்த நேரத்துக்கு அவர்களின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டும்.

காலையில் கண்டிப்பாக ரெடிமேட் உணவுகளைத் தவிர்க்க வேண்டும். ஆவியில்சமைக்கப்பட்ட நம் பாரம்பரிய உணவுகளான இட்லி போன்றவற்றையோ தோசை, பொங்கல் போன்ற உணவுகளையோ, வறுத்த உணவுகளையோ அடிக்கடி கொடுப்பது தவறு. மாலை நேரத்தில் சுண்டல் தரலாம்.



ஈர மனங்களின் சங்கமிப்பில் ஈழத்தமிழர் திருமணங்கள்!

– சென்னையிலிருந்து ரஞ்சனி சுகுமாரன்

எந்த நாட்டவர் என்றாலும் - எந்தச் சமூகமாயிருந்தாலும் - 'திருமணம்' என்கிற நிகழ்வுக்கு அளிக்கிற முக்கியத்துவமே அலாதியானது தான். அது உறவுச் சங்கமமாக மட்டுமல் லாமல் உணர்வுகளின் சங்கமமாகவும் நடந்தேறுவதால், அதற்கு அவ்வளவு மரியாதை.

நான் முஸ்லீம், கிறித்தவத் திருமணங்கள் அல்லாது, சில வட இந்தியத் திருமணங்களிலும் பங்கேற்றிருக்கிறேன். அந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. மாப்பிள்ளை கோபித்துக் கொண்டு குடையை தூக்கிக்கொண்டு 'காசியாத் திரைக்கு போகிற பிராமணர் திருமணங் களும், திருநங்கைகளை தெய்வப் பிறவிகளாக வணங்கி அவர்களது ஆடல் பாடல்களோடு அரங்கேறுகிற வடநாட்டுத் திருமணங்களும்,, நான்கு தலைவர்கள் வாழ்த்திப்பேசி சோடா குடித்து முடிப்பதற்குள் கைத்தட்டி நிறைவேறுகிற சீர்திருத்த திருமணங்களும் ஒவ்வொரு அனுபவங்கள்தானே

ஆனால்புதுசடங்குசம்பிரதாயமாக மட்டுமல்லாமல், நெக்குருக வைக்கிற சென்டிமெண்ட் நெகிழ்ச்சிகளுடன் அரங் கேறுகிற இலங்கைத் தமிழ் திருமணங் கள் உண்மையிலேயே புதிய அனுபவங் களாகவே இருந்தன.

இலங்கையில் தமிழர் வாழ்வு சிதற டிக்கப்பட்டு ஆளுக்கொருதிசையாய் இருக் கிறார்கள்.

இளம்வயதில் நாடுவிட்டு நாடு மகனை ஆண்டாண்டுக்காலம்பாராதிருந்த தாய்மார்கள், தகப்பன்மார்கள் ஏதோ உறவு களின் மூலம் தட்டுத் தடவி அவனுக்கு மணம் முடிக்க ஒரு பெண்ணைத் தேடி தொழில்நுட்பத்தின் உதவியாய் மட்டும் அவன் அவரைக் கணினியின் வாயிலாய் கண்டு பேசி - அல்லது புகைப்படத்தில் கண்டு ஏப்பி - திருமணத்துக்கென ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட - மணமகன் எங்கே இலங்கைக்குள் கால் பதிப்பது? 'வாரணம் ஆயிரம் சூழ' வலம் வர வேண்டாம். 'ஆமிக்காரன் சூழ' இல் லாமல் இருப்பதோ போதாதா?

எனவே அமைதிப் பூங்காவில் திருமணங்கள் நடத்த நிச்சயிக்கப்படுகின் றன. ஆம், இந்தியாவிலதான் குறிப்பாக தமிழகத்தில் – அதிலும் குறிப்பாகச் சென்னையில்.

மணமகளும், அவன் வீட்டாரும், சென்னையில் விருந்தினர் விடுதிகளில் முகாமிட, மணமகன் விடுப்பு பார்த்து, வீஸா பார்த்து விமானத்தின் மூலம் ஒரு நாள் வந்து சேர்கிறான். அவனது அம்மை அப்பர்கள் ஈழம் கடந்து இந்திய மண் வந்து சேருகிறார்கள். வெளிநாடுகளில் இருந்தும், இந்தியாவி லிருந்தும் உறவினர்கள், நண்பர்கள் ஒன் றிணைகின்றனர். பிறகு அவரவர் வசதிக் கேற்ப ஆலயங்களிலோ, அரங்கங் களிலோ மணவிழாக்கள் நிகழ்த்தப்படு கின்றன.

'என்ட மோன்' என்றும் 'என்ட மகள்' என்றும் உச்சி மோந்து கண்ணீர் வடிக்கிற தாயும் உயிரில் இறுக்குகிற வேகத்துடன் நெஞ்சணைத்து இமை கசிகிற தந்தையும், ஒரே வயிற்றில் பிறந்து ஒரே வீட்டில் வளர்ந்து, எங்கெங்கோ தவறிய செம்மறியாட்டுக் கூட்டமாய் விலகிப்போன சொந்தங்கள் கண்டு மகிழ்ந்த சந்தோஷக்களிப்பில் இதயங்கள் விம்மி நிற்க. ஆஹா, உண்மையிலேயே இலங்கைத் தமிழர் திருமணங்கள் வளர்ச்சிக் கொண்டாட்டங்கள்தாம்!

நம் தமிழகத்துத் தமிழர்கள் மறந்துபோனபலமரபுச்சம்பிரதாயங்களை இவர்கள் இன்றும் விடாப்பிடியாக வைத்திருந்து பின்பற்றுவது எனக்கெல் லாம் வியப்புத்தான். தாலிக்குத் தங்கம் வாங்குகிற பொன்னுருக்கல் நிகழ்ச்சி மணமகன், அழைப்பு, மணமகன் அழைப்பு, மாமன் மாமி, சீர், அரசமர கிளைக்கு மங்கல நாள் சூட்டுகிற புதுமை, மோதிரம் மாற்றல், சுத்தத்தமிழில் மங்கல மந்திர ஓசைகள், பாரம்பரிய உடைகளில் மணமக்களும் உறவுகளும் என்று முழுக்க முழுக்க வைபவக் கோலாகலங்கள்தான்.

ஓர் இலங்கைத் தமிழர் திருமணத் தில் எனக்கு மூக்கின் மேல் விரலை வைக்குமளவுக்கு வியப்பைத் தந்த விஷயம் - மொத்தப் பங்கேற்பாளர்களே பத்துப் பதினைந்துபேர் மட்டுமே! ஓர் ஓட்டலின் ரிசப்ஷன் அரங்கில் மணமகன் உறவினர் பத்துப்பேரும், மணமகள் உறவினர் மட்டுமே வந்து இறங்க - திருமணம் துவங்கியதும் ஏதோ மிகப்பெரும் ஒரு திருமணம் நடந்தேறுவதைப் போல காட்சிகளே மாறிப்போயின. அத்தகைய முழுமையுடன் நிகழ்ச்சிகளை அரங்கேற்றிய திருமண ஏற்பாட்டினரைத் தேடிக் கண்டுபிடித்து உரையாடினேன்.

ஒன்றல்ல, இரண்டல்ல. ஐந்நூற்றுக் கும் மேற்பட்ட ஈழத்தமிழர் திருமணங்களை சென்றை நடத்தி முடித்துக் கொடுத்தவராம் அவர்.

அத்தகைய அனுபவமும் ஈடுபாடும் அவரை ஒவ்வொரு திருமணத்தை நடத்தி வைக்கும்போதும் அந்தக் குடும்பத்தாருள் ஒருவராகவே மாற்றிவிடுகிற விந்தை இயல் பான நிகழ்வாகவே நடந்துவிடுவதாக அவர் பெருமிதத்துடன் கூறினார்.

நூறுபேர் வருகின்றன நிகழ் வானாலும் சரி, இருபது பேர் மட்டுமே பங்கேற்கிற நிகழ்வானாலும் சரி, முழுமை யில்லாத அரைகுறை வேக்காட்டுத் தனத்தை தன்னால் நினைத்தே பார்க்க முடியாது என்று அவர் தலையை உதறிப் பேசும்போது அவரது உள்ளுணர்வும், அது அவருக்குத் தரும் வெற்றியையும் என்னால் அறிய முடிந்தது.

ஈழத்தில் நடந்தேற முடியாத மண விழாக்களை இந்தியாவில் அரங்கேற்றுகிற வாய்ப்பைப் பெற்ற அவருக்கு மகிழ்வு மட்டுமின்றி மனச் சஞ்சலங்களும் வாய்க்கின்றனவாம். வெளிநாட்டிலிருந்து வந்த மணமகன் முதன்முதலாக இங்கு வந்து பெண்ணைப் பார்த்துவிட்டு வேண்டாம் என்று மறுதலித்துப் போன சம்பவங்களையும், ஆயிரம் கனவுகளோடு வந்திறங்கும் மணமகனைக் கட்டாயத் திருமணம் என்று வலுவில் அழைத்து வரப்பட்ட மணமகன் தனது காதலைச் சொல்லி எதிர்கொண்டதால் மனமுடைந்து திரும்பிப்போன சம்பவங்களையும், என்னோடு பகிர்ந்து கொண்டார் அவர்.

இப்போது இலங்கையிலும் திருமணங்கள் நடப்பது வழக்கமாகிவிட்ட தாலும், வெளிநாடுகளிலேயே மணம் முடித்து விடுவதாலும் தமிழகத்தில் நடைபெறும் திருமணங்களின் எண் ணிக்கை பாதியளவுக்கு குறைந்திருப்ப தாகவும் கூறினார்.

தாய் மண் தராத சுதந்தரத்துடன் தமிழ் மண்ணில் திருமணங்கள் நடப்பதை இலங்கை தமிழர்கள் நன்றியுணர்வோடும் பெருமிதத்தோடும் குறிப்பிட்ட அவர், இலங்கையில்சொந்தமண்ணில், சொந்தம் சூழ மணம் செய்யும் வாய்ப்புகளும் பெருக வேண்டுமென்கிற ஏக்கமும் அவர்களைத் தொடர்ந்து வருவதாக தீவிரத்தோடு குறிப்பிட்டார்.

அவர்களது எளிய ஆசைகள் கூட கண்களுக்கு ஏக்கமாகவே தேங்கி நிற்பது முறையில்லைதானே?





மிதுனம்

புதனின் ஆதிக்கத்தால் புரிந்துக்கொண்டு எளிமையாக எவரிடமும் பழகும் விதம், அறிவுபூர்வமாக சிந்தித்து செயல்படும் பாங்கு, எந்தவொரு விஷயம் பற்றிக் கேட்டாலும் அதைப் பற்றி விரிவாக தெரிந்து வைத்திருக்கும் அறிவு, புத்திசாலித்தனம், நகைச்சுவை கலந்த பேச்சு, நயவஞ்சகம் செய்வோரை எளிதில் இனம் கண்டுவிடும் அறிவு, சமயோஜித புத்தி. புத்தகத்தின் மீது இனம் புரியாத ஆர்வம் இப்படி புதனின் ஆதிக்கம் பெற்று விளங்கும் மிதுன இராசி நண்பர்களே.

உங்கள் இராசிக்கு ஜென்ம ஸ்தானம் என்று விளங்கப்படும் 1ஆம் இடத்தில் இதுவரை சஞ்சரித்த குருபகவான் வருகின்ற 19.6.14 முதல் கடக இராசியில் 2ஆம் இடமாக சஞ்சரிக்கப்போகின்றார்.

இது ஒரு நல்ல மாற்றம் என்றே சொல்லலாம். இனிய பெயர்ச்சி, இன்பம் பூக்கும். கனியவைக்கும் கை கொடுத்து காத்து நிற்கும் என்றெல்லாம் புகழவைக்கும் புண்ணிய குரு பெயர்ச்சியின் குதூகலப் பலன்களை இனி விரிவாகப் பார்க்கலாம். பணவசதி தாராளமாகப் புழங்கும். கொடுக்கல், வாங்கில் நலம் ஏற்படும். செலவுக்கே திண்டாடி வந்தவர்கள் இனி கொண்டாடி செலவு செய்யும்படி வரவு உயரும். புதிய புதிய தொழில் வாய்ப்புகள் தேடி நாடி வரும். கையிருப்புகள் கூடும். வாழ்க்கைக்கு தேவையானதை சீர்தூக்கி எடுத்து சிறப்பான அமைப்பைக் கொடுக்கும். அண்டைய அயலாருடன் சுமூக உறவு மேம்படும். வெளிவட்டாரப் பழக்க மேம்பாடு அடைந்து வழக்கங்கள் அதிகரிக்கும். வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் விரைந்த முன்னேற்றம் ஏற்படும் ஒரு சிலருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும்.

ஒரு சிலர் வெளிநாடு சுற்றுலா செல்ல வழி கிடைக்கும். பணக்கார யோகம் சித்திக்கும் தன ஸ்தானமான 2ஆம் இடத்தில் தனகாரகனான குரு நிற்பது 'கார்கோ பாவ நாஸ்தி' என்றாலும் பணவசதியில் குறைவு வராது. பேச்சு வன்மை கூடும். பேசியே காரியம் சாதிக்கின்ற நிலை ஏற்படும்.

வாக்கில் வசீகரம் கூடும். பேச்சாளர்களாக இருப்பவர்கள் நல்ல வருமானமும், வாய்ப்புகளும் பெறுவார்கள். பேசும் தொழிலில் இருப்பவர்களான ஆசிரியர்கள், வக்கீல்கள் மத போதகர்கள், உபன்யாசிகள், பேச்சாளர்கள், சொற்பொழிவாளர்கள், ஜோதிடர்கள், அருள்வாக்கு சொல்பவர்கள் சொன்ன சொல் தவறாமல் பலிக்கும். உங்கள் பேச்சிற்கு அனைவரும் கூடி வருவார்கள்.

படிப்பில் இதுவரை சரியான ஆர்வமில்லாதவர்கள் கூட நல்ல மதிப்பெண்களைப் பெற்று பாராட்டுக்களைப் பெறுவார்கள். புதிதாக படிக்கும் ஆர்வத்தையும் தூண்டும். புத்தகப் பிரியராக வலம் வருவார்கள். நன்றாகப் படித்து, நன்றாக பேசுவதால் உங்கள் செல்வாக்கு கூடும். உங்களைச் சுற்றிலும் எப்போதும் நலன்களில் அக்கறை கொண்டவர்கள் இருப்பார்கள். புகழ் கூடும் நிலை ஏற்படும். அனைவராலும் பாராட்டப்படுவீர்கள். குருபகவான் இருக்கும் இடத்தைக் கெடுத்து, பார்க்கும் இடத்தைப் பலப்படுத்தும் குருபார்வை கோடி புண்ணியம் ஆனால் சனி பார்வையில் யாரும் தப்பிக்க முடியாது என்பதை அனைவரும் அறிந்ததே. குருபெயர்ச்சி பலனில் நற்பலன்கள் கிடைத்தாலும் குரு பார்வையில் கிடைக்கும் பலன்களைப் பற்றி விரிவாகக் காணலாம்.

உங்கள் இராசிக்கு 7, 10க்குடைய குரு பாவி, 2இல் நிற்பது ஜோதிட ரீதியில் நலமல்ல என்றாலும் பாதகாதிபதி, கேந்திராதிபதி கோட்சார ரீதியில் பலன் தந்தே தீரும். 2இல் இருக்கும் குரு 6ஆம் இடம் 8ஆம் இடம் 10ஆம் இடம் ஆகிய மூன்று இடங்களையும் தமது சுப பார்வையால் பார்த்து சுகப் பலன்களைத் தருகின்றார்.

குரு பார்வை 6இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

6ஆம் இடம் நோய், வறுமை போன்ற தீய பலன்களை குறிப்பதாகும். அங்கு சனி இராகு இருப்பதுடன் நீர் சம்பந்தமான நோயைக் குறிக்கும் வாயுத் தொல்லையும், வயிறு சம்பந்தமான உடல் உபாதைகளையும் தரும். குரு பார்வை படுவதால் எந்த நோயாக இருந்தாலும் வைத்தியத்திற்குக் கட்டுப்படும். மருந்து மாத்திரைகளைக் குறைத்து உணவு கட்டுப்பாட்டின் மூலம் உடல் நிலையை சரியாக வைத்துக்கொள்ள முடியும். எதிரிகள் அஞ்சி ஓடுவார்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகி ஓடும். கடன்கள் தீரும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுக்கல் - வாங்கலில் சுமூக நிலை ஏற்படும்.

குரு பார்வை 8இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

அலைய வைத்து ஆட்டிப் படைப்பதில் அதி உன்னத நிலை உடைய வீடு 8ஆம் வீடு, பொதுவாக 8 என்ற எண்ணைக் கண்டால் அனைவரும் பயப்படுவது வழக்கம். தீமையே தருகின்ற 8ஆம் வீட்டில் குரு பார்வை படுவதால் வருகின்ற தொந்தரவுகள் அனைத்தும் சூரியனைக் கண்டால் பனி ஓடுவது போல விலகி ஓடிவிடும். நீண்ட நாட்களாக இழுத்துக்கொண்டு இருந்த பிரச்சினைகள் விலகி ஓடும். நோய், வம்பு, வழக்குகள், கடன் தொல்லைகள், தகராறுகள் போன்றவை சட்டென தீரும். 8ஆம் இடம் ஆயுள் ஸ்தானம் என்பதால் ஆயுள் கூடும். கண் திருஷ்டி நீங்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும். நவ நாகரீகமான முறையில் புது உறவை புதுப்பிப்பார்கள். பகைத்து நின்ற நண்பர்கள் கூட பகையை மறந்து பாசத்துடன் பழகுவார்கள்.

குரு பார்வை 10இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

10ஆம் இடம் தொழில் ஸ்தானம் கர்ம ஸ்தானம் தொழில் சிறக்கும். நல்ல வருமானம் ஏற்படும். நல்ல பணியாட்கள் கிடைத்து வசதி வாய்ப்புகள் பெருகும். வந்தோர் போவோரெல்லாம் வாழ்த்தும் நிலை வரும். புதிய புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வந்து வெற்றியை மலைபோல் குவிக்கும். எந்த தொழில் செய்தாலும் சொந்த தொழில் செய்பவர்கள் தொடர்ந்து முன்னேற்றம் காண்பார்கள். மாற்றம் பெறுவார்கள். ஏமாற்றம், தடுமாற்றம், இடமாற்றம் என எப்போதும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்த நிலை மாறி புதிதாக நல்ல வாய்ப்புகள் தேடி வரும். உபாதைகள் நீங்கும். விவசாயத்தில் முன்னேற்றம் சற்று தடுமாற்றமே.

குரு பார்வை 12இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

விரைய ஸ்தானம், வெளிநாடு பற்றிக் குறிக்கும் ஸ்தானம் 12ஆம் இடமாகும். தூக்கத்தைக் குறிக்கும் ஸ்தானம் என்றும் கருதப்படும் ஸ்தானமும் 12ஆம் இடமே. எனவே இக்குரு பார்வையானது 12ஆம் வீட்டில் படுவதால் சுப நிகழ்ச்சிகள் மூலம் சுப விரையங்களே ஏற்படும் வெளிநாட்டு அனுகூலம் இருப்பவர்கள் வெளிநாடு செல்வதற்கு இதுவே தக்க தருணம் ஆகும். ஆடை, ஆபரண சேர்க்கையின் மூலம் பெண்கள் மகிழ்ச்சி அடைவார்கள். உத்யோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம்.

குருபகவான் 19.6.2014 வரை புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

தனுசு இராசியாதிபதியாகிய குரு 8இல் உச்சம் பெற்று தனது சொந்த நட்சத்திரமான புனர்பூசத்தில் சஞ்சரித்தாலும் தனது பார்வை பலத்தால் திடீர் அதிர்ஷ்டம், திடீர் தன ப்ராப்தி ஆகியவற்றைத் தரும். விரையச் செலவுகள் வந்தாலும் அதற்குரிய வருமானம் வரும். வெளியூர், வெளிநாடு செல்பவர்கள் ஏற்றம் பெறலாம். கல்வியில் நல்ல நிலை ஏற்படும். கலைகள் விலைகளாகும். நலம் கிட்டும். ஆரோக்கியம் மட்டும் உஷார்.... உஷார்.... உஷார்..... வயிறு தொடர்பான உபாதைகள் வந்தால் உரிய வைத்தியம் தேவை.

குருபகவான் 4.7.2014 முதல் 2.9.2014 வரை பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

சனிபகவானின் நட்சத்திரம் பூசம், சனி, 2, 3ஆம் இட அதிபதி. தன வரவு உண்டு. குடும்பத்தில் குதூகலம் உண்டு. நல்ல நண்பர்கள் சேர்க்கை உண்டு. உழைப்புக்கேற்ற ஊதியம் உண்டு. 2ஆம் இடத்தை குரு பார்ப்பதால் இது உண்டு. 3ஆம் இட அதிபதி 8இல் மறைவது முயற்சி தடை, சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உருவாகலாம். முடிவெடுப்பதில் முன்னெச்சரிக்கை தேவை.

குருபகவான் 3.9.2014 முதல் 7.12.2014 வரை ஆயில்யம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

புதனின் நட்சத்திரம் ஆயில்யம் உங்கள் இராசிக்கு பாதகாதிபதியாக வரும் புதன் இராசிநாதனுக்கு பகை. உஷார் தேவை. உடன் இருந்துக்கொண்டே ஊறு விளைவிப்பவர்களால் தொந்தரவு உண்டு. அதிக உழைப்பு, குறைந்த வருமானம் எனும் நிலை கொண்ட காலம் இது. எங்கு சென்றாலும் எதிர்ப்பும், சூழ்ச்சிகளும் வரும். குருவின் பார்வை பலத்தால் ஓரளவு சமாளிக்கலாம். என்றாலும் இறை வழிபாடு அவசியம் தேவை.

குருபகவான் 8.12.2014 முதல் 8.4.2015 வரை வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம் :

8இல் வக்கிரமாகும் குரு 7ஆம் இட பலன்களை தருவதால் சுபகாரியங்கள் நடக்கும். திருமணயோகம் வரும். பிரயாணங்களால் பல நலன்கள், நன்மைகள் கிட்டும். புதிய புதிய நண்பர்கள் சேர்க்கை மூலம் புத்துணர்ச்சி கிட்டும். நல்ல செய்திகள் வரும். வருமானம் உயரும் வசதி கூடும் வளம் ஏற்படும். வசந்த காலமிது.

நட்சத்திரப் பலன்கள்

1. மிருகசீரிஷம் 3, 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :-

செவ்வாயின் நட்சத்திரம் மிருகசீரிஷம் மிதுன இராசிக்கு 6, 11ஆம் இட அதிபதியான செவ்வாயின் இராசிக்கு குரு பெயர்ச்சி நற்பலன் தரும். பல வகையில் இலாபம் தரும். கணவன் மனைவியின் இடையே நல்ல இணக்கம் உருவாகும். வெளி வட்டார பழக்க வழக்கங்கள் அதிகரிக்கும். மாணவர்கள் கூடுதல் கவனம் செலுத்தி படித்தால் அதிக மதிப்பெண் பெறுவார்கள் அதிக மதிப்பெண்கள் வாங்கி அசத்துவார்கள்.

2. திருவாதிரை 1, 2, 3 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

இராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் பிறந்தவர்களுக்கு குருபெயர்ச்சி நல்ல பலன்களையே அள்ளித்தரும். எல்லா வகையிலும் இலாபம் கிட்டும், வம்பு, வழக்குகளில் நல்ல திருப்பங்கள் ஏற்பட்டு முன்னேற்றம் உண்டாகும். பூர்வீகச் சொத்தில் இருந்த எதிர்ப்புகள் விலகி நன்மை ஏற்படும். பெண்கள் எல்லா வகையிலும் முன்னேறி நலம் பெறுவார்கள். தொழிலில் நல்ல இலாபம் கிட்டும்.

3. புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :-

குருவின் நட்சத்திரமான புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு குருப்பெயர்ச்சி நல்ல குதூகல நலம் தரும். ஆடை, ஆபரணங்கள் மனையோடு கூடிய அனைத்து பொருட்களும் வந்து சேரும். உத்யோகத்தில் உயர் பதவி கிடைத்து எல்லோராலும் பாராட்டப்படுவர். சமூகத்தில் மதிப்பு மரியாதைகள் கூடும். கொடுக்கல் வாங்கலில் இதுவரை இருந்து வந்த சிக்கல்கள் தீரும். புதிய திருப்பம் ஏற்படும்.

பரிகாரம்

மதுரையில் உள்ள திருமோகூர் சென்று ஒருமுறை தரிசனம் செய்து வரவும். கந்தர் சண்டிக்கவசத்தை அரச மரத்தின் அடியில் படிக்கவும் அபூர்வ இலாபம் கிட்டும்.



முதியோர் நலன் : ஓய்வூதியமும் ஏனைய உதவிகளும்

கனடாவாழ் முதியோருக்கு அரசாங்கம் பல உதவித் திட்டங்களை ஏற்படுத்தியிருந்தும் அது பல முதியோருக்குத் தெரிவதில்லை. வயதாகி விட்டால் தாம் பிள்ளைகளுக்கு சுமையாகி விட்டோம் என்ற ஒரு குற்ற உணர்வுடன் அல்லது தம்மைக்கவனிப்பார் யாருமில்லை என்ற தனிமை உணர்வுடன் தம் கடைசிக் கால வாழ்க்கையை வாழ்ந்து கழிப்பவர்கள் நம்மில் பலர். கனடாவாழ் தமிழ் மக்களிடையே முதியோருக்கான உரிமைகள், உதவிகள், வசதிகள் பறறிய அறிதல் மிகக் குறைவு. வெளியுலகுடனான தொடர்பாடலில் அவர்களுக்குள்ள சிக்கல் இதற்குப் பிரதான காரணம். அவர்களுக்கு உதவிக்கரம் கொடுக்கும் பகுதி இது.

நீங்கள் முதியோரா? கவலைப்படாதீர்கள். இந்தப் பகுதியை உங்கள் பிள்ளை போல் கருதி உங்கள் சந்தேகங்களை, உங்களுக்குத் தேவையான தகவல்களை, உதவிகளைத் தயங்காமல் கேளுங்கள். உதவக் காத்திருக்கிறோம். உதவக் கூடியவர்களை தொடர்புபடுத்தி விடவாவது செய்வோம். உங்கள் கருத்துக்கள் அனுபவங்களைக் கூட இங்கே பகிரலாம்.

இம்முறை நாம் ஓய்வூதியம் பற்றியும் ஏனைய உதவிகள் பற்றியும் தெரிந்து கொள்வோம்.

ஓஏஎஸ் பென்ஷன்

ஓஏஎஸ் பென்ஷன் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஓல்ட் ஏஜ்செக்யூரிட்டி பென்ஷன் என்பது இதன் விரிவாக்கம். தமிழில் அதிக வயது காவல்நிலை ஓய்வூதியம் என்று மொழிபெயர்த்து வைத்திருப்பதால் பொருள் புரிந்து கொள்வது கடினம்தான். நீங்கள் முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியமென்று வைத்துக் கொள்ளுங்கள். விடயம் இதுதான். வயதான காலத்தில் உங்கள் வாழ்க்கைப் பாதுகாப்புக்காக இப்படி ஒரு பென்ஷன் கனேடிய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது.

வயதான காலமென்றால் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயது என்பது அரசாங்கத்தின் நியமமாகும். நீங்கள் 65 வயதாயிருந்தால் மட்டும் இதற்குத் தகுதியுடையவராக மாட்டீர்கள். முதலில் நீங்கள் கனேடியக் குடியுரிமை பெற்றிருக்க வேண்டும். அத்தோடு உங்களது 18 வயதுக்குப் பின்னர் குறைந்தது 10 வருடங்களாவது வாழ்ந்திருக்க வேண்டும். அந்த 10 வருடங்களும் நீங்கள் தொடர்ச்சியாக வாழ்ந்திருக்க வேண்டுமென்று அவசியமில்லை. இடையிடையே நாட்டை விட்டு வெளியே சென்று வந்துமிருக்கலாம்.

ஆனாலும் இத்தகைய தகுதி எல்லாம் இருக்கும் சில முதியவர்கள் அரசாங்கம்தமக்கான இவ் ஓய்வூதியத்தை வழங்குமெனக் காத்திருந்து, அது கிடைக்கவில்லையே ஏன் என்று தெரியாமல் விழிக்கிறார்கள். விடயம் என்னவென்றால்,இத் தகமைகளை எய்திக் கொண்டால் மட்டும் போதாது. அதற்காக அவர்கள் விண்ணப்பிக்கவும் வேண்டும். விண்ணப்பிப்பதன் மூலம் தமக்கு இவ் உதவி தேவை என்பதை அரசாங்கத்திற்கு அறிவித்தால் மட்டுமே அவ் உதவியை அரசாங்கம் வழங்கும்.

இந்தப் பென்ஷன், உங்கள் சேவைக்கான பென்ஷனல்ல. அதாவது நீங்கள் வேலை செய்தபோது, வயதான காலத்து வருமானத்துக்காக உங்கள் சம்பளத்திலிருந்து பிடிக்கப்பட்ட பென்ஷனல்ல. இது அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் இனமான உதவி. நீங்கள் வேலை செய்யாதிருந்தால்கூட இதை அது வழங்கும். ஆனால் வசதியான சில முதியவர்கள் இவ் உதவி தேவையில்லையென்றால் அதைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க மாட்டார்கள். நீங்கள் விண்ணப்பிக்காவிட்டாலும் நீங்கள் அவ் உதவி தேவையில்லையெனக் கருதிக் கொண்டதாகவே அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

புரிந்ததா? இதைப் புரிந்து கொண்ட பின் நாம் மற்றொரு உதவித் திட்டத்தைப் பார்ப்போம்.

ஜிஐஎஸ்

ஜிஐஎஸ் எனப்படும் கறன்டீட் இன்கம் சப்ளிமன்ற். தமிழில் உதவிப்படுத்திய வருமான குறைநிரப்புத் தொகை என்று குழப்பமாக மொழிபெயர்த்து வைத்திருக்கிறார்கள். அதென்ன உறுதிப்படுத்திய? உத்தரவாதப் படுத்திய என்பதுதான் சரி. அதாவது உங்கள் வருமானம் வாழ்க்கைக்குப் போதாவிடத்து, அந்தப் போதாமை என்னவெனக் கணித்து, அக்குறையை நிரப்புகின்ற ஒரு உதவித் திட்டத்தைத்தான் இப்பெயர் கொண்டு அழைக்கிறார்கள்.

நீங்கள் முன்னர் சொன்ன ஓஏஎஸ் பென்ஷன் பெறுபவராக இருந்து அவ் வருமானம் உங்கள் வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லாதவிடத்தில் உங்களுக்கு இவ் ஜிஐஎஸ் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. இது உங்களதும் உங்கள் வாழ்க்கைத் துணையினதும் கூட்டு வருமானத்தைப் பொறுத்தது. நீங்கள் வருடாந்தம் ஏப்ரல் 30 திகதிக்கு முன்னதாக டக்ஸ் செய்வீர்களல்லவா. அதாவது வருமானக் கணக்கு சமர்ப்பிப்பீர்களல்லவா. அதிலிருந்து அரசாங்கம் நீங்கள் இவ் உதவிப் பணத்துக்குத் தகுதியானவரா என்பதையும் எவ்வளவு தொகை வழங்கப்படுமென்பதையும் கணித்துக் கொள்ளும். இது வருடாந்தம் மாறுபடும். நீங்களாகவே இத்தொகையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தையும் மேற்கொள்ளலாம்.

சேர்விஸ் கனடா அலவன்ஸ்

முதியவரின் வாழ்க்கைத் துணையும் 65 வயதை எட்டிவிட்டால் ஓஏஎஸ் பென்ஷன் மற்றும் ஜிஐஎஸ் போன்ற மேற்கண்ட கொடுப்பனவுகளுக்கு தகுதியாகி விடுவாரல்லவா. அவ்வாறு65 வயதாவதற்கு முன்னரே 60ற்கும் 64 வயதிற்கும் இடையே வழங்கப்படும் ஒரு அலவன்ஸ்தான் இந்த சேர்வீஸ்கனடாகொடுப்பனவு. எனவே, உங்கள் வாழ்க்கைத் துணை 65 வயது வரும்வரை காத்திருக்காமல் 60 வயதை அடைந்ததுமே இக் கொடுப்பனலைவப் பெற்றுக் கொள்ள முடியும்.

அலவன்ஸ் ஃபோர் த சர்வைவர்

இது 'வாழ்க்கைத் துணையை இழந்தவருக்கான கொடுப்பனவு', அதாவது, ஒருவர் 65 வயதை எட்டி இயல்பாகவே ஓஏஎஸ் மற்றும் ஜிஐஎஸ் திட்டங்களுக்குத் தகுதி பெறுவதற்கு முன்னர் வாழ்க்கைத் துணையை இழந்து விட்டால் அவ்வாறு 65 வயதை எட்டும்வரை அவருக்கு 60ற்கும் 64ற்கும் இடைப்பட்ட வயதுகளில் வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவு இது.

ஜி.ஏ.ஐ.என்.எஸ். (கெய்ன்ஸ்)


கறன்டீட் அலுவல் இன்கம் சிஸ்டம், அதாவது உத்தரவாதப்படுத்தப்பட்ட வருடாந்த வருமானத் திட்டம் என்று இதைக் கூறுவர். இது ஒன்டாரியோ மாகாணத்துக்கானமுதியோர் திட்டமாகும். அதனால் இதைப் பெறுவதற்கு ஒன்டாரியோ மாகாணத்தில் வாழ்பவராகவும் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராகவும் இருப்பதுடன் ஓஏஎஸ் மற்றும் ஜிஐஎஸ் நலன்களைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும். இவற்றை நீங்கள் கொண்டிருந்து இம்மாகாணம் நிர்ணயிக்கும் ஒரு தொகைக்கு குறைவான மாத்த வருமானம் பெறுபவராகவும் இருந்தால் உங்களுக்கு இந்தத் திட்டத்தினால் உதவி கிட்டும். இவ் உதவி உங்களுக்கு குறிப்பிட்ட ஒருவருட வருமானம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஒன்டோரியோ மாகாண அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவித்தொகையாகும்.

மேலும் சில ஓய்வூதிய, உதவித் திட்டங்கள் பற்றி அடுத்த இதழில் அறிந்து கொள்வோம்.

முதியோர் இல்லத்தில் ஒரு தாயின் கண்ணீர்



நீ இருக்க
ஒரு கருவறை
இருந்தது என் வயிற்றில்...
ஆனால்
நான் இருக்க
ஒரு இருட்டறை
கூடவா இல்லை
உன் வீட்டில்...



திருமலை கோணேஸ்வரம் கோயில் சாஸ்திரத்துக்கு ஒரு சவால்!

—ஈழவாணி

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கிழக்கிலங்கை தனது பூர்வீகக் குடிகளை கொண்டிருந்தது. இன்று காணப்படும் புராண இதிகாசங்களில் விபரிக்கப்படுகின்ற இராவண னாட்சியின் தடயங்கள் அதற்கு சான்று பகர்கின்றன. இராவணனது இரு முக்கிய வணக்கஸ்தலங்களான உகந்தமலையிலும், திருகோணமலையிலும் உள்ள ஆலயங்கள் கிழக்கு மாகாணத்தின் இருமுனை களிலும் காணப்படுபவை. ஆனால் தற்போதைய நிலவரங்கள் நடைபெறுகின்ற சம்பவங்கள் போன்றவற்றைக் கவனித்தால் கொஞ்சம் கொஞ்ச மாக அழிந்து கொண்டிருக்கும் பட்டியலில் இதுவும் இணைந்து போகுமோ என்ற அச்சத்தையே தருகிறது.

இராவணன் கோட்டையின் இடிபாடுகளைக் கொண்ட எச்சங்கள்கூட திருக்கோயிலையை அண்டியுள்ள வங்கக் கடலினுள் காணப்படுகிறது. உலகின் எப்பகுதியாய் இருந்தபோதிலும் நதிக்கரை யோரங்களே மனித இனம் தோன்றி வளர்வதற்கு வாய்ப்பான இடங்களாகவும், நாகரிகங்களின் தோற்றுவாயாகவும் இருந்துள்ளன. இந்த வகையில் இலங்கையை பொறுத்தவரை கதம்பை நதி, களனிகங்கை, மாணிக்க கங்கை போன்றவை முக்கியம் பெறுகின்றன.

எழுத்துருவில் நாம் காணக்கிடைக்கின்ற சிங்களவர் வரலாறு கூறும் நூல் மகாவம்சம் ஆகும். பாளியை மூலமொழியாகக் கொண்ட இந்நூல் கி.பி. 5ம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ளது. இது



இப்படியே செல்லும் பட்டசத்தில் மூலக் கடவுளே மாறிப் போகலாம், அல்லது அவரையும் சிறைப்பிடித்து " அண்டக்கிறவுண்டில் மறைத்து அழித்துவிடும் அபாயங்களும் உண்டு.

கூறும் வரலாறு கி.மு. 543ம் ஆண்டு விஜயனின் வருகையுடனே ஆரம்பிக்கின்றது.

இராவணன் சாம வேதத்தில் நிபுணத்துவம் பெற்றவன் எனப் பல இராமாயணங்களும் எடுத்தியம்புகிறது. இவன் தனது கை நரம்புகளால் சாமகானம் பாடி சிவனை மகிழ்வித்ததாகவும் கூறப்படுகின்றது.

"வித்துசேசன் இருபத்தொன்பது வருடங்களும், மூன்று மாதங்களும் இலங்கையை ஆண்டான். இவனுக்குப்பின் இவனது மகன் சுகேசன் என்பவன் மணிபுரம் என்னும் கதிர மலையைத் தலைநகராக்கி ஆட்சி புரிந்தான். ஆதிகாலத்தில் ம யனால் கட்டப்பட்ட திருக்கேதீசுவரம், முனீசுவரம், நகுலேசுவரம் என்னும் சிவாலயங்களை சுகேசன் பழுது பார்த்து அவற்றுக்கு அநேக நகைகளும், நிலங்களையும் கொடுத்தான்." இவ்வாறு கணபதிப் பிள்ளை எழுதிய இலங்கையில் புராதன சரித்திரம் என்ற நூலில் கூறுகிறார். சுகேசன் என்பவன் இராவணனுக்கு முன்னைய காலத்தில் இலங்கையை ஆண்ட ஒரு மன்னன்.

இலங்கையில் விஜயன் குடிகளை வசப்படுத்தும் நோக்குடன் சமய வழிமுறைகளையும் சரியாகக் கடைப்பிடித்தான். இலங்கையில் ஆட்சியை அமைக்கு முன்னரே கீழ்திசையில் கோணேசர் கோவிலையும், மேல்திசையில் கேதீச்சர கோவிலையும்



பழுதுபார்த்து. அக்கோவில்களில் பூசை நடாத்தும் பொருட்டு காசிப் பிராமணர்களை அழைத்து வந்தான் என யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிடுகிறது. இதிலிருந்து விஜயனின் வருகைக்கு முன்னரே இருந்த ஈழத்தின் பழைமை வாய்ந்த சைவாலயங்கள் இவை என்பதை நாம் அறியலாம்.

திருக்கோணேச்சரம் (திருக்கோணேஸ்வரம்) உலகில் உள்ள வழிபாட்டுத்தலங்களில் மிகப் பழமை யானது. இவ்வாலயத்தை இலங்கையை ஆண்ட மனுமாணிக்கராஜா என்ற மன்னன் கி.மு. 1300ஆம் ஆண்டிற்கு முன்னரே கட்டினான் என்று சான்றுகள் கூறுகின்றன. சிவ பக்தனாகிய இராவணனால் இங்குள்ள சிவலிங்கம் தாபிக்கப் பட்டதாக ஐதீகம்.

"கோணமாமலை அமர்ந்தாரே" என திருஞான சம்பந்தராலும், "மன்னு மாமலை" என சேக்கிழாராலும் மற்றும் அருணகிரிநாதர் உமாபதி சிவாச்சாரியார் ஆகியோரால் புகழ்ந்து பாடப்பட்டு அகத்திய முனிவரால் வணங்கப் பெற்றதும், குளக்கோட்ட மன்னனால் திருப்பணி செய்யப்பட்டதும் இராவணேஷசனால் வழிபட்டதுமான பெருமைக் குரிய சிவதலம் இது.

கைலாசபுராணம், தட்ஷணகைலாசம், திருக்கோணாசல புராணம், கோணேஷர் கல்வெட்டு திருகோணாசல வைபவம், திருப்புகழ், திருகோண மலை அந்தாதி யாழப்பாண சரித்திரம், சீர்பாத குல வரலாறு மட்டக்களப்பு மான்மியம் மச்ச புராணம் குடுமிபாமலைச் சாசனம் முதலிய எண்ணற்ற நூல்களால் இவ்வாலயத்தின் பெருமை புகழ்ந்துரைக்கப்படுகின்றது.

கோணேஸ்வரம் உன்னத நிலையில் இருந்த காலத்தில் இக்கோவிலின் அர்ச்சகராக இருந்த பண்டிதராஜர் என்னும் புலவரால்பாடப்பட்ட தட்ஷணகைலாச புராணம் என்னும் நூலில் ஆலயத்தின் தோற்றம், ஆதி வரலாறு கூறப்படுகிறது.

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றை இலங்கா நேசன் இராவணேஷ்வரனுடன் தொடர்புபடுத்திக் கூறும் ஒரு புராண வரலாறும் உண்டு. இராவணன் தாயாரின் வேண்டுகோளுக்கு அமைய சிவலிங்கம் ஒன்றைப் பெற கைலயங்கிரி சென்றான் என்றும் சிவலிங்கத்தை கொடுத்தருளிய சிவன் இந்த சிவலிங்கத்தை பூமியில் வைத்தால் அதனை மீண்டும் எடுக்க முடியாது. பூமியில் அதனை பிரதிட்டை செய்யாமல் தடுத்தனர். தனது முயற்சியை கைவிடாத இராவணன் தாயின் ஆசையை நிறைவேற்ற கோணேஸ்வரம் வந்து இறைவனை வேண்டினான் என்றும் சிவலிங்கம் கிடைக்காத கோபத்தால் இராவணன் தனது வாள் கொண்டு கோணமலையை வெட்டினான் என்றும் அதுவே இராவணன் வெட்டு என்று புராண, இதிகாசங்கள் பகருகின்றன.

தட்ஷண கைலாசத்தில் கூறப்பட்டது போல் மூர்த்தி, தலம் தீர்த்தம் என மூவகை புண்ணிய சிறப்புக்களைக் கொண்ட கோணே ஸ்வர ஆலயத்தில் நவரத்தின வீதி, மரகத வீதி, மாணிக்க வீதி, நீல ரத்தின வீதி என ஒன்பது வீதிகளையும் மாட மாளிகைகள் நவரத்தின கோபுரங்கள் மாண்புறு தீர்த்தங்களையும் கொண்ட தேவேந்திர புரமாக விளங்கியதாக அப்புராணம் கூறுகிறது.



ஆனால் இன்று அப்படியே தலைகீழாகிப் போய்விட்டது. கோணேஷர் ஆலயத்தினுள் நுழையும் போதே எங்கோ ஒ சிங்கள புத்த விகாரைக்குள் நுழைவது போன்ற ஓர் உணர்வே ஏற்படுகிறது.

செல்லும் கடற்கரை ஓரமெங்கும் பௌவுத்த விகாரைப் பகுதிகளில் காணப்படும் கொடிகள். வெளிவாயில் தாண்டி உட்பிரவேசித்தால் இருமருங்கிலும் கடைகள், முற்றுமுழுதாக சிங்களவர்களால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

இவற்றைத் தாண்டி உள்ளே சென்றால் பெரிய சிவன்சிலை. தங்க நிறத்தால் செய்யப்பட்டிருந்தது.

அந்த சிவனைப் பார்த்ததும் பக்தி வரக் கூடியதாக இல்லை புதினம் பார்ப்பதாகவே ஓடிச் சென்று பார்த்தோம்.

ஏனெனில் அவ்வளவு வினோதமாய் அந்தச் சிலை அமைக்கப்பட்டிருந்தது.

குண்டலத்தைத் தொலைத்த சிவனின் காதுகள் புத்தனின் காதுகளைப் போல நீண்டு தொங்கிக் கொண்டிருந்தது. கண்கள் அரைவாசி மூடி மயக்க நிலையை வெளிப்படுத்த உதடுகளும் தடித்து பெரிதாக புத்தனுடையதாகவே ஆக்கப்பட்டிருக்கிறது.

கைமுத்திரைகளில் தெளிவில்லை அவையும் அவ்வண்ணமே வெளிப்படுத்த. உள்ளே கடற்கரையை அண்டிய இடப்பக்கத்தில் கடலைப் பார்க்க அமைக்கப்பட்டிருந்து சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன் போன்ற சிலைகளும் சிரிப்பு பொம்மை களாகவே அமைந்திருக்கின்றன. இதில் எந்த ஆகம விதிகளோ அம்ச விதிகளோ கடைப் பிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை இவை இப்படியே செல்லும் பட்டசத்தில் மூலக் கடவுளே மாறிப் போகலாம். அல்லது அவரையும் சிறைப்பிடித்து "அண்டக்கிறவுண்டில் மறைத்து அழித்துவிடும் அபாயங்களும் உண்டு. மக்களைக் காப்பாற்ற மறந்து போய்க் கிடந்த கடவுளர்களைச் சண்டையிட்டு நாம் காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். அதுமட்டுமில்லாமல், சிங்கள மாணவர்கட்கு இந்த ஆலயம் சிங்கள மன்னனால் கட்டப்பட்டது. அதைத் தமிழர்கள் புத்தரை மாற்றித் தமிழ் கடவுளாக்கி விட்டார்கள் என்றும் சொல்லிக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்களும் மன்னனும் புலம் பெயர்ந்து ஆண்டாண்டுகாலமாய் குந்தியிருந்த புலத்தை கடவுளரும் இழக்கும் நிலை வந்தாகிவிட்டாதே...



கடகம்

சந்திரனின் ஆதிக்கம் பெற்றதால் குளிர்ச்சியான தேகமும், குதூகல எண்ணமும் கூடி நிற்போரை மகிழ்விக்கும் பேச்சும், மென்மையும் பேசுகின்ற பேச்சிலே நல்ல எண்ணமும் கொண்ட நண்பர்களே, குருவின் உச்சவீட்டையும், சந்திரனின் ஆட்சி வீடும் என்றும் புன்னகையுடன் சிரித்து பேசும் செவ்வாயின் நீச வீட்டையும் கொண்ட கடக இராசி நண்பர்களே.

மிதுன இராசியிலிருந்து குருபகவான் உங்கள் இராசியான கடக இராசிக்கு அதாவது குருவின் உச்ச வீடான 1ஆம் வீட்டிற்கு வரப்போகின்றார். வெளியூர், வெளிநாடு, விரையம், தூக்கம், செலவு, துக்கம், படுக்கை சுகம் போன்றவற்றை குறிக்கின்ற 12இல் இருந்துக்கொண்டு தனது பலத்தாலும், ஓரளவு நற்பலன்களே தந்தார் என்று சொல்லலாம். எல்லாவற்றிலுமே ஓர் ஏற்றத்தை இதுவரை தந்த குரு இனி ஜென்ம இராசியில் தரும் மாற்றத்தை விரிவாகக் காணலாம்.

ஸ்ரீ இராமபிரானின் இராசியும் கடக இராசியே. இராமபிரான் சீதையை வனத்திலே சிறை வைத்ததும் இந்த ஜென்ம குருவில் தான். “ஜென்ம குரு வனம் குரு” என்ற பழமொழிகள் கூட உண்டு. ஜென்ம இராசியில் குரு சஞ்சாரம் எதிலும், எல்லாவற்றிலும் சற்று உஷாராக இருக்க வேண்டும் என்பதனையே வலியுறுத்துகின்றது. மேலும் ஜென்மத்தில் குரு சஞ்சரிப்பதால் புதிய முயற்சிகளை சற்று சிந்தித்து பலமுறை ஆய்வு செய்த பிறகே செய்வது நன்மையைத் தரும். மேலும் மனைவியுடன் கூடிய அளவு ஒத்துப்போவது வீண் பிரச்சனைகளைத் தவிர்க்க உதவும்.

ஜென்ம குருவானது முதலில் கொடுத்து பின்பு கெடுக்கும். எனேவ புதிய தொழில் தொடங்க ஏராள மான வாய்ப்புகள் கிடைத்தாலும் அதை வெற்றியுடன் செயல்படுத்த முடிகின்றதா என்பது கேள்விக் குறிதான். கொடுக்கல், வாங்கலில் புதிய சிக்கல்கள் உருவாகும். அதிக அளவில் நீங்கள் ஏமாறுவதற்கு வாய்ப்புகள் உண்டு. நல்லவர்கள் போல் பழகிக்கொண்டே ஏமாற்று வார்கள். சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நலமே. வெளிநாட்டுத் தொடர்புகள் சில வில்லங்கங்களைத் தரலாம். கூட்டுத்தொழிலில் இருப்பவர்கள் தங்களது கணக்குகளைச் சரிபார்ப்பது நல்லது. புதிய முயற்சிகள் இழுத்தடித்து, கழுத்தறுக்கும். வாழ்க்கையை மேற் கொண்டு தொடரலாமா? என்று கூட யோசிக்கத் தோன்றும். லௌகீகத்தில் பிரச்சனைகள் பலவாறு வந்தாலும் ஆன்மீகம் நிலைத்து நிற்க உறுதுணையாக இருக்கும். வேதங்களின் மீதும் உபாசனைகள் மீதும் நாட்டம் ஏற்படும். புண்ணிய யாத்திரை செல்வதற்கு மனம் ஏங்கும் தன்னைக் காட்டிலும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கும். பிள்ளைகள் வழியில் ஓரளவு நன்மையே தரும். தேவையில்லாமல் வாக்குவாதத்தை தவிர்த்தால் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நிலவாது. அடுத்தவர்கள் பிரச்சனையில் ஓரளவு அல் லது முடிந்த அளவு தலையிடாமல் இருப்பதே நல்லது. திருமண வாய்ப்புகள் கூடி வரும். வெகுநாட்களாக குழந்தைப்பேறு இல்லாதவர்கள் பிள்ளை வரம் பெற்று பெருமை அடைவார்கள். இரவு, நேர பிரயாணங்களை தவிர்ப்பதே நல்லது. உத்யோகத்தில் வீண்பழி வந்து சேரும். விருந்து விழாக்களில் வீண் வாக்குவாதங்கள் வேண்டாம். மறைமுக எதிர்ப்புகள் சமாளிக்க நேரிடும். அரசாங்க அனுகூலம் குறையும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது. ஜென்மத்தில் குருவினால் அவ்வப்போது வருகின்ற ஞாபக மறதி சிற்சில தொந்தரவு தரும். பெண்கள் உடல்நிலையில் அக்கறை கொள்வது நல்லது. வயிறு சம்பந்தமான உடல் உபாதைகள் வந்து போகும். தகுந்த மருத்துவ ஆலோசனை மூலம் குறைக்கலாம்.

எழுத்து, பத்திரிக்கை துறையினைச் சார்ந்தவர்கள் கவனத்தோடு செயல்படாவிட்டால் தேவையில்லாத விமர்சனங்கள் சந்திக்க நேரிடலாம். வியாபாரிகள் ஓரளவு நலம் காணலாம். பணம் தொடர்பான விஷயங்கள் கையாளும் போது பொறுப்புடனும் எச்சரிக்கையுடனும் நடந்துக் கொண்டால் தேவையில்லாத பிரச்சினைகளைச் சமாளிக்கலாம். கைப்பொருளைப் பத்திரப்படுத்திக் கொள்வது நலம்.

இவ்விதம் எல்லா வகையிலுமே ஜென்ம குரு வன்மத்தைக் காட்டினாலும் உங்கள் புகழைக் கெடுத்தாலும் குருபார்வை படுகின்ற 5, 7, 9ஆகிய மூன்று இடங்களின் மூலம் ஏராளமான நல்ல பலன்கைளத் தாராளமாகக் காணலாம். இதன் மூலம் அசாதாரண பிரச்சனைகளை ஓரளவு கலையலாம்.

கடகத்தில் குரு உள்ளது. ஆனால் ஜென்ம குரு பணம் தந்து பின்பு பிரச்சனையும் தந்துவிடுவார் என்பதால் தான் நாடு, நகரம், சொத்து, சுகம், மனைவி ஆகிய விஷயங்களை துறக்கச் செய்து விடும் என்று எச்சரிக்கின்றது சாஸ்திரம்.

குருப்பார்வை 5இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் இடத்தை குரு பார்ப்பது மிகவும் நன்மையே. 5ஆம் வீடு பூர்வீகச் சொத்துகள், புத்திரபேறு, குல தெய்வம், தாய்மாமன், பூர்வ புண்ணியம் ஆகியவற்றைக் குறிக்கின்ற ஸ்தானம் ஆகும். எனவே இதுவரை இருந்த பூர்வீக சொத்து தகராறுகள் நீங்கி சாதகமான சூழ்நிலை நிலவும், வம்பு, வழக்குகள் வெற்றி பெறும். பிள்ளைப்பேறு இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைத்து மகிழ்வார்கள். குல தெய்வம் பிரார்த்தனையை நிறைவேற்ற குல தெய்வ ஆசி கிடைக்கும். பங்காளிகள் சண்டைகள், ஒரு முடிவுக்கு வரும். சிலர் மந்திர உபதேசம் பெறுவார்கள்.

குரு பார்வை 7இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

7ஆவது ஸ்தானமானது திருமணம், நண்பர்கள் மற்றும் கூட்டுத்தொழிலை குறிக்கின்ற ஸ்தானம ாகும். எனவே குரு 7ஐ பார்ப்பதால் திருமணம ாகதவர்களுக்கு திருமண வாய்ப்பு நாடி தேடி வரும். காம, களத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதால் கணவன் மனைவி கருத்து வேறுபாடு நீங்கும். காதலில் வெற்றி ஏற்படும். நண்பர்கள் எதிலும் பக்க பலமாய் நின்று உதவுவார்கள். கூட்டுத்தொழில் மூலம் நல்ல இலாபம் எட்டிப் பார்க்கும்.

குரு பார்வை 9இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

பாக்கிய ஸ்தானம், குரு ஸ்தானம் என்று பறைசாற்றி புகழப்படும் 9ஆம் இடத்தை குரு பார்ப்பது குறைவிலா நலத்தையும் குதூகலத்தையும் தரும். எண்ணிய காரியங்கள் அனைத்தும் எளிதில் நடந்தேறும். தந்தையை குறிக்கின்ற ஸ்தானம் கூட 9 என்பதால் தந்தை மற்றும் மகனிடையே, இருந்த விருப்பு, வெறுப்புகள், மனக்கசப்புகள் குறைந்து குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். தெய்வ வழிபாடுகள் அதிகரிக்கும். புதிய ஆசான்கள் மூலம் நிறைய உபதேசங்கள் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் கைகூடும். ஆரோக்கியம் சித்திக்கும்.

குரு பகவான் 19.6.2014 முதல் 3.7.2014 வரை புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

கணவன் மனைவி கருத்து வேறுபாடு வரும். கவலை வரும். மனதை சாந்தி செய்து பெண்கள் வகையில் எச்சரிக்கை தேவை. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற சிரமப்பட நேரிடலாம். சித்தர்களை வழிபட சிறப்புகள் பல பிறக்கும்.

குருபகவான் 4.7.2014 முதல் 2.9.2014 வரை பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

தொழிலில் தொய்வு ஏற்படும். சிலருக்கு விரும்பத்தகாத முறையில் இடமாற்றம் - பணிமாற்றம் ஏற்படலாம். வெளியூர் பிராயணம் தடைப்படும். மறைமுக எதிர்ப்புகள் தோன்றும். கடன் சுமை கூடும். தேவையற்ற செலவுகளை தவிரப்பது நலம். கூடுமான வரையிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் நலம்.

குருபகவான் 3.9.2014 முதல் 7.2.2015 வரை ஆயில்யம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

விரையங்கள் கூடும். பிரயாணத்தில் உஷார் தேவை. சொத்து வாங்குதல் விற்பனை செய்வதில் சட்ட சிக்கல் வரலாம். தைரியம் குறையும். பேச்சில் கவனம் தேவை. வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். புதிய வம்புகள் வரலாம். பழைய எதிரிகள் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் யோகம் ஏற்படும். எனினும் சற்று உஷார் தேவை.

குருபகவான் 8.2.2014 முதல் 8.4.2015 வரை வக்ர கதியில் சஞ்சரிக்கும் காலம் :

வசதிகள் கூடும். பெண்களால் நன்மை வரும். எதிர்ப்புகள் விலகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். ஏற்றம் வரும். உடல் நிலை சீராகும். பண விஷயங்களில் உஷார் தேவை. அகலக்கால் வைக்கலாகாது. நண்பர்களிடம் கூடுதல் கவனம் தேவை. வண்டி, வாகனச் சேர்க்கை ஏற்படும்.

நட்சத்திரப் பலன்கள்

புனர்பூசம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் :-

குருவின் நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு குருப்பெயர்ச்சி நல்ல மாற்றத்தையே தரும். கணவன் மனைவி விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தினால் முன்னேற்றம் ஏற்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் அதிகரிக்கும். தெய்வ ஆசி கிடைக்கும். வேலையில் அதிக ஆர்வம் காட்டி முனைப்புடன் செயல்பட்டால் அதிக இலாபமும், பாராட்டும் பெறலாம். வெளிவட்டாரங்கள் நண்பர்கள் மூலம் நற்செய்தி தேடி வரும்.

பூசம் 1, 2, 3, 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் :-

பூசம் நட்சத்திரத்தின் அதிபதி சனி, பிறப்பிலேயே சனி திசையினைக் கடந்த உங்களுக்கு குருபெயர்ச்சி நன்மையே பயக்கும். ஆயுள்காரகனின் நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு ஆயுள் ஆரோக்கியம் கூடும். ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும். வசீகரம் பெறுவீர்கள். எடுக்கின்ற காரியம் உடனுக்குடன் முடிந்து மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

ஆயில்யம் 1, 2, 3, 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்:-

புதனது நட்சத்திரம் ஆயில்யம், புதனுக்கும் குருவிற்கும் பகை, எனவே எல்லா விஷயங்களிலும் சற்று நிதானமும், பொறுமையும் அவசியம். கல்வி சம்பந்த மான செலவுகள் கூடும். பத்திரிகை, எழுத்து, பேச்சு, கதை, கவிதை, காவியம், ஓவியம், தொலைத்தொடர்ப்பு, தகவல் தொழில்நுட்பம் போன்ற தொழிலைச் செய்பவர்களுக்கு சுமாரான முன்னேற்றமே ஏற்படும். சில நேரங்களில் உங்களின் செல்வாக்கு குறைய நேரிடும் - எச்சரிக்கை தேவை.

பரிகாரம்

பௌர்ணமி தோறும் திருவண்ணாமலை கிரிவலம் செய்யவும். அங்குள்ள இராமணசேஷாத்ரி சுவாமிகள் ஆஸ்ரமத்தில் தியானம் செய்யவும். தெளிவு பிறக்கும். தெம்பு ஏற்படும்.










ஐஸ் வர்ணம்!

வீட்டிலோ மின்சாரமில்லை. ரோட்டிலோ சிக்னல் இல்லை. ஆனால் வெளியே வந்து உலகைப்பார்த்தால், திறந்த விழிகள் இமைக்கவே இல்லை. எங்கும் ஐஸ் மயம்!

கடந்த டிசம்பர் 20ம் திகதி கனடாவை ஐசாய் உறையவைத்த அந்த அற்புதக் காட்சிகளைப் பதியவைத்தேன் கமராவுக்குள். அவற்றில் சிலவே இவை.

இப்படி ஒரு காட்சி இனி எப்போது வருமோ தெரியாது. இதற்கு முன்னர் 1998ல் பொழிந்த பனிப் புயலே அறியப்பட்டவற்றுள் கடுமையானதென்கிறார்கள். 5பில்லியன் வரை சேதமாம். ஆனாலும் பனியாகவன்றி, ஐஸ் கட்டி நிலையில் நாட்கணக்கில் நிலவியது இப்போதே.














இது அழகிய அனர்த்தம்!

–மார்க் வியூ ரவி

தேதி	: 2013 டிசம்பர் 20 - 23
அளவி	: 30மி.மீ வரை பனி வீழ்ச்சி
பாதிப்பு	: 1500000 பேர்
மரணம்	: 27
தாக்கங்கள்	: 12 நாட்கள்வரைகூட மின்சாரம் தடைப்பட்டது 600000 மின் தடைகள் பதிவு செய்யப்பட்டன. சிக்னல் லைட்டுகள் ஸ்தம்பித்தன. டொரொண்டோவின் மொத்த ஸ்ட்ரீட் கார் சேவையும் இடைநிறுத்தப்பட்டது. ஸ்கார்புரோவின் ஆர்.ட்டி ரெயில் சேவையும் இடைநிறுத்தப்பட்டது.
செலவீனம்	: டொரேன்டோ ஹைட்ரோவிற்கு 12.9 பில்லியன் கனடாவில் காலநிலையால் 2013ல் ஏற்பட்ட இழப்பு 3.2 பில்லியன் ஆகியது இன்சுரன்ஸ் கொம்பனிகள் செலுத்திய இழப்பீடு 1 பில்லியன்









திரையுலக தரிசனம்





- சென்னையில் ஒரு வாரத் திரைப்படப் பயிற்சி பட்டறை
- திரைப்படத் துறையைத் துல்லியமாகப் புரிந்துகொள்ளும் பரிபூரண வேலைத்திட்டம்
- திரைப்பட நிபுணர்களினால், திரைக்கதை, டைரக்ஷன், சினிமோட்டாகிராபி, எடிட்டிங், டப்பிங், சினிமியூசிக், கலர் கெரக்ஷன், கொம்யூட்டர் கிராபிக் மற்றும் பட்ஜெட்டிங், மார்க்கெட்டிங் சினிமா பிஸினஸ் ஆகிய யாவற்றுக்குமான நேரடிப் பயிற்சி!
- சினிமா ஸ்டுடியோக்கள், லாப்களுக்கான சுற்றுலாவும் தொழில்நுட்ப விளக்கமும்
- சினிமா நட்சத்திரங்கள், டைரக்டர்கள் மற்றும் பிரபலங்களுடனான சந்திப்பும் கலந்துரையாடலும்
- தென்னிந்திய சினிமாத் தொடர்புகளுடனான நேரடி நெட்வோர்க்
- நேரடி அனுபவத்துடன் குறும்பட ஆக்கம்
- ஊடகவியலாளர் மாநாட்டுடன் தொலைக்காட்சி கலந்துரையாடல்களில் பங்கேற்பு
- ஒன்றுகூடல் விருந்து

மொத்தத்தில் எம் கலைஞர்கள் சினிமாவின் நுட்பங்களைத் தெள்ளத்தெளிவாகப் புரிந்துகொண்டு அதிலே எம் மேலைத்தேய அறிவுடன் வேகமாகப் பயணிக்க மேற்கொள்ளப்படும் அரிய ஏற்பாடு.

எம் முதலீட்டாளர்களுக்கோ இது சினிமாவை அச்சமேதுமின்றி லாபகரமான தொழிலாக்கிக்கொள்ள வழிசெய்யும் அரிய வாய்ப்பு.

தென்னிந்திய சினிமா புலம்பெயர் தமிழர்களின் வருவாயை ஒரு பிரதான அம்சமாக இனங்கண்டிருக்கும் இத்தருணத்தில் புலம்பெயர் தமிழர்கள் தம் செல்வாக்கை தென்னிந்திய சினிமா உலகில் நிலைநிறுத்திக்கொள்ள ஓர் உறுதியான அத்திவாரம்!

நேர்முகத் தெரிவுமூலமே பங்கேற்பவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருக்கே வாய்ப்பு – பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு :

cineclub@muhavary.com



சிம்மம்

5 குருப்பெயர்ச்சி
பலன்களும் - பரிகாரங்களும்

சூரியனின் ஆதிக்கம் பெற்றதால் அன்பு நிறைந்த உள்ளமும், அதிகாரத் தோற்றமும், அண்டி நிற்போரை ஆதரித்து உதவும் குணமும் ஆசைப்பட்டதை அடையும் வரை அடங்காக் குதிரையாக `அஞ்சாத சிங்கமாக தோற்றமளிக்கும் பாங்கையும், அதிகாரத்தொனியும், பிடிவாதக்குணமும், எதிலும் குறை கண்டுபிடிக்கும் ஞானமும், குற்றம் களைவதில் குதூகல மகிழ்ச்சியும் கொண்ட சிம்ம இராசி நண்பர்களே.

உங்கள் இராசிக்கு இலாபஸ்தானமான 11இல் இதுவரை சஞ்சரித்து வந்த குருபகவான் வருகின்ற 19-6-2014 முதல் கடக இராசிக்கு பெயர்ச்சியாகின்றார். 11ஆம் இடத்திலிருந்து விரும்பத்தகாத விரைய ஸ்தானமான 12ஆம் இடத்திற்கு இடம்பெயருகின்றார்.

குரு 12இல் வரும்போது சுபச் செலவுகளையே தருவார். அதுவும் அவர் பார்வைபடும் இடங்களின் மூலம் இந்த விரயத்தைத் தருவார். விரையத்தை யாருமே விரும்புவதில்லை. வரவையே விரும்புகின்றனர் இந்த குருப்பெயர்ச்சி வீடு வாங்குதல், கிணறு, குளம் அமைத்தல், வண்டி வாகனம் வாங்குதல், திருமணம் செய்தல், தொழில் முதலீடு செய்தல் படிப்பிற்காக பெரிய அளவு செலவு செய்தல், ஆன்மிகத்திற்காக செலவு செய்தல் என வருகின்ற அனைத்து செலவுகளும் சுபச் செலவுகளே ஆகும். 11இல் சஞ்சரித்தபோது கொடுத்த பணத்தையெல்லாம் 12இல் நியாயமான முறையில் செலவுகளாக ஏற்படுத்துவார்கள்.

உங்கள் இராசிக்கு 5, 8 ஆம் இட அதிபதியாக வருகின்ற குரு ஒரு வகையில் விபரீத இராஜயோகத்தையும் தர தயங்கமாட்டார். 8ஆம் இட அதிபதி 12இல் வரும்போது எதிரிகள் மூலம் இலாபம் வந்து பெரிய தனப்ராபதி ஏற்படுகிறது. குறிப்பாக எதிரிகளை ஜெயித்து வெற்றி வாகை சூட கை கொடுக்கும்.

அதே சமயம் 5ஆம் இட அதிபதி 12இல் சஞ்சரிக்கு போது விரையங்கள் அதிகமாகும். வருமானம் குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் வராது. சிறிதளவு சம்பாதிக்க பெரிய அளவில் உழைக்க வேண்டி வரும். வரவுக்கு மிஞ்சின செலவுகளால் கடன் வாங்கும் சூழ்நிலைகள் உருவாகும். கௌரவத்தைக் காப்பாற்ற சற்று கஷ்டப்பட்டு உழைக்க நேரிடும். பழைய பாக்கிகள் வசூலாகாமல் இழுத்தடிக்கும். கொடுக்கல் வாங்கலில் நிலைமை சரியில்லை என்பதால் சிக்கல் அதிகரிக்கும். தேவையற்ற ஆடம்பர செலவுகளை சுருக்கிக் கொள்வது நலம். கையிருப்புக் குறையும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்கலாம். சிலர் ஆன்மிக சுற்றலாக்கள் செல்ல நேரிடும். குல தெய்வ பிரார்த்தனையை நிறைவேற்ற நல்ல நேரம். தொழிலில் சற்று தாமத முன்னேற்றம் காணும். பணியாட்கள் அமைவதில் சிக்கல் ஏற்படும்.

அதிக முதலீட்டில் குறைந்த இலாபம் கிட்டும். தொழிலாளர் போராட்டம் வந்தாலும் இராஜயோகத்தில் முறியடிக்கலாம். வேண்டாதவர்கள் சற்று நயவஞ்சகம் செய்வார்கள். மறைமுக நேர்முக எதிர்ப்புகள் வந்தாலும் கூட வெற்றி உங்கள் பக்கமே. ஆரோக்கியத்தில் இது வரை இருந்து வந்த பிரச்சனைகள் விலகும். மருத்துவர்களின் ஆலோசனையை மறுக்காமல் பின் பற்றுவீர்கள். உடல் உழைப்பு கூடும். மாணவர்கள் படிப்பில் சற்று மந்த நிலையினை அடைவார்கள். விடாமுயற்சி தேவை. ஆய்வு, படிப்பு போன்ற உயர் கல்விக்கு அதிக செலவு செய்ய நேரிடும். வரவைவிட ஒருபடி செலவு அதிகமாக இருக்கும். எனவே கூடுமான வரை சிக்கனமாக இருப்பது நல்லது. பெண்கள் தங்களுக்கு விருப்பமான ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வார்கள். அரசியலில் ஓரளவு அனுகூலம் உண்டு. வியாபாரிகள் பாக்கி வசூல் செய்வதில் தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை.

உங்களின் இராசிக்கு விரைய ஸ்தானமான 12இல் குரு சஞ்சரித்தாலும் 12ஆம் வீட்டில் இருந்துக்கொண்டு 5, 7, 9 ஆம் பார்வையால் உங்கள் இராசிக்கு 4ஆம் இடம், 6ஆம் இடம், 8ஆம் இடம் ஆகிய இடங்களைப் பார்த்து தமது பார்வை பலத்தால் பல நன்மைகளைத் தருகிறார்.

குரு பார்வை 4 இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

நோய், எதிரி, கடன், வறுமை ஆகியவற்றைக் குறிக்கின்ற 6ஆம் இடத்தை குரு பார்ப்பது நோய் கட்டுப்பாட்டிற்குள் அடங்கும். உடல் ஆரோக்கியம் கூடும். எதிரிகள் ஒழிந்துபோவார்கள். விபரீத இராஜயோக அமைப்பு ஏற்படுவதால் அதிர்ஷ்டம் அடிக்கும். ரேஸ் பந்தையங்கள், செஸ் போன்ற பந்தையங்கள் மறைமுக எதிர்ப்புகள் விலகி ஓடும். விவகாரங்கள் ஒரு முடிவுக்கு வரும். நீண்ட நாள் வசூலாகாமல் இருந்த பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் குதூகலம் கூடும். எந்தப் பிரச்சனை வந்தாலும் அதனை எதிர்கொண்டு சமாளிக்க முற்படுவீர்கள்.

குருபார்வை 8இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

ஆட்டி அலையவைப்பதில் முதல் இடம் பிடிக்கும் 6, 8 இடங்களை குரு பார்ப்பதால் மிகுந்த நன்மையே ஏற்படுகிறது. கடனைக் குறிப்பது 6ஆம் இடம், நீண்ட நாள் கடனைக் குறிப்பது 8ஆம் இடம், எதிரியைக் குறிப்பது 6ஆம் இடம், மறைமுக எதிரிகளை குறிப்பது 8ஆம் இடம். ஆகவே இந்த இரண்டு வீடுகளும் ஜாதகத்தில் ஆகாத வீடுகள் என்று அஞ்சப்பட்டாலும் குருபகவான் தனது பார்வையினை வீசி இன்பத்தையே பூக்க வைக்கிறார். எனவே முறைப்படி தெய்வத்தை ஆராதனை செய்ய கூடுதல் நலன் பயக்கும்.

குருபகவான் 19.6.2014 முதல் 3.7.2014 வரை புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

வண்டி, வாகனச் சேர்க்கை ஏற்படும். பல ஆலய தரிசனங்கள் கிட்டும். இறைபக்தி கூடும். தூக்கமம் அதிகமாக வந்து தொந்தரவு தரலாம். சுபவிரையங்கள் கூடும். புதிய பழக்கங்கள் ஏற்பட்டு அதன் மூலம் இலாபம் கிட்டும். சிக்கனம் அவசியம் தேவை. ஆரோக்கியத்திலும் சற்று அக்கறை தேவை.

குருபகவான் 4.7.2014 முதல் 2.9.2014 வரை பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :-

மறைமுக எதிர்ப்பால் சில தடைகளையும் சோதனைகளையும் சந்திக்க நேரலாம். கவனம் தேவை. குடும்பத்தில் மூன்றாவது நபர் தலையீட்டைத் தவிர்ப்பது மிகவும் நலம். உடல் அவ்வப்போது அசதி பெறும். தேவையான நேரத்தில் ஓய்வு அவசியம் தேவை. நீண்ட தூர பிரயாணங்களில் அக்கறை தேவை.

குருபகவான் 3.9.2014 முதல் 7.12. 2014 வரை ஆயில்யம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :

கொடுக்கல் வாங்கல் சீராகும். புதிய நண்பர்கள் தோன்றி புத்துணர்ச்சி தருவார்கள். செய்தொழில் இலாபம், மேன்மை ஏற்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பூர்வீகச் சொத்தில் இதுவரை இருந்து வந்த வில்லங்கம் தீரும். வம்பு, வழக்குகள் பைசலாகும். கல்வியில் மேன்மை ஏற்படும்.

குருபகவான் 8.12.2014 முதல் 8.4.2015 வரை வக்ர கதியில் சஞ்சரிக்கும் காலம் :-

நலம் ஏற்படும். நன்மை பிறக்கும். நல்லது நடக்கும். தொட்டது துலங்கும். கேட்டது கிடைக்கும். இலாபத்தில் அதிக இலாபகம் ஏற்படும் எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும். பணம் பல வழியிலும் வரும். சுபிட்சம் ஏற்படும். சுகம் கூடும். சூழ்ந்து வந்து பலர் பாராட்டுவார்கள். மொத்தத்தில் சுபம்.

நட்சத்திரப் பலன்கள்

மகம் 1. 2. 3. 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :-

கேதுவின் நட்சத்திரம் மகம், கேதுதிசையில் பிறந்த உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி முன்னேற்றத்தையே தரும். வேலை செய்கின்ற இடங்களில் உள்ள மூத்த அதிகாரிகளிடம் மதிப்பு, மரியாதைகள் கூடும். எடுத்த காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடிப்பீர்கள். புதிய சாதனைகள் புரிய வாய்ப்புகள் கிட்டும். மேலும் பெண்கள் ஆடை, ஆபரணச் சேர்க்கையின் மூலம் மகிழ்வார்கள்.

பூரம் 1. 2. 3. 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் : -

பூரம் நட்சத்திரத்தின் அதிபதி சுக்கிரன், சுக்கிரன் ஆடம்பர பொருள்களின் அதிபதி. இருப்பினும் சுக்கிரனுக்கு குரு பகை எனவே எடுத்த காரியங்கள் சற்று தாமதமாக நிறைவேறும். இருப்பினும் குரு பார்வை அதற்குரிய நல்லனகளை தந்தே தீரும். அதிருப்தி அடைய வேண்டாம்.

உத்திரம் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் :-

உத்திரம் நட்சத்திரத்தின் அதிபதி சூரியன் சூரியனும் குருவும் நட்பு. எனவே இந்த குருபெயர்ச்சி தங்களுக்கு எல்லா வகையியலும் முன்னேற்றத்தையே தரும். புதிய வீடுகள், மனைகள், தொழில் தொடக்கம் போன்ற எல்லாவற்றிலும் தகுந்த முன்னேற்றத்தையே எதிர்பார்க்கலாம்.

பரிகாரம்

காஞ்சிபுரம் - உத்திரமேரூர் செல்லும் வழியில் உள்ள மாகால் எனும் திருத்தலம் சென்று வழிபடவும். அங்கு யானை மேல் முருகன் அமர்ந்திருப்பது விசேஷம். சிவன் உடும்பு வால் வடிவில் இருப்பார். அக்னி தீர்த்தத்தில் அபூர்வ சக்தி அங்கு உண்டு. தீராத வினை தீர்க்கும். இந்த ஸ்தலத்தை தரிசனம் செய்தால் தரணியில் நிச்சய முன்னேற்றம் உண்டு.



மாதவிக்கு காதல் இல்லை

வேலூரிலுள்ள ஒரு கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட காதல் தோல்வியின் காரணமாகவே சென்னைக்கு ரயிலேறி வந்து நடிகையானவர். பிந்து மாதவி, இப்போது அவருடைய வாழ்க்கையில் புதிய காதலுக்கே இடம் இல்லையாம்.


காதல்
5 வது ஆண்டை முன்னிட்டு பெருமையுடன் வழங்கும்...
கனடாத் தமிழ்ப் பெண்கள் மேம்பாட்டு அமைப்பினூடாக (CTWDO) எமது உறவுகளின்
(விதவைப்பெண்கள், குழந்தைகள்) துயர் துடைக்கும் முகமாக....
பத்மபூஷன் கவிப்பேரரசு டாக்டர் வைரமுத்து அவர்கள் கலந்து சிறப்பிக்கும்
தமிழ் மழை
நாட்டுக் கலைஞர்களின் இசையில் கவிப்பேரரசிற்கு விருதுகளைப் பெற்றுக்கொடுத்த பாடல்களும், இராப்போசனமும் இடம்பெறும்
Platinum Sponsor :-
Markham NS Dental
Gold Sponsor :-
Buying Or Selling
Sathy Sivasubramaniam
Sales Representative
Silver Sponsor :-
KHARISMA
Say I do, with pride
URBAN
Alfred Remisiar
647.208.3018
Bronze Sponsors :-
CEYCAN
Official Transport Partner
416 629 4410
VASUKI DEVADAS
Barrister | Solicitor
OGDEN
Super Market
416-283-9998
MORTGAGE EDGE
416.738.4505
Goodman
416 825 9373
International Healthcare Academy
1-905-232-8009
வீடு மற்றும் வியாபார தளங்களை வாங்கவும் விற்கவும்
Direct : 416-267-9700
Supporting Sponsors :-
POORANI VILAAS
Mona Jewellery & Textiles
PARADISE OF GOLD JEWELLERY
Tel: 905 794 6000
SRI
Tel: 416 439 0224
& Son
Tel: 416 2920033
Homeopathy and Acupuncture
Tel: 416 986 4903
Kumar @ 905 673 9873
UNITED COLLISION
Ultimate Accounting & Tax Services
416 854 3861
Nilax optical
Tel: 416 298 2111
Choose the House, I do the rest
RE/MAX
Tel: 647 443 5454
MJS GOLD HOUSE
Tel: 416 299 1603
Malaysian Hut
Tel: 416-646-4748
CHANDNI GRAND
BANQUET HALL
JUNE 20TH 2014
6:01PM
3895 McNicoll Ave, Scarborough, Ont, M1X 1E7
டிக்கட்டுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் அழையுங்கள் - 647 767 7597



கன்னி

புதனின் ஆதிக்கம் பெற்றதால் அனைவரையும் வசீகரித்து இழுக்கும் குணமுடையவர்களாகத் திகழ்வார்கள். மேலும் அசாத்தியமான திறமையும், எடுத்த எடுப்பிலே எளிதில் வெற்றி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் முனைப்புடன் செயல்படுவீர்கள். பேச்சிலேயே அனைத்தையும் சாதித்துக் கொள்ளும் திறமை உடையவர்களாகத் திகழ்வீர்கள். கலை, ஓவியம், கவிதை, நடனம் ஆகிய ஆய கலைகள் அனைத்தும் உங்கள் இராசிக்கே வசியமான ஒன்றாகும். அனைத்து துறையிலும் அசாத்தியமான சாதனை புரியும் திறமை உங்களுக்கே உரிய ஒன்றாகும்.

இதுவரை தொழில் ஸ்தானமான 10ஆம் இடத்தில் இருந்து வந்த குருபகவான் இப்போது வருகின்ற 19.6.2014 முதல் இலாபஸ்தானமான 11ஆம் வீட்டிற்கு குடிபெயரப் போகின்றார். இந்த ஓராண்டும் அவர் என்னவாறு பலன்களை அள்ளித் தரப்போகிறார் என தொள்ளத் தெளிவாகக் காணலாம்.

11ஆம் இடத்தில் பெயர்ச்சியாகும் 'குருபகவான் பொன்னான வாழ்வை, புதுமையான நலத்தை புத்துணர்ச்சியை புதுவாழ்வை குருபகவான் வழங்க இருக்கிறார். இலாபத்தை விரும்பாதவர்கள் யாரேனும் உள்ளனரா? தொழிலாக இருந்தாலும் சரி தொலை தூர பயணமாக இருந்தாலும் சரி ஏதாவது ஒரு வகையில் இலாபமாக இருந்தால் மட்டுமே நம் மனது அதனை செய்யத் துணிகின்றது.

அந்த வகையில் வண்டி, வாகனங்களை வாங்கி விற்கும் நிலையாக இருந்தாலும் சரி, குறைவிலா நலம் தரும் கூட்டு தொழில், கொடுக்கல் - வாங்கல், விவசாயம், கல்விப் பணிகள் என அனைத்து துறையும் அதிசய முன்னேற்றம் காணும். நல்லதொரு குடும்ப வாழ்க்கை, தொழில் வாழ்க்கை அமைய இந்த 11ஆம் இட குருப்பெயர்ச்சி மிகச் சிறந்த ஒரு வாய்ப்பு ஆகும். பல மாற்றங்களை இந்த குருப்பெயர்ச்சி கொடுக்கும். தன இலாபம் கூடும். சொன்ன சொல் தவறாமல் பலிக்கும். சுகம் கூடும்.

கன்னி இராசிக்கு 11ஆம் இட சஞ்சாரத்தால் தெய்வ ஆசிகள் தேடி வரும். சித்தமெல்லாம் நிறைந்தது சிறப்பான அருள் கூடி வரும் கூட்டு பிரார்த்தனைகள் மற்றும் குலதெய்வ வழிபாடு செய்வதன் மூலம் கோடி கோடியாய் இலாபங்கள் தேடிவர குருவருள் துணை நிற்க திருவருள் கிடைக்கும். மனைவி, மக்கள் மூலம் நற்செய்தி கேட்பீர்கள். பிள்ளைகள் அடுக்குமொழி பேசி இன்பம் கொடுத்து நறுங்கல்வியை நாடுபோற்ற கற்று நல்ல பெயர் எடுத்துக்கொடுக்க இந்த குரு வழி தருவார்.

இதுவரை சண்டையிட்டு வந்த உற்றார், உறவினர்கள் அனைவரும் பதம் பார்த்த காலம் மாறி பாசமொழியினை பேசி, அருகே கூடி வருவார்கள். பூர்வீக சொத்துக்களில் ஏதேனும் வம்பு-வழக்குகள் இருப்பின் இந்த குருப்பெயர்ச்சியின் மூலம் புதிய முயற்சியினை எடுத்து புகழ் கிடைக்க வழி பிறக்கும். வில்லங்கங்கள் ஓடி மறைந்து புகழும். பெருமையும் தேடி வரும் காலம் இந்த குருபெயர்ச்சி காலம் ஆகும். தொல்லைகள் விலகி ஓடி நன்மைகள் வந்து சேரும் நேரம் ஆகும்.

தொட்டதெல்லாம் இலாபம் தொல்லையில்லா யோகம் எனக் கொடிகட்டி பறக்கலாம். தொழில் விருத்தியாகும். தொல்லைகள் கலைந்து ஓடும். அரசியலல்வாதிகளுக்கு அற்புத காலம் என்றே கூறலாம். எண்ணிய எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். புதுப்புது சிந்தனைகளால் பூரிப்படைந்து நன்மை பயக்கும். புது நண்பர் சேர்க்கையால் புதிய முயற்சிகள் கைக்கூடும். வியாபாரத்தில் விருத்தி ஏற்பட்டு முன்னேற்றம் உருவாகும். எதிரிகள் தொல்லைகள் விலகி ஓடும். முன்பின் தெரியாதவர்கள் கூட தேடி வந்து உதவி புரிகின்ற காலமாக மாறும் பெண்களுக்கு திருமண யோகம் தேடி ஓடி வரும். கொஞ்சம் குழந்தைகளைப் பெற்று மகிழ்வீர்கள்.

நலம் பல தந்துவிடும் தட்சிணாமூர்த்தி அம்சமாய் அற்புதம் புரிகின்ற குருவானவர் குறைவிலா நலத்தோடு இலாபத்தில் இருந்தாலும் வீரிய ஸ்தானம், விஜய ஸ்தானம், என்றெல்லாம் எல்லோரும் போற்றுகின்ற 3ஆம் இடத்தையும், அற்புத ஸ்தானம், அறிய ஸ்தானம், மந்திர ஸ்தானம், மனதின் ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று புகழப்படும் 5 ஆம் வீட்டையும், தொழில் மற்றும் திருமணத்தைக் குறிக்கின்ற 7ஆம் இடத்தையும் குரு பார்ப்பதினால் அதிர்ஷ்டத்தின் மேல் அதிர்ஷ்டம் என்றே கூறலாம்.

எனவே இக்குரு பெயர்ச்சியின் மூலம் நன்மையே பல நடந்தேறும்.

குரு பார்வை 3இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

தைரியம், புகழ், சகோதரன், சகோதரிகளைக் குறிக்கின்ற ஸ்தானம் 3ஆம் இடம். எனவே கன்னி இராசியில் குரு பகவான் தனது 5ஆம் பார்வையாக 3ஆம் இடத்தைப் பார்ப்பதால் தைரியம், தன்னம்பிக்கை கூடும். எதிலும் வெற்றி வாகை சூடும் காலமாக மாறும். புகழ் கொடி கட்டிப் பறக்கும். வெகு நாட்களாக இருந்து வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். சகோதரன், சகோதரிகளிடையே இருந்த பிரச்சினைகள் நீங்க சுமூக உறவு ஏற்படும். ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் ஏற்படும்.

குரு பார்வை 5இல் படுவதால்:-

அதிர்ஷ்டம் அதிகரிக்கும் அரசியல் செல்வாக்கு கூடும். அரசாங்க காரியங்கள் அடிக்கடி விரைவில் முடிந்து அற்புதம் புரியும். பெற்றெடுத்த பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். மனதில் அமைதி நிரம்பும். மகிழ்ச்சி கூடும். வெளியூர், வெளிநாட்டின் மூலம் எல்லா வகையிலும் நன்மைகள் விளையும். பூர்வீகச் சொத்துக்களில் இதுவரை இருந்து வந்த வில்லங்கங்கள் நீங்கும்.

புதிய வகையில் சொத்துக்கள் சேரும். வண்டி, வாகனம்சம்பந்தமானகாரியங்கள்நல்லஇலாபங்களைத் தரும். மாணவர்கள் படிப்பில் நல்ல நிலையினை அடைவார்கள். உத்யோகத்தில் உயர்பதவிகள் கிட்டும். இதுவரை இருந்து வந்த மனஉலைச்சல் கசப்புகள் நீங்கும். மனநிம்மதி கிடைக்கும்.

குருபார்வை 7இல் படுவதால் ஏற்படும் பலன்கள் :-

11இல் குரு வருவது குருபலன் என்ற பெயரினைப் பெறுகின்றது. எனவே இதுவரை பருவ வயது வந்தும் திருமணமாகாத பெண்கள் மற்றும் ஆண்களுக்கு விரைவில் திருமண சுப செய்தி வரும். சுகம் கூடும். வசதி, வாய்ப்புகள் தேடி நாடி வரும். இல்லையொரு பிள்ளை என ஏங்கி நின்றவர்களுக்கு பிள்ளை செல்வ வரம் கிடைக்கும். பொன்னவன், புத்திரகாரகன் என்ற அடுக்கு மொழியும் குருவிற்கு உள்ளதால் திருமணம், குழந்தைப்பேறு, செல்வ வளம், ஆகியவை பெருகும்.

குருபகவான் 19.6.2014 முதல் 3.7.2014 வரை புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :-

இலாபம் கூடும். இலட்சியம் நிறைவேறும். இலட்சத்தில் ஒருவர் என்ற புகழ் கிட்டும். பல்வேறு சாதனைகள் புரிய சரியான நேரம். சாதிக்கலாம். செயல்படலாம். பல்வேறு வகையிலும் முன்னேற்றங்கள் ஏற்படும். எல்லா வகையிலும் அனுகூலமான காலமிது.

குருபகவான் 4.7.2014 முதல் 2.9.2014 வரையில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் :-

பிள்ளைகளால் நலம் உண்டு. சந்தான பாக்கியம் கிட்டும். அரசியல் செல்வாக்கு கூடும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். குதூகலம் பிறக்கும். குலதெய்வ அனுக்கிரகம் ஏற்படும். உடல்நிலை சீராகும்.

குருபகவான் 3.9.2014 முதல் 7.12.2014 வரை ஆயில்யம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் : -

செயல்திறமை கூடும். வசீகரம் ஏற்படும். எழுத்து, கலைத்துறை பிரகாசிக்கும். நிர்வாக ஆற்றல் கூடும். உத்தியோகத்தில் உயர்வு வரும். தொழில் சிறக்கும். வியாபாரம் விருத்தியாகும். சிக்கல்கள் தீரும். சிரமங்கள் குறையும். இது பொன்னான காலம்.

குருபகவான் 8.12.2014 முதல் 8.4.2015 வரை வக்ர கதியில் சஞ்சரிக்கும் காலம் : -

தொழிலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உஷார் தேவை. உடலில் அக்கறை தேவை. அலைச்சல் களைத் தவிர்ப்பது நலம். கடன் கூடலாம். செலவுகள் அதிகரிக்கலாம். தெய்வ பலம் தேவை. பொறுமை மிக மிக அவசியம்.

நட்சத்திரப் பலன்கள்

உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள் :-

சூரியனின் நட்சத்திரம் உத்திரம், சூரியனும் குருவும் நண்பர்கள் இருப்பினும் சூரியன் உங்கள் இராசிக்கு விரையத்தையே கொடுப்பதால் தொழிலில் சற்று கவனமுடன் செயல்படுவது நல்லது. இலாபஸ்தானத்தை பார்ப்பதனால் விரையம் ஓரளவு கட்டுக்குள் அடங்கும். கணவன் / மனைவி வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நலம். சிவராஜயோக நிலை ஏற்படுவதால் தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

அஸ்தம் 1, 2, 3, 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் : -

சந்திரன் உங்கள் நட்சத்திர அதிபதி எனவே குளிர்ச்சியான கிரகம் என்பதால் உடல்நிலையில் சற்று கவனமாக இருப்பது நல்லது. 11ஆம் இடத்திற்கு அதிபதி சந்திரன் எனவே அரசு அனுகூலமானது கிட்டும். உத்தியோகத்தில் புதிய பல மாற்றங்கள் ஏற்பட்டு புதிய பதவிகள் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எனவே சுகம் கூடும். நன்மையே நடக்கும்.

சித்திரை 1, 2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :-

செவ்வாயின் நட்சத்திரம் சித்திரை, செவ்வாய் 8, 8க்கு உடையவர் பாவி. இந்தக் குருபெயர்ச்சி நிலம், வீடு, கட்டிடம், மின்சாரம் போன்றவற்றில் இலாபம் தரும். கொடுக்கல் - வாங்கலில் சீரான நிலை ஏற்படும். நெருப்பு வகையில் நஷ்டம் வரலாம். கூடுதல் கவனமும் உஷாரும் தேவை.

பரிகாரம்

திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமியை தரிசனம் செய்து, அங்கு இருக்கும் பிரம்மஹத்தி ப்ரீதி செய்தால் ஆசி கிட்டும். அபூர்வ மாற்றம் கிட்டும். வியாழன் தோறும் சஷ்டிக்கவசம் படிக்கவும் சங்கடம் தீரும்.

மீதி 6 ராசிக்கான குருப்பெயர்ச்சிப் பலன்கள் ஜுலை இதழில் தொடரும்

ஆரோக்கியம், ஆனந்தம்

வாழ்வை சிறப்பாக்க

அஷ்டாங்க யோகம் என்கிற வழியை புராண, இதிகாச, சாஸ்திரங்கள் கூறுகின்றன. தத்துவ ஞானிகள், அறிவியல் அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் என்று ஒவ்வொரு தனது வல்லுநர்களும் ஒரு வழியைக் கூறுகிறார்கள்.

எதைப் பின்பற்றுவது என்று தெரியாமல் இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு எதுவுமே சரியில்லை Life is Not A Bed of Roses என்று முடிவுக்கு வருகிறவர்களுக்கு யாம் சொல்லப்போகும்.

திரிசூலம் அல்லது முப்படை

Life is Bliss என துள்ளிக்குதிக்கும் உபாயம் தான் இந்த புத்தகம்.

யோகாசனம், பிராணாயாமம், ஆழ்நிலை தியானம் - இவையே நமது முப்படை.

"இப்படைதோற்கின் எப்படை வெல்லும்" என்ற சித்தாந்தத்தோடு தொடங்குவோம் வாழ்வை.

மேலே சொன்ன முப்படைகளும் காலம் கடந்து தொன்மையானது. கடல் போன்று பரந்து விரிந்துள்ளது. அவைகளைப்பற்றிய வரலாறு, வளர்ந்த விதம் பற்றிய புகழ்பாடப் போவதில்லை நாம் -

நீரில் கலந்துள்ள பாலைப்பிரித்து உண்ணும் அன்னம்போல் அந்தக் கடலில் மூழ்கி முத்தெடுத்து அழகான சரமாக கோர்த்துத் தருகிறோம். அணிந்து அழகு பார்த்தால் போதும்...

நீங்க அன்பாய் அழகாய மாறிடுவீங்க. அனை வரையும் மாற்றிடுவீங்க.

இது Fast World - கம்ப்யூட்டர் யுகம், எதிலும் ஒரு வேகமாக போய்க் கொண்டிருக்கும் காலகட்டத்தில் உள்ள நமக்கு எளிமையான, சுலபத்தில் பின்பற்றக் கூடிய, கடினமான, கட்டுப்பாடுகள் இல்லாமல், அவரவர்களின் வாழ்வின் வசதி மற்றும் தன்மைக்கேற்ப நேரத்தை ஒதுக்கி,

"உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக" என

வாழ்வைத் தொடங்க வழிகூறுவதே இச்சிறிய கட்டுரை

இந்த முப்படையை உபயோகிக்க எந்த ஒரு தகுதியும் தேவையில்லீங்க. ஆர்வமும், நேரமும் ஒதுக்கினால் போதும் தொட்டால் சுடுவது நெருப்பு இது சத்தியம், இதுபோல் உங்கள் வாழ்வு மேன்மை அடையும் என்பதும் சத்தியம்.

வாங்க... முப்படையின் முதற்படையாகிய யோகாசனம் பற்றி பார்ப்போம்.

யோகாசனம்

எவ்வளவுதான் பொருட்செல்வம் இருந்தாலும் நோயுற்ற ஒருவனால் அந்த செல்வத்தை அதனால் கிடைக்கக்கூடிய ஆனந்தத்தை அனுபவிக்க முடியாது.

என்ன இருந்து என்ன பயன் சார், சர்க்கரை போட்டு காபி குடிக்க முடியவில்லையே; மாத்திரை இல்லாமல் தூங்க முடியவில்லையே; சாப்பிட்டவுடன் ஒரு ஜெலுசில் மாத்திரை போட்டால் தானே ஜீரணமாகிறது. மொத்தத்தில் ஒரு மொபைல் மெடிக்கலாக வாழ்கிறேன் என்று புலம்பும் செல்வந்தர்களை நிறையப் பார்க்கிறோம், அவைகளில் இருந்து விடுபட்டு பொருட்செல்வத்தை முழுதும் அனுபவிக்கலாம். நமது உடம்பை நோய்நொடி இல்லாமல், சுலபமாக நமது வீட்டுவராண்டா, தோட்டம், மொட்டைமாடி போன்ற இடங்களிலே கூட பயிற்சி செய்து நம் வாழ்க்கையை ஆரோக்கியமாய் வாழ யோகாசனம் என்ற முறை காலம் காலமாக பயன்பாட்டில் உள்ளது.

"யோகாசனத்தில்" பல ஆயிரங்கள் உள்ளன. அனைத்தையும் செய்து பார்ப்பதெனில் நம் ஆயுள் போதாது, நாம் நம் வாழ்க்கைக்குத் தேவையான ஒரு சில ஆசனங்களைப்பயின்று நோயுற்று வாழ வேண்டும். யோகசனத்தை வாழ்க்கையாக்கக்கூடாது. யோகாசனத்தால் வாழ்க்கை மேம்படுத்தப்பட்டு, அதனால் ஆரோக்கியம், ஆனந்தத்தை அன்றாடம் அனுபவிக்க வேண்டும்.

தவத்திரு மகரிஷி மகேஷ்யோகி அவர்கள், உலகளவில் சிறந்த மருத்துவ மேதைகள் மற்றும் யோகாசன நிபுணர்களை அழைத்து, ஆராய்ச்சி செய்து 20 முதல் 30 நிமிடங்கள் மட்டுமே பயிற்சி செய்தால் போதும்; நாம் நோயற்ற வாழ்க்கையை வாழலாம் என்று கண்டறிந்து உலகம் முழுவதிலும் அனைவரும் பயின்று பயன்பெற வழி வகுத்துள்ளார்கள். அவைகளை நாமும் பயன்பெறும் வழிகளை இனி காண்போம்.

ஒரு காரியம் செய்யும்போது, அதனை சிறப்பாக



தவறின்றி செய்தால்தான் முழுப்பயன் அல்லது வெற்றி கிடைக்கும். இல்லையெனில் அக்காரியம் முழுப்பலம் தராது அல்லது கெட்டுவிடும். இதையே தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்."

என்பார்கள்.

இங்கும், யாம் கூறியுள்ளபடி முறையாக பயிற்சி மேற்கொண்டால் நல்ல பலனைப் பெறலாம்.



யோகாசனம் தொடங்குமுன்

நல்ல காற்றோட்டமான அறை / இடத்தில் பாய் அல்லது தரைவிரிப்பின் மீது அமர்ந்து கொள்ளலாம்.

உங்களது உடை நன்கு தொள தொளவென்று இருக்கட்டும். அப்போது



தான் கைகால்களை மடக்கும்போது Free ஆக இருக்கும். ஆண்கள் இறுக்கமான ஜட்டி அணிந்து கொள்ளவும்?

உங்கள் வயிறு ஆசனம் செய்யும்போது காலியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள், டீ, காபி போன்ற பால் திரவப் பொருட்களை உட்கொண்டால் கால் முதல் அரை மணி நேரமும், நன்கு வயிறு நிரம்ப உணவு உட்கொண்டால் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

தங்கள் உடற்கூறுக்கு ஏற்ப எவ்வளவு முடியுமோ அந்த அளவு மட்டும் வளைதல் வேண்டும். படத்தில் உள்ளது போன்றோ (அ) உடன் பயிலும் நண்பர்கள், குழந்தைகள் செய்யும்போது என்னால் இயலாதா? என்று முயல வேண்டாம்.

பயிற்சி தொடங்கியவுடன், பக்குவம் (Perfection) வந்துவிடும் (அ) வரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது பக்குவம் வரும் வரை தொடர்ந்து முயல வேண்டாம்.

காலை அல்லது மாலை நேரங்களில்தான் யோகாசனப் பயிற்சி செய்தல் வேண்டும்.

ஒரு நாளில் ஒருமுறை மட்டும் செய்தாலே போதுமானது. ஆனால் பயிற்சி காலத்தில் இரண்டு வேளையும் செய்து பார்க்கலாம்.

கொஞ்சம் கற்றவுடனே மற்றவர்களுக்கு சொல் லித் தர முயல வேண்டாம் - அவர்கள் நன்றாய் இருந்து விட்டுப் போகட்டுமே!

யோகாசனம் செய்யும்போது - நமது மனம் அந்தப் பயிற்சியிலேயே முழுமையாய் ஈடுபட வேண்டும் - ஆரம்பத்தில் மனம் பிய்த்துக்கொண்டுதான் ஓடும் - கொஞ்சம் கொஞ்சமாக, நாம்தான் கவனத்தை பயிற்சியின்பால் ஈடுபடுத்த வேண்டும்.

ஒருகுடும்பத்தலைவிகுக்கரில்சாதம்வைத்துவிட்டு யோகா செய்தார், அவருடைய கவனம் முழுவதும் விசில் எப்போது வரும் என்பதிலேயே இருந்தது. ஒரு இரண்டு மாதம் கழித்து வந்து சார் நான் தினமும் யோகா செய்கிறேன் - உடம்பு flexible வரலே, ரொம்பவும் டயர்டா இருக்கு, வரவர யோகா செய்ய வேணுமான்னு தோணுது சார்; எனக்கு யோகா எல்லாம் வராது போலிருக்கு என்றார். அவர்களை சமாதானப்படுத்திவிட்டு, சரி நீங்கள் யோகா செய்யும் நேரம் மற்றும் முறைகளைக் கூறுங்கள் என்றபோது - குக்கர் பற்றி கூறினார். மனம் யோகா செய்யும்போது உங்களிடம் இருக்கட்டும்; குக்கரிடம் வேண்டாம்; ஒரு வாரம் கழித்து வாருங்கள் என்றேன். அடுத்த வாரம் வரும்போது அவர்கள் முகத்திலிருந்த பிரகாசமே அவர்களின் மனதைக் காட்டிவிட்டது - ஒரு குழந்தையின் குதூகலத்துடன் சார்.... எவ்வளவு ஈஸி சார் இது... நான் தான் சரியாகப் புரிஞ்சுக்கவில்லை நல்லா உடம்பு வளையுது என்று, புலம்பியவர் புகழ்பாட ஆரம்பித்துவிட்டார்.



அவர்களுக்கு குக்கர் என்றால் மாணவர்களுக்கு Home work. பெரியவர்களுக்கு அலுவலம் etc... எனவே Redlax ஆக யோகா செய்தால் வாழ்விலும் Relax ஆயிடலாம்.

TONE UP (தயார் செய்தல்)

இது 4 படிகளைக் கொண்டது. முதலாவதாக ம ஸாஜ் (Massage) (படங்கள் 1, 2, 3)

நாம் குழந்தைகளாக இருக்கும்போது நம் பெற்றோர் நம் கைகால்களைப் பிடித்து விடுவார்கள் நினைவிருக்கிறதா? இப்போதும் பல வீடுகளில் கணவர்களுக்கு மனைவி பிடித்து விடுவதை பார்த்திருக்கலாம்) -

நிறைய 'மசாஜ்' மையங்கள்கூட உடலைத் தளரவைக்க வந்துவிட்டது. விதவிதமான விளம்பரங்களுடன், நாம் நமது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மஸாஜ் அதாவது மென்மையான அழுத்தம் தரும்போது இரத்தக் குழாய்களிலுள்ள மடிப்புகள், அடைப்புகள் சரி செய்யப்பட்டு உடனே இரத்த ஓட்டம் சீரடையும், இதுவே நமக்கு ஒரு புத்துணர்ச்சியைத் தரும். அடுத்த இரண்டாவது, மூன்றாவது படியாக கைகளால் தொட இயலாத பகுதிகளான முதுகுப்பகுதிக்கு அழுத்தம் தர நாம் பக்கவாட்டிலும் முன்னும் பின்னும் உருளுதல் வேண்டும்.

உருளுதல் (Rolling : படங்கள் 4, 5, 6)

தரையில் முதுகுபடும்படியாக படுத்துக்கொண்டு பக்கவாட்டில் உருளுதல் (படம்5) (Rolling Side) முன்னும் பின்னும் (Rolling Front & Back) உருளுதல் (படம் 6) வேண்டும். இப்போதும் நாம் சிறுவயதில் படுத்துக்கொண்டு உருளுவதை நினைவுகூர்ந்தால் தெரியும். அப்போதெல் லாம் நமக்கு நோய் என்பதே தெரியாது? சிறுவர்களாக குழந்தைகளாகவே இருந்திருக்கக்கூடாதா என்ற ஆதங்கம் நமக்கு பல சமயங்களில் வெளிப்படுகிறதல் லவா....

சைக்கிள் Cycling : (படம் 7)

மல்லாந்து படுத்துக்கொண்டு இருகைகளையும் தொடைகள் மீது வைத்துக்கொண்டு கால்களை முன்னும் பின்னும் அசைத்தல் வேண்டும். கால்களை முழுமை யான நீட்டவும் ஆனால் தரையைத் தொடாமல் தரைக்கு இணையாக நீட்டவும்.

இந்த 4 படிகளைச் செய்து முடிக்கும்போதே உடலில் ஒரு மென்மைத்தன்மை பரவுவதை உணரலாம். தசைநார்களெல்லாம் விறைப்புத்தன்மை நீங்கி தளர்வாக (flexible) இருப்பதை உணரலாம்.

இனி நாம் யோகாசனப் பயிற்சியை தொடங்குவோம்.

இங்கு கண்டுள்ள வரிசையில் செய்தால் முழுமை யான பலன்பெறலாம்.

1. வஜ்ராசனம் (Vajra Asana):

ஔவையார் வியாகர் அகவலில் சொல்கிறார் "மூலாதாரத்து மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவித்தே..." என்று அதாவது உடம்பின் செயல் பாடுகளுக்கெல்லாம் மூலமாக இருக்கக்கூடிய முதுகுத் தண்டின் அடிப்பாகத்தை வலிமைப்படுத்திவிட்டால் மற்ற அவயவங்கள் தானாகவே சரியாகவிடும். அந்த பலனைத் தரக்கூடியதான வஜ்ராசனத்தை மகரிஷி அவர்களும் முதன்முதலாகச் செய்ய வேண்டுமென்று ஆச்சரியமல் லவா?

முழந்தாளிட்டு, குதிகால்களின் மேல் அமரவும், தலை, கழுத்து, முதுகுத் தண்டு 90° அதாவது நேராக இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும், இடதுகால் பெருவிரலின் மேல் வலதுகால் பெருவிரல் இருக்கட்டும். இடது கையின் மேல் வலதுகையை வைத்துக்கொள்ளவும். மெதுவாக மேலே எழவும், மண்டியிட்டு நிற்பது போன்ற நிலைக்கு வரவும். பின்பு முதுகை வளைக்காமல் குதிகாலின் மேல் மெதுவாக அமரவும், 2-3 முறை செய்யவும், (15 விநாடிகள் ஒரு நிலையில் இருந்தால் போதும ானது. அரை மணி நேரம் நின்றாலும் அதே பலன் தான் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.)

பயன்கள் : முதுகுத் தண்டு, மூட்டுகள் பலம் பெறுவதுடன் நரம்புகளில் ஊடுருவிச் சென்று அவைகளின் விறைப்புத்தன்மையைக் குறைத்து நெகிழ்வினைக் flexibility கொண்டு வரும். அவைகள் வலுவடையும்.

2. பச்சிமோத்தாசனம் (PASCHIMOTHASANA):

"குடலைக் கழுவி உடம்பை வளர்" என்பது ஆரோக்கிய சம்பந்தம ான ஒரு பழமொழி, ஒருவனுக்கு ஜீரண உறுப்புகள் நன்கு செயல்பட்டாலே போதும். நாம் உண்ணும் உணவுப்பொருட்களின் சத்து உடலில் கலந்து ஆரோக்கியம் மேம்படும். இந்த ஆசனத்தைச் செய்யும்போது அடிவயிறு நன்கு அழுந்தப் பெறுவதால் ஜீரண உறுப்புகள் புத்துணர்வுடன் செயல் படுகின்றன. மேலும் சிறுநீரகங்கள் சம்பந்தமான சிக்கல் களும் குறைவதைக் கண்டறிந்துள்ளனர்.



தரைவிரிப்பில் அமர்ந்து இருகால்களையும் சேர்த்து நேராக நீட்டவும் தரையுடன் கால்கள் படிந்திருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். இருகைகளையும் பக்கவாட்டில் மெதுவாக தலைக்குமேல் வரும்படி உயர்த்தவும், பின்பு மெதுவாக இடுப்புப்பகுதியிலிருந்து வளைத்துக்கொண்டே முன்புறமாக குனியவும், இருகைகளாலும் நீட்டியுள்ள கால்களின் கட்டைவிரல்களைத் தொட்டால் போதும். நாளடைவில் நமது தலைகூட முழங்கால்களைத் தொட்டுவிடும். ஆனால் முன்புறம் குனியும்போது முழங்கால்கள் மேல் எழும்பக்கூடாது. முடிந்தவரை மட்டுமே முயல வேண்டும். ஒரே நாளில் வாரத்தில் முழுமையடைய முடியாது. அவரவர் உடல்நிலைக்கு ஏற்ப வளையும் தன்மையும் முன்னேற்றமும் கிடைக்கும். தொடர்ந்து செய்தால் நல்ல பயன் விளையும். செய்யலாமா?



3. சர்வாங்க ஆசனம் (SARVANGASANA):

"அவள் தலைகீழாக நின்றாவது சாதித்துவிடுவான்" என்பார்கள். அதாவது தலைகீழாக நின்றால் சாதனை சுலபம் - முற்காலத்தில் "சிரசாசனம்" என்று தலையை கீழே வைத்து செய்தனர். பின்பு வல்லுநர்களின் ஆராய்ச்சி, யோசனையில் அதுபோன்ற ஆசனப்பயிற்சி பின்விளைவு / பாதிப்பினை ஏற்படுத்துகிறது. சுமார் 75% மக்கள் பக்கவிளைவுக்கு ஆளாகிறார்கள். எனவே அது தேவையில்லை என முடிவெடுத்துள்ளார்கள். கிட்டத்தட்ட அதே அளவு (அ) 80% பலன் தரக்கூடிய "சர்வாங்க ஆசனம்" செய்தால் போதுமாம். கழுத்திலுள்ள தைராய்டு சுரப்பி பலம் பெறுவதால் அவைகள் நார்மலாக சுருந்து ஒல்லியாக இல்லாமலும் குண்டாக இல்லாமலும் நார்ம லான அமைப்பைப் பெறுவதுடன், மூளைப்பகுதிக்கு இரத்தம் செல்வதால் அதிலுள்ள நரம்புகள், செல்கள் களைப்படையாமல் செயல்படுகின்றன. எனவே, மனச்சோர்வும் ஏற்படாது. மற்ற ஆசனங்கள் செய்யவும் இந்த ஆசனம் உதவிகரமாக இருக்கும். தைராய்டு பலம் பெறும். இந்த ஆசனத்தை ஆசனங்களின் அரசி (Queen of Asanas) என்பார்கள்.

முதுகு தரையில் படும்படி மல்லாந்து படுத்துக்கொள்ளவும். இரு கைகளையும் நேராக உடம்பை ஒட்டினாற்போல் உள்ளங்கை தரையில் படும்படி வைத்துக்கொள்ளவும். இரு கால்களையும் மேலே மேலே கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தவும். உடம்புப் பகுதுழு மேலே எழுந்தவுடன் இரு முழங்கைகளாலும் உடம்பைத் தாங்கிக் கொள்ளவும். கொஞ்சம் கொஞ்சமாக உடம்பை நேர்நிலைக்கு (90° டிகிரி) கொண்டு வர வேண்டும். 15 நொடிகள் கழித்து மேலேயே கால்களை மடக்கிக்கொண்டு கைகளில் உடம்பை சரித்துக்கொண்டே மெதுவாக கீழே வரவும். முதல் தடவையிலேயே வராது. தொடர்ந்து முயன்றால் சர்வ அங்கமும் மேலே எழும்பி சாதனை புரிந்து விடலாம்.

4. விபரீதகரணி (VIPARITHA KARANI) :

5. ஹாலாசனம் (HALA ASANA) :

சர்வாங்க ஆசனத்தின் அடுத்தபடிகள் தான் இவை இரண்டும் மேலே எழும்பிய கால்களை அப்படியே முன்னால் கொண்டு வரவும். இடுப்பு பகுதிக்கு நேராகவும் தரைக்கு இணையாகவும் வரும்போது அப்படியே நிற்கவும். (விபரீத கரணி)

பின்பு இரு கால்களாலும் (ஹாலாசனம்) பின்பு கால்களை மடக்கி மெதுவாக முன்பு போல் மெதுவாக பழைய நிலைக்கு வந்துவிடவும்.

முதுகுத் தண்டின் அடி முதல் நுனிவரை அனைத்து பகுதிகள், சிறுநீரகங்கள், கல்லீரல், மண்ணீரல், கழுத்தில் உள்ள ஸ்ளீஸஷஸஷஉழியி யலிஜளவி முதலியவைகள் பலம் பெறுவதுடன், கொழுப்பு குறைவதால் உடல் ஸ்லிம் ஆக இருக்கும். அப்புறமென்ன Hand Some அல்லது ஸீர்மிளஆ ஆயிடுவீங்க. செய்து பாருங்க.

சாதீயமும் சீதனமும் கூட புலம்பெயர்ந்திருக்கிறது

நிவேதா உதயன் - லண்டன்

ஈழத்தமிழர்கள் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக போர்ச்சூழல் காரணமாக பல தேசங்களிலும் புலம் பெயர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அகதி களாக, நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களாக, மாணவர்களாக பலவித பரிமாணங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எல்லோருடைய மனங்களிலும் எம் தேசம் பற்றிய மாற முடியாத வடு ஏற்பட்டிருப்பது உண்மை. தம் வேர்களை அடியோடு பெயர்த்துக் கொண்டவர்களும் சரி, தம் சொந்தங்களை விட்டு இங்கு வந்து தனிமையில் வாடுபவர்களுக்கு சரி எம் இனத்தின் சுதந்திரம் என்னும் பொறியை உள்ளத்துள் மூடிவைத்தபடியே வாழ்கின்றனர்.

ஆனாலும் காலமும் காட்சிகளும் வாழ்வியல் சூழலும் அப்படியே இருந்துவிட முடியாதது. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுடைய வாழ்வியல் சூழல் கடந்த முப்பது ஆண்டுகளில் அவர்களிடையே பல பாரிய மாற்றத்தினை உண்டு பண்ணியிருக்கிறது. ஆரம்ப காலங்களில் எமது பண்பாடு, கலாசார விழுமியங்கள் தாங்கி அவற்றை இலகுவில் விட்டுவிட முடியாத பந்தத்துடன் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் தற்போது அவற்றைத் தாமாகக் கைவிட்டோ அன்றி கைவிட்டு மற்றைய கலாசாரத்துக்கு அடிமையாகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாம் தலைமுறை தாண்டி மூன்றாவது தலைமுறையினரைச் சுமக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கும் போது. தம் பிள்ளைகளின் வாழ்க்கை முறைக்கேற்ப தம்மை மாற்றயமைக்க வேண்டிய சூழ்நிலை எம்மிடையே ஏற்பட்டிருப்பதும் தவிர்க்க முடியாததாகிவிட்ட தெனலாம்.

புலம்பெயர்ந்த முதல் தலைமுறை யிடையே ஏற்பட்டுள்ள மன அழுத்தங்களும் பிள்ளைகளை தம் வழியில் வளர்க்க முடியவில்லை என்னும் அவர்களின் ஆதங்கமும் கூட அவர்களை புலம்பெயர் வாழ்வியலுள் மூள்குவதிலிருந்து தப்ப முடியாததாகிவிட்டது. நாம் எமது பண்பாட்டுடனேயே வாழ்ந்து வருகின்றோம் என்று கூறிக் கொண்டு, தம் பிள்ளைகளை வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச் செல்வதும், திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்வதால் பண்பாட்டைப் பேணிக் கொண்டு இருந்துவிடுவர் என்ற எண்ணத்துடன் வாழும் பெற்றோரும், இந்த நாடுகளுக்கு வந்துவிட்டோம் திரும்ப தாய் நாட்டில் போய் வாழப்போவதில்லை. ஆகவே மேற்கத்தியக் கலாச்சாரத்துடன் கலந்து விடுவது தான் நன்று என்று வாழ்வோரும், எமக்கென்றொரு நாடு இனி அமையப் போவதில்லை எல்லாவற்றையும் தொலைத்து விட்டு எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போகலாம் என்று எண்ணும் ஒரு பகுதியினரும் தமக்குத் தோன்றியபடிவாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பல குடும்பங்களில் ஆடம்பர வாழ்வுக் காக ஆண் பெண் இருவரும் அளவுக் கதிமாக வேலை செய்வதும் அதனால் கணவன் மனைவி இருவருக்கும் இடையே யன்றி பிள்ளைகளுக்கு இடையேயும் ஒருவித ஈடுபாடற்ற தன்மையை ஏற்படுத்திவிடுகிறது. தாய் பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடாது. அவர்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளாது விடுவதானால் கணவன் மனைவிக்கு இடையே விரிசல்கள் பிள்ளைகளிடையே ஒட்டாத நிலையும் ஏற்படுவது மாத்திரமின்றி, தம் மனச்சுமையை இறக்கிவைக்கவோ பகிர்ந்து கொள்ளவோ வேறு ஒருவரை நாடிப்போக வேண்டிய தேவையும் ஏற்பட்டுப் போகிறது. இது பிள்ளைகளை மேலும்தவறாக வழிவகுக்கிறது. பலர் பண்பாட்டைப் பேண வேண்டும் எனும் நோக்கில் தம் பிரச்சனைகளை வெளியே கூறாது மற்றவரிடமோ நண்பர்களிடமோ கூடப் பகிர்ந்து கொள்ள முடியாது தமக்குள்ள பூட்டி வைத்து தாமே தம் மனப்பிறழ்வுக்கு வழிவகுத்தும் நிற்கின்றனர். தூர நோக்கமற்ற சிந்தனைகளும், மற்றவர் போல் வாழ முடியவில்லையே என்னும் பேராசையும் கூடப் பல குடும்பங்களை பிளவுகளை ஏற்படுத்தி முற்றாகச் சிதைந்து போகச் செய்வதையும் தவிர்க்க முடியவில்லை.

முக்கியமாக இங்கு வாழும் இளஞ் சந்ததியிடையே பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் பெண்களைப் பற்றியதொரு மிக மட்டமான கருத்து நிலவுவதை பல ஆண்கள் மத்தியில் காணக்கூடியதாகவும் உள்ளது. கட்டாயம் இவர்களுக்கு பல ஆண்களுடன் தொடர்பு இருக்கும் என்றொரு புரிதல் இல்லாத தன்மையே.

புலம் பெயர் வாழ்க்கையில் பலர் வேறு குடும்பங்களுடன் பெரிதாக தொடர்புகளைப் பேண விரும்பாது தமக்குள் உள்ள சிறிய வட்டத்துடனேயே வாழ்வை நிறைவாக்கிக் கொள்கின்றனர். சிலர் தம்மைச் சுற்றி போலியாக ஏற்படுத்திக் கொண்ட நிறைய நண்பர்களுடன் குடிப்பதும் கும்மாள டிப்பது மாக காலத்தைக் கழிக்கின்றனர். ஒரு பகுதியினர் கோயில் கலை வகுப்புக்கள் விழாக்கள் என்று வாழ்வைத் தம்போக்கில் ஏற்றுக்கொண்டுள்ளனர். இன்னும் சிலர் முயற்சி செய்யாது காலத்தையும் நேரத்தையும் வீணடித்தபடி உதவிப் பணத்தில் வாழ்ந்து அனுபவித்துக்கொண்டும் இருக்கின்றனர்.

பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் பெண்களைப் பற்றியதொரு மிக மட்ட மான கருத்து நிலவுவதை பல ஆண்கள் மத்தியில் காணக்கூடியதாகவும் உள்ளது.

இவையெல்லாம் தாண்டி இந்த நூற்றாண்டிலும் சாதீயமும் சீதனமும் புலம் பெயர் தமிழர்களைக் கைவிடவில்லை. சாதாரண மக்களை விட அதிகம் கற்றவர்கள் உள்ள வட்டத்தில் கற்ற கல்விக்கேற்ப, பெண்ணும் ஆணும் படித்திருந்தாலும் சீதனம் பெற்றுக்கொண்டு திருமணம் செய்யும் முறை வலுவோடு காணப்படுகிறது. அவர் எவ்வளவு தான் கற்ற பெண்ணாக இருந்தாலும் ஒரு கட்டத்தில் பெற்றோரின் விருப்பம் போலவே தலையாட்டிக்கொண்டு சீதனம் பெற்றுத் திருமணம் செய்வோர் மலிந்திருக்கும் சமூகமே எங்களுடையது.

இதற்கான காரணங்களைப் பார்ப்போமானால் எமக்கான ஒரு நிரந்தரத் தேசமோ அது சார்ந்த நம்பிக்கையோ சிதைந்து போனதும் காரணமாக இருக்க லாம். சமூக பயம் அற்றுப்போய் இனமானம் அற்று, கொள்கை அற்று எப்படியும் வாழலாம் என்னும் மனோநிலை எம்மவரிடையே அதிகரித்திருப்பதும் நாம் நாடற்றிருப்பதுமே தான்.

✲

FIFA WORLD CUP

Group A	G1	G2	G3	P
Brazil				
Crotia				
Mexico				
Cameroon				

Group B	G1	G2	G3	P
Spain				
Netherlands				
Chile				
Australia				

Group C	G1	G2	G3	P
Colombia				
Greece				
Ivory Coast				
Japan				

GroupD	G1	G2	G3	P
Uruguay				
Costa Rica				
England				
Italy				

Group E	G1	G2	G3	P
Switzerland				
Ecuator				
France				
Honduras				

Group F	G1	G2	G3	P
Argentina				
Bosnia Hercegovina				
Iran				
Nigeria				

Group G	G1	G2	G3	P
Germany				
Portugal				
Ghana				
United States				

Group H	G1	G2	G3	P
Belgium				
Algeria				
Russia				
South Korea				

Group A winner
Group B runner-up

Group C winner
Group D runner-up

Group E winner
G53
Group F runner-up

Group G winner
Group H runner-up

Group E winner
Group A runner-up

Group D winner
Group C runner-up

Group F winner
G55
Group E runner-up

Group H winner
G56
Group Grunner-up

Game 49 winner
Game 50 winner
Game 53 winner
Game 54 winner
Game 51 winner
Game 52 winner
Game 55 winner
Game 56 winner

Game 57 winner
Game 58 winner
Game 59 winner
G62
Game 60 winner


Third Place
Loser G61
G63
Loser G62

Final
Winner G61
G64
Winner G62

உலகக் கிண்ண உதை பந்தாட்டம்
ஜெயிக்கப் போவது யாரு?

- மணிவண்ணன் -

1930ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆடவர்க்கான உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டியில் உருகுவேயும் அர்ஜன்டீனாவும் இறுதிச் சுற்றில் மோதின. உருகுவே கிண்ணத்தைத் தனதாக்கி முதலாவது உலகக் கிண்ணத்தை வென்ற பெருமையைப் பெற்றது. இத்தாலி தொடர்ச்சியாக 1934, 1938ம் ஆண்டுகளில் வெற்றி வாகை சூடியது. பின்னர் இரண்டாம் உலகமகா யுத்தம் காரணமாக 1950 வரை உலகக் கிண்ண உதைபந்தாட்டம் நடைபெறவில்லை. 1950ம் ஆண்டு போட்டிகள் பிரேசிலில் நடைபெற்றன. பிரேசில் ஐந்து தடவைகள் சாம்பியனாகி அதிக வெற்றிக் கிண்ணங்களை வென்ற நாடு என்ற பெருமையைப் பெறுகிறது. இரண்டாவது இடத்தில் நான்கு வெற்றிகளுடன் இத்தாலியும், மூன்று கிண்ணங்களுடன் ஜெர்மனி மூன்றாவது இடத்திலும் உள்ளன.







கடைசியாக உலகக்கிண்ணப் போட்டிகள் தென்னாப்பிரிக்காவில் 2010ல் நடைபெற்றன.இதில் ஸ்பெயின், நெதர்லாந்துடன் மோதி 1 : 0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தைத் தனதாக்கியது. 2012ல் நடைபெற்ற ஐரோப்பியக் கிண்ணப் போட்டியிலும் ஸ்பெயின் அணியே வெற்றி பெற்றது. இந்த அணியே இரசிகர்களிடம் அதிக எதிர்பார்ப்பில் உள்ள அணி. உலக உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தர வரிசையிலும் ஸ்பெயினே 1485 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் உள்ளது. ஜெர்மனியும், பிரேசிலும் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளன.

இந்த வருடம் மொத்தம் 64 போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் 48 போட்டிகள் 8 குழுமங்களாகநடைபெறும். ஒவ்வொரு அணியும் தலா 3 போட்டிகளில் மோதும். வெற்றிக்கு 3 புள்ளிகள், சமநிலையில் 1 புள்ளி. ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதலாவது, இரண்டாவது இடங்களைப் பெறும் அணிகள் (புள்ளிகள் சம நிலையில் கோல் வித்தியாசம் கருத்தில் கொள்ளப்படும்) தெரிவு செய்யப்பட்டு 16 அணிகள் கொண்ட விலக்கல்முறை நிலை (தோற்றவர் போட்டியிலிருந்து விலகுவது) ஆட்டத்தில் ஈடுபடும். மேற்கூறிய நிலையில் தெரிவு செய்யப்பட்ட 8 அணிகளும் காலிறுதிக்குத் தகுதி வாய்ந்தன. இதுவும் விலக்கல் முறைச் சுற்றே. இந்நிலையில் தெரிவாகும் நான்குஅணிகளும் அரையிறுதியில் மோதும். அரையிறுதிச் சுற்று இரண்டு ஆட்டங்களைக் கொண்டது. இதில் வெல்லும் இரண்டு அணிகளும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும்.








அரையிறுதியில் தோற்கும் இரு அணிகளுக்கிடையிலும் மூன்றாமிடத்திற்கான போட்டி 12 ஜுலை 2014 அன்று பிரேசிலியாவில் நடைபெறும் அரையிறுதியில் வெற்றி பெற்ற அணிகளுக்கிடையிலான இறுதியாட்டம் 13 ஜுலை 2014 அன்று றியோ டி ஜனெய்ராவிலுள்ள மொரகானா மைதானத்தில் நடைபெறும். இந்தப் போட்டிகள் உள்நாட்டில் நடைபெறுவதால் பிரேஸில் அணிக்கு தாய்நாட்டு ரசிகர்களின் ஆதரவு வீரர்களின் உற்சாகத்தை மேலும் அதிகரிக்கும். ஸ்பெயின் அயியின் 2010 உலகக் கிண்ண வெற்றியும், 2012 ஐரோப்பியக் கிண்ண வெறறியும் மனவுறுதிக்கும் ஆர்வத்திற்கும் பக்கபலமாக அமையும்.

கட்டுரை



சீனாவின் முற்போக்கு இலக்கியவாதி லூ ஷுன்

-மீனா

சீனாவில் முதலாளித்துவத்தின் கை ஓங்கியுள்ள போது மாஓவிற்குரிய இடத்தை முற்றாக மறுதலிக்க இயலாமைக்கு அடிப்படையான காரணம், மாஓ சீனாவின் தலையாயபுரட்சிகரசிந்தனையாளராகஇருந்ததற்கும் தலைமைப் போராளியாக இருந்ததற்கும் மேலாகச் சீனாவின் தேசிய விடுதலையின் வழி காட்டியாக வும் இருந்தமைதான். எனவேதான் சீனாவுக்கு மாஓவின் முக்கியத்துவம் பெரிது. மாஓ ஒரு நல்ல கவிஞரும் கூட. பழைய இலக்கியப் பரிச்சயத்திற்கும் மேலாக நவீன இலக்கியத்திலும் ஈடுபாடுடையவர். அவருக்கு மிகவும் விருப்பமான படைப்பாளிகளுள் லூஷுன் முக்கியமான ஒருவர்.

லூஷுன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரல்ல. முதலில் ஒரு புரட்சிகர ஜனநாயகவாதியாகத் தன்னை அடையாளப்படுத்திய லூஷுன், காலப் போக்கில் ஒரு கம்யூனிஸ்டாக முதிர்ச்சி கண்டார். அவரை மாஓ கட்சி உறுப்பினர் அட்டையில்லாத கம்யூனிஸ்ட் என்று கூறுவார். சிறுகதை ஆசிரியராகவே சீனாவில் புகழ்பெற்றலூஷுன்பலகவிதைகளும்எழுதியுள்ளார். அவரது வசனக் கவிதைகள் "காட்டுப்புல்" (Wild Gras) என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியாகி உள்ளன. அவற்றை விட "திரும்பச் சொல்லப்பட்ட பழங்கதைகள்" (Old tales Retold) என்ற தொகுப்பும், அவர் எவ்வாறு மரபுக்கும், நவீனத்துவத்துக்கும் ஒரு பாலமாயிருந்தார் எனக் காட்டுகிறது. அவரது சிறுகதைகளில் ஒரு பகுதி ஆங்கிலத்தில் மொழிமாற்றம் பெற்று நூல் வடிவில் வந்துள்ளன.

அவரது சிறுகதைகளில் முக்கிய மானவற்றுள் அவரது முதலாவது சிறுகதையான "ஒரு பித்தனின் நாட்குறிப்பு", "ஆக க்யூவின் உண்மைக் கதை", "புத்தாண்டுத் தியாகம்" எனும் மொழிநடையில் வலிந்து யாரையும் நோக வைக்காத பண்பான நகைச்சுவை இழையோடும்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் ரஷ்யப் படைப்பாளிகள் அறியப்பட்ட அளவுக்கு பிற சோசலிச நாடுகளின் படைப்பாளிகள் அறியப்பட்டதாகக் கூற இயலாது. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஆங்கில வாயிலாகவே இந்திய துணைக்கண்டம் உலக இலக்கியத்தை அறிய இயலாமலிருந்தமை அவற்றுள் முக்கியமான ஒன்று. லூஷுன் சிறுகதைகளின் ஆங்கில மொழி மாற்றங்கள் 1960ம் ஆண்டிலேயே நூல் வடிவு பெற்றன. வெகு விரைவிலேயே சீன-இந்திய எல்லைப்போரும், சீன-சோவியத் அரசியல் முரண்பாடும் வெடித்தெழுந்ததன் விளைவாக லூஷுன் சிறுகதைகள் சென்றடைந்திருக்க கூடிய இடங்களைச் சென்றடையவில்லை.

இலங்கையில் கூட லூஷுன் பற்றிய அறிவு குறைவாகவே இருந்தது. 1970களில் கே. கணேஷ், லூஷுன் படைப்புக்கள் சிலவற்றைத் தமிழ்ப்படுத்தினார். கைலாசபதியும் 1970களிலேயே லூஷுன் பற்றிப் பேசத் தொடங்கினார். எனினும் இந்திய துணைக்கண்டத்தில் லூஷுன் அறியப்பட்டது அறவே போதாது என்பதே.

லூஷுன்னின் இலக்கியம் பற்றிய பார்வை இலக்கியம் மக்களுக்கானது என்ற அடிப்படையிலானது. அதை அவரது ஆக்கங்களே தெளிவாக உணர்த்தும். தனது இருப்புப் பற்றிய லூஷுன்னின் பார்வையை அவரது கவித்துவமிக்க இரண்டு வரிகள் உணர்த்தும்.

"நீளும் ஆயிரம் விரல்களைச் சினந்த புருவங்களுடன் நிதானமாய் மறுத்து நிற்பேன். இசைவான ஒரு எருது போல தலை தாழ்த்தி குழந்தைகட்கு பணியாற்றுவேன்."

லூஷுன் சீனாவின் நவீன பண்பாட்டுப் புரட்சியின் தலைமைத் தளபதியாகவும், சீரிய சிந்தனையாளராகவும் அரசியல் கருத்துரை யாளராகவும் சீனாவின் நவீன இலக்கியத்திற்கு அத்திவாரமிட்டவராகவும் கொண்டாடப்படுகின்றார். ஒருவரால் எவ்வாறு உன்னதமான இலக்கிய வாதியாகவும் மக்களால் கொண்டாடப்படும் படைப்பாளியாகவும் அமைய முடியும் என்பதற்கு லூஷுன் நல்ல எடுத்துக்காட்டாவார்.

லூஷுன்னின் படைப்புக்கள் :
நூல் முன்னுரைப்பகுதி :

இளவயதில் எனக்கு பல கனவுகள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை நினைவில் இல்லை. அதைப்பற்றி வருந்த எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் கடந்த காலத்தை நினைவு கூர்வது உங்களை மகிழ்வூட்டலா மென்றாலும் சில சமயம் தனிமையான உணர்வையும் தரக்கூடும். கடந்துபோன தனிமையான நாட்களில் உணர்வொன்றிப் போவது பயனற்றது என்றாலும், என்னுடையபிரச்சினைஏதென்றால்,நினைவிலிருந்து அழிக்க இயலாதவற்றின் விளைவானவையே...

நான்காண்டுகட்கும் மேலாக நான் அநேகமாக நாள் தவறாமல் ஒரு அடமானக் கடைக்குப் போவேன். அப்போது எனக்கு என்ன வயதென்று நினைவில்லை. ஆனால் மருந்துக் கடையின் கவுண்டர் என்னுடைய உயரம், அடமானக்கடைக் கவுண்டர் என்னைப் போல இரண்டு மடங்கு உயரம், இரண்டு மடங்கு உயரமான கவுண்டரில் துணிகளையும், சிறிய நகைகளையும் கொடுத்து ஏளனத்துடன் தரப்படும் பணத்துடன் என்னளவு உயரமான கவுண்டருக்குப் போய் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த என் தகப்பனாருக்கான மருந்துகளை வாங்குவேன். வீடு திரும்பினால் எனக்கு அங்கே வேறு வேலைகள் காத்திருக்கும். ஏனென்றால் மருந்துகளைப் பரிந்துரைக்கிற வைத்தியர் பேர் பெற்றவர். அவர் சில வழக்கமான மருந்துகளைப் பாவிப்பார். குளிர் காலத்தில் பிடுங்கப்பட்ட சோற்றுக்கற்றாழைவேர், மூன்று ஆண்டு களாக உறைபனிக்குட்பட்ட கரும்பு, இரட்டைச் சில்வண்டு... எல்லாமே பெறக் கடினமானவை. ஆனால் என் தகப்பனாரின் நோய் அவர் சாகும்வரை மோசமாகிக்கொண்டே போனது.

வாழ்ந்து கெட்டவர்கள், அதன் போக்கில் உலகம் உண்மையிலேயே எப்படியானது என விளங்கிக் கொள்ளக் கூடும் என நினைக்கிறேன்...

"போரிட அழைப்பு" (a call to arms) என்ற நூலின் முன்னுரையின் தொடக்கப் பகுதி

❖



முதுசம்

- அகரமுதல்வன் -



நீயுன் சாவை அழைத்தபடி
எங்கள் ஒப்பாரிக்கு நீளம் சேர்க்கும்
இந்த விடியலை முதலில் தீயிலிடவேண்டும்.

தூக்க மாத்திரைகளை நினைவில் இருந்து
தூர வீசியெறி
மரணத்தை மாத்திரை புள்ளியிடும்
வாழ்வின் முற்றங்களை உழுது தள்ளு

நீ
அன்பின் முதுசமாய்
அலைபாயும் மழலைக் கடல்
உந்தன் ஆழம் யாரால் தள்ளிட முடியும்

உன் கவிதைகளை சுவர்களில்
தொங்கவிடு
அது காற்றை வருடி
அன்பறியா அகிலம் யாவும் படரட்டும்

அழுவதிலும் அடம்பிடிப்பதிலும்
இயலாத குழந்தையாகவிருந்து
தனிமையின் இரவுகளை
தாளமிட்டு ரசி

உன் படுக்கையறையில் குளிர பொதிந்த
கனவுகளை முட்டையிட்டு
அடை காத்துக் கொள்

இப்பொழுதும் உன்னருகில்
பல்லாண்டு கால உறைதலோடு
தற்கொலையாயிருக்குமாயின்
வசீகரமான
உன் விரல் நகங்களால்
அதன் குரல் வளையை
கீறிக் கொல்

எங்கிருக்கிறது உன் தற்கொலையின்
ஆதிமயிர்.

இன்னும்
ஒருமுறை பேசு
இழந்துபோன என் ஆயுள்
இருமடங்காய் திரும்பும்

பார்வைகள்
வீசிய அமிலம்
உயிர்வரை குடித்து
உப்பி வைக்கிறதே
பிணமாய்

வந்துப்போன
தருணங்களில்
வாசலில் போட்ட கோலத்தில்
மட்டும் பூ பூத்திருக்கிறதே


Your House Comfort in your mind...
HEATING, AIR CONDITIONING, FIREPLACE,
TANK LESS WATER HEATERS, GAS STOVES,
BBQ & GAS LINE.
TSSA
All our technicians are TSSA certified
Air Conditioner from $ 1599
Gas Line from $180.00
Rinnai
TANKLESS WATER HEATERS
24/7 Service
FREE HOME ESTIMATES CALL:
416 986 9554
GREENI
HEATING&COOLING
Sales, Installation, Annual Maintenance & Repair
Creza Design

* அண்ணாச்சி பதில்கள்

* உங்கள் கேள்விகளை முகவரி ஆசிரியர் பீடத்துக்கு அனுப்பி
வையுங்கள் கனகண்ணையும் கண்மணி அக்காவும்
– நகைச்சுவைத் தொடர்.

* 416 புவனா அன்ட் 905 நளினா

* இந்திய – இலங்கை ஒப்பந்தம், இலங்கை
அரச யாப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும்
மாகாண சபைகள்
தொடர்பான தொடர் அலசல்.

* சிறைக் குறிப்புகள் ஈழப்போராட்டத்தில் சிறைச்சாலைச் சரிதம்

* 60களில் ஆரம்பித்து இன்றுவரை தொடர்கின்ற
சிறை என்ற துயர் எம் வரலாற்றில் பதிந்த சுவடுகள் மீது
ஒரு பயணம்.

* அயன் லேடி ஒஃப் தமிழ்நாடு – (தொடர்)

* ஜெயலலிதா கடந்துவந்த கடினமான பாதை

* முள்ளிவாய்க்கால் மர்மங்கள்.

'ஸ்மாட் போன்'

வேகமாக வளரும் தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நானும் எனது கைத்தொலைபேசியை மாற்றுவதென முடிவு செய்துகொண்டேன்.

I'Phone ஒன்றை வாங்குவதற்காக வியட்நாமியக் கடையொன்றிற்குப் போயிருந்தேன்.

"அப்பா... காலத்துடன் நாங்கள் பயணம் செய்ய வேண்டும்! கார் இடையிலை நிண்டா... காட் அற்றாக் வந்தா" என்று ஐந்து வருடங்களுக்கு முன்பு ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த என் மகன் பெரியதொரு பட்டியலிட்டு என்னைப் பயப்படுத்தியிருந்தான். அதற்கு முன்னர் என்னிடம் கைத்தொலைபேசி இருக்கவில்லை. அவனது அட்வைஸ்சிற்கு கட்டுப்பட்டு மிகக்குறைந்த விலையில் ஒரு கைத்தொலைபேசி ஒன்றை வாங்கியிருந்தேன். இப்போது அதை மாற்றுவதற்குரிய காலம் வந்துவிட்டது.

மனைவி பிள்ளைகளுடன் போனால் பெரியதொரு 'பிளானி'ற்குள் என்னைத் தள்ளிவிடக்கூடும் என நினைத்து தனியே கடைக்கு வெளிக்கிட்டிருந்தேன்.

நண்பன் ஒருவன் மலிவான கடையென ஒன்றை அறிமுகம் செய்திருந்தான். அங்கே வந்திருந்த கஸ்டமர்ஸ் எல்லாரிடமும் புதிது புதிதான கைத்தொலைபேசிகள் விதவிதமான நாதமெழுப்பிய வண்ணம் இருந்தன. அவர்களுடன் வரிசையில் நின்றுகொண்டேன். கவுண்டரில் மூன்றுபேர்கள் நின்றார்கள். எனது முறை வந்ததும் அவர்களிடமிருந்த பிளான்கள் பற்றிக் கதைத்தேன். நான் தற்போது பாவிக்கும் ரெலிபோனைப் பார்க்க முடியுமா என்று அவன் கேட்டான். பொக்கற்றுக்குள்ளிருந்த பழைய நோக்கியா போனை வெளியே எடுத்து அவனிடம் நீட்டினேன். அவன் பாம்பைக் கண்டுவிட்டவன் போல திடுக்கிட்டு, இரண்டு அடிகள் பின் நகர்ந்து மெதுவாக நழுவி உள்ளே ஓடினான். நான் எனது போனை உடனடியாக எனது பொக்கற்றுக்குள் செருகிக்கொண்டேன். கவுண்டரில் நின்ற மற்ற இருவரும் உதட்டிற்குள் புன்னகை ஒற்றைத் தவழவிட்டார்கள்.

அந்தப் புன்னகை எனக்கா, அல்லது உள்ளே சென்றவனுக்கா என்று தெரியாமல் மலங்க விழித்தேன்.

சற்று நேரத்தில் உள்ளே இருந்து ஒரு பெண் வந்து அந்தக் கவுண்டரில் நின்று கொண்டாள். அருகேயிருந்த ஒரு இருக்கையைக் காட்டி என்னை அதிலும் அமரும்படி சொன்னாள்.

நேரம் நகர்ந்தது. ஒருவரும் என்னைக் கவனிப்பதாக இல்லை. என்னைக்கண்டு மிரண்டு உள்ளே சென்றவன், கதவொன்றை மெதுவாக நகர்த்தி நான் போய்விட்டேனா ஸஎன்று பார்த்தான். கடைக்கு அவர்கள் இனத்தவர்கள் வருகின்றார்கள், போகின்றார்கள்.

"அவங்கடை கடை. வருவார்கள்... போவார்கள். இதிலே நமக்கென்ன வேலை?" எழுந்து கொண்டேன். இன்னொருநாள் பார்த்துக்கொள்ளலாம் என்ற முடிவுடன் நடையைக் கட்டினேன்.

உடுப்புக்கடையொன்றிற்கு முன்னால் ராசன் அண்ணன் தனது காரை எடுத்து இடம் மாற்றிக்கொண்டு நிற்கின்றார். கார்க்கண்ணாடியூடாக எனக்குக் கையைக் காட்டினார். ராசன் அண்ணனை எனது ஊரவர். அவருடைய அம்மா கைராசி இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா வந்திருக்கின்றார் என்று அறிந்திருந்தேன். அவ வந்து இரண்டு மாதங்கள் இருக்கும். இன்னமும் நாங்கள் அவரைப்போய் பார்க்கவில்லை.

இக்கணம் ராசன் அண்ணை பேசப் போகின்றார். அவர் தொடங்குவதற்கு முன்னால் நானே தொடங்கிவிட வேண்டும்.

"அண்ணை! இன்னும் உங்கடை அம்மாவை வந்து பார்க்கேல்லை.

மகளின்ரை படிப்பு. ஒரே பிஷி"

"எனக்குத் தெரியும்தானே தம்பி. அதைப்பற்றி நான் ஒண்டும் குறையா நினைக்கேல்லை. அம்மா உள்பட எல்லாரும் உடுப்புக்கடைக்குள்ளைதான் நிக்கினம். ஒரு மணித்தியாலமாபோச்சு. இன்னும் உடுப்பு வாங்கின பாடில்லை. அதுதான் ஒருக்கா காரை மாத்தி விடுவோமெண்டு வந்தனான். இல்லாட்டி உடுப்புக்கு மேலாலை ஃபைன் கட்ட வேண்டி வந்திடும்."

"அப்ப நல்லதாப்போச்சு. அம்மாவைப் பாத்து ஒரு ஹலோ சொல்லுவோம்."

இரண்டு பேருமாக கடைக்குள் நுழைந்தோம்.

இந்த இடத்திலை கைராசியக்காவைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். இப்ப அவவுக்கு எண்பது தாண்டியிருக்கும். அப்ப அம்பது இருக்கேக்கை அது நடந்தது. சின்னனிலை ஒருமுறை சரியான இருமலாலை படுக்கையாக இருந்தேன். பத்துப்பன்னிரண்டு வயதிருக்கும். அப்பஒருநாள் அவஎங்கடை வீட்டுக்குவந்தா. அம்மா எனது வருத்தம் பற்றி அவவிடம் ஆலோசனை கேட்டார். உடனே கைராசியக்கா ஒரு மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டுஎங்கடை வீட்டுத்தோட்டப்பக்கம்போனா. கொஞ்ச மண்புழுக்களைப் பிடித்துக்கொண்டு வந்தா. துடிக்கத் துடிக்க அவற்றை நறுக்கி தாச்சிச்சட்டிக்குள்ளை போட்டு வறுக்கத் தொடங்கினா. பிறகு அதுக்குள்ளை நீரை விட்டுக் காய்ச்சி, அந்தக் கசாயத்தை வடித்தெடுத்துக் கொண்டு வந்தா. நான் மூண்டுமுறை வீட்டைச் சுத்தி ஓட்டம் பிடித்துவிட்டு பனை வடலிக்குள்ளை ஓடி ஒளிச்சிட்டன. ஒவ்வொரு பனை பனையா ஒளிச்சிருந்து கடைசியலை என்னை அமுக்கிப் பிடிச்சே விட்டா. பிறகென்ன... வாயை இழுத்துப் பிடிச்சு ஒரே அமுக்காக மருந்தை விட, மூக்குக்குள்ளாலை கொஞ்சம் வர வாயுக்குள்ளை மிச்சம் முழுவதும் போய்ச் சேர்ந்தது. அந்த ஒருமுறை மருந்தோடை இருமல் பறந்து போச்சு. ஆனா கைராசியக்கா பற்றின பயம் தொற்றிக்கொண்டது.

உடுப்புப் போட்டுப் பார்க்கும் இடத்திற்கு முன்னால் எல்லாரும் குழுமி இருந்தார்கள். கைராசியக்காவைக் காணவில்லை.

"எங்கே கைராசியக்கா?"

"அப்பம்மா உள்ளுக்கை உடுப்பு போட்டுப் பார்த்துக் கொண்டு நிக்கின்றா"என்றாள் ராசன் அண்ணையின் கடைசி மகள். பேர்த்தியும் உரிச்சு வைச்சாப்போல கைராசியக்கா மாதிரியத்தான். சூரியோதயத்திற்காகக் காத்து நிற்பவர்கள்போல அதைச்சூழ்ந்து எல்லாரும் நின்றார்கள்.

'இஞ்சை மீனாச்சியக்காவினரை மகன் சிவயோகன் உங்களைப் பாக்கவெண்டு வந்து நிக்கின்றார்" ராசன் அண்ணை குரல் கொடுத்தார்.

"ஏன் என்னைப் பாக்கிறதுக்கு இதுதானோ அவருக்குக் கிடைச்சிருக்கிற இடம்?"

கைராசியக்காவின் குரல் உள்ளிருந்து கேட்டது. தொடர்ந்து கதவை நீக்கியபடி கைராசியக்கா காக்ராசோளியுடன் வெளியே வந்தார். சூரிய உதயம்!

"அப்பம்மாவுக்கு நல்ல வடிவா இருக்கு. இதையே வாங்குவம்" என்றாள் பேர்த்தி.

அவவைப் பார்க்க சோளக்கொல்லை பொம்மைக்கு சொக்காய் புதுசு மாட்டினமாதிரி இருந்தது.

"போகிற போக்கிலை குண்டியிலை தட்டினா ஸைஸ் எரியுறமாதிரிச் சீலை இருந்தாத் தாங்கோ எண்டு கைராசி அக்கா கேட்டாலும் கேட்பா"

"என்ன கைராசியக்கா மொடேர்ணா நிக்கிறியள்?" எனது கேள்வி அவவைக் கோபப்பட வைத்திருக்க வேண்டும்.

"உனக்கடா வெளிநாடு வந்து திமிர் கூடிப்போச்சு. உனக்கொண்டு சொல்லிறன் கேள். "காக்காய்ச்சோளி போட வேண்டுமெண்டது என்ரை சின்ன வயசு ஆசை. இப்பதான் நிறைவேறியிருக்கு. அப்ப ஒரு பத்துப்பன்னிரண்டு வயசிருக்கும். என்ரை அப்பனிட்டைக் கேட்டன். என்னை மரத்தோடை கட்டி விளாசு விளாசெண்டு விளாசிப்போட்டான். பிறகு என்ரை புருஷனைக் கேட்டன். உகும்... பிறகு பிள்ளை! ஆர் உவன் ராசன் தான். உவனாலும் முடியாமல் போச்சு. இப்ப எத்தினையோ தலைமுறை கடந்து பேத்தி வாங்கித் தாறாள். ஒரு பெட்டைச்சியாலை முடியிற காரியம் ஆண் வர்க்கத்தாலை முடியாமல் போச்சுது எண்டதுதான் இப்ப என்ரை கவலை."

"அம்மா. உது வடிவா இருக்கு. உதையே வாங்குவம்" என்றான் ராசன். எல்லாரும் ஒத்துக் கொண்டார்கள்.

"நான் இந்த உடுப்போடையே வரப்போறன். நீ போய் கவுண்டரிலை காசைக் குடுத்துட்டு வா. நான் இந்தத் தம்பியோடை கதைச்சுக்கொண்டு நிக்கிறன்"

"நல்லா இருக்கு கைராசியக்கா... இப்ப உங்களைப் பாக்க சிம்ரன் மாதிரி இருக்கு" கைராசியக்காவுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது எனது ரெலிபோன் கிணுகிணுத்தது. மனைவி தான்.

ரெலிபோனைக் கையிலெடுத்து ஒரு ஹலோ சொல்லவில்லை. எனது ரெலிபோனைப் பறித்து அருகே இருந்த குப்பைக்கூடைக்குள் எறிந்தா கைராசியக்கா.

"எட அறுவானே! உனக்கு ஒரு ரெலிபோன் வாங்க வக்கில்லை. என்னோடை கதைக்க வந்திட்டாய். உதாலை ஒரு படம் எடுக்கலாமோ சொல்லு... இந்தாபிடி... இதிலை கதை!" என்றபடியே தனது மார்புக்குள் செருகியிருந்த கைத்தொலைபேசியை எடுத்து நீட்டினா கைராசியக்கா.

அது ஒரு 'ஐ போன் 5' என்று உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. ❖

–கே.எஸ். சுதாகரன்
ஆஸ்திரேலியா



கொலை செய்யப்பட்ட கவிதை



இலங்கை எல்பிடிய பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி செல்வி டி. மாஷா கயனகி. தனது கல்வி நிமித்தம் கொழும்பு செல்வதற்காக 24.05.2014 அன்று விடிகாலை 3.30 மணிக்கு எல்பிடிய பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள். அங்கு நின்றிருந்த இராணுவ வீரனின் கண்களில் அவள் விழுந்துவிட்டாள். காமவெறியின் உச்சத்தை அடைந்த அவன், அவளை அருகிலிருந்த பாழடைந்த கட்டிடமொன்றுக்கு இழுத்துச் சென்றான். ஆனால் அவனது இச்சைக்கு அடிபணிய மறுத்து அவள் தப்பிப்பதற்காகப் போராடினாள். இதனால் தனது எண்ணம் நிறைவேறாத ஆத்திரத்தில் அவன் அவளைத் தன் கத்தியால் பலதடவை குத்திக் கொலைசெய்துவிட்டு தப்பிடியோடிவிட்டான்.

மோப்பநாயின் உதவி கொண்டு தப்பித்துச் சென்ற குற்றவாளியைக் கைது செய்துள்ள போதிலும் அவனது இக்கொடூரச் செயலுக்கான தண்டனையைக் குறைக்கும் விதத்தில் "இராணுவ வீரனது விருப்பத்துக்கு இணங்க மறுத்ததால் அவனுக்கு ஏற்பட்ட சடுதியான கோபத்தின் காரணமாகவே கொலை நிகழ்ந்துள்ளது. திட்டமிட்டுச் செய்ததல்ல" என்று கூறி வாதாடப் படுகிறது.







21 வயதான செல்வி டி. மாஷாகயனகி. இலங்கை கட்புல ஆற்றுகைக் கலைகள் (University of Visual & Performing Arts) பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட மாணவி, சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் கூட கொழும்புக்குச் சென்று, தலவத்துகொட பிரதேசத்திலுள்ள முதலாம் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஏழை மாணவ மாணவிகளுக்கு ஆங்கில மொழியைக் கற்பித்து வந்த சமூக சேவை மனப்பான்மை கொண்ட இளம்பெண்.





அவர் மரணிக்க முன்பு இறுதியாக எழுதியிருந்த கவிதை இது

எப்போதேனுமொரு நாள் இவையெல்லாவற்றையும்
விட்டுச் செல்ல வேண்டியிருக்கும்
எவரும் மகிழ்ச்சியாகச் செல்லும் பயணமல்ல அது
எனினும் அதை துயரமின்றிச் செல்ல முடிந்தால்
எவ்வளவு நன்றாகவிருக்கும்
அந்நாளில்
நினைவில் வராதோர் அனேகர்
எனினும்
நினைவில் வரக்கூடிய சிலரில்
நீங்கள் இருப்பீர்களென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது

நான் மரிக்கும் நாளில் வாருங்கள்
என்னைப் பார்க்கவென்றே வந்துசெல்லுங்கள்
ஒருபோதும் சிந்திராத கண்ணீரில்
ஒரு துளியை விட்டுச் செல்லுங்கள்

இருவிழிகளும் இறுக்கமாக மூடப்பட்டிருந்த போதிலும்
குளிர்ந்த சரீரத்துடனிருந்த போதிலும்
முன்பு பழகியதையெண்ணி
நெற்றியிலொரு முத்தமிடுங்கள்

ஆயிரம் கண்கள் பார்த்திருக்கும்
எனது நற்குணங்களை விமர்சிக்கும்
பதிலாக எதுவும் பேசாது
ஒரு பிடி மண்ணிட்டுச் செல்லுவங்கள்

கல்லறையிலிருந்து நீங்கள்
நீங்கிச் செல்கையில்
மாபெரும் தனிமையை நான் உணரக் கூடும் - எனவே
ஒரு பூவை மட்டும் வைத்துவிட்டு
நீங்கள் செல்லுங்கள் திரும்பிப்பாராது

செல்வி. டிமாஷாகயனகி
தமிழில் - எம்.ரிஷான் ஷெரீப்
மூலத் தகவல் - நன்றி எம்.ரிஷான் ஷெரீப்
(எண்ணச் சிதறல்கள்)

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



28.06.1922
தெல்லிப்பளை

12.06.2010
கனடா

தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்

தெய்வானைப்பிள்ளை எமது "தெய்வத் திருமனையாள்"
அம்மா! நீங்கள் பேரொளியைத் தந்த பெருந்தெய்வம்!
நிறைவுப் பொலிவோடு வாழ்வின் சிறப்பையெல்லாம்
வாரி வழங்கிச் செல்வச் செழிப்போடு வாழ்ந்து நிறைவடைந்த
வளமார்ந்த அன்புத் திருமனையாள்!
நினைவைச் சுமக்கவைத்து நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ளீர்!
அம்மா! நீங்கள் ஒரு ஒளிவிளக்கு! நீங்கள் எம்மைவிட்டுப் போகவில்லை!
எம்மோடு என்றும் சுடர்விளக்காய் வாழ்கின்றீர்!

என்றும் உங்கள் நினைவோடு வாழும்
"அன்பு நெஞ்சங்கள்"

ஜெயலலிதாவின் தீவிரம்



இந்தியா, ஐ.நா.வில் ஒரு தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று நான் கோருகிறேன். அதில் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையைக் கண்டிப்பதோடு அதில் தொடர்புடையவர்கள் அனைவரும் பொறுப்பாக்கப்படுவதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதோடு மேற்படி தீர்மானமானது சிறீலங்காவில் வாழும் தமிழர்கள் மத்தியிலும் உலகம் பூராவாகவும் இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் தனித்தமிழ் ஈழத்துக்ஆகான ஒரு பொது வாக்கெடுப்பையும் கோர வேண்டும்.

இது அண்மையில் செல்வி ஜெயலலிதா திரு.நரேந்திர மோடியைச் சந்தித்தபோது வழங்கிய மனுவில் காணப்படும் ஒரு கோரிக்கை.

அம்மனுவில் இது இரண்டாவதாகக் காணப்படுகிறது. முதலாவது நீர்ப்பிரச்சினை பற்றியது. இரண்டாவது ஈழத் தமிழர்கள் பற்றியது. இம்மனுவில் மட்டுமல்ல, அவர் தனது தேர்தல் பிரசார மேடைகளிலும் ஈழத்தமிழர் விவகாரத்திற்கு இதேயளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தார். தமிழ்நாட்டுத் தேர்தலில் ஈழத்தமிழர் விவகாரம் ஒரு பிரதான தீர்மானிக்கும் காரணி இல்லைதான். ஆனால் அது ஓர் உபகாரணி. வெற்றி பெறுகிறவரின் வெற்றியை மேலும் உறுதிப்படுத்தவும், தோல்வியுறுபவரின் தோல்வியை மேலும் உறுதிப்படுத்தவும் அதைக் கையாள முடியும்.

நடந்து முடிந்த தேர்தலில் ஜெயலலலிதா அதைத்தான் செய்தார். ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த பேரழிவிலிருந்தும் பெருந்தோல்வியிலிருந்துமம் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முடியவில்லைலேய என்ற ஒரு குற்றவுணர்ச்சி தமிழ்நாட்டில் உண்டு. இக்குற்றவுணர்ச்சியை ஜெயலலிதா கருணாநிதிக்கு எதிராக வெற்றிகரமாகத் திருப்பியிருக்கிறார். குறிப்பாக நாலாம் கட்ட ஈழப் போரின் இறுதிக் கட்டத்திலிருந்து அவருடைய ஈழம் தொடர்பான நடவடிக்கைகளில் ஒருவிதத் தொடர்ச்சியையும் விட்டுக் கொடுப்பின்மையையும் கவனிக்க முடிகிறது. ஆனால் அதேசமயம் விடுதலைப் புலிகள் இயக்கம் பலமாக இருந்த காலகட்டத்தில், குறிப்பாக ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட பின் அவர் மிகவும் மூர்க்கமாக அந்த இயக்கத்தை எதிர்த்தார். 2008ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 23 ஆம் திகதி அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு நளினி உட்பட ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை முதல்வர் கருணாநிதி மரண தண்டனையிலிருந்து தப்புவிக்க முயற்சி செய்கிறார். கருணாநிதி ஆட்சிக்கு வரும் போதெல்லாம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பேச்சுக்கள் தமிழகத்தில் பகிரகங்கமாக நடைபெறுகின்றன. அவர் இதையெல்லாம் தடுத்து நடவடிக்கை எடுப்பதில்லை. என் ஆட்சியாக இருந்தால் நான் கடுமையான நடவடிக்கை எடுத்திருப்பேன்.

புலிகளின் நிர்வாக மையமாக இருந்த கிளிநொச்சியும் வீழ்ச்சியுற்ற பின் வெளிவந்த அறிக்கை இது. ஆனால் இபபொழுது அவர் தனித் தமிழ் ஈழத்தை விடாப்பிடியாக ஆதரிக்கின்றார். குறிப்பாக நாட்டில் கூட்டமைப்பு தமிழீழத்தைக் கைவிட்ட பின்னரும் அவர் பொதுசன வாக்கெடுப்பைக் கேட்கிறார்.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் மத்தியில் பொதுவான ஓர் அபிப்பிராயம் உண்டு. அதாவது கருணாநிதியின் ஆட்சிக் காலத்தையும் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஜெயாவின் ஆட்சிக் காலத்தில் வெளிப்படையாக ஒரு எதிர்நிலைப் போக்கு காணப்பட்டாலும் நடைமுறையில் கருணாநிதியின் ஆட்சிக் காலங்களில்தான் ஈழத் தமிழர்கள் மீதான நெருக்கடிகள் அதிகமாகியிருப்பதுண்டு என்பதே அது.

ஆளுமை தொடர்பில் ஒப்பிடும்போது ஜெயா கருணாநிதியை விடவும் வெளிப்படையானவர் என்றும் தந்திரங்கள் குறைந்தவர் என்றும் ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு. அவர் எதையும் வெளிப்படையாகவே கதைப்பதோடு முடிவுகளையும் வெட்டொன்று துண்டிரண்டாக எடுப்பார் என்றும் ஒரு அபிப்பிராயம் உண்டு.

ஆனால் வைகோவை சிறை வைத்தவர் அவர்தான் என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்கள் வாழும் முகாம்கள் மற்றும் சிறப்பு முகாம்களில் நிலைமைகள் இப்பொழுதும் அப்படியே தானிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஜெயா உண்மையாகவே ஈழத்தமிழர்கள் நலனில் அக்கறையுள்ளவராக இருந்தால் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் தொடர்பிலும் அதிரடியான முடிவுகளை எடுத்திருக்க வேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றன. அதாவது அவர் தனது ஆட்சியதிகாரத்துக்குட்பட்ட ஒரு விவகாரத்தில் காட்டாத மனிதாபிமானத்தை தனது ஆட்சியதிகாரத்திற்கு வெளியில் உள்ள விவகாரத்தில் காட்டுவது அவருடைய விசுவாசத்தை சந்தேகிக்க வைப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இத்தகையதொரு பின்னணியில் ஈழத் தமிழர்கள் தொடர்பிலான ஜெயலலிதாவின் தீவிரம் குறித்து பின்வரும் வியாக்கியானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

முதலாவது அவர் இயல்பாகவே வெளிப்படையானவர். வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசுபவர். எனவே ஈழத்தமிழர்கள் தொடர்பில் தமிழ்நாட்டில் நிலவும் குற்றவுணர்ச்சிக்குத் தலைமை தாங்குவதன் மூலம் ஈழத்தமிழர்களுக்கு மெய்யாகவே எதாவது ஒரு தீர்வைப் பெற்றுத்தர விரும்புகிறார் என்பது.

இரண்டாவது அவ்விதம் குற்றவுணர்ச்சிக்குத் தலைமை தாங்குவதன் மூலம் அதற்கு ஏனைய தீவிர இனமானக் கட்சிகள் அல்துலது இயக்கங்கள் தலைமை தாங்குவதைத் தடுக்க முடியும். இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான அலையை எப்பொழுதும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். அதோடு பெரிய பிரதான கட்சிகள் அல்லாத ஏனைய செயற்பாட்டு இயக்கங்கள் அரங்கின் முன்னணிக்கு வந்து எதிர்காலத்தில் அவை தீர்மானிக்கும் சக்திகளாக வளர்ச்சி பெறுவதைத் தடுப்பதும், அதாவது, எல்லாத் தீவிர சக்திகளை விடவும் அதிதீவிர சக்தியாக தன்னைக் காட்டிக் கொள்வதன் மூலம் தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் விவகாரத்தை எப்பொழுதும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது.

மூன்றாவது அவ்விதம் தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் அரசியலைத் தனது கட்டுப்பாட்டடிற்குள் வைத்திருப்பதன் மூலம் தேர்தலில் கருணாநிதியும் உட்பட ஏனைய இனமான கட்சிகளையும் இயக்கங்களையும் தனக்குக் கீழ்ப்பட்டவைகளாக வைத்திருப்பது.

நாலாவது இவ்வாறு ஈழத்தமிழர் விவகாரம் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் இருப்பதை நடுவண் அரசும் அதன் கொள்ளை வகுப்பாளர்கள் மற்றும் புலனாய்வுக் கட்டமைப்புக்களும் ஆதரிக்கும் என்று ஒரு விளக்கமும் உண்டு.

ஏனெனில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான அரசியலுக்கு செயற்பாட்டு இயக்கங்கள் தலைமை தாங்கினால் அது அதிகம் இலட்சியபூர்வமானதாக இருக்கும். எனவே அதைக் கட்டுப்படுத்துவது கடினம். பதிலாக அதை தேர்தல் அரசியலுக்காகப் பயன்படுத்தும் கட்சிகள் கையாண்டால் அவற்றைக் கட்டுப்படுத்துவது ஒப்பீட்டளவில் இலகுவானது.

இவ்வாறு ஜெயலலிதாவின் தீவிரத்தை அனுமதிக்க வேண்டிய ஒரு தேவை நடுவண் அரசுக்கு உண்டு. தமிழ்நாடு கொந்தளிக்கிறது. எனவே ஈழத்தமிழர் விவகாரத்தில் தலையிட வேண்டியிருக்கிறது என்று அவர்கள் கொழும்புக்கும் உலக சமூகத்திற்கும் எடுத்துக் காட்ட முடியும்.

எனவே ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் ஜெயலலிதாவின் தீவிரத்தை ஒரு அழுத்தக் காரணியாக பேணி வைத்திருக்க நடுவண் அரசு விரும்பக் கூடும்.

ஆறாவது ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவருடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அது வெற்றிதான். ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் இக்கோரிக்கையின் தீவிரம் காரணமாக இது தொடர்பில் கருணாநிதி ஜெயாவை முந்திச் செல்ல முடியாதிருக்கும். அப்படி முந்திச் செல்வதாக இருந்தால் ஒன்றில் அவர் உண்மையாக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டும் அல்லது அவருடைய தொண்டர்கள் தீக்குளிக்க வேண்டியிருக்கும்.

ஏழாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் பலமாக இருந்த வரை உலகத் தமிழர்களுக்கு யார் தலைமை தாங்குவது என்பதில் தமிழகத் தலைவர்களுக்கு சில சங்கடங்கள் இருந்தன. ஆனால் இப்பொழுது ஜெயலலிதாவுக்கு அத்தகைய தடைகள் இல்லை. உச்சதீவிர நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் அவர் உலகத் தமிழர்களுக்குத் தலைமை தாங்க எத்தனிக்கிறார்.

மேற்கண்ட வியாக்கியாணங்களைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் முடிவுக்கு வரலாம். ஜெயலலிதா தமிழீழத்தை தமிழீழத்திற்காக ஆதரிக்கிறாரோ இல்லையோ, தமிழகத்தில் அரசியல் செய்வதற்காக ஆதரிக்கிறார் என்பது ஓர் அடிப்படை உண்மை. இது தமிழர்கள் மத்தியில் அவருக்குள்ளபடிமத்தை(இமேஜை)மேலும்உயர்த்தஉதவும். அதோடு அடுத்த தேர்தலுக்குரிய மிகப் பலமானதொரு முதலீடாகவும் அமையும். அதேசமயம் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அது உடனடிக்கு நம்பிக்கையூட்டும் மிகப் பிரகாசமான ஒரு சமிக்ஞைதான். நீண்ட எதிர்காலத்தில் அது எத்தகைய பின்விளைவைக் கொண்டு வரும் என்பது ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டை எந்தளவுக்கு வெற்றிகரமாகக் கையாளப் போகிறார்கள் என்பதில்தான் தங்கியுள்ளது.

ஜெயாவின் தீவிரம் ஒரு பிரதான கதவை ஆகக்கூடிய பட்சம் அகலத் திறந்திருக்கிறது. அதனூடாக நிலைமைகளைக் கையாள வேண்டியது ஈழத் தமிழர்கள்தான் கூட்டமைப்பு அதை செய்யுமா?

சில வாரங்களுக்கு முன்பு கூட்டமைப்பு ஜெயாவுக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அக்கடிதத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையிலும் கூட்டமைப்பின் தலைவர் பல மாதங்களுக்கு முன்பு இந்தியாவில் வைத்துத் தெரிவித்தவற்றின் அடிப்படையிலும் கூறின் அவர்களுடைய

மனதிலிருப்பது வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு அரைச் சம ஷ்டி முறைமைதான். இந்தியாவில் இருப்பதைப் போன்ற ஒரு அரைச் சமஷ்டிதான் கடந்த ஆண்டு இலங்கைக்கு வந்துபோன சுஸ்மா ஸ்வராஜ் இதைத் தமிழ்நாட்டில் வைத்துத் தெரிவித்திருந்தர். ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்கள் தீவிரமாகப் பிரிவினையைக் கோருகிறார்கள். ஆனால் அங்குள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பிரிவினையைக் கோரவில்லை என்ற தொனிப்பட சுஸ்மா ஸ்வராஜ் கருத்துத் தெரிவித்திருந்தார். இப்பொழுது வெளியுறவுத் தறை அமைச்சராக இருக்கும் அவர் அநேகம ாக அதே நிலைப்பாட்டுடன்தான் இப்பொழுதும் இருப்பார் என்று கருத இடமுண்டு. ஏனெனில் மோடி அரசாங்கமும் 13 சக வைப் பற்றியே கூறி வருகிறது.

13 சகவோ, சயவோ 13ஆவது திருத்தம் பற்றி இந்தியா வற்புறுத்துவது தமிழர்களுக்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் மட்டுமல்ல, அதைவிட ஆழமான ஒரு காரணமும் உண்டு. பெருமளவுக்குக் காலாவதியாகிவிட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையின் ஒரே தப்பிப் பிழைத்திருக்கும் உறுப்பு - அதாவது பதாங்க உறுப்பு - 13 ஆவது திருத்தம்தான். எனவே, அதைப் பற்றிப் பிடிப்பதன் மூலம் இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு மேலும் உயிர் கொடுக்கலாம் என்று புதுடில்லி சிந்திக்க இடமுண்டு. ஏனெனில் அந்த உடன்படிக்கை பலமாக இருக்கும் வரை இச்சிறு தீவின் மீதான இந்தியாவின் மேலாண்மையை அங்கீகரிக்கும் ஒரு அனைத்துலகப் பெறுமதி மிக்க ஆவணமும் அமுலில் இருக்கும். எனவே 13-ஆவது திருத்தத்தைப் பற்றி இந்தியா பிரஸ்தாபிக்கிறது என்றால் அது மறைமுகமாக இச்சிறு தீவின் மீதான தனது மேலாண்மையையும் நினைவூட்ட முயல்கிறது என்றே பொருள்.

இத்தகையதொருபகைப்புலத்தில்அரைச்சமஷ்டிஷ்டயைக் கோரும் கூட்டமைப்பானது முழுப் பிரிவினையைக் கோரும் ஜெயலலிதாவை எப்படிக் கையாளப் போகிறது?

நடந்து முடிந்த தேர்தலில் ஜெயலலிதா பெற்ற வெற்றியைக் கண்டு அவருடைய எதிரிகள் மட்டும் திகைக்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள சில மனித உரிமை ஆர்வலர்களும் அதுபற்றிக் கவலைப்படுகிறார்கள். இவ்வெற்றி காரணமாக ஜெயலலிதா மேலும் கட்டுப்படுத்தப்பட முடியாதவராக வளர்ச்சி பெறக் கூடும் என்பதே அவர்களுடைய கவலைக்குக் காரணம். உலகின் ஆகப் பெரிய ஜனநாயகத்தின் மூன்றாவது பெரிய கட்சியின் தலைவியாக அவர் பேரெழுச்சி பெற்றிருக்கிறார். தமிழ்நாடானது நடுவண் அரசிடமிருந்து மேலும் மேலும் தூரம ாகப் போய்விடக் கூடாது என்று டில்லியில் இருப்பவர்களைக் கவலைப்பட வைக்கும் ஒரு வெற்றி அது. தமிழ்நாடு ஏற்கனவே பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்த ஒரு மாநிலம். அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அயலில் உள்ள சிறிய நாட்டில் வாழும் தமிழர்களுக்கான பிரிவினையைக் கோரி நிற்கின்றார்.

இந்நிலையில் மைய நீரோட்டத்திலிருந்து தமிழ்நாடு விலகிச் சிந்திப்பதை இயன்றளவுக்குக் குறைக்க வேண்டும் என்று புதுடில்லியிலிருப்பவர்கள் சிந்திக்க இடமுண்டு. இதுவும் ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவைக் கையாளர்வதற்குரிய வாய்ப்புகளைக் கூட்டியிருக்கிறது.

இதன்படி இப்பொழுது ஈழத்தமிழர்கள் மோடியை நேரடியாகவும் கையாளலாம். ஜெயலலிதாவுக்கூடாகவும் கையாளலாம். அதுபோலவே ஜெயலலிதாவை நேரடியாகவும ம் கையாளலாம். அதேசமயம் தமிழ்நாட்டில் உள்ள தீவிர இனமானக் கட்சிகள் மற்றும் செயற்பாட்டியக்கங்களுக் கூடாகவும் அழுத்தங்களைப் பிரயோகித்து கையாளலாம்.

அதாவது இந்தியாவை ஈழத்தமிழர்கள் நோக்கு நிலையிலிருந்து கையாள்வதற்குரிய வாய்ப்புகள் முன்னெப்பொழுதையும்விட அதிகரித்து வருகின்றன என்று பொருள்.

ஆனால் இப்படி எழுதுவதன் மூலம் இக்கட்டுரையானது ஜெயாவும் மோடியும் ஈழத்தமிழர்களைக் காதலிக்கிறார்கள் என்று கூற முற்படவில்லை. மோடிக்கென்று ஒரு நிகழ்ச்சி நிரலுண்டு. அவர் அதற்கூடாகத்தான் ஈழத்தமிழர்களைப் பார்ப்பார். அவர் அவருடைய நிலையான நலன்ளிற்கூடாகவே சிந்திப்பார். அதுபோலவே ஜெயலலிதாவுக்கு அவுருடைய கட்சி சார் நலன்கள் உண்டு. அவர் அவருடைய நலன்களுக்கூடாகவே சிந்திப்பார். இக்குரூர உலகில் ஒவ்வொருவரும் அவரவர் நலன் சார்ந்தே சிந்திப்பார்கள். ஈழத்தமிழர்கள் தான் ஈழத்தமிழர்களுக்காகச் சிந்திக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் அவர்கள் தமது தலைவர்களை வாக்களித்த மக்களுக்காக சிந்திக்குமாறு தூண்ட வேண்டும்.


tico.ca
ACTA
Travel with us with the lowest fare, We'll give you the best service and care...
OUR SERVICES
Worldwide Air Ticketing
Cruises
Bus Tours
Car Rental
Travel Insurance
Visa Arrangements
Vacation Packages (all inclusive)
Ideal Escape Vacation Ltd.
Ideal Escape Vacation Ltd.
GTA Square Mall
5215 Finch Ave E, Unit #160
Scarborough, ON
Tel: 416-841-1833
Fax: 647-847-7552
idealescape@gmail.com
www.idealescape.ca


HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Higer Standard Agents,, Higher Results
HOMELIFE
HIGHER STANDARDS
Parathan Navaratnam
Sales Representative
Business: 416-298-3200 Direct: 647-524-7655
210-31 Progress Ave., Toronto ON. M1P 4S6
Buying - Selling - Investing
RESIDENTIAL COMMERCIAL INVESTMENTS
உங்களுக்காக வீடு விற்க வாங்க தகுதியான
Real Esate Agent ஐ தெரிவு செய்யுங்கள்
GTA யின் எப்பாகத்திலும் உங்கள் வருமானத்திற்கும் முதலீட்டிற்கும் உங்கள் திருப்திக்கும் ஏற்ற வகையில் குறைந்த விலையில் வீடு தேவையெனில் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
RAJAH MASILLAMANY
Sales Representative
Dir: 416.917.0557
rajahhomelife@gmail.com
CYRIL RAJAKUMAR
Sales Representative
Dir: 416.721.5083
cyril.rk@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage* Bus: (905) 201-9977 Fax: (905) 201. 9229 205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
*Independently Owned and Operated


"Make Your Dream Home Come True"
416-230-1107
RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
PARAM GNANASWARAN
REAL ESTATE BROKER
RIGHT AT HOME REALTY INC., BROKERAGE
HOME OFFICE:
401-7045 EDWARDS BLVD
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200
MAIN OFFICE:
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232
Creao Design